ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின்

# யாழ்ப்பாணச் சரித்திரம்

## 1912

ஒரு மீள்வாசிப்பு

கலாநிதி. கந்தையா குணராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின்

# யாழ்ப்பாணச் சரித்திரம்

A. Mootootamby Pillay's

# Jaffna Histry

1912

## ஒரு மீள்வாசிப்பு

கலாநிதி கந்தையா குணராசா

கமலம் பதிப்பகம்
82, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்: இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு : ஒக்டோபர், 2001

பதிப்புரிமை : திருமதி கமலா குணராசா
75/10A பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிவு :

வெளியீடு : கமலம் பதிப்பகம், 82, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

விலை : 125/=

அட்டை : நல்லூரிலுள்ள ஜமுனாரி ஏரி.
புகைப்படம்: ஆசிரியர்

- **YALPPANA CHRITHIRAM**
- **Re-told by : Dr. Kandiah Kunarasa**
  **B.A. Hons. (Cey), M.A., Ph.D., SLAS**
- **PUBLISHEED By: Kamalam PAthipakam**
- **First Edition: 2002, April**
- **Price: Rs. 125/=**

விற்பனையாளர்:

**பூபாலசிங்கம் புத்தகசாலை,**

யாழ்ப்பாணம், கொழும்பு, லண்டன்.

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை,**

யாழ்ப்பாணம், கொழும்பு

# முன்னுரை

அறிஞர் பெருமகன் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையால் 1912 ஆம் ஆண்டு ஆக்கப்பட்ட நூல் 'யாழ்ப்பாணச் சரித்திரம்' ஆகும். யாழ்ப்பாணத்தின் வரலாற்றினைக் கூறும் நூல்களில் குறிப்பிடத்தக்க ஒரு நூலாக இது விளங்கு கின்றது. 'யாழ்ப்பாணத்திலுள்ளார்க்கு, யாழ்ப்பாணத்தினது பூர்வோத்திர சரித்திரத்தையறிவது அவசியமும் ஆனந்தமுமாகும். யாழ்ப்பாணத்தைப் பூகோளப் படத்தில் நோக்கும்போது அது கடுகுப்பிரணமாய்த் தோன்றினும், அதன் சரித்திரத்தை நோக்கும் போது, பெரிய தேசங்களின் சரித்திரங்களோடு வைத்து நோக்கத்தக்க பெருமையுடையதாயிருக்கின்றது' எனத் தன் நூலின் முகவுரையில் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை குறித்துள்ளார். இந்நூல் எழுதுவதற் கான முதற் காரணம் இதுவாகும்.

யாழ்ப்பாணச் சரித்திரத்தை எழுதுவதற்காக முத்துத்தம்பிப்பிள்ளை அனுபவித்த கஷ்டங்கள் முகவுரையில் விபரிக்கப்பட்டுள்ளன. இந்நூலை எழுதி முடித்ததும் நூலாக்குவதற்கு சிங்கப்பூர் திரு. கா. தம்பாபிள்ளை என்பார் பணவுதவி புரிந்துள்ளார். யாழ்ப்பாணச் சரித்திரத்தின். முதலாவது பதிப்பு 1912 ஆம் ஆண்டு வெளிவந்தது. இரண்டாம் பதிப்பு 1915 ஆம் ஆண்டு நாவலர் அச்சகத்தில் அச்சுவாகனமேறி வெளிவந்தது. மூன்றாம் பதிப்பு 1933 இல், பதினெட்டு வருடங்களின் பின்னர் திரு. க. வைத்தியலிங்கம் என்பவரால் மூன்றாம் பதிப்பாகப் பிரசுரமாயிற்று. அதன்பின்னர் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை யின் 'யாழ்ப்பாணச் சரித்திரம்' வெளிவந்ததாகத் தெரியவில்லை.

'யாழ்ப்பாணச் சரித்திரம்' வெளி வந்ததன் பின்னர், நிகழ்ந்த ஆய்வுகள், யாழ்ப்பாண வரலாற்றின் இருண்ட பக்கங்களை ஒளி பெறச் செய்துள்ளன. அவ்வாறான முடிவுகளை அடியொற்றி, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின் 'யாழ்ப்பாணச் சரித்திரத்தை மீள வாசித்தல் அவசியமாகின்றது. புதிய விளக்கங்களோடு அந்த மீள்வாசிப்பு தேவைப்படுகின்றது. அதுவே இந்தப் பதிப்பில் மேற் கொள்ளப்பட்டுள்ளது. தமிழ் உலகம் இந்நூலை ஏற்குமென நம்புகின்றேன்.

பிரதேசச் செயலாளர்,
நல்லூர்.
**10/11/2000**

கலாநிதி க. குணராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின்

## யாழ்ப்பாணச் சரித்திரம்

# முகவுரை

யாழ்ப்பாணத்திலேயுள்ளார்க்கு, யாழ்ப்பாணத்தினது பூர்வோத்திர சரித்திரத்தையறிவது, அவசியமும் ஆனந்தமுமாகும். யாழ்ப்பாணத்தைப் பூகோள படத்திலே நோக்கும் போது அது கடுகுப் பிரமாணமாய்த் தோன்றினும், அதன் சரித்திரத்தை நோக்கும் போது, பெரிய தேசங்களின் சரித்திரங்களோடு வைத்து நோக்கத்தக்க பெருமையுடையதாயிருக்கின்றது. யாழ்ப்பாணம் சிறிதேயாயினும் அதிலிருந்தரசியற்றிய சிலவரசர், தமது பராக்கிரமத்தினாலே இலங்கை முழுதையுங் கட்டியாண்டதோடு பாண்டிநாடு சோழநாடுகளையும் ஒவ்வோரமையங்களில் வெற்றி கொண்டிருக்கிறார்கள் என்றால், அதன் சரித்திரப்பெருமை கூறவும் வேண்டுமா. 1505 ல் இலங்கைக்கு வந்த பறங்கிக்காரர் இலங்கையில் அநேகநாடுகளைச் சிங்களவரசர்பாற் கவர்ந்தபின்னரும் நூறுவருஷஞ்சென்றே யாழ்ப்பாணத்தைப் பிடித்தார்கள். அவர்கள் மூன்று முறை போர்தொடுத்தும் நிருவகிக்க வியலாது தோற்றோடினார்கள் என்பர். சமாதானமாகி யாழ்ப்பாணத்தரசன் பாற் போர்ச்செலவு பெற்றுக் கொண்டு மீண்டரென்பது பறங்கிச் சரித்திரகாரர் கூற்று. எப்படியாயினும் யாழ்ப்பாணத்தரசர் தமது நாட்டைப் பறங்கிக்காரர் காலத்திலுங் கைவிடாது நூறுவருஷம் ஆண்டார்களென்பதுண்மை. பறங்கிக்காரரோடு பொருது நிருவகிக்கலாற்றாத சிங்களவரசர் சிலர், யாழ்ப்பாணத்தரசரிடம் அடைக்கலம் புகுந்தார்கள் என்பது இலங்கைச் சரித்திரத்தாற் றுணியக் கிடத்தலின், பறங்கிக்காரர் காலத்தும் யாழ்ப்பாணம் வலிய அரசுடையதாயிருந்ததென்பது திண்ணம்.

இத்துணைசிறந்த யாழ்ப்பாணவரசு இற்றைக்கு இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னர் (161B.C) அரசுசெய்த ஏலேலன் காலத்திலே தொடங்கியது. இடையிடையே அரசின்றிச் சிலகாலமும், வழிவழியரசோடு நெடுங்காலமும் பின்னருமிடையிடையே சிங்களவரசு சிலகாலமும், பின்னரும் தமிழரசு வழிமுறையாகச் சிலகாலமுமாக 1700 வருஷம் சுவதேசவரசு நடந்தது. அதன் மேற் பறங்கியரசு 40 வருஷமும், ஒல்லாந்தவரசு 150 வருஷமும், நடந்தொழிய, 1796 ல் ஆங்கிலவரசு வந்து நடக்கின்றது. இப்படியே யாழ்ப்பாணம் ஏறக்குறைய 2000 வருஷ சரித்திரமுடையது.

யாழ்ப்பாணப் பூர்வசரித்திரத்திற்கு ஆதார நூல்களாகப் போயியுள்ள வைபவமாலையும் கைலாசமாலையுமே. அவையுஞ் சொரூபந் திரிந்து விட்டனவாய்த் தோன்றுகின்றன. பறங்கிக்காரர் கால முதலாகப் பிற்காலத்துச் சரித்திரம் பறங்கிக்காரராலும், ஒல்லாந்தராலும், ஆங்கிலேயர் காலத்துச் சரித்திரம் ஆங்கிலேயராலுமெழுதப்பட்டிருக்கின்றன. பறங்கிக்காரரும் ஒல்லாந்தரும் தமது கொடுங்கோன்மையைக்குறைத்தும் திரித்தும் எழுதியிருப்பதால் அது முழுதும் உண்மையெனக் கொள்ளப் போகாது. வைபவமாலைக்கு முன்னே வையைபாடலென ஒரு சரித்திரமிருந்தது. அ/தகப்படவில்லை.[1] கர்ண பாரம்பரிய கதையும் இக்காலத்தார்க்கு வினோதம் பயவாமையினால் கேட்பாருமில்லை. சொல்வாருஞ் சுருங்கினர். மருதங்கடவெலையிலே P.W.D. கிளாக்காயிருந்த மஹா ஸ்ரீ அம்பலவாணர் கெக்கரியாக் கிராமத்திலே ஒரு சிங்கள வீட்டிலிருந்து தாம் பெற்ற கடலோட்டுக்காதைப் பிரதியைச் சிலகாலத்துக்கு முன்னே எனக்கு உபகரித்தனர். அதிலிருந்தகப்பட்ட செய்யுளே யாழ்ப்பாடி பரிசு பெற்ற காலத்தை நிரூபித்தது. அதுவுமன்றி இன்னும் அனேக விஷயங்கள் யாழ்ப்பாணச் சரித்திரத்திற்கு இன்றியமையாதனவாயகப்பட்டன. இதற்கு முன், யான் சென்னையில் வசித்த காலத்திலே 1887ம் காஞ்சிபுரத்திலே ஸ்ரீமத் மாசிலாமணி தேசிகரிடத்திலே யாழ்ப்பாணத்தைப் பற்றிய சில குறிப்புகளுள்ள ஓரேடிருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கே சென்றேன். அவர் அதனைக் காட்டுவதற்கு ரூபா ஐம்பது கேட்டார். அது பெருந்தொகையென விடுத்து இரண்டு வருஷத்தின் பின்னர் அவர் வீட்டுக்கு மீண்டுஞ் சென்றேன். அவ்வமையம் பணச்செலவின்றி அவ்வேட்டுப் பிரதியை ஆராய வாய்த்தது. அ/தொரு புரோகிதக்குறிப்பு. அதனோடு இருபத்தேழு ஏடுகளிருந்தன. எல்லாம் ஒரு பழைய பிராமணப் புரோகித குடும்பத்துக் குறிப்பேடுகள். ஆராய்ந்தவிடத்தகப்பட்ட விஷயங்களையெல்லாம் மூன்று நாளிற் குறித்துக் கொண்டேன். அக்குறிப்புக்களே இந்நூலுக்குப் பெரிதும் உபகாரமாயின.

அச்சங்குளம் உடையார் மஹா ஸ்ரீ மணியரத்தினம் ஓரேட்டுப் பிரதியனுப்பினார். அதிலும் சாதி வரிசையைப்பற்றி அநேக விஷயங்கள் அகப்பட்டன. ஸ்ரீமத். விசுவநாதசாஸ்திரியார் எழுதி வைத்த பலகுறிப்புத் திரட்டொன்றகப்பட்டது. அதிலும் சில அரிய குறிப்புக்களகப்பட்டன. கர்ண பாரம்பரிய சரித்திரங்களும் வட்டுக்கோட்டை ஸ்ரீமத். நா. சிவசுப்பிரமணிய

1 வையாபாடல் இன்று கிடைத்துள்ளது. 1921 இல் கே. டபிள்யூ. அருட்பிரகாசம் வையாபாடலை முதன்முதல் பதிப்பித்துள்ளார். 1922 இல் மலேசியாவைச் சேர்ந்த இ.து. சிவானந்தன் வையாபாடலை மீளப்பதிப்பித்துள்ளார். 1980 இல் க.செ. நடராசா வையாபாடல் நூற்கள் பலவற்றையும் ஆராய்ந்து சிறப்பாகப் பதிப்பித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாசாரியாரிடத்தும், மகாவித்துவான் ஆறுமுக உபாத்தியாரிடத்தும், கத்தோலிக்க பாதுகாவலப் பத்திராதிபர் மஹா ஸ்ரீ தம்புப்பிள்ளையிடத்தும் சில கேட்கப்பட்டன. இவற்றோடு *Boake's Mannar, Riberio's Ceilao, Obeyesekere's Ceylon Hidtory, Captain H. Suckling's Ceylon, Brito's Jaffna History, Sketches of Ceylon History by P. Arunachalam* முதலிய நூல்களும் அகப்பட்டன. அவைகளும் இச்சரித்திரத்திற்குதவியாயின.

நூலியற்றுமருமை நூலிபற்றினோரேயறிவர். இந்நூலையாத்துக் கொண்ட கஷ்டம் எனக்கே தெரியும். நூலிற்குற்றந் தெரித்தலோ எளிது. குற்றந்தெரிக்கப் படாத நூலுமோ இல்லையெனலாம். யான் அறிந்தவரையிலும் எனக்கெட்டிய வரையிலும் எனக்கியன்றவரையிலும் இந்நூலை ஆராய்ந்தே செய்தேன். இதிற் கூறப்பட்டனவெல்லாம் நூலாதாரமும் கர்ணபரம்பரை யாதாரமும் எனதறி வாதாரமுடையன. யாழ்ப்பாணச் சரித்திரமொன்றியற்ற வேண்டுமென நெடுநாட் கொண்ட நூலாதலால் அது சம்பந்தமாக எனதாராய்ச்சியிற் பட்டனவற்றை யெல்லாஞ் சேர்த்து நூலாக்கினேன். குற்றம் போக்கிக் கொள்ளத்தக்கனவற்றை உலகம் கொள்ளுக.

இந்நூலை அச்சிட்டு வெளிவிடும் பொருட்டு வலிந்து ரூபா ஐந்நூறு உபசரித்தவர் சிங்கப்பூர்ப்பகுதியிலேகுவாலாலம்பூரிலே கோட்டுத் துவிபாஷகரா யிருக்கும் ஸ்ரீமான். தா. தம்பிப்பிள்ளையவர்கள். இவருடைய ஜனனவூர் தமிழரசர் காலத்திலே பிரதம மந்திரிக்கு வாசஸ்தானமாயிருந்த யாழ்ப்பாணம் திருநெல்வேலி. இவர் ஒல்லாந்தர் காலத்திலே தோம்பதிகாரமாயிருந்த பழங்குடி வேளாண்டலைவர் ராமநாதபிள்ளை வழித்தோன்றல். இவர் இந்துக் கல்லூரி மூலநிதிக்கு ரூபா ஆயிரம் வழங்கிய பரோபகாரி. வித்தியாபிவிருத்தியிலே பேரபிமானமுடையவர். இவருடைய வித்தியாபிமான சின்னமாக இந்நூலை அவருக்குச் சமர்ப்பித்துப் பிரகடனஞ் செய்கின்றேன். இவருடைய வண்மைக்கிணையும் கைமாறுங் காண்கின்றிலேன்.

இந்நூலிலேயுள்ள சித்திரப்படங்களெல்லாம் மானிப்பாயத் தொல்குடித் தீபமாகிய மஹா ஸ்ரீ. சு. கனகரத்தினம் (Mr. S. K. Lawton) அவர்கள் அமைத்தன. இவருக்கும் பிரதிகள் தந்துதவினோருக்கும் எனதிதயபூர்வமான நன்றி கூறுகின்றேன்.

யாழ்ப்பாணம், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை
நாவலர் கோட்டம்.
22.7.1912.

# பழைய யாழ்ப்பாணச் சரித்திர நூல்கள்

| | |
|---|---|
| வைபவமாலை | - இ∴து ஒல்லாந்தர் காலத்திலேயிருந்த மயில்வாகனப்புலவரால் வசன நடையிலே செய்யப்பட்டது. இதனைச் செய்வித்தோன் மேக்கறூன் என்னும் ஒல்லாந்த தேசாதிபதி. |
| கைலாயமாலை | - இது செய்தவர் முத்துராசகவி. இது பத்திய ரூபம், சொன்னயம் பொருணயமுடையது. இ∴து ஆறுமுகநாவலர்கள் தமையனார் புத்திரர் ஸ்ரீமத். த. கைலாயபிள்ளையவர்களால் அச்சிடப்பட்டது. இது மிகப் பழைய நூல். |
| பரராசசேகரனுலா | - இதுவும் ஒரு பழைய பத்திய ரூபமான நூல். செய்தார் பெயர் நிச்சயமாகத் தெரியவில்லை. மனப்புலி முதலியார் செய்ததென்பர். இ∴து அகப்படவில்லை. |
| இராசமுறை | - இது பறங்கிக்காரர் காலத்துக்குச் சிறிது முந்திச் செய்யப்பட்டது. செய்தார் யாரெனத் தெரிய வில்லை. இதுவும் அகப்படவில்லை. |
| வையைபாடல் | - பரராசசேகரன் காலத்திலே உள்ளதென்பர். செய்தவர் வையாபுரிஐயர். இதுவும் சில செய்யுள் தவிர அகப்படவில்லை. |

பின்னைய நான்கும் பழைய நூலென்பது கீழ்வருஞ் செய்யுளாலறியப்படும்.

உரராசர்தொழுகழன் மேக்கெறூ உனென்றோது
முலாந்தேசு மன்னனுரைத் தமிழாற்கேட்க
வரராசகைலாயமாலை தொன்னூல்
வரம்புகண்ட கவிஞர்பிரான் வையாபாடல்
பரராசசேகரன்றன் னுலாவுங் காலப்
படிவழுவா துற்றன சம்பவங்கடீட்டுந்
திரராசமுறைகளுந் தேர்ந்தி யாழ்ப்பாணத்தின்
செய்தி மயில்வாகனவேள் செப்பினானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணச் சரித்திரம்

யாழ்ப்பாணம் அது யாழில் வல்ல ஒரு பாணனுக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டமையின் யாழ்ப்பாணமெனப்படுவதாயிற்று.

மணற்றி *என்பது அதன் பூர்வ நாமம். அது பின்னாளில் மணற்றிடல் எனவும் வழங்கிற்று. இம்மணற்றி என்னும் பெயர் இறையனார் அகப்பொருள் உதாரணச் செய்யுட்களில் வருகின்றது.

அதன் வடக்கும் கிழக்கும் வங்காளக் குடாக்கடலும், தெற்கும் பூநகரிக்கடல், பண்ணைக் கடல்களும் மேற்குக் கோடிக்குடாக்கடலும் எல்லையாம்.

அஃது இலங்கையின் வடபாகத்தேயுள்ள ஒரு துவிபகற்பம். அதன் அயலிலே காரைதீவு, வேலணைத்தீவு, புன்குடித்தீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு முதலிய தீவுகளுமுண்டு. இவைகளெல்லாம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தனவேயாம்.

பூர்வத்தில் இந்நாடு ஒரு சிறந்த நாடாயிருந்தது. பின்னர்க்கடல் கொள்ளப்பட்டது. அதன்பின்னர் அது திடராகி மணல்கொண்டு காலவடையில் மீண்டும் நாடாயிற்று.

---

1. கொண்டுவானாலாந்து என்ற ஒரு பழைய நிலத்திணிவின் ஒரு பகுதியே இலங்கையின் தென் பெரும்பாகமாகும். யாழ்ப்பாணக் குடாநாடு மயோசீன் என்ற காலத்தில் கடலினடியிலிருந்து மேலுயர்த்தப்பட்ட நிலப்பரப்பாகும். அதனால்தான் சுண்ணாம்புக்கல் அடையல்களைக் கொண்டுள்ளது. அக்கால வேளையில் பூமியில் மனிதன் தோன்றவில்லை. இந்தியாவையும் இலங்கையையும் இணைத்த நிலப்பாலமொன்று (மன்னார் - தனுஷ்கோடி) கடற்கோளிற்குள்ளானது.

* மணற்றி என்பது 'மாந்தையொடு மணற்றி கொண்ட வல்விரயன் தனக்குமனை வகுத்தலாலே' என்னுஞ் சாதிமாலைப் பாட்டாலும் வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னொருநாறட கடல்கொண்டழிந்த தென்பது இந்நிலத்தின் கீழேயுள்ள கற்பாறைகளிலே சிப்பிகளும், நத்தைகளும், பதிந்து கல்லாய்க்கிடத்தலாலும், வடகரையிலே கடலினுள் நெடுந்தூரம் கற்பாறைகள் காணப்படுதலாலும் துணியப்படும். இதற்கு ஆதாரப்பார் கருங்கற்பாறை. (Boake's Mannar)

## கீரிமலையும் பூர்வ சிவாலயமும்

வங்காளக்குடாக்கடல் இடைவிடாது யாழ்ப்பாணத்தின் வடகரையைத் தாக்கிக் கொண்டிருத்தலால் அக்கரை உயர்ந்து எதிர் தாக்கிக்கொண்டிருக்கிறது. முன்னொரு காலத்திலே யாழ்ப்பாணத்தின் வடகரைமுழுதும் மலைத்தொடரா யிருந்து பின் கடலாற் தாக்குண்டு அழிந்து போக, எஞ்சியுள்ள அதன் அடி வாரமே இப்போது கீரிமலையெனப்படுவதென்று கூறுவர். அம்மேட்டு நிலத்திற் சுவறிய மழைநீர், நன்னீரருவியாகப் பள்ளமாகிய கடற்கரையிற் பலவிடங்களிலே சுரந்தோடுகின்றது. இவ்வருவியில் ஸ்நானஞ் செய்த ஒரு முனிவர் தமது கீரிமுகநோய் நீங்கப் பெற்றமையால் இவ்விடம் கீரிமலையெனப்பட்டது. இந்த அருவிகளிலே ஸ்நானஞ் செய்வோர் அநேக நோய்கள் தீரப் பெற்றுத் திடகாத்திரம் பெறுகின்றார்கள். கீரிமலையிலிருந்த பூர்வசிவாலயமும் அம்மலையோடு கடல்வாய்ப்பட்டது.

## நிலவளம்

சிலபாகம் மணற்பாங்காகவும், சில பாகம் களிப்பாங்காகவும், சிலபாகம் செம்மண் பாங்காகவும் சில பாகம் சொறிகற்பாறையாகவும் உள்ளது. இங்கே ஐந்து முதல் இருபது முழம் வரையும் ஆழமாகத் தோண்டப்பட்ட கிணறுகளிலே நன்னீருண்டு. மழை ஆவணி முதல் மார்கழி வரையும் காலமழையாகவும், பங்குனி சித்திரையிலே அகால மழையாகவும் பெய்யும். காலமழைக்காலத்திலே நெல் வரகுகளும், மற்றக் காலங்களிலே தினை, குரக்கன் முதலிய தானியங்களும் விளைவிக்கப்படும். வாழை, கமுகு, கிழங்கு, காய்கனி, புகையிலை முதலியவைகள் தோட்டங்களிலே கிணற்று நீரால் வளர்க்கப்படும். மணற்பாங்கிலே தென்னந் தோப்புக்களும், மற்ற விடங்களிலே பனந் தோப்புக்களும் வளர்க்கப்படும். கடலிலே சங்கும், மற்றெத்தேயத்திலும் அரிதாகிய வலம்புரிச் சங்கும், தெளிந்துருண்டு பிரகாசந்தரும் முத்தும் குளிக்கப்படும்.

## ஈழ மண்டலம்

இலங்கை ஈழமேயாயினும் வடபாகமும் கீழ் பாகத்திலொருபகுதியும் ஈழ மண்டலமெனப்படும். யாழ்ப்பாணம் ஈழ மண்டலத்திலொரு பகுதியாகும். சேர சோழ பாண்டி மண்டலங்களோடு ஈழமண்டலமுமொன்றாகும். சேர சோழ பாண்டி மண்டலங்களினின்றுமே சனங்கள் ஈழமண்டலத்திற் குடியேறுவாராயினர்.





## நாகர்கள்

இவர்கள் குடியேறுமுன் இவ்வீழமண்டலத்தைக் கைக்கொண்டிருந்தவர்கள் நாகர்கள்.[2] சங்கப்புலவருளொருவராயிருந்த முடிநாகராயரும் இந்நாகர் குலத்தவரே என்பர். அவர்கள் ஒரு ஜாதி மனுஷர். அவர்களை வென்று ஈழநாட்டை கைக்கொண்டவர்கள் சேர சோழ பாண்டி மண்டலங்களென்னுந் தமிழ் நாட்டிலிருந்து வந்த தமிழர். அவர்கள் தமக்கு இராசதானியாய்க் கொண்டிருந்த நகரம் மாதோட்டம். அவர்கள் குடிகொண்ட மற்றொரு நகரம் திருகோணமலை. மாதோட்டத்திலேயுள்ள திருக்கேதீச்சரம் என்னும் சிவாலயமும், பண்டுதொட்டு இவர்களாற் பரிபாலிக்கப்பட்டு வந்தன. இச்சிவாலயங்களும் சங்கும் முத்துமே தமிழரை அவ்விடத்துக் குடிகொள்ளுமாறு கவர்ந்த காரணங்களாம்.

## மாதோட்டம்

மாதோட்டம் முன்னொரு காலத்திலே மிகச் சிறந்த செல்வ நகரமாயிருந்தது. ரோமர், கிரேக்கர் எனப்படும் யவனர், தம் மரக்கலங்களோடு இங்கே வந்து, தந்தம், முத்து, இலவங்க முதலியன பண்டமாற்றிச் செல்வாராயினர் என்றால் மாதோட்டத்தின் பெருமை கூறுவதென்ன? அது சிற்பத்தில் வல்லதபதிகளுக்கும் உறைவிடமாயிருந்தது. இங்கே காந்தக் கோட்டையும் ஒன்றிருந்ததாகக் கூறுவர். பின்னாளில் ஏலேலனுமிங்கே ஒரு கோட்டை கட்டினான். மாதோட்டத்திற்குத் தெற்கே உள்ள குதிரை மலையும் மணிபுரமும் தமிழ்ச்சிற்றரசால் ஆளப்பட்டு வந்தன.

## தமிழரசு

மாதோட்டத்திலிருந்த சிற்றரசர்கள், ஒரு நாற் பாண்டியருக்கும் ஒரு நாற் சோழருக்கும் மாறி மாறித் திறையரசர்களாக இருந்தார்கள். சில காலங்களிலே பாண்டியரும், சோழரும், அதனை நேரே கைக்கொண்டும் அரசு செய்து வந்தார்கள். விஜயன் இலங்கைக்கு அரசனாதற்கு முன் பன்னெடுங்காலமாக ஈழநாட்டைத் தமிழரே* ஆண்டு வந்தார்கள். கிலமாயிருந்த திருக்கேதீச்சரத்தை விஜயன் புதுக்குவித்தவனன்றிப் புதிதாக அமைத்தவனல்லன்.

---

2 பண்டைய இலங்கைத்தீவு முழுவதும் நாகர் இன மக்கள் பரவி வாழ்ந்துள்ளன ரெனினும், சிறப்பாக நாகதீவு என வரையறுக்கப்பட்ட வடபகுதியிற் செறிந்து வாழ்ந்துள்ளனர். நாகதீவு என்ற பெயரை இப்பிரதேசம் பெறுவதற்குக் காரணமாக அமைந்தவர்கள் இப்பிரதேசத்தின் பண்டைக் குடிகளான நாகர்களேயாம் நாகர்கள் பண்பாடுடைய கலாசாரத்தைப் பேணியவர்களென்பதும், திராவிட இனத்தவர்கள் என்பதும் இன்று ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன. முதுமக்கள் தாழிகளும் தமிழ்ப்பிராமிக் கல்வெட்டு எழுத்துகளும் அவர்கள் திராவிடர் என நிரூபிக்கின்றன.

Journal of the Royal Asiatic Society, Ceylon Branch 1848.p.73.
Captain H.Suckling's Ceylon, Vol. 1, p. 180



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயக்கரும் நாகரும்

ஈழநாட்டுக்குத் தெற்கேயுள்ள சிங்கள தேசத்தை அக்காலத்தில் முற்றும் ஆண்டு வந்தார்கள் யக்ஷரும் நாகரும். யக்ஷரும் நாகரும் ஆதியிலரசுசெய்த இராவணனுக்குப் பரிவாரமாக இருந்து நுருங்கிய யக்ஷர் நாகர்களுடைய சந்ததியார்.

## களபூமி

அது நிற்க, ஈழமண்டலத்துத் தமிழருக்கும் பாண்டி நாட்டாருக்கும் இடையிடையே பகை மூண்ட காலங்களிலே அவர்களுக்குப் போர்க்களமாயிருந்தவிடம் மணற்றியாம். (யாழ்ப்பாணம்) மணற்றியில் அந்தப்பகுதி இன்னும் களபூமி என்னும் பெயரால் வழங்குகின்றது. ஆதலால் மணற்றி நெடுங்காலம் குடியில்லாத நாடாகவிருந்தது.[3]

## மாருதப்பிரவாகவல்லி

அக்காலத்திலே சோழராசன் புத்திரியாகிய மாருதப்பிரவாகவல்லி, தனக்குற்ற குதிரை முகமென்னும் நோயினாலே வருந்துங் காலத்தில், கீரிமலையிலேயுள்ள சிற்றாற்றில் ஸ்நானஞ் செய்யின் அந்நோய் நீங்குமென்று ஒரு முனிவர் சொல்ல, அவ்வாறே தன் பரிவாரங்களோடு சென்று அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து அந்நோய் நீங்கப் பெற்றாள். அவ்விடம் அது காரணமாகக் குதிரைமலை என வழங்கிற்று. அம்மலை பின்னால் வீழ்ந்ததுபோலும். அவளும் அவள் பரிவாரங்களும் அவ்விடத்திலேயே சிறிது காலம் வசித்தார்கள். அப்பொழுது

3. மணற்றி என்ற யாழ்ப்பாணக் குடாநாடு நீண்ட காலம் குடியில்லாத நாடாகவிருந்ததென்ற கருத்து ஏற்புடையதன்று. சிங்ஹறய விஜயன் இலங்கைக்கு வந்த போது இலங்கையில் நாகரிகமான ஒரு மக்கட்கூட்டம் வாழ்ந்துள்ளது. விஜயன் வருவதற்கு முதலே (கி.மு. 483 முன்) நாகதீபத்திற்குக் கௌதம புத்தர் வருகை தந்துள்ளார். இரண்டு தடவைகள் இவர் இலங்கைக்கு குறிப்பாக நாகதீபத்திற்கு விஜயம் செய்துள்ளார். மகோதரன், குலோதரன் என்ற இரண்டு நாக மன்னர்கள் ஒரு இரத்தினச் சிம்மாசனத்திற்காகப் பொருதினர். மகோதரன் நாகதீவின் அரசனாக விளங்கியுள்ளான். இவ்விரு நாகமன்னர்களும் தம் படைகளோடு பொருதிய போது, புத்தர் அவர்களைச் சமாதானப்படுத்தி வைத்தார். இச்செய்தியிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் நாக மக்கள் வாழ்ந்துள்ளனாப் என அறிய முடிகிறது. நாகர் கோயில், நயினாதீவு, ஜம்புக்கோளம், (திருவடிநிலை), வல்லிபுரப்பகுதி, கந்தரோடை என்பன நாக குடியிருப்புகளாக விளங்கியுள்ளன. மேலும் யாழ்ப்பாணக் குடா நாட்டையும் தென்னிந்தியாவையும் முப்பது மைல் கடல் பிரிக்கின்றது. இதனைக் கடந்து வந்து மக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் குடியேறாதிருக்க மாட்டார்கள்.





கதிர்காமம் என வழங்குங் கார்த்திகேய[4] கிராமத்தில் அரசு செய்திருந்த உக்கிரசிங்கராஜனும் அச்சிற்றாற்றிலே ஸ்நானஞ் செய்தற்கு அவ்விடம் வந்தான். அவன் அவளைக்கண்டு அவள் மீது தணியாய் பெருங்காதலுடையவனாகி அவளைப் பெரும் பிரயாசத்தோடிசைவித்து மணமுடித்துக் கொண்டு சிறிது காலம் அவ்விடத்தில் தங்கிப் பின் அவளோடு தன் இராசதானிக்குச் சென்றான்.

## மாவிட்டபுரம் / கந்தரோடை

அவன் அமைப்பித்த சுப்பிரமணியாலய பூசைக்கும் அருச்சகர்களுக்கும் கந்தரோடையென வழங்கும் இடத்தைச் சமர்ப்பித்துத் திருத்தி நெல்விளைநிலமாக்கி அவர்களுக்குப் பிரமதாயமாகக் கொடுத்தான். அவனோடு வந்த தளபதியாகிய மகாவிட்டன் என்பவனை, அக்கோயிலை நடாத்தும் சர்வாதிகாரியாக்கி மாவிட்டபுரமென[5] இப்போது வழங்கும் இடத்திலிருத்தினான். சோழியர் வசித்தவிடம் சோழியபுரமெனப்பட்டது. அது சுழிபுரமெனப் பின்னர் மருவி வழங்குவதாயிற்று. மாளிகை கட்டப்பட்டவிடம், பின்னர் நாளில் பழையநகரமெனப் பொருள்படும் தொல்புரமெனப்பட்டது. மகாவிட்டன் வசித்தவிடம் மாவிட்டபுரம் எனப்பட்டது. கந்தசுவாமியின் பொருட்டு விடப்பட்ட இடம் கந்தரோடையெனப்பட்டது. (ஓடை - குளவெளி) மாளிகையிருந்தவிடம் இன்றும் மாளிகைத் திடரெனப்படுகிறது.

## குடியேற்றம்

கீரிமலையிலிருந்த உன்னத மலையும் அதனருகேயிருந்த சிவாலயமும் கடல்வாய்ப்பட்டதன் பின்னர் இதுவே தமிழர் குடியேறிய முதன்முறையாம். இங்ஙனங் குடியேறிய தமிழரும் நெடுங்காலம் நிலைகொள்ளவில்லை. மாருதப்பிரவாகவல்லிக்குப்பின் இவ்விடம் நெடுங்காலம் குடியில்லாத நாடாயிருந்ததாதல் வேண்டும்.[6] கடல்கொள்ளு முன்னே நளமகாராசா வந்து கீரிமலையிலே தங்கிப் போனான் எனத் தச்சிணகைலாசமான்மியங் கூறுகின்றது.

4. உக்கிரசிங்கனின் தலைநகர் இருந்தவிடத்தைக் கதிரைமலை என வைபவமாலை கூறுகின்றது. அதனை அடியொற்றி வரலாறு எழுதியவர்கள் அது குறிப்பது கதிர்காமத்தையே என முடிவு கட்டிவிட்டனர். உண்மையில் கதிரைமலை என்பதும் கதிருகொட என சிங்கள நூல்கள் குறிக்கும் கந்தரோடையையே ஆகும் பின்னால் நிகழவிருக்கும் தலைநகர் மாற்றம், நிகழ்வுகள் என்பவற்றைக் கொண்டு நோக்கும் போது, கதிரைமலை குறிப்பது கந்தரோடையையே எனத் துணியலாம்.

5. மாருதப்புரவல்லியின் குதிரை முகம் மாறியதால் மாவிட்டபுரமெனப் பெயர் வந்ததாக வைபவமாலை குறிப்பிடுகின்றது.

6. யாழ்ப்பாணத்தின் முதல் மன்னனாக அடையாளங் காணப்படும் உக்கிரசிங்கன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்வே அச்சம்பவம் நிகழ்ந்து பல யுகங் கழிந்தனவாதல் வேண்டும். அது நிற்க.

## விஜயன் வருகை

இற்றைக்கு 2454 வருஷத்துக்கு முன்னே (543 B.C) மகததேசாதிபதி, தனது மகன் விஜயன்[7] என்பவனை, அவன் துர்க்குணங் காரணமாகத் தனது நாட்டை விட்டோட்டினான். அவனும் அவன் தோழர் எழுநூறு காளையரும் மரக்கலமேறி இலங்கைக்கரையை அடைந்தனர். அங்ஙனம் அடைந்த துறை இலங்கைக் கீழ்க் கரையிலுள்ள துறையென்றும், மேல்கரையிலுள்ள துறையென்றும் துணியவியல வில்லை. இப்போது புத்தளமெனப்படும் இடத்துக்கு அணித்தான தம்பபண்ணை என்னுந் துறையில் வந்திறங்கினார்களென்பது மகாவமிசமென்னும் சிங்கள சரித்திரம். விஜயன் வந்திறங்கிச் சில தினத்திலே, அந்நாள் இலங்கையில் அந்தப் பாகத்தை அரசு செய்திருந்த யக்ஷத்தலைவன் புத்திரியாகிய குவேனியைக்[8] கூடி, அவள் மூலமாக அந்தப்பகுதியரசையுங் கவர்ந்தான்.

---

மாருதப்புரவல்லியை மணந்த பின்னர் தனது தலைநகரான கதிரைமலையை (கந்தரோடை) க் கைவிட்டுப் புதிய தலைநகர் ஒன்றினை அமைத்துக்கொள்ள நேர்ந்தது. கந்தரோடைப் பிரதேசம் பௌத்த மக்களது முக்கிய பிரதேசமாக மாறியிருந்தது. திருவடிநிலையில் (ஜம்புகோளப் பட்டினம்) பௌத்த விகாரையும் கட்டப்பட்டிருந்தது, இதனைவிட சாலிப்பத விகாரை, திஸ்ஸ விகாரை என்பனவும் நாகதீபத்தில் கட்டப்பட்டிருந்தன. கந்தரோடையோடு வல்லிபுரத்திலும் பௌத்த மக்கள் பரவியிருந்தனர். பௌத்தம் நாகதீபத்தில் பரவியிருந்த ஒரு கால கட்டத்தில், சிங்கள ஆட்சியாளரிடமிருந்து உக்கிரசிங்கன் விடுவித்திருந்தான். தீவிர சைவனாக அவன் விளங்கியுள்ளான். நாகதீபத்தின் மேற்பகுதி கிழக்குப் பகுதி என்பன வேற்றுமத ஆதிக்கத்திலிருக்க தென்பகுதி (யாழ்ப்பாணம்) மக்கள் விரும்பிக்குடியேறாத பிரதேசமாக விளங்கியது. இத்தகு நிலையில் தனது தலைநகரை இடமாற்றுவதற்கு உக்கிரசிங்கன் விரும்பினான். சிங்கை நகரை (சிங்கன் நகர்) தலைநகரமாக்கி மன்னன் விலகியபோது, இங்கிருந்த மக்கள் பலரும் வெளியேறினர். ஆதலால் மாருதப்புரவல்லிக்குப்பின் இவ்விடம் ஓரளவு அரிதாகக் குடிகள் வாழும் பிரதேசமாக மாறியது.

7. உக்கிரசிங்கன் - மாருதப்புரவாகவல்லி காலத்திற்கு முன் நிகழ்ந்த வரலாறு விஜயனின் வருகையாகும். அவனுடைய வருகை முத்துத்தம்பிப்பிள்ளை குறிப்பிடுவதுபோல கி.மு. 543 இல் நிகழவில்லை. கி.மு. 483 இல் நிகழ்ந்தது. உக்கிரசிங்கன் காலம் கி.பி. 785 ஆகும். விஜயனின் கதை முற்றுமுழுதான கட்டுக்கதையென வரலாற்றறிஞர்கள் கருதுவர்.

8. குவேனி என்ற திராவிட மூதாதைப்பெண் தனது காதல் போதையால் செய்த தவறால் இயக்க மக்களின் ஒருபகுதியினர் அழிந்தொழிய நேரிட்டது. அத்தோடு இலங்கையினாட்சியுரிமை மாற்றமுறவும் காரணமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாண்டிநாட்டுப் பெண்கள்

பின்னர் மாதோட்டப் பகுதியிலே சிற்றரசு செய்திருந்த தமிழ்த் தலைவனோடு நட்புக்கொண்டு அவன் மூலமாகப் பாண்டியனிடம் தூது போக்கித் தனக்கு ஒரு புத்திரியைத் தருவதோடு தன் துணைவர்க்கும் எழுநூறு கன்னியரையும் அனுப்புமாறு வேண்டினான். அவ்வேண்டுகோளுக்கிணங்கிப் பாண்டியன் தன் புத்திரி விசயையையும் பிரதானிகள் புத்திரிகளாகிய ஏழுநூறு கன்னியரையும் பரிவாரங்களோடு அனுப்பி மாதோட்ட நகரிலேதானே மணமுற்றுவித்தான்.

## எலுமொழி

அதன் பின்னர் விஜயன் இலங்கைக்குச் சக்கரவர்த்தியாக முடிபுனைந்து ஒரு நகரமும் அமைப்பித்து முப்பது வருஷஞ் செங்கோலோச்சினான். பாண்டி ராசாவின் சம்பந்தத்தினால் மாதோட்டத்தையும் திரிகோணமலையையுந் தலைநகரங்களாகவுடைய ஈழ நாட்டுத் தமிழ் மக்களும் விஜயன் குடைக் கீழடங்கினர். விஜயனும் அவன் குடிகளும் கைக்கொண்டொழுகிய சமயம் சைவசமயமே. சிங்கள பாஷை, தமிழ்ச்சொல் சிறிதும் சமஸ்கிருத பிராகிருதச் சொற்கள் பெரிதுமாகக் கலந்துண்டாக்கிய ஒரு மிசிரபாஷை. எலுவென்பது சமஸ்கிருத பிராகிருதும் மிக அருகிக்கலந்த சிங்களம். எலுவென்பது ஈழமென்பதன் மரூஉ. இப்பாஷையே விஜயன் வருமுன்னும் இலங்கையின் தென்பாகத்திலுள்ள யக்ஷ நாகர்களாலும் வழங்கப்பட்டது. மகதநாட்டிலிருந்து வந்து அரசு கைக்கொண்ட விஜயனும் அவன் வமிசத்தோரும் அப்பாஷையையே வழங்கினர். மதுரையிலிருந்து வந்த நாயக அரசர் வழங்கியதும் அப்பாஷையே.

## சிங்களத்துவீபம்

சிங்களத்துவீபமென்னும் பெயர் இலங்கைக்கு ஆங்குள்ள பட்டையால் வந்தது. சிங்களம் - பட்டை. அது கறுவாப்பட்டை (லக்ஷ்மண வைத்தியரென்பவர் செய்த சமஸ்கிருத அகராதியிற் காண்க) ஈழம் என்பது சிங்களம் என்பதன் சிதைவு.

## விஜயனுக்குப் பின்...

விஜயனுக்குப் பின்[8அ] வழிமுறையாக இலங்கை பதினொருவரால் அரசு செய்யப்பட்டது. பன்னிரண்டாம் அரசன் அசேலன்.

---

8அ. விஜயனினாட்சி கி.மு. 483 இலிருந்து கி.மு. 445 வரை நிகழ்ந்தது. அவனுக்குப்பின் பாண்டு வாசுதேவா (கி.மு. 444 - 414) அபயன். (கி.மு. 414 - 394), பண்டுகாபயன் (கி.மு. 377 - 307) முத்துசிவன் (கி.மு. 307 - 247), ஆகிய மன்னர்கள் ஆட்சி செய்தார்கள். அதன் பின்னர் ஈழத்தின் புகழ்மிக்க மன்னனான தேவநம்பியதீசன்

## எல்லாளன் (ஏலேலன்)

அவன் காலத்திலே (205 B.C) ஏலேலன் என்னும் ஓர் இராசகுமாரன் தொண்டை நாட்டினின்றும்[9] பெருஞ் சேனையோடு வந்து திரிகோணமலையிலிறங்கி, அநுராதபுரஞ் சென்று அந்நகரத்தை வளைத்துக் கொடிய யுத்தஞ் செய்து, அதனை வென்று இலங்கைக்கரசனானான். ஏலேலன், கல்வியறிவு, நடுநிலை தவறாதநீதி, பொறை, அருள், ஆண்மை முதலிய இலக்கணம் அமைந்தவன். தனது நாட்டிலுள்ள குடிகளைத் தன் அருமை மக்களென உரிமையோடும் பாதுகாப்பவன். எவ்வுயிரையுந் தன்னுயிர் போலக் காப்பவன். எச்சமயத்தவரையும் அவ்வச் சமய நெறியில் நிறுத்துபவன். தனது சமயமாகிய சைவசமயத்தையும் அவன் முறைப்படி பரிபாலிப்பவன். அவன் இலங்கையிலே முக்கியமான விடங்களிலே முப்பத்திரண்டு கோட்டைகளும் அநேக பௌத்த சைவாலயங்களும் அமைப்பித்தான். அவன் பௌத்த குருமாரும் சைவசாரியரும் "எம்மரசன் எம்மரசன்" என்று கொண்டாடச் செங்கோல் செலுத்தியவன். அநேக குளங்களைக் கட்டி நெல்விளைவை விருத்தி செய்தவன். பவானிக்குளம் என்னும் பெரிய குளத்தைக் கட்டுவித்தவனும் அவனே. பவானிக்குளமென்பது வவனிக்குளமென வழங்குகின்றது. அவன் நாடெங்கும் வித்தியாசாலைகளும் வைத்தியசாலைகளும் அமைத்து முறையே கல்வியையும் உயிர்களையும் பரிபாலித்தவன். பாணருக்கும் வித்துவான்களுக்கும் பெருநிதி வழங்கும் வள்ளல்.

---

*(கி.மு. 247 - 207) அரச கட்டிலேறினான். இவன் காலத்தில் இலங்கையின் வட பெரும்பகுதி. யாழ்ப்பாணக்குடாநாடு, உட்பட உத்தரதேசம் (வடபிரதேசம்) என்றும், தென் பெரும்பகுதி தக்கணதேசம் (தென்பிரதேசம்) என்றும் வழங்கலாயிற்று. நாகதீவு என்ற பெயர் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குரியதாகச் சுருங்கியது. வடக்கேயும் தெற்கேயும் நிலை பெற்றிருந்த சிற்றரசுகள், தேவநம்பிய தீசனின் ஆட்சியதிகாரத்தை ஏற்றிருந்தன. தேவநம்பிய தீசனின் மரணத்தின் பின்னர், உத்தரதேசத்துக்குத் தமிழ்குறுநில மன்னர்கள், அநுராதபுர அரசின் ஆணையை ஏழ்காததோடு, அநுராதபுரத்திற்கு எதிராகத் தண்டெடுக்கவுந் தள்ளப்பட்டனர். தேவநம்பிய தீசனின் பின்னர் உத்தியன் (கி.மு. 207 - 197) மகாசிவன் (கி.மு. 197 - 187) சூரத்தீசன் (187 - 177) ஆகியோர் அரசகட்டிலேறினர். சூரத்தீசன் காலத்தில் உத்தரதேசத்துக்குக் குறுநில மன்னர்களாக விளங்கிய சேனன், குத்திக்கன் என்போர் அநுராதபுரத்தைக் கைப்பற்றி 22 ஆண்டுகள் (கி.மு. 177 - கி.மு. 155) ஆட்சி செய்தனர். பின்னர் அசேலனின் என்ற சிங்கள இளவரசன். சேனன் குத்திகளை வெற்றி கொண்டு, இலங்கையின் மன்னனானன். கி.மு. 247 தொட்டு கி.மு. 29 வரையிலான 220 ஆண்டுகால அநுராதபுல அரசின் வரலாற்றை நோக்கில், இக்கால எல்லைக்குள் ஆட்சி புரிந்த 19 மன்னர்களுள் 8 தமிழ் மன்னர்கள் 81 வருடங்களுக்குமேல் ஆட்சி புரிந்துள்ள மையைக் காணலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எல்லாளனின் சிறப்பு

ஏலேலனைச் சிங்கள சரித்திரக்காரர் நீதியிலே மனுச்சக்கரவர்த்தி எனப் பாராட்டுவர். அவன் தனது சயன மண்டபத்திலேயுள்ள கட்டிற்காலிலே ஓர் ஆராய்ச்சி மணி கட்டி அதனை அசைத்தடிக்கும் பொருட்டுக் கயிற்றை மாட்டிச் சுவர்த்துவாரத்தினாலே வெளியிலே தூங்க விட்டிருந்தான். முறையீடுள்ளவர்கள் எக்காலத்திலும் அதனை இழுத்து அவ்வாராய்ச்சியை அடிக்க, அவன் உடனே ஓடி வெளியே வந்து அவர்கள் குறையைக் கேட்டுத் தக்கவாறு நீதி புரிபவன். ஆதலால் அவன் இராச்சியத்தில் முறையீடென்பது மிகவரிது. ஒருநாள் அவன் மகன் இரதத்திலேறி வேட்டையாடி மீண்டு வரும்போது அவன் கண்ணுக்குப் புலப்படாமல் ஓரிளங்கன்று அவ்விரதத்தின் சில்லில் அகப்பட்டரைபட்டிறந்தது. அச்செய்தியைக் கண்ட தாய்ப்பசு[10] அலறிக் கொண்டோடிப்போய் ஆராய்ச்சி மணிக் கயிற்றை வாயிலே கவ்வியிழுத்தடித்தது. அரசன் ஓடிவந்து இதன் கருத்தென்னவென்று மந்திரிமாரை நோக்கி வினவி, அவர்களால் நடந்ததை யறிந்து, உயிருக்குயிர் வாங்குதலே முறையெனத் துணிந்து, மந்திரிமாருஞ் சுற்றமுந் தடுக்கவும் கேளானாய், அப்பசுவின் துயரத்தை எவ்வாறு என்கண்ணாற் பார்ப்பேன் எனக்கூறித் தன் மகனை அப்பசுவின் முன்னே தானே தன் தேர்க்காலின் கீழிட்டுக் கொன்றான். இன்னும் அவன்பால் விளங்கிய துல்லிய நீதிச்சம்பவங்கள் அனேகம். நீதிநெறியினால் அவன் கீர்த்தி உலகெங்கும் பரவியது. அவனுடைய கொடைப்புகழ் பரவாத தேசமில்லை. கேளாத செவியில்லை. பாராட்டாத நாவில்லை.

---

9. *சிங்கள அரசின் மீது தமிழரின் படையெடுப்புக்கள் நிகழும்போது, அப்படையெடுப்புக்கள் தென்னிந்தியாவிலிருந்து நிகழ்ந்ததாக மகாவம்சம் குறிப்பிடுவது வழமை. ஆனால், உத்தரதேசத்தின் பூநகரிப்பகுதியில் நிலவிய செழிப்பான தமிழ் இராச்சியத்திலிருந்தே இப்படையெடுப்புக்கள் நிகழ்ந்துள்ளன. அநுராதபுரத்தில் ஆட்சி செய்த தமிழ் மன்னர்களின் சாதனைகளை மறைத்தும் திரித்தும் கூறும் மகாவம்சம் இவர்களை ஆக்கிரமிப்பாளர், படையெடுப்பாளர், சோழமரபில் வந்தவர்கள் அக்கரையைச் சேர்ந்தவர்கள் எனக் கூறுகின்றது. இதற்கு இவர்கள் அனைவரும் தமிழ் நாட்டிலிருந்து படையெடுத்து வந்து ஆட்சியைக் கைப்பற்றியவர்கள் என வரலாற்று ஆசிரியர்களால் விளக்கம் கொடுக்கப்படுகின்றது. ஆக்கிரமிப்பாளர்களைச் சோழராகம் குறிப்பிடும் மகாவம்சம் அவர்களைப் பாண்டியர்களாகக் கூறுவதில்லை. காரணம், சிங்கள மரபின் தாயாதிகள் பாண்டிய இளவரசி ஒருத்தியும், 700 பாண்டியப் பெண்களுமாவர் என்பதினாற் போலும். தமிழ்நாட்டு வரலாற்று மூலகங்களில் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு வரை இலங்கையுடனான அரசியல் தொடர்பு பற்றியோ, படையெடுப்புக்கள் பற்றியோ எதுவித குறிப்பும் காணப்படவில்லை. அதனால், அநுராதபுரத்தின் மீது படையெடுத்த தமிழர்கள் அனைவரும் தமிழ் நாட்டிலிருந்து படையெடத்தார்களா அல்லது இலங்கையின் இன்னொரு பிராந்தியத்திலிருந்து*

## யாழ்ப்பாடி

இவ்வாறு அரசியற்று நாளிலே, தொண்டை நாட்டிலே அந்தக கவிவீரராகவனெ[11]ன்றொரு யாழ் வல்லானிருந்தான். அவன் தன் மனையாளொடு சண்டையிட்டுக் கொண்டு ஈழமண்டலம் போகிறேனென்ன, அவள் "வளநாடும் மழகளிறும் வாங்கி வரப் போகின்றீரோ" என்றாள். "இவள் என்னை அனுமதித்தாள்" என அவன் மனத்துண் மதித்துத் தன்பரிசனத்தோடும் ஈழநோக்கி வழிக்கொண்டு மரக்கரமேறி மணற்றியிலிறங்கிப்போய் அநுராதபுரத்தையடைந்தான். அங்கே இராசதரிசனத்துக்குச் சமயம் பார்த்துச் சபாமண்டபத்திற் புகுந்தான். அவன் வரவும் அவன் இயல்புமுணர்ந்த ஏலேலன், அந்தகர் முகத்தில் அரசர் விழித்தலாகாதென்னும் வழக்கம்பற்றித் திரைமறைவிலிருந்து அக்கவிவாணனை உபசரித்தான். அ·துணர்ந்த கவிவாணன்,

நரைகோட்டிளங்கன்று நல்வளநாடுநயந்தளிப்பான்
விரையூட்டு தாரிப்புயன்வெற்பீழமன்னனென்றேவிரும்பிக்
கரையோட்டமாக மரக்கலம் போட்டுனைக்காணவந்தாற்
றிரைபோட்டிருந்தனையேலே சிங்கசிரோமணியே.

என்னும் செய்யுளைப் பாடினான்.

ஏலேலன் அதனைக்கேட்டு அதிசயவசத்தனாகி, "இக்கவிவாணர் பிறவிக்குருடராயிருப்பினும் அகக்கண்ணினாற் காணும் பெருவல்லமை

---

படையெடுத்தார்களா என்பது ஆய்வு செய்ய வேண்டியதொன்றாகும். பூநகரிப் பிரதேசம் உத்தரதேசத்தில் முதன்மையான ஓர் அரசாக விளங்கியுள்ளது என்பது புஸ்பரட்னத்தின் அண்மைக்கால ஆய்வுகள் நிரூபிக்கின்றன. எனவே, அநுராதபுரத்தை சூரத்தீசன் ஆண்டபோது சேனன், குத்திக்கன் ஆகிய குறுநில மன்னர்கள் உத்தரதேசத்திலிருந்தே படைநடாத்தினர். அதேபோல அசேனன் காலத்தில் எல்லாளனும் உத்தரதேசத்திலிருந்தே (பூநகரி) படையெடுத்து அநுராதபுரத்தைக் கைப்பற்றி இலங்கை மன்னனானான்.

10. மனுநீதிச்சக்கரவர்த்தியின் சிறப்பினைக் கூறும் கதைகள் அனைத்தும் எல்லாளன் மீது ஏற்றி, மகாவம்சம் இணைத்துள்ளது.

11. யாழ்ப்பாடி தனது திறனை ஏலேலனின் (எல்லாளன்) முன் வெளிப்படுத்திப் பரிசில் பெற்றதாக ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை குறிப்பிடுகின்றார். ஆனால், உக்கிரசிங்கனின் மகனான செயதுங்கபரராசசிங்கன் சிங்கை நகரிலிருந்து ஆட்சி செலுத்தியபோது, யாழ்ப்பாடி என்னும் பாண குலத்தவன் ஒருவன், பரிசில் பெறுவான் வேண்டி அரசவைக்கு வந்து தன் திறமையைக் காட்டினான் என்றும், அரசன் மகிழ்ந்து இப்போது கரையூர், பாஷையூர் என்று அழைக்கப்படுவதாகிய மணல்மேட்டைப் பரிசிலாகக் கொடுத்தான் என்றும் பிறிதொரு வரலாறு உள்ளது.





யுடையராதலின் அவர்முன்னே நாம் திரையிட்டிருத்தல் தகாது" என மதித்துத், திரையை நீக்குவித்து அவன் வரலாற்றை வினாவினான். கவிவாணன் தான் பாடிவந்த பிரபந்தத்தைப் பாடித் தன் யாழ்வல்லபத்தையுங் காட்டினான்.

## பரிசில் வரிசைகள்

அரசன் செவியும் மனமுங் குளிர்ந்து கவிவாணனது கல்விச் சாதுரியத்திலும் யாழ்மாதுரியத்திலும் மயங்கி, அவனைப் பெரிதும் புகழ்ந்து கொண்டாடி, வேண்டியதைக் கேட்க, என்றான். தன் மனைவி சொல்லி அசதியாடியதைக் கவிவாணன் எடுத்துக் கூறினான். அரசன், நீ விரும்பியபடி மணற்றியையும் ஒரு யானையையும் ஒரு பல்லக்கோடு பரிசனங்களையும் கொள்கவெனக் கூறிப் பல வரிசைகளோடு பெருந் திரவியமுங் கொடுத்தான்.

## புளியடி, புளியடி

யாழ்ப்பாடி அரசனுக்கு ஆசிபல கூறி அவற்றைப் பெற்றுக்கொண்டு மணற்றியை நோக்கி மீண்டான். அவன் சிவபூசை பண்ணியே போசனஞ் செய்பவன். அக்காலத்திலே அநுராதபுரியிலிருந்த மணற்றிக்கு வரும் மார்க்கத்தில் வழிப்போக்கர் தங்குதற்கு வசதியான மடங்கள் சத்திரங்களில்லை. அதுபற்றி அவன் தன் பல்லக்கை வசதியான புளியமர நிழல்தேடி நிறுத்தும்படி தன் போகிகளுக்குக் கட்டளை பண்ணியிருந்தான். அவ்வாறே பகலிலும் இரவிலும் புளியமர நிழல் தேடித் தங்கி வருவானாயினான். ஒரு நாள் பல்லக்குச் சுமப்போர் தக்க புளிமரநிழல் காணாது நெடுந்தூரஞ் சுமந்து சென்றார்கள். கவிவாணன் ஷபூசைக்கு நாழிகையாயிற்றே இது எவ்விடம்' என்று அடிக்கடி வினாவினான். அவர்களும் 'புளியடி புளியடி' என்று கூறி விரைந்து நடந்து ஒரு புளியைக் கண்டு, அம்மரத்தடியிலே பல்லக்கை இறக்கினார்கள். அந்த இடம் இன்றும் பல்லக்குப்புளியடி என்று வழங்குகின்றது. 'எவ்விடம் எவ்விடம் புளியடி புளியடி' என்ற பழமொழியும் கவிவாணன் காரணமாக வழங்குவதாயிற்று.

## யாழ்ப்பாணன்

இவ்வாறு மணற்றியில் வந்து சேர்ந்த கவிவாணன் மணற்றியெங்குஞ் சுற்றிப்பார்த்து நல்லூருக்குச் சமீபத்திலே தனக்கொரு மாளிகையும் அதன் சூழலிலே தன் பரிசனங்களுக்கு வீடுகளும் அமைப்பித்துச் சில நாள் வசித்தான். அவன் இந்நாட்டில் முதலில் வெட்டுவித்த குளம் இப்போது தூர்ந்ததாயினும் இன்றும் பாணன் குளம் என வழங்கப்படுகின்றது. சில நாளாயினபின் கவிவாணன் மீண்டு தனது தேசஞ் சென்றான். பிரிந்த துயரத்தால் மிக வருந்தியிருந்த மனைவி அவன் வரவுணர்ந்து எதிர்சென்று பாதங்களில் வீழ்ந்து பணிந்து தழுவிப் பேருவகையுற்றாள். இருவரும் போசன மருந்திப் பேசிக்கொண்டிருக்கும் போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாளிருவர்க்கும் யாக்கையொன்றாக முயங்கினமால்
பின்னாட்பிரிவின் பிரியை யென்றாயினம் பேசலுறும்
இந்நாட்கொழுந் தன்மனைவியென்றாயின மின்னமுமோர்
சின்னாளி வெப்படியோரை வயநீயின்று செப்புகவே.

என்னுமிக்கவியைக் கவிவாணன் மனைவி கூறி, இன்னுமென்னை விட்டுப்பிரிய மனம்பொருந்துவீரோவென்று கண்ணீர் சொரிந்தாள்.

யாழ்ப்பாணன் அவளை ஆற்றி இனி உன்னை விட்டுப் பிரியேன் எனத்தேற்றி, அடுத்தநாள் தொண்டைமானிடஞ் சென்று தான் பரிசாகப் பெற்ற மணற்றியிற் குடியேற்றுதற்கு இராஜதந்திரம் வல்லமந்திரி பிரதானிகளும் ஒரு சிறுசேனையும் தரல் வேண்டுமென்று வேண்டினான். தொண்டைமான் நீர் கூறிய அந்நாட்டைத் தவிர வேறியாது பரிசாகப் பெற்றீரென்றான். அதற்கு யாழ்ப்பாணன்,

இம்பர்வாழேவேலணை யேபாடி
என்கொணர்ந்தாய்பாணாநீ யென்றாள் பாணி
எம்பதாங்களப மென்றேன் பூசுமென்றாள்
மாதங்கமென்றேன் யாம்வாழ்ந்தேயென்றாள்
பம்புசீர்வேழமென்றேனின்னுமென்றாள்
பகடென்றேனுழுமென்றான் பழனந்தன்னைக்
கம்பமாவென்றேனற்களியாமென்றாள்
கைமாவென்றேன் சும்மாக வங்கினாளே. என்று கூற,

## தொண்டைமான்

தொண்டைமான்[12] அதுகேட்டு மிகமகிழ்ந்துமெச்சி, நீர் பெற்ற நாட்டின் வளத்தைக் கூறுகவென்றான். பாணன் அந்நிலவளங்களைக் கூறிவரும்போது, உப்புச் செய்கை பண்ணப்படாது இயற்கையாகவே படுகின்றதென்றும், அவ்வுப்பு அபரிமிதமாக்கப்பட்டு வருஷந்தோறும் அழிந்து போகின்றதென்றுஞ் சொன்னான். அதுகேட்ட தொண்டைமான், அவ்வுப்பை எனக்குத் தருவீராயின் உமக்கு வேண்டுங் குடிகளைத் தருவேன். அவ்வுப்பைத் திரட்டுவதற்கும் வேண்டும் போதமைத்தற்கும் வேண்டும் ஏவலாளரையும் மரக்கலங்களையும் யானே அனுப்புவேன் என்றான். யாழ்ப்பாணன் மகிழ்ந்து அதற்கிசைதலும், தொண்டைமான் அவனுக்க வேண்டுங் குடிகளையும் மந்திரியொருவனையும் பிரதானி முதலியோரையும் ஒரு சிறு படையையும் கொடுத்து அவனை அனுப்பிவிட்டு, உப்புக்காக மரக்கலங்களையும் உப்பமைப்போரையும் அக்கருமத்துக்கோ ரதிகாரியையும் பின்னர் அனுப்பினான்.

12. உக்கிரசிங்கன் (கி.பி. 785) யாழ்ப்பாணத்தை ஆண்ட போது, தன்படுவான் உப்பை வேண்டி, தொண்டைமான் யாழ்ப்பாணம் வந்ததாக வைபவமாலை குறித்துள்ளது.





## குடியேற்றம்

யாழ்ப்பாணன் அக்குடிகளை மரக்கலங்களிலேற்றிக் கொண்டு தன் மனைவியோடும் மந்திரி பிரதானி சேனையோடும் மீண்டுவந்து நல்லூரிலே வசித்தான். நல்லநாளிலே யாழ்ப்பாணன் பட்டாபிஷேகமும் பெற்றுத் தனது நாட்டுக்கு யாழ்ப்பாணமென்னும் பெயரும் வழங்கினான். அவன் தனக்கு மந்திரியாக வந்த சேதிராயனுக்குப் புத்தூரென்று பின்னர் வழங்கப்பட்ட இடத்தை திருத்தி அவ்வூரை அவனுக்குக் கொடுத்தான். அது புதிதாக அமைக்கப்பட்ட ஊராதலின் புத்தூரெனப்பட்டது. நிலவளம் நீர்வளஞ் சோதித்து அநேகவிடங் களைக் காடுகெடுத்து நாடாக்கி நெல்விளைவிக்கவுந் தொடங்கினான்.

## தொண்டைமானாறு

அதன்பின்னர்த் தொண்டைமானுடைய மரக்கலங்களும் வந்தன. உப்பேற்றும்பொருட்டு ஒரு கால்வாயும், மரக்கலங்கள் தங்குதற்கு ஒரு துறையும் அவன் அனுப்பிய சனங்களால் அமைக்கப்பட்டன. அச்சனங்கள் உப்பளத்துக்குச் சமீபத்திலே குடிகொண்டார்கள். அச்சனங்கள் உப்பெல்லாவற்றையும் திரட்டிக் காலந்தோறும் அம்மரக்கலங்களிலேற்றி அனுப்பி வந்தார்கள். அம்மரக்கலங்கள் மீண்டுவரும்போது, நெல், கறிச்சம்பாரம், வஸ்திரம் முதலியன கொண்டுவந்து யாழ்ப்பாணத்திலுள்ள தொண்டைமான் சனங்களுக்குக் கொடுப்பதுமன்றி மற்றைச் சனங்களுக்கும் கொடுத்துப் பண்டமாற்றி மீளும். தொண்டைமான் ஏவலாளரால் அமைக்கப்பட்ட கால்வாய் தொண்டைமானாறு என இன்றும் வழங்குகின்றது.

## குடிபடைகள்

தொண்டைமானது கருமாதிகாரியாகிய வீரப்பராயனிருந்தவிடம் இன்றும் வீரப்பராயன் குறிச்சி எனப்படுகின்றது. தொண்டைமான் கருமமாக வந்த சனங்கள் பெரும்பாலும் தொண்டை நாட்டின் வடபாகத்திலிருந்து வந்தவர்கள். அவர்கள் குடிகொண்டபகுதி வடமராட்சி எனப்பட்டது. அவர்கள் பாஷை தெலுங்கு. அதுபற்றியே யாழ்ப்பாணத்திலே கடவு, பிச்சுவாய்க்கத்தி (பீச்சாக்கத்தி) முதலிய தெலுங்குச் சொற்கள் வழங்குவதாயின. அவர்கள் விஷ்ணுவை வழிபடுவர். அதுபற்றி வல்லிபுரமென்னுங் குறிச்சியிலே ஒரு விஷ்ணுவாலய முண்டாவதாயிற்று. வள்ளியதேவன் அதிகாரஞ் செய்தவிடம் வல்லிபுரமெனப்பட்டது. ராயன், தேவன், கிழான், மழவன் என்னும் சிறப்புப் பெயர்கள் அந்நாள் வேளாளர்க்குரியன. தெலுங்கு பாஷையும் தெலுங்கு நாடும் வடுவெனப்படும். அதுபற்றியே அந்நாட்டிலிருந்து வந்து குடிகொண்ட வடமரை வடுகரென்று கூறுவர். அவ்வடமருள்ளே போகியர் ஒரு தொகையினர். இடையராகிய கோபிகர் பெரும்பாலார். கோபிகர்[13] பிற்காலத்திலே கோவியரெனப்பட்டார்கள். கோபிகரைப்போலவே உப்பமைக்கும் பொருட்டு வந்த அளமரும் பெரும்பாலார். போகியருட் சிலர் யாழ்ப்பாணனுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் வீரப்பராயனுக்கும் சிலர் சேதிராயனுக்கும் சிவிகையாட்களாகிச் (சிவிகையார்) சிவியாரெனப்பட்டார்கள். நல்லூர் இராஜதானியிற் குடிகொண்ட சிவிகையார் பின்வந்த தமிழரோடு வந்து தமக்குரிய குடிமைகளுடன் கிராமம் கொண்டவர்கள்.

## சித்தி விநாயகராலயம்

யாழ்ப்பாணனும் சேதிராயனும் கல்வியிலே சிறந்தவர்களாதலின் தமது குடிகளுக்கு நெல்விளைவு குறையாவண்ணம் நிலங்களைத் திருத்தியும், குளங்கள் கால்வாய்களை வெட்டியும் நாட்டைத் திருத்தியதோடு, நாட்டிலே நல்லொழுக்கமும், ஒற்றுமையும், ஈசுரபத்தியும் அபிவிருத்தியாகுமாறு ஒரு பாடசாலையும். புரோகிதராகத் தம்மோடு வந்த கச்சிக்கணேசையர் கொணர்ந்த சித்திவிநாயகரையும் ஓராலயம் வகுத்துத் தாபித்தனர். இதுவே யாழ்ப்பாடி காலத்தில் உண்டாகிய விக்கிநேசுராலயம். இது நல்லூரில் எவ்விடத்திலிருந்த தென்று தெரியவில்லை. சிவியாதெருவில் இப்போதுள்ள சித்திவிநாயகராலயத்தி லுள்ள விக்கிநேசுர மூர்த்தி அதுவேபோலும். நெல்லுப் பயிரோடு செந்தமிழ்க் கல்விப் பயிரையும் யாழ்ப்பாணத்தில் முதன்முதல் வளர்த்தவன் யாழ்ப்பாடியே. அவன் தொடங்கிய முகூர்த்த விசேஷமாக யாழ்ப்பாணத்தில் அவ்விரு பயிரும் அபிவிருத்தியாகிக் கொண்டே வருகின்றன.

## யாழ்கொடி

யாழ்பாடியுடைய கொடி யாழைக் கையிலேந்திய சயமகட் கொடி. அது மிதுனக் கொடியெனவும்படும். அதுவே சங்கிலியரசனிறுதியாகவுள்ள யாழ்ப்பா ணத்து அரசரெல்லாம் கொண்ட கொடியாம். யாழ்ப்பாடி சாதியிலே தொண்டை மண்டலத்துயர் குடிச் சைவவேளாண்முதலி, யாழ்ப்பாடியினது திருவுருவச்சிலை* யைப் பின்வந்த அரசர் தமது கோட்டை வாயிலிலே நாட்டிப் போற்றி வந்தனர். அது நிற்க,

## யாழ்ப்பாணன் ஆட்சி

யாழ்ப்பாடி** எழுபது வருஷம்[14] அரசு செய்து தன் சுற்றமும் குடிகளும்

---

*13.* *சிங்கள வேளாண்மை மக்களைக் 'கோவியா' என அழைப்பர். இந்தச் சிங்கள உயர்குடி வெள்ளாளர் யாழ்ப்பாணத்கதில் குடியேறினர். அவர் வழி வந்தவர்களே 'கோவியர்' என அழைக்கப்படுவதான விளக்கம் ஒன்று உள்ளது.*

* *யாழ்ப்பாடி திருவுருவச் சிலையொன்று யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல ஸ்தானத்தில் அமைத்துவைத்தல் நம்மவர் கடனாம்.*





வயிறலைத்திரங்கப் பரகதியடைந்தான். அவனுக்குப் பின் சேதிராயனும் ஆண் சந்ததியின்றி இறந்தான். தொண்டை நாட்டரசனாகிய தொண்டைமானுடைய சனங்களாய் யாழ்ப்பாணத்திலிருந்தோர் தொண்டை நாட்டிலிருந்து ஒருவர் பின் ஒருவராய் வரும் உப்பதிகாரிகளால் ஆளப்பட்டு வந்தார்கள். யாழ்ப்பாடி குடிகள் அரசின்றி நெடுங்காலம் வாழ்ந்தனராயினும் அவருட் பயிரிடுங் குடிகளே சந்ததி செய்து, தொகையிற் பெருகினர். இராசசேவை செய்தும் அரண்மனைக்கு வேண்டிய காருககம்மியத் தொழில்கள் புரிந்தும் வாழ்ந்தோர் அரசனின்மையால் தொண்டை மண்டல முதலிய தேசஞ் சென்றனர். ஆயினும் நெடுங்காலம் யாழ்ப்பாணம் நாட்டுத் தலைவரால் ஆளப்பட்டு வந்தது.[15]

## மழவராயன்

சேதிராயன் சந்ததியில் வந்த ஒரு கன்னிகையைப் பொன்பற்றியூரிலிருந்து வந்த மழவராயன் என்பவன் மணம் புரிந்திருந்தான். அவன் யாழ்ப்பாணம் அரசின்றிக் கெடுவதைக் கண்டு ஓரிராசகுமாரனை நாடிக் கொண்டு வருமாறு சோழ நாட்டுக்குச் சென்றான். அங்கே சோழன் புத்திரனொருவன்[15அ] மதுரையிலே கல்வி பயின்று வருகின்றானென்பதைக் கேட்டுச் சோழராசன் அனுமதியோடு மதுரைக்குப் போய் பாண்டியனுக்கு விண்ணப்பஞ் செய்தான். பாண்டியன்

---

** *யாழ்ப்பாடியாகிய அந்தக் கவிவீரராகவனும் வேறு, இற்றைக்கு 250 வருடத்துக்கு முன்னிருந்த கவிவீரராகவனும் வேறு. பிந்திய முத்தமிழ்க் கவிவீரராகவ முதலியாரும் வேறு.*

*14.* *யாழ்ப்பாடி, யாழ்பாணக்குடாநாட்டின் தென்பகுதியில் தலைவனாக விளங்கிய போது, (பூநகரி) சிங்கை நகரில் உக்கிரசேனனின் மகன் செயதுங்க பரராசசிங்கன் மன்னனாக விளங்கியுள்ளான் எனக் கொள்ளல் வேண்டும்.*

*15.* *செயதுங்கன் காலத்தில் முதலாம் சேனன் என்பான் அநுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்தான். ஸ்ரீமாற வல்லவன் (கி.பி. 815 - 862) என்ற பாண்டிய மன்னன் இலங்கை மீது படையெடுத்து இரு மன்னர்களையும் வெற்றி கொண்டு திறை பெற்று மீண்டான். செயதுங்கனின் பின்னர் உத்தரதேசத்தை அவன் சந்ததியினரே ஆண்டிருக்க வேண்டும். 9ம் நூற்றாண்டில் உத்தரதேசம் 2ம்கஸ்சப மன்னனின் கீழும் 10ம் நூற்றாண்டில் 4ம் மகிந்த மன்னனின் கீழும் அடங்கியிருந்துள்ளது. கி.பி. 1003ல் இலங்கை இராஜ ராஜ சோழனின ஆட்சிககுட்பட்டது. உத்தரதேசத்தை சோழ மன்னனால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் நிர்விகித்து வந்தனர். புவனேகபாகு என்பவன் அவ்வாறான பிரதிநிதியாக விளங்கியுள்ளான். 11ம் நூற்றாண்டில் இலங்கையிலிருந்து சோழரை துரத்திவிட்டு, முதலாம் விஜயபாகு (கி.பி.1055 - 1110) மன்னனாகினான். கி.பி. 1110 ல் கருணாகரத் தொண்டைமான் தலைமையில் குலோத்துங்க சோழன் இலங்கை மீது படையெடுத்தான். அவ்வேளையிலும் சோழராஜப் பிரதிநிதி ஒருவனே நாட்டை நிர்வகித்து வந்துள்ளான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கோமகனை அழைத்து, மழவராயன் விண்ணப்பத்தைக்கூறி, அவன் மனக்கருத்தை உசாவினான். கோமகன் அதற்கிசைய, பாண்டியன் அவனையும் அவன் தேவியையும் வேண்டும் பரிவாரங்களும் சிறுசேனையும் திரவியமும் கொடுத்தனுப்பினான். அவன் புறப்பட்டுத் திருவாரூருக்குச் சென்று தந்தையிடம் சிலநாள் வைகினான். அதற்கிடையில் மழவராயன் தொண்டை நாட்டுக்குப் போய், குடும்பத்தோடு சில பிரபுக்களையும் அவர்களோடு பயிரிடுங் குடிகளையும், காருகம்மியர்களையும், ஏனைய சாதிக் குடிகளையும் கொண்டு வருவேனென அவ்விராசகுமாரன்பால் விடை பெற்றுச் சென்று, அனேக குடிகளை மரக்கலங்களிலேற்றி அனுப்பிவிட்டு மீண்டு திருவாரூரை அடைந்தான்.

## பெண்ணைத்துறை

உடனே இராசகுமாரனும் தந்தைபால் விடை பெற்று அவன் கொடுத்த வரிசையோடு கோடிக்கரை வழியாக யாழ்ப்பாணத்தை அடைந்து, இங்குள்ள குடிகளும், நாட்டுத் தலைவர்களும் எதிர்கொண்டுபசரிக்கச் சென்று நல்லூரை அடைந்தான். தொண்டை நாட்டினின்றும் புறப்பட்ட பிரபுக்கள், தங்கள் பத்தினிமார் கடல்யாத்திரைக்குடன்படார் எனக்கண்டு, தொண்டை நாட்டிலுள்ள பெண்ணையாற்றில் மரக்கலமேறி அக்கரை சென்று மீள்வோமென அவரை வஞ்சித்துக் கொண்டுபோய்ப், பெண்ணையாற்றுத் துறையிலே மரக்கலத்திலேற்றித் தாமுமேறி இரவெல்லாமோடி விடிய வந்து யாழ்ப்பாணத்திலே இப்போது பண்ணைத் துறையெனப்படும் துறையிலே இறங்கினர். அவர் பத்தினிமார் தாமேறிய பெண்ணையாறும் யாழ்ப்பாணக்கடலும் ஒன்று போலிருப்பது கண்டு இஃ தெவ்விடமென்றபோது, பெண்ணைத்துறையென்றமையால் அதுமுதல் அத்துறை பெண்ணைத்துறை (பண்ணைத்துறை) எனப்படுவதாயிற்று. அது நிற்க,

15அ.மதுரையில் கரந்துறைந்த இளவரசன் கலிங்கத்து மாகன் ஆவான். கி.பி. 1215 ஆம் ஆண்டு கலிங்கத்து மாகன் என்பான் இலங்கையைக் கைப்பற்றி, 1236 ம் ஆண்டு வரை 21 வருடங்கள் பொலநறுவையிலிருந்து ஆட்சி செலுத்தியுள்ளான். 1236ல் 2 ஆம் பராக்கிரமபாகு என்ற சிங்கள மன்னன் கலிங்கத்து மாகனைப் பொலநறுவையிலிருந்து துரத்தி விட்டான். அந்த யுத்தத்தில் கலிங்க மாகன் இறந்ததாக ஆதாரமில்லை. அவன் வடவிலங்கைக்கு அல்லது மதுரைக்குச் சென்றிருக்கவேண்டுமென ஆய்வாளர் கருதுவர். 1236 - 1242 வரை அவன் எங்கிருந்தான் எனத் தெரியவில்லை. இக்குறித்த கால வேளையில் வடவிலங்கை பாண்டி மளவன் என்ற அதிகாரியை நிர்வகித்து வந்தான் என்பது கைலாச மாலையிலிருந்து புலனாகிறது. இப்பாண்டி மழவனே ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை மழவராயன் என்கிறார் போலும். தென்னிலங்கைச் சிங்கள அரசனின் அச்சுறுத்தல் ஆரம்பமானபோது, பாண்டிமழவன் மதுரை சென்று, அங்கு கரந்துறைந்த கலிங்கத்து மாகனை அழைத்து வந்து மன்னனாகினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நகரமமைத்தல்

நல்லூரையடைந்த இராசகுமாரன் ஓரலங்காரமான பெரிய மாளிகையும் அரணும் மதிலும் அகழியும் சிங்காரவனமும் அமைப்பித்து, மந்திரி பிரதானிகளுக்கு மாளிகைகளும், அந்தணர் வணிகர் வேளாளர்களுக்கு இருக்கையும், வீதிகளும் யானைப்பந்தி குதிரைப்பந்திகளும், யானை குதிரையேற்றச் சாரி வீதிகளும் செய்வித்து நல்லூரைச் சிறந்த நகரமாக்கினான். நகரத்துக்குக் கிழக்கே வெய்யிலுகந்த பிள்ளையார் கோயிலையும், மேற்கே வீரமாகாளி கோயிலையும், தெற்கே கைலைவிநாயகராலயத்தையும், வடக்கே சட்டநாதர் கோயிலையும் கட்டுவித்தான். தனது புரோகிதராகிய கங்காதர ஐயருக்கும் அவர் பன்னியார் அன்னபூரணியாருக்கும் ஏனைய அந்தணருக்கும் அக்கிரகாரங்களும் அமைப்பித்தான். அதன் பின்னர் ஓர் ஏரி தோண்டுவித்து, யமுனையிலிருந்து அந்தணரைக் கொண்டு காவடிகளில் எடுப்பித்த தீர்த்தத்தை அதில் விட்டு, அதற்கு யமுனையேரியெனப் பெயரிட்டான். இது நிகழ்ந்தது கலி 3000ல். (B.C. 101)[16]

## சிங்கை ஆரியன்

இவ்வாறு அவன் நகரத்துக்கு வேண்டுவனவெல்லாம் அமைத்த பின்னர், மகுடாபிஷேகத்துக்கு நாள் வைத்து, மிக்க சம்பிரமத்தோடு நகரமும் நாடும் களி கொள்ள மழவராயன் முடி தூக்கிக் கொடுக்க, கங்காதர ஐயரால் விதிப்படி மகுடமும் சிங்கை ஆரிய சக்கரவர்த்தி[17] என்னும் பட்டமும் சூட்டப்பட்டான். அக்காலத்தில் அனுரதபுரத்தில் அரசு செய்திருந்த சோழகுல வேந்தனும் அச்சபைக்கு வந்தான். அந்தணர்க்கும் ஏனைய பாத்திரர்க்கும் நிலங்கள் சர்வமானியஞ் செய்யப்பட்டன. பொன் வாரி வழங்கப்பட்டன. அன்னதானம் வஸ்திரதானங்கள் அளவின்றிச் செய்யப்பட்டன. நாடெங்கும் பெருவிழாக் கொண்டாடி மகிழ்ந்தனர். நகர மாந்தர்கள் பட்டத்து யானையை அலங்கரித்து, அதில் அரசனை ஏற்றி, நால்வகைச் சேனையும் முன்னும் பின்னுஞ் செல்ல, மந்திரி பிரதானி முதலிய அங்கங்கள் புடைசூழ நகரப்பிரவேசஞ் செய்வித்தார்கள். வீதிகளிலே தோரணங்களிட்டுப் பூரணகும்பம் வைத்து உபசரித்துவாழ்த்தி வணங்கித் துதித்தார்கள்.

16. B.C. 101 அல்ல. கி.பி. 1242 ஆகும்.

17. சிங்கை நகரின் முன் பெயரைத் தன்பட்டப் பெயரோடு 'சிங்கை' என இணைத்துக் கொண்டனன். ஆரியச்சக்கரவர்த்தி என்பது இராமேஸ்வரத்து பிராமண வரச குடியிற் சம்பந்தஞ் செய்தபின், உபவீதம் அணிந்து கொண்டதால் ஏற்பட்ட ஆரிய அரசன் என்ற நாமத்தின் வழிவந்ததாகும் என்பர்.

## புவனேகபாகு

இது முடிந்த பின்னர் அரசன் மதுரையிலிருந்து வந்த உயர்குடிப் பிராமணோத்தமரும் மகாபண்டிதருமாகிய புவனேகபாகு என்பவரை மந்திரியாக்கி அவரை நல்லூரிலே வசிக்குமாறு செய்தான். வேங்கடகிரியைத் தனக்குச் சன்மஸ்தானமாகவுடைய பொன்பற்றியூர்ப் பாண்டிமழவனை (மழவராயனை)யும் அவன் தம்பியையும் அவன் மைத்துனன் செம்பகமழவனையும் திருநெல்வேலியி லிருத்தினான். அவன் மேழிக் கொடியுடையவன். பெருங் கொடைவள்ளல். வறியார்க்குஞ் செல்வர்க்கும் பேதம் பாராது விருந்தருத்துபவன்.

காவிரிப்பூம் பட்டினத்தைத் தனக்குப் பிறந்தவூராயுடையவனும், துளுவ வேளாண்டலைவனும், குவளை மாலையுடையவனும், பெரும் பண்டிதனும், வித்தியவினோதனும், உலகெங்கும் பரந்த புகழ் படைத்தவனும், கற்றவர்க்குப் பெருநிதி வழங்கும் தியாகியுமாகிய நரசிங்கதேவனை மயிலிட்டி என வழங்கும் மயிலம்பட்டியிலிருத்தினான். வாலிநகர் வேளாண்டலைவனும் மேழிக் கொடி யுடையவனும் மன்மத சொரூபனும், முத்தமிழ்ப் புலமையிற் சிறந்தவனுமாகிய சம்பகமாப்பாணனையும் அவனுறவினனாகிய சந்திரசேகரமாப்பாணனையும், சீதமாலையுடையவனும் வேளாண்செட்டியுமாகிய கனகராயனையும் குன்றாத நீர்வளமும் நிலவளமும் சிறந்த தெல்லிப்பள்ளி என வழங்கும் தல்லிப்பள்ளியிலே யிருத்தினான். (மாருதப்பரவாகவல்லி தனது நோய் நீங்கி இளமையும் அழகுமுடையவளாய் விளங்கிய காலத்தில் தங்கியவிடம் இதுவாதலின் தல்லிப்பள்ளி எனப்பட்டது.) தல்லி - இளமையுடையவள். பள்ளி - சிற்றூர்.

## பேராயிரவன்

அதன் பின்னர் கோவலூர் வேளாளனும், மேழிக்கொடியும், குவளை மாலையும், பெரும் பராக்கிரமமும், கல்வியும் கட்டழகுமுடையவனாகிய பேராயிரவனைக், கரும்பும் கமுகும் வாழையும் நெல்லும் செழித்தோங்கும் வளமுடைய இணுவில் என வழங்கும் இணையிலியில் இருத்தினான். அதன் பின்னர் கச்சூர் வேளாளனும், கற்பகதருவினை ஒத்த கொடைக் கையும், குவளை மாலையும், பெரும் செல்வமும், கட்டழகும், பெரும் பராக்கிமமுடையவனும்சிவபக்தியிலே இணையில்லாதவனுமாகிய நீலகண்டனென்பவனையும் அவன் தம்பியர் நால்வரையும் பச்சிலைப் பள்ளியிலிருத்தினான்.

## கனகமழவன்

அதன் பின்னர் சிகிரி வேளாளனும், குவளை மார்பனும், கல்வி, செல்வம், மெய்யுரை, உபசாரம், ஊக்கம், தோற்றம், அழகு என்பனவற்றிற் சிறந்தவனுமாகிய கனகமழவனையும் அவன் தம்பியர் நால்வரையும் புலோலி என வழங்கும் ஊரிலிருக்குமாறு பணித்தான்.





## கூபகேந்திரன்

அதன் பின்னர் கூபகத்து வேளாளனும், குபேரனைப் போல் பெருஞ் செல்வனும், கற்றவர்க்கு மாரி போல் வழங்கும் பெருவள்ளலும், குவளை மாலையும் மேழிக் கொடியுமுடையவனாகிய கூபகேந்திரனை அவன் உறவினனும் பெருந் தருமவானுமாகிய நராங்கதேவனோடு சிறந்த நகரமாகிய தொல்புரத்திலிருக்குமாறு அனுமதி செய்தான்.

## தேவராசேந்திரன்

அதன் பின்னர்ப் புல்லூர் வேளாளனும், வில்வித்தையில் அர்ச்சுனனும், போரில் வீமனும், கொடையிற் கன்னனும், பொறையிலும் கீர்த்தியிலும் தருமனும் போன்றவனும் நவரத்தினமழுத்திய பொன்முடியுடையவனுமாகிய தேவராசேந்திர னைக் கோயிலாக்கண்டியிலிருக்குமாறு பணித்தான்.

## மண்ணாடு கொண்ட முதலி

அதன் பின்னர்த் தொண்டை நாட்டு வேளாளனும் குவளை மாலை மார்பனும் சிறந்த தமிழ்ப் பிரபந்தமாகிய ஏரெழுபது கொண்டு கம்பனுக்குக் கனகமாரி பொழிந்த குல முதல்வனுமாகிய மண்ணாடுகொண்ட முதலியை இருபாலையி லிருக்குமாறு பணித்தான்.

## தனிநாயகமுதலி

அதன்பின்னர்ச் செய்யூர் வேளாளனும், இந்திரனைப் போன்ற செல்வனும் குவளை மாலை மார்பனும் சத்தியத்திலே சிறிதும் தவறாதவனும், இருமரபுந் துய்யவனும், குன்றாத பெருங் கீர்த்திப் பிரதாபனுமாகிய தனிநாயக முதலியை நெடுந்தீவுக்கதிபதி ஆக்கினான்.

## பல்லவன்

அதன் பின்னர் வஞ்சிநகர் வேளாளனும் மிக்க பராக்கிரமமும் கல்வியுடையவனு மாகிய பல்லவனை அவன் உறவினராகிய இரு பிரபுக்களோடு வெளிநாட்டுக் கதிபதிகளாக்கினான். (வெளிநாடென்பது பூனகரி, பல்லவராயன்கட்டு, பொன்னாவெளி என்னுமூன்று கிராமமுமாம்).

## மாதாக்கர்கள்

இவ்வாறு அரசன் யாழ்ப்பாணநாட்டை பன்னிரு பகுதிகளாக்கி, நல்லூருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரியையும், திருநெல்வேலி முதலிய பதினொரு பகுதிகளுக்கும் மேற்கூறிய வாறு பதினொருவரையும் அதிகாரிகளாக்கினான். அதன் பின்னர் வடதிசைக் காவலுக்கு ஒரு தளத்தையும், அதற்குப் பெரும் பராக்கிரமசாலியாகிய இமையாணனைத் தளபதியாகவும், கீழ்த்திசைக்கு ஒரு தளத்தையும், அதற்கு இமயத்திலும் கீர்த்தி நிறுத்திய பெரும் போர்வீரனாகிய சம்பகமாதாக்கனைத் தளபதியாகவும், தென்றிசைக் காவலுக்கு ஒரு தளத்தையும், அதற்கு அதிசூரனாகிய வெற்றிமாதாக்கனைத் தளபதியாகவும், மேற்றிசைக் காவலுக்கு ஒரு தளத்தையும், அதற்கு வல்லிமாதாக்கனென்னும் மாவீரனைத் தளபதியாகவும் நியமித்தான். அநேக போர் செய்து வெற்றி படைத்த மகாவீரதந்திரியாகிய வீரசிங்கனைச் சேனாதிபதியாக்கிக் கஜ ரத துரக பாதாதிகளை அநேக பகுதிக ளாக்கித் தகுதியான விடங்களிலே வைத்தான். இவைகளை ஊரகக் காவலாக நிறுத்தி ஊர்ப்புறக் காவலாக நாராயணன் என்பவனைத் தானைத்தலைவனாக்கி அவனுக்குக் கீழ் ஒரு தானையையும், வேலன் என்பவனைத் தானைத்தலைவ னாக்கி அவனுக்குக் கீழ் ஒரு தானையையும், இப்போது நாரந்தனை வேலணை என வழங்கு மிடங்களில் வைத்தான். நாராயணன் தானை இருந்தவிடம் நாரந்தனையெனவும், வேலன்தானை இருந்தவிடம் வேலணையெனவும் மருவி வழங்குகின்றன. அதுபற்றியே அங்குள்ள துறை ஊர்காவற்றுறை எனப்பட்டதுமாம். ஊறாத்துறையெனக் கொண்டு பன்றித்துறையெனப் பொருள் கொள்வாருமுண்டு. (ஊறா - பன்றி)

## நாட்டு நிர்வாகம்

இவ்வாறு சிங்கை ஆரிய சக்கரவர்த்தி[18] தனது நாடும் அரசும் காப்புக்குறைவு சிறிதுமில்லாதிருக்குமாறு வேண்டியவைகளையெல்லாம் வகுத்தான். அதன்மேல்

*18. சிங்கையாரியனுக்கு விசய காலிங்கத்துச் சக்கரவர்த்தி என்றும் நாமமுண்டு. இவனது பெயரை கூழங்கை ஆரியச் சக்கரவர்த்தியென யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிட்டுள்ளதாக வரலாற்றறிஞர்கள் கருதுவர். விசய காலிங்கன் என்ற சிங்கையாரியன் சிங்கை நகரில் முடிசூடிக் கொண்டான். அவன் பல்வேறு காரணங்களுக்காகத் தன் தலைநகரை, பூநகரியிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மாற்ற விரும்பினான். படையெடப்புகளால் அழிந்து போன வன்னியப்பிரதேச நாகரிகம், மலேரியா நோய் பரவல். சிங்கள மன்னர்கள் மீதுள்ள அச்சம் என்பன காரணமாகச் சிங்கையாரியன் தனது தலைநகரைக் குடாநாட்டிற்கு மாற்ற விரும்பினான். புதிய தலைநகரை அமைக்குமாறு தனது மந்திரி புவனேகவாகுவைக் கேட்டுக் கொண்டமையால். புவனேகவாகு கி.பி. 1248 இல் 'யாழப்பாண நகரியைக் கட்டுவித்ததோடு, நல்லைக்குலவிய கந்த வேட்குக் கோயிலும் புரிவித்தான். அதன் பிறகே, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை விபரிக்கும் குடியேற்றங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் நிகழ்ந்துள்ளன.*





தானியத்தால் தனது நாடு முட்டுறாவண்ணம் புதிதாக அனேகம் விளைநிலங் களையும் குளம், பாய்கால் வடிகால்களையும் அமைத்தான். தமிழை வளர்க்கவும் அதுவாயிலாகத் தனது நாட்டிலே அறிவை வளர்க்கவும் ஒரு தமிழ்ச் சங்கமும் அமைத்தான். அச்சங்கத்தாருக்கு மானியமாகச் சங்கவேலி (சங்குவேலியென வழங்கப்படுகிறது) என்னும் கிராமமும் சங்கத்தார் வயலும் அவனால் விடப்பட்டன. மனுநீதியே தனது நாட்டில் கைக்கொள்ளத் தக்கதெனவும் ஆணை செய்தான்.

## கைலாயநாதன் கோவில்

இவ்வாறு தனது நாடும் அரசும் செவ்வே நடைபெற்று வருவதுகண்டு அரசன் மகிழ்ந்து வாழு நாளிலே ஒருநாளிரவு, பிரமவிட்டுணுகளுக்குமெட்டாத சச்சிதானந்த சொரூபியாகிய சிவபெருமான் சக்தி சமேதரராய் மானிடத் திருமேனி கொண்டு கனவிற்றோன்றித் தமது பெயர் 'கைலாசநாதன்' என்றருளிச் செய்து மறைந்தருளினார். அரசன் தன்னைச் சிவபெருமான் ஆட்கொண்டருளினாரெனத் துணிந்து மற்ற நாளுதயத்தில் மந்திரியோடு கலந்து நல்லநாளில் சிவாலய மொன்றமைக்கத் தொடங்கினான். ஆகமப்படி விசித்திராலங்காரமான சிவாலயமும், தேவி கோயிலும், பரிவார தேவர் கோட்டங்களும், சிறந்த யாக மண்டபமும், களஞ்சியம் மடைப்பள்ளி திருக்குளம் முதலியனவும், சித்திர கோபுரங்களோடு மதில்களும், நந்தவனம், அக்கிரகாரம், வேதாத்தியயன மண்டபம், அன்னதான சத்திர முதலியனவும், தேரும் தேரோடும் வீதிகளும் அமைப்பித்தான். நான்மருங்கும் தாமரைத் தடாகங்களும் அவைகளைச் சுற்றிச் சிறந்த படித்துறைகளும் அவைகளுக்கருகே தோரண மண்டப மேடைகளும் இடையிடையே சிறந்த மரக்காக்களும் அமைப்பித்துத் தேவநகரமெனும்படி செய்தான். கேதாரத்துக்குத் திருமுகமனுப்பி மன்மதன் பூசித்த சிவலிங்கமுமெடுப்பித்து இராமனாதபுரத்துச் சேதுபதிக்கு ஓலை போக்கி அவனால் அனுப்பப்பட்ட காசிப்பிராமணோத்தமராகிய கங்காதரக் குரக்களால் ஸ்தாபனம் பண்ணி ஏனைய மூர்த்திகளையும் பிரதிட்டை செய்து பெருஞ்சிறப்புடன் கும்பாபிஷேகம் செய்வித்தான். அரசன் இவ்வாறு பெரும் பக்தியோடு செய்து முடித்த கோயிலிலே சிவபெருமானும் கைலாசநாத ரெனுந் திருநாமத்தோடு நல்லூரை மூன்றாம் கைலாசமாக்கிக் கொண்டு திருக்கோயில் கொண்டருளி அவனுக்கும் அவன் தேயத்துக்கும் திருவருள் பாலிப்பாராயினர். (இக்கோயில் விவரணமும் கும்பாபிஷேக வைபவமும் கைலாசமாலையிற் பரக்கக் காணலாம்)

## இலங்கை கைப்பற்றப்படல்

மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே தமிழ்நாட்டுள்ள இராசகுமாரரும் படைவீரர் புத்திரரும் படைத்தொழில் பயில விரும்பும் ஏனையரும் அர்த்தசாஸ்திரம் யுத்த சாஸ்திரம் தருமசாஸ்திரம் முதலியன பயில்வதற்கொரு கழகமிருந்தது. அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி பயின்ற இராசகுமாரர் சிலர், சிங்கையாரியன் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டது கண்டு தாமும் இலங்கையைக் கைக்கொண்டாளக் கருதி பெரும் படை சேர்த்துக் கொண்டு வந்து, மாதோட்டத்திலிறங்கி அணிவகுத்துச் சென்று அநுராதபுரத்தை வளைத்துக் கொடிய யுத்தம் பண்ணி அரசனை முதுகிடச் செய்து அரசு கைக்கொண்டு அதனைத் தம்முட் பங்கிட்டு அரசியற்றி வருவாராயினர். ஆகவே சிங்கையாரியன் யாழ்ப்பாணத்தில் அரசு செய்யத் தொடங்கிய காலத்தில் இலங்கையும் தமிழரசர் கைப்பட்டது.[19] அவருள் ஒருவனே சிங்கையாரியன் பட்டாபிஷேகங் காணவந்திருந்தவன்.

## குலசேகர சிங்கையாரியன்

(B.C.60) சிங்கையாரியன் இவ்வாறு நெடுங்காலம் அரசு செய்திறக்க அவன் மகன் குலசேகர சிங்கையாரியன் அரசு கைக்கொண்டான்.[20] அவன் தனது நாட்டில் குளங்கள் வாய்க்கால்களைத் திருத்தி, அநேக நாடுகளையும் விளையுட்க ளாக்கி, அரசுக்கும் குடிகளுக்கும் வருவாய் அதிகரிக்குமாறு செய்து, குடிகளையுஞ் செவ்வே பாதுகாத்து வந்தான். அவனுக்குப் பின் அவன் மகன் குலோத்துங்க சிங்கையாரியன்[21] அரசனானான். அவனும் தன் தந்தையைப் போலவே நிலங்களைத் திருத்தியும் குடிகளை நல்வழியிற் செலுத்தியும் அரசு செய்து அதிவிருத்தாப்பியதசையில் இறந்தான்.

## விக்கிரம சிங்கை ஆரியன்

அவனுக்குப்பின் விக்கிரமசிங்கை ஆரியன்[22] சக்கரவர்த்தியானான். அவன் காலத்திலே வியாபாரத்தின் பொருட்டு யாழ்ப்பாணத்திற் குடிகொண்டிருந்த சிங்களருக்கும் தமிழருக்கும் சமயபேதம் பற்றி ஒரு கலகமூளச், சிங்களர் தமிழர் இருவரைக் கொன்று பலருக்குச் சரீரவூறுஞ் செய்தார்கள். அக்கலகத்துக்குக் காரணனாயிருந்த புஞ்சிவண்டா வென்பவனையும் அவன் குழாத்தினர் அறுபத்தேழு பேராயுங் கொலை செய்வித்து மற்றவர்களைச்

19. இவ்வாறான ஒரு நிகழ்ச்சி நடந்ததற்கு ஆதாரமில்லை.
20. காலிங்க ஆரியச்சக்கரவர்த்திக்குப் பின்னர் வடவிலங்கையை சாவகமன்னன் சந்திரபானு சிலகாலம் ஆண்டுள்ளான். சிங்கள அரசின் மீது படையெடுத்துத் தோல்வி கண்ட சாவகமன்னன், வடவிலங்கையில் வெற்றி பெற்று ஆட்சியாளனாக இருந்துள்ளான். கி.பி. 1262 இல் சாவகமன்னன் போரிலிறக்க, காலிங்க ஆரியனின் மகனான குலசேகரசிங்கை ஆரியன் (பரராச சேகரன் - 1) முடிசூடிக் கொண்டான். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை குறிப்பிடுவது போல B.C. 60 இலின்று.
21. குலோத்துங்க சிங்கை ஆரியன் காலம் கி.பி. 1284 - கி.பி. 1292 வரை.
22. விக்கிரமசிங்க ஆரியன் ஆட்சிக்காலம் கி.பி. 1292 - 1302





சிறையிலிட்டொறுத்தான். அதனால் சிங்களர், அரசன் மீது வெறுப்புடையராயிருந்தும் ஒருவாறடங்கியொழுகினர்.

## வரோதய சிங்கையாரியன்

அவனுக்குப்பின் அவன் மகன் வரோதய சிங்கையாரியன்[23] சக்கரவர்த்தியானான். அவன் காலத்திலே சிங்களர் வியாபாரத்தின்பொருட்டுத் தொகையானோர் வந்து குடிகொள்வராயினர். அதுகண்டு அரசன் தனது பிரசைகளுள்ளே சமயதூஷணஞ் செய்து கலகம் விளைப்போர் யாவரேயாயினும் கொடிய தண்டம் பெறுவர் என ஒரு விதிவகுத்துப் பிரசித்தஞ்செய்து யாவரையும் தத்தநெறிகடவாமல் ஒழுகுமாறு செய்து நெடுங்காலமரசியற்றினான்.

## மார்த்தாண்ட சிங்கையாரியன்

அவனுக்குப் பின் அவன் மகன் மார்த்தாண்ட சிங்கையாரியன்[24] அரசனானான். அவன் அரசும் செவ்வே நடந்து வரும்போது வன்னியர் பொறாமையாற் கலகங்கள் செய்யத் தலைப்பட்டனர். அதுகண்டு அரசன் அவர்களை ஒறுத்தடக்கி நெடுங்காலம் நல்லரசு புரிந்தான்.

## குளக்கோட்டன்

வன்னியர் வரலாறு சிறிது கூறுதும். மனுநீதிகண்ட சோழன் மகன் குளக்கோட்டன்[25] என்பவன் திரிகோணமலையிலுள்ள சுவாமியைத் தரிசனம் செய்ய அங்கே சென்றான். அப்பொழுது மலைமேலிருந்த அவ்வாலயம் பழுதுற்றிருந்தமையால் அதைப் புதுக்கிக் கோபுரங்களையுந் திருத்தி அநேக மண்டபங்களையுங் கட்டி அற்புதாலங்காரமான ஆலயமாக்கினான். அவ்வாலயம் நித்திய நைமித்தியங்களுக்கு முட்டுற்றிருந்தமையால் அதற்கு வேண்டிய விளைநிலங்களை அமைத்து அந்நிலங்கள் நீர்வளம் பொருந்தி எக்காலமும் விளைவு கொடுக்குமாறு மகத்தான ஓர் ஏரியையும் கட்டினான். அவ்வேரியாற்பாயு நிலம் 17,000 அமணவிதைப்பாடு. இத்துணைப் பெரிய கிராமத்தை விளைவிக்க மருங்கூர் முதலியவிடங்களிலிருந்து ஐம்பத்தொரு வன்னியஜாதி குடும்பத்தவர் களையும் அவர்களுக்குத் தலைவனாகத் தனியுண்ணாப் பூபாலவன்னியனையு

23. வரோதய சிங்கை ஆரியன் ஆட்சிக்காலம் கி.பி. 1302 - கி.பி. 1325.
24. மார்த்தாண்ட சிங்கையாரியன் ஆட்சிக்காலம் கி.பி. 1325 - கி.பி. 1347.
25. குளக்கோட்டன் வரலாற்றை ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை இவ்விடத்து விபரித்தமைக்கான காரணம், மார்த்தாண்ட சிங்கையாரியன் காலத்தில் வன்னியரின் செருக்கைக் குறிப்பதற்காகும். குளக்கோட்டன் காலம் கி.பி. 785 களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைத்து அங்கு குடியேற்றினான். இது நிகழ்ந்தாது கலியுகம் 512 இடப மாசம் 10ந் தேதி திங்கட்கிழமை. மற்றெவர்க்கும் எண்ணுதற்கும் செய்தற்குமரிய இப்பெரிய குளத்தையும் கோயிலையுஞ் செய்தமையால் இவ்வரசன் குளக்கோட்டன் எனப்பட்டான். கோட்டம் - கோயில்.

## வன்னியர் குடியேற்றம்

இதன் பின்னர்ப் பாண்டியன் தன்மகளை விஜயனுக்குப் பாரியாக அனுப்பியபோது அவளுக்குப் பரிவாரமாக வந்தவர்களுள்ளும் வன்னியர்கள் பலர். பின்னும் வன்னியர் அறுபதின்னர் வந்தார்கள். அவர்களுள்ளே சிங்களவரோடு கலந்து திசாபதிகள் ஆனார் சிலர். ஏனையர் யாழ்ப்பாண அரசிற்குட்படாத இடங்களிலே குடிகொண்டார்கள்.

யாழ்ப்பாண அரசிற்குட்படாத இடங்களாதலில் அவை அடங்காப்பற்றெனப் பட்டன. இவ்வன்னியர்கள் மதுரை, திரிசிரபுரம், தஞ்சை முதலிய இடங்களிலிருந்து நானா சாதியிலும் வறியவர்களாயிருந்த குடிகளை வரவழைத்துக் குடியேற்றி னார்கள். அக்குடிகளுக்கெல்லாம் இவ்வன்னியர்களே அங்காங்கு தலைவராய் அவர்களை ஆண்டு வந்தார்கள். வன்னியர்கள் ஆண்டு வந்தமையால் வன்னி நாடெனப்பட்டது. யானையிறவு முதல் பவானிக்குளம்[26] வரையும், மன்னார் முதல் திருகோணமலை வரையும் அடர்ந்தோங்கிப் பெருவனமாக கிடக்கும் நாடு முழுதும் இவ்வன்னியர் காலத்திலே செந்நெல் விளையும் வயல்களாயிருந்தது. அதனால் வன்னியர்களும் அவர்களுடைய குடிகளும் குறைவில்லாதவராய் வாழ்ந்தார்கள். அச்செல்வத்தால் வன்னியர் செருக்குற்று யாழ்ப்பாணத்தரசரைப் பகைத்துமிருப்பாராயினர்.

## வெடியரசன்

மார்த்தாண்ட சிங்கையாரியன் முத்துக்குளிக்கும் கடலையும் தனதாக்கி முத்துக் குளிப்பித்துவந்தான். அக்கடலைக் காக்குமாறு ஒரு கடற்படையையும் நெடுந்தீவிலே வைத்தான். அக்கடற்படைக்கு அதிபனாக ஒரு பரதவத் தலைவனை வைத்து அவனுக்கு வெடியரசன் என்னும் பட்டமளித்தான்.[27] (வெளியரசன் - வெடியரசன் என்பது பொருள். வெடி - வெளி) அவன் இடங்கள் தோறும் மரக்கலங்களையும் போர்வீரர்களையும் துணைத்தலைவர்களையும் வைத்துக் காத்து வந்தான்.

---

*26. பவானிக்குளம் இன்றைய வவனிக்குளமாகும்.*

*27. வெடியரசன் வரலாறு, வரலாற்றுக் காலத்திற்கு முந்தியதாகும். கரிகாற் சோழன் காலத்தவன்: கண்ணகி காலத்தவன். மார்த்தாண்ட சிங்கையாரியனோடு (கி.பி. 1325) பொருத்துவது ஏற்றதன்று.*





## கண்ணகிக்குச் சிலம்பு

இவன் காலத்திலே காவிரிப்பூம் பட்டினத்துப் பெரும் வணிகனான மாநாய்கன் தன் மகள் கண்ணகிக்குச் சிலம்பு செய்வதற்கு இரத்தினம் கொண்டுவருமாறு கரிகாற்சோழன் அனுமதியோடு மீகாமன் என்பவனையும் படைவீரரையும் ஓர் மரக்கலத்தில் ஏற்றி அனுப்பினான். மீகாமன் நெடுந்தீவை அடைதலும் வெடியரசன் தனது அனுமதியின்றித் தனது காவலுக்குள் எப்படி வந்தாய் எனச் சினந்து அவனைப் போருக்கழைத்து யுத்தம் செய்யத் தலைப்பட்டான். திருவடிநிலையிற் காவல் செய்திருந்த கடற்படையோடு வீரநாராயணனும் கீரிமலையிலிருந்த படையோடு போர்வீரகண்டனும், மயிலைப்பட்டி முதலிய இடங்களிலிருந்த ஏரிலங்குருவன் முதலிய துணைவரும் தம் மரக்கலப் படைகளோடு விரைந்து சென்று வெடியரசனுக்குத் துணையாகிக் கொடிய யுத்தம் செய்தும் வீரநாராயணன் உயிர் துறந்தான்.

## போர் ஒழிப்பு

அதற்கிடையில் மார்த்தாண்ட சிங்கையாரியன் துதனுப்பி போர் ஒழிவித்து, மீகாமனை மணிபுரம் போக வழிவிடுக்குமாறு ஆஞ்ஞாபிக்க, அவனும் அவ்விடம் சென்று மணிகள் பெற்று மீண்டான். இவ்வரலாறு கடலோட்டுக்காதையிற் பரக்கக் காணலாம். வெடியரசன் என்னும் பட்டம் கொண்ட பரதவமிசத்து பரதவர், பரதவருள் முக்கியமாயிருந்தமையின் முக்கியரென்றும், பட்டம் கட்டிகள் என்றும் பின்னாளில் விளங்குவராயினர். முக்கியரும் திமிலரும் மற்ற வலைஞர் கடலோட்டு வல்லவருமே யாழ்ப்பாணத்தரசருக்கெல்லாம் கடற்படை செலுத்துபவராகவிருந்தனர். அவர்கள் மாலுமி சாஸ்திரத்தோடு யுத்த சாஸ்திரமும் கற்றிருந்தார்கள்.

## குணபூஷணசிங்கையாரியன்

மார்த்தாண்டசிங்கையாரியனுக்குப்பின் அவன் மகன் குணபூஷணசிங்கையாரி யன்[28] அரசு கைக்கொண்டான். அவன் தனது தந்தையிலும் சிறந்தவனாகி குடிகள் குறை சிறிதுமின்றி வாழுமாறு பயிர்த்தொழில், கைத்தொழில், கல்வி மூன்றையும் விருத்தி பண்ணினான். இவனை யாழ்ப்பாணத்தில் கைக்கோளரைக் காஞ்சிபுரத்தி லிருந்து வரவழைத்து யாழ்ப்பாணத்தாருக்கும் இலங்கையிலுள்ளாருக்கும் வேண்டிய வஸ்திரங்களை நெய்யுமாறு செய்தவன். யாழ்ப்பாணத்திலே பருத்தி விளைவித்தவ னும் இவனே. சாய வேலைக்காரரையும் சித்திரக்காரரையும் வரவழைத்தவனும் இவனே. அவுரி, இம்பூறல் முதலிய சாயப்பூண்டுகளை விருத்தி பண்ணியவனும் இவனே. சித்திரக்காரரைக் கொண்டு அரசிருக்கை மண்டபம் முழுதும் சித்திரம்

---

*28. குணபூஷண சிங்கையாரியன் ஆட்சிக்காலம் கி.பி. 1347 - 1360.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுவித்துத் தோகை விரித்தாடும் மயில் வடிவச் சிங்காசனம் ஒன்றியற்றுவித்தவனும் இவனே. இவன் காங்கேயன் என்னும் போர் வீரனைத் தொண்டை நாட்டினின்றும் வரவழைத்துத் தனது சேனைக்கெல்லாம் அதிபதியாக்கினான்.

## அடியார்க்கு நல்லார்

அடியார்க்கு நல்லான் என்னும் பண்டித சிரோமணியை வரவழைத்துத் தனக்கு முதல் மந்திரியாக்கினான். அம்மந்திரி ஊர்கள்டோறும் குளங்களும் பாடசாலைகளும் அறுபத்து மூன்று நாயன்மார்க்கும் ஒரு மடாலயமும் அமைப்பித்தான். மந்திரி தன் பெயரால் ஒரு குளமும் இராசா பெயரால் ஒரு குளமும் அமைப்பித்தான். அறுபத்து மூவர் மடம் இருந்தவிடம் நாயன்மார் கட்டென வழங்குகின்றது. இராசாவின் குளம் ஆரியகுளம் என வழங்குகின்றது. அடியார்க்கு நல்லான் குளம் இன்றும் அவ்வாறே வழங்குவதோடு கன்னாதிட்டிக் குளம் எனவும் படுகின்றது. காங்கேயன் என்னும் சேனாதிபதி இருந்தவிடம் காங்கேயன்துறையென வழங்குகின்றது.

## விரோதய சிங்காரியன்

இவன் நெடுங்காலம் அரசாண்டு இறக்க அவன் மகன் விரோதயசிங்காரியன்[29] அரசனானான். அவன் காலத்தில் வன்னியர் சிங்களவரை துணையாகக் கொண்டு கலகங்கள் விளைவிப்பாராயினர். விரோதயன் வன்மை உள்ள ஒரு சிறு படையோடு சென்று அவர் நாட்டையும் கொள்ளையிட்டு அவரையும் சரண் புகுவித்தான். அவ்வளவில் வன்னியர் செருக்கொழிந்ததாயினும் தோற்றோடிய சிங்கள அதிகாரிகள் காலந் தோறும் கலகம் செய்து கொண்டு வந்தனர். அக்காலத்திலே சோழன் இலங்கை மேல் படையெடுத்து வந்து விரோயசிங்காரி யனைத் துணைக்கொண்டு இலங்கை அரசனாகிய வங்கநாசிகனோடு கொடிய யுத்தம் செய்து அவனைத் தோல்வியடைவித்து திறையாக பெரு நிதியும் புத்தக மண்டலமும் பன்னீராயிரம் குடிகளும் பெற்றுக் கொண்டேகினான்.

## கயபாகு வெற்றி

புத்தக மண்டபம் புத்தரது கையிலிருந்த பிட்சா பாத்திரம். அது புத்தரது பல்லுப் போல பௌத்தர்களுக்கு பெறுதற்கரிய பெரு நிதி. சோழன் வெற்றி கொண்டு மீண்டமை சிங்களருக்கு ஆறாப்புண்ணாகி அவர் மனத்தை மூன்று வருஷம் வருத்திற்று. மூன்றாம் வருஷத்தின் மேல் இலங்கை அரசனாகிய கயபாகு[30] போரிற் சிறிதும் பின்னிடாத ஒரு பெருஞ் சேனையைத் திரட்டிக்கொண்டு

*29. விரோதய சிங்கையாரியன் ஆட்சிக்காலம் கி.பி. 1360 - 1380.*

30. கஜபாகு மன்னன் காலம் .....





போய் சோழ நாட்டில் படையேற்றிச் சோழனை வென்று இலங்கையிலிருந்து கொண்டு போன திரவியங்களையும் பன்னீராயிரம் குடிகளையும் மீட்டதுமன்றி மேலும் பன்னீராயிரம் குடிகளைச் சிறை செய்து கொண்டு மீண்டான். விரோதய சிங்கையாரியன் கயபாகுவை சரணடைந்து திறை அரசனானான். கயபாகு சோழ நாட்டில் இருந்த காலத்தில் கண்ணகியினது தெய்வத் தன்மையை கேட்டுணர்ந்து அவட்கு அங்கு அரசரால் விழாவணி நடாத்தல் போலத் தானும் தனது நாட்டில் அவட்கும் கோயில் அமைத்து விழாவணி நடாத்தயெண்ணித் தனது நகருக்கு மீண்டவுடன் கோயில் அமைத்து பெரு விழா செய்தான். (A.D. கிறிஸ்த வருஷ 115ல், தனது நாடெங்கும் அவட்கு கோயிலும் விழாவும் செய்தல் வேண்டுமெனத் திருமுகம் விடுத்தான். அவ்வாறே யாழ்ப்பாணத்தில் விரேதயசிங்கையாரியனும் பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்கு ஊறுகடோறும் கோயில் அமைத்து விழாவயர்வித்து வந்தான். வேலம்பரவையிலுள்ள கண்ணகி கோயிலே அக்காலத்திலே முதலில் அமைக்கப்பெற்றது. அதற்குப்பின் கட்டப்பட்ட வைகளே களையோடை அங்கணாள்கடவு முதலியவிடங்களில் உள்ளன.

## விரோதயன் மரணம்

விரோதய சிங்கன் நெடுங்காலம் அரசியற்றிச் சந்ததியின்றி இறக்க[31] யாழ்ப்பாணத்தரசு சிங்கள அரசர் கைப்பட்டது. அவர்கள் அக்காலத்திலே காடாய்க் கிடந்த அனேகவிடங்களைச் சிற்றூர்களாக்கி மதுரை, திருச்சிராப்பள்ளி, தொண்டி, திருநெல்வேலி நகரங்களில் இருந்து வந்து மாதோட்டப்பகுதிகளில் குடிகொண்டிருந்தவர்களே அங்கு நின்றும் நீக்கி இங்கே குடியேற்றினார்கள். அவர்களால் குடியேற்றப்பட்ட இடங்கள் சிங்களப் பெயரால் வழங்குகின்றன. அவை மானிப்பாய், சண்டிருப்பாய், கோப்பாய், சுன்னாகம், மல்லாகம், கொடிகாமம், சூறாவத்தை, சித்தாவத்தை, கற்பொக்கணை, உடுவில், கோண்டாவில்,

*31. விரோதய சிங்கை ஆரியன் சந்ததியின்றி இறக்கவில்லை. அவனுக்குச் சயவீரசிங்கையாரியன் என்றொரு மைந்தன்: அவன் தந்தை இறக்க கி.பி. 1380 இல் யாழ்ப்பாண அரசில் சிம்மாசனம் ஏறியுள்ளான். இவன் தென்னிலங்கை சிங்கள மன்னனை வென்று திறை பெற்றுள்ளான். கோட்டை அரசனாக இருந்த அழகக்கோனார் என்பான் திறை செலுத்த மறுத்ததோடு, யாழ்ப்பாண அரசனால் இவனிடம் திறை வாங்கும்படி அனுப்பப்பட்ட ஏவலாளர்களை தூக்கிலிட்டுக் கொன்றான். அதனால் சயவீரசிங்கயாரியன் பெரும்படை தரைமார்க்கமாக கம்பளைக்கும், கடல் மார்க்கமாக கோட்டைக்கும் அனுப்பப்பட்டது. கம்பளை அரசனான புவனேகவாகு அப்படைக்கு எதிர் நிற்க அஞ்சி ஓடி ஒளித்தான். கடற்படை தோல்விகண்டு திரும்ப நேர்ந்தது. கி.பி. 1410 இல் சயவீரசிங்கயாரியன் மகன் குணவிரசிங்கயாரியன் முடி தரித்தான். குணவீரசிங்கயாரியன் பின் அவன் மகனான கனகசூரியசிங்கையாரியன் கி.பி. 1440 இல் யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசனானான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில், மிருசுவில் முதலியன. இவை சிங்கள் அதிகாரக் காலத்திலுண்டாகிய சிற்றூர்களாம். சிங்கள அரசர் காலத்திலே புத்தர் கோயில்களும் பாஞ்சாலைகளும் சிலவுண்டாகின. சண்டிருப்பாயில் ஓரிடம் இன்றும் புத்தர் கோயிலடி என வழங்குகின்றது. அவர்களால் சில சைவ ஆலயங்களும் அழிக்கப்பட்டன. கந்தரோடையிலும் புதைந்து கிடந்த புத்த விக்கிரமொன்று சிறிது காலத்திற்கு முன்னே வெளிப்பட்டது. அவர்களால் அனேக குளங்களும் வெட்டப்பட்டன. வில் என்பது சிங்களத்தில் குளம்.

சிங்கள அரசர் கைப்பட்ட காலமுதல், யாழ்ப்பாணம் இடையிடையே நல்லரசர்களாலும் நல்லதிகாரிகளாலும் ஆளப்பட்டு வந்ததாயினும் குடிகள் தமிழரசின்மையால் பெரிதும் வருந்தியிருந்தார்கள்.

## பாண்டியர் படை

A.D.433 பாண்டிய குமாரரும் துணைவர் நால்வரும் பெரும்படையோடு இலங்கையில் வந்து பெரும் போர் புரிந்து வெற்றி மாலை சூடி இலங்கை முழுவதையும் கவர்ந்து இருபத்தேழு வருஷம் அரசு புரிந்தனர்

## தத்துசேனன்

459 இல் தத்துசேனன் என்பவன் தமிழரை வேரறக் களைந்து இலங்கைக்கு ஏகசக்கிராதிபதி ஆனான். தமிழர் வந்து தாக்கா வண்ணம் ஒரு கடற்படையும் அமைத்து இலங்கையின் நாற்றிசையிலும் வைத்தான்.

## சிலாகாலன்

A.D. 543 இல் சிங்கள அரசனாகிய சிலாகாலன்[32] சிவாலயங்களை எல்லாம் தகர்த்துச் சைவ ஆகமங்கள், வேதங்கள், தமிழ்நூல்கள் என அகப்பட்டவற்றை எல்லாம் தேடி எரியூட்டினான். யாழ்ப்பாணத்து தமிழ்ச் சங்கத்துச் சரஸ்வதி மகாலயத்தையும் தேடி அக்கினிக்கு இரையாக்கி அங்கிருந்த அரிய தமிழ் நூல்களை எல்லாம் சாம்பராக்கினான். இதன் பின்னர் சிங்கள ராசாக் குடும்பங்களில் உட்பகை விளைந்து ஒருவர்க்குரிய அரசை ஒருவர் கவரப் பலவகை உபாயங்களும் தேடுவாராயினர். அதனால் தமிழருடைய சகாயம் இராச குமாரருக்கு இன்றியமையாததாயிருந்தது. படைத்துணை புரியவும், படை நடத்தவும். மந்திரி. பிரதானி பதங்களுக்கும் தமிழரையே தேட வேண்டியவர்களானார்கள். அதனால் தமிழர்கள் இலங்கையின் தொகையாலும் அதிகாரத்தாலும் மேற்பட்டார்கள். ஓரொரு காலத்தில் இராசப் பிரதிநிதிகளாகவுஞ் சிலர் இருந்தார்கள். பொட்டுக்கூத்தன்[33] என்பானொரு தமிழ்ப்பிரபு சிங்கள

*32-33யாழ்ப்பாணச் சரித்திரத்தில் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையால் சேர்க்கப்பட்ட புதுக்கதைகள், கர்ண பரம்பரைக் கதைகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசர் இருவருக்கு முடிசூட்டி அவரைப் பாதுகாத்து வந்தான். அவனைக் கொல்லு மாறு வஞ்சச் சூழ்ச்சி செய்த அரசனுக்கஞ்சி அவன் தனது நண்பனொருவனுடைய வீட்டில் ஒளித்திருந்தான். அதனை அரசன் அறிந்து அந்நண்பனை வினவுமாறழைத்தபோது அவன் தன்னிடம் அடைக்கலம் புகுந்தவனைக் காட்டுதலும் தகாது, அரசனுக்குப் பொய்யுரைத்தலும் தகாது என எண்ணி நஞ்சுண்டு உயிர் விட்டான். அஃதுணர்ந்த பொட்டுக்கூத்தன் என்பொருட்டு உயிர்விட்ட மித்திரனோடு யானும் போவேன் என்று நஞ்சருந்தி உயிர் துறந்தான். இவர்களுடைய பெரும் தகைமையும் சினேகவியல்பும் வியக்கற்பாலன.

## வீரதேவசோழன்

அதன் பின்னர் வீரதேவ சோழன் ஒரு படையையும் தனது சேனாதிபதியையம் அனுப்பி யுத்தம் செய்து இலங்கையைத் தனதாக்கிச் சிறிது காலம் திறை கொண்டான். (Tennent I.390)

## ஸ்ரீசங்கபோதி

மூன்றாம் ஸ்ரீ சங்கபோதி[34] (A.D. 702) தமிழ்ப்பிரஜைகளையும் சமமாக அன்புடன் ஆண்டு வந்தான். அவன் தான் புத்தசமயியேயானாலும் தனது தமிழ்ப் பிரசைகளுள்ளே வைஷ்ணவர்களும் இருந்தமையால் அவர்கள் வழிபடுதற்கு விஷ்ணு ஆலயம் இல்லாதிருந்தமை கண்டு அவர்க்கொன்று அமைத்துக் கொடுத்தான். ஊர்கள் தோறும் உள்ள சிவாலயங்களையும் பரிபாலித்து வந்தான்.

A.D. 729 அளவில் தமிழ்ப் பிரசைகள் அதிகாரத்தால் அபிவிருத்தியுற்றவராய் அநுராதபுரம் முதல் வடநாடெங்கும் தமதாணையே செலுத்துவராயினர். அதுகண்டு நான்காம் அக்கிரபோதி என்னும் சிங்கள அரசன் புலனுவரேயென வழங்கும் புலஸ்திய நகரத்தை தனக்கு இரசதானியாக்கிக் கொண்டு அநுரதபுரியினின்றும் நீங்கினான். நீங்க அந்நகரம் ஒளிமழுங்கிற்று.

## பாண்டியன் சேனை

A.D. 840ல் பாண்டியன் ஒரு சேனையையும்[35] தனது சேனாதிபதியையும் அனுப்பி வடக்கிருந்த தமிழ்ப் பிரதானிகளைத் துணைக்கொண்டு இலங்கையரசனை வென்று இலங்கை முழுதையுங் தனதாக்கித் திறை கொள்ளப் பொருந்திக் கொண்டு பெருந்திரவியமுந் கவர்ந்தான். அச்சேனாதிபதி மீளும்பொழுது விரவரேந்திரன் என்பவனை வடநாடாகிய வன்னிப்பற்றுக்கும் யாழ்பாண நாட்டிற்கும் அதிபதியாக்கி மீண்டான்.

*34-35கால வழுவோடு கூடிய சேர்க்கை.*

## சயசிங்கையாரியன்

A.D. 952 இல் சந்திரசேகர பாண்டியன் சோழனுக்கு அஞ்சி ஓடி இலங்கைக்கு வந்தான். இலங்கை அரசானகிய தர்மபாலன் (Dappula) அவனை அன்போடு உபசரித்து அவனுக்கு வேண்டுவதெல்லாம் செய்தும் படைத்துணை புரிய இயலாதவனாகினான். அப்பொழுது இராச குடும்பத்திலே உட்பகை இருந்தமையால் பிரதானிகள் படைத்துணை புரிவது கூடாது என்றனர். அதுகண்டு பாண்டியன் யாழ்ப்பாணத்தில் சிற்றரசு செய்திருந்த சயசிங்கையாரியன்பாற்[36] சென்று அவனைப் படைத்துணை கேட்டான். அவன் அதற்கிசைந்து ஒரு சிறு படையோடு அவனைத் தொடர்ந்து சென்று மதுரையை வளைத்து மூன்று நாள் கொடிய யுத்தம் செய்து சோழனை வெற்றி கொண்டு பாண்டியனுக்கு அரசு நிலையிட்டுப் பெருந் திரவியமும், பெருஞ் சேனையும் உபகாரமாகப் பெற்றுப் பாண்டியன்பாற் நீலகண்ட ஐயர் என்ற மந்திரியையும் பெற்று மதுரைச் சொக்கேசரை வழிபட்டு திருச்செந்தூருக்குச் சென்று அங்கெழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளைத் தரிசித்து அருள் பெற்றுக் கொண்டு மீண்டான்.

## நல்லூர் ஆலயம்

மீண்டபின்னர் நீலகண்டேயருக்கு புவனேகபாகு[37] என்னும் பட்டமளித்து அவரைக் கொண்டு யாழ்ப்பாணத்தரசைப் பழைமை போல் செவ்விதாகவகுத்து நாடாக்கினான். புவனேகபாகு சிவாலயத்தையும் அரண்மனை முதலியவையையும் திருத்தி முன்போல் அலங்காரமாக்கி நல்லூரைச் சிறந்த நகரமாகப் புதுக்கி அங்கே நூதனப் பிரதிஷ்டையாகக் கந்தசுவாமிக் கோயிலையும் கட்டுவித்தார்.

‘இலகியசகாத்தமெண்ணூற்றெழுபதாமாண்டதெல்லை
யலர்பொலி மாலைமாபனாம் புவனேகபாகு
நலமிகும் யாழ்ப்பாணத்துநகரி கட்டுவித்துநல்லைக்
குலவியகந்தவேட்குக் கோயிலும் புரிவித்தானே.’[38]

(கைலாயமாலை)

---

*36-37 கால வழுகொண்ட தகவல்கள்.*

*38 நல்லூர்க்கந்தசுவாமி கோயில் கட்டப்பட்ட வரலாறு ஓரளவு தெளிவானது. யாழ்ப்பாண மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்தி எனவும், பரராசசேகரன், செகராசசேகரன் எனவும் நாமம் தரிப்பது போல, யாழ்ப்பாண மன்னர்களின் முதல் மந்திரிகள் புவனேகவாகு எனப் பெயர் தரித்துள்ளனர். அவ்வகையில் கி.பி. 948 இல் புவனேகவாகு என்ற மந்திரி சிங்கை நகரில் (பூநகரி) இருந்த நல்லூரில் முதலாவது கந்தசுவாமிக் கோயிலைக் கட்டினான். இன்னொரு மந்திரியான புவனேகவாகு, கி.பி. 1248 இல் யாழ்ப்பாண நல்லூரில் கந்தசுவாமிக் கோயிலைக் கட்டுவித்தான்.*





இலகியசகாத்தமெண்ணூற் றோறெழுபத்துநான்கி
னலர்திரி சங்கபோதியாம் புவனேகபாகு
நலமுறும் யாழ்ப்பாணத்துநகரி கட்டுவித்துநல்லூர்க்
குலவியகந்தனார்க்குக் கோயிலொன்றமைப்பித்தானே.

(விசுவநாத சாஸ்திரியார் சம்பவக்குறிப்பு)

## சயசிங்கன்

சயசிங்கனும் தனது நாட்டுக்கு நெல்விளைவு முதலியன குறையாதிருக்கும் வண்ணம் காடு திருத்திப் புதுச் செய்களும் குளங்களும் வாய்க்கால்களும் இடங்கள் தோறும் மாடுகளுக்கு மேய்ச்சல் நிலங்களும் கேணிகளும் அமைத்து நெடுங்காலம் அரசு செய்தான். ஊர்கடோறும் நீதி சபைகளையும் தண்டாதிகாரிகளையும் நியமித்துக் கொலை, களவு, அதிக்கிரம் முதலிய தீமைகளை இல்லாதொழித்தான்.

## சாதியாசாரம்

இவன் காலத்திலே இங்கேயுள்ள சோழநாட்டு வேளாளரும் பாண்டி நாட்டு வேளாளரும் தொண்டை நாட்டு வேளாளரும் துளுவ வேளாளரும் தம்முட் கலந்து பெண் கொள்ளவும், கொடுக்கவும் இராச குடும்பத்துக்குப் பெண் வேண்டிய காலத்தில் இந்நால் வகுப்பு வேளாளரிடத்தும் பேதம் பாராது கொள்ளவும் இராசகட்டளையுண்டாக வேண்டுமென்று கொல்லிமழவன் என்னும் வேளாண் பிரபு அரசன்பால் வேண்டினான். அரசன் புவனேகபாகுவோடு சூழ்ச்சி செய்து இராசகுடும்பத்தார் வழக்கம் போல பட்டத்துப் பெண்ணை இராச குடும்பத்திலும், மற்றைய பத்தினிமாரைத் தொண்டை மண்டலத்து வேளாண் முதலிகளிடத்துமே கொள்ளத் தக்கதென்றும், வேளாளர்களும் ஏனைய சாதிகளும் தங்கள் தங்கள் குலத்தினுள்ளேயே கொள்ளக்கடவரென்றும் தங்கள் தங்கள் குலப் பெயர்களைச் சாசனங்களில் தப்பாதெழுதி வரக்கடவரென்றும் கட்டளை செய்தான். வேளாண் முதலிகள் (தொண்டை மண்டலத்து வேளாளர்) கொண்டையும், சோழிய வேளாளர், பாண்டிய வேளாளர், துளுவ வேளாளர், வேளாண்செட்டிகளும் பின் குடுமியும், கம்மாளர் பின் குடுமியும் பூணூலும் மடிகச்சமில்லாதவுடையும், மற்றைய சாதிகள் எல்லாம் கன்னக்குடுமியும் மலையாளத்தார் முன்குடுமியும், முதலிகள் வண்டிக் கடுக்கனும், மற்றை வேளாளர் முத்துக் கடுக்கனும், செட்டிகள் ஒட்டுக் கடுக்கனும், மற்றச் சாதிகள் மெல்லிய தக்கையும் தரித்தல் வேண்டுமென்றும் கட்டளையிட்டான். இவர் இன்ன வகுப்பினர் என்பது எளிதில் யாவரும் அறிந்தொழுகுவதே இதன் நோக்கமாகும். இம்மறையெல்லாம் தமிழரசு போய்ப் போர்த்துக்கேய அரசு வர அதனால் கலப்புண்டு, அதுவும் போக மேல்வந்த உலாந்த அரசால் தலை தடுமாறி, இப்போதுள்ள புண்ணியவரசாகிய ஆங்கிலவரசுக் காலத்தில் தேய்ந்து மாறினவாயினும் அச்சின்னங்களிற் சில ஓரோரிடங்களில் இன்றும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகையிலை

தமிழரசு போனபின்னர் தாழ்ந்த வகுப்பினர் மேல் வகுப்பினரைப் போலக் கொண்டை கட்டவும், கடுக்கனணியவும் தலைப்பட்டனர். அதன்பின்னர் எல்லாரும் பின் குடுமி வைக்கத் தலைப்பட்டனர். இப்போது அதுவும் நாகரிகமல்லவென்று முண்டிதத்தை மேற்கொண்டு வருகின்றனர். அதுநிற்க, இவ்வரசனே புகையிலையை யாழ்ப்பாணத்தில் முதலில் உற்பத்தி பண்ணினவன். இவன் அப்பயிர்ச்செய்கையில் வல்லவர்களை மலையாளத்தில் இருந்து வரவழைத்து இங்கே குடியேற்றி அதனை விருத்தி செய்தான் என்பர். இதனைப் பறங்கிகள் கொண்டு வந்தார்கள் எனவும் கூறுவர்.

## உட்பகை

A.D. 1013 இல் சிங்கள அரசனுடைய குடும்பத்தில் உட்பகை மூண்டு இருதரப்பட்டு ஒருவரோடொருவர் யுத்தம் செய்வாராயினர். அப்பொழுது இலங்கையிலிருந்த தமிழ்ப் பிரதானிகளும் யாழ்ப்பாணத்தரசனும் கூடித் திரண்டு சிங்கள அரசனுக்கு மாறாயெழுந்து பொருதாரையெல்லாம் எதிர்த்து பொருது சிங்களவனுக்கு இராச்சியத்தை நிலையிட்டார்கள்.

## சோழவரசு

பத்து வருஷத்தின் மேல் சோழன் படையெடுத்துவந்து இலங்கை வேந்தனாகிய நான்காம் மிகிந்தனை வென்று சிறை செய்து, அவனையும் அவன் குடும்பத்தையும் சோழதேசம் கொண்டு மீண்டான். சோழன் துணைவருள் ஒருவன் புலஸ்திய நகரிலிருந்து பிரபுராசாவாக (சோழனுடைய பிரதிநிதியாக) முப்பது வருஷம் அரசு புரிந்தான். அப்பொழுது யாழ்ப்பாணமும் அவன் குடைக்கீழ் இருந்தது. (Kinghton 128, 130)

## குச்சிலிப்பிராமணர்

A.D 1025 இல் மாமுதுகஸ்னி என்னும் துருக்க கலகக்காரன் இந்தியாவில் நுழைந்து கோயில்களை இடித்து அங்கேயிருந்த திரவியங்களைக் கவர்ந்தும் சனங்களை வெட்டியும் சிறை செய்தும் வருத்திய காலத்தில், அவன் படைக்கஞ்சி அனேகர் இலங்கையில் வந்து ஒதுங்குவராயினர். அவருட் பிராமணர் சிலர் யாழ்ப்பாணத்தில் வந்தொதுங்கினர். அவர்கள் குச்சிலியப் பிராமணர் எனப்படுவர். இவர்கள் மரபினர் இவரென விசுவநாத சாஸ்திரியார் எழுதிய சம்பவக் குறிப்பினால் அறியலாம்.





## பராக்கிரமபாகு

A.D. 1164 இல் பராக்கிரமபாகு[39] என்னும் உத்தம வேந்தன் இலங்கைக்கு சக்கரவர்த்தியானான். அவன் பராக்கிரமத்தாலும், நீதியாலும், தருமத்தாலும் உயிர்கள் மேல் அருளினாலும், இராஜ தந்திரத்தாலும். குடிகளுக்கு வேண்டுவதை யெல்லாம் நாடிச் செல்லும் ஊக்கத்தாலும், சோரா முயற்சியாலும் தனக்கு நிகர் வேறில்லாதவன். இவன் பிரம தேசத்தில் படையேற்றி அத்தேசத்தையும் தனதடிப்படுத்தியவன். பாண்டி நாட்டை வென்று திறை கொண்டவன். சோழ நாட்டை வென்று அங்கும் தன்கோல் செல்ல வைத்தவன். அவன் தனது முத்தரையோடு காசு, பாண்டி சோழ ஈழ மண்டலங்களென்றும் வழங்க வைத்தான். குளங்கள், ஏரிகள், கால்வாய்கள் ஆயிரக்கணக்காக அமைத்தவன். பௌத்தாலயங்கள், சைவாலயங் கள் எல்லாம் திருத்தி விதிப்படி நடாத்திவித்தவன். யாழ்ப்பாணத்தரசனை திறை கொண்டு தனது திக்குவிஜயங்களுக்கெல்லாம் துணையாகக் கொண்டவன். இவ்வரசன் காலத்திலே இராமேச்சரம் இலங்கையோடு சேர்த்தாளப்பட்டது. இவன் சோழ நாட்டிலும் தனது திக்கு விஜய ஞாபக சின்னமாகக் பராக்கிரபுரமென ஒரு நகரம் வழங்குமாறு செய்தான்.

## கலிங்கமாகன்

A.D. 1225 இல் மாகன் என்னும் தமிழரசன் கலிங்கதேசத்திலிருந்து பெரும் படையோடு வந்து போர் செய்து இலங்கை முழுதையும் தனதாக்கினான். ஈற்றில் யாழ்ப்பாணத்தையும் கைக்கொண்டு 20 வருஷம் அரசு செய்து இலங்கைக் குடிகளை வருத்தி அவர்களிடத்துள்ளதெல்லாம் கவர்ந்ததுமன்றி பௌத்தாலயங்க ளையும், விகாரைகளையும் அழித்தும் கன்னியர்களை மானபங்கம் செய்தும் நிஷ்டூரனானான்.[40]

---

*39. மகா பராக்கிரமபாகுவின் காலம் கி.பி. 1153 - 1186 வரையினதாகும் மகாபராக்கிரம பாகுவின் காலத்தில் வடவிலங்கையும் அவன் அட்சிக்குட்பட்டிருந்தது. சயவீரசிங்கயாரியன் வரலாற்றை (கி.பி. 1380 - 1410) க் கூறிவிட்டு, பராக்கிரமபாகுவின் வரலாற்றை விபரிப்பது காலவழுவாகும்.*

*40. கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பை சிங்கள வரலாற்றுக் பனுவலான மகாவம்சம் கூறுவது போல, முத்துத்தம்பிப்பிள்ளையும் ஒத்துப் போகிறார். மாகன் சிங்களவரையும் பௌத்தத்தையும் பொறுத்தவரையில் கடூரமாகவே நடந்து கொண்டான். சிங்களவரால் தமிழரிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலங்கள், சொத்துக்கள் என்பவற்றை இவன் மீளப் பறித்துத் தமிழருக்குக் கொடுத்தான். இதனை சூளவம்சம் பின்வருமாறு கூறும். 'மாகன் தமிழரிடம் விசேடமாக அன்பு காட்டி அவர்களுக்கு வயலும், புற்றரைகளும், வீடுகளும், தோட்டங்களும், பணியாட்களும், மாடுகளும் எருமைகளும் தொகுத்துக் கூறுங்கால் சிங்களவரின் உடைமைகள் யாவற்றையும் கொடுத்தான். அந்தோ, காலனின் பூதங்கள் போன்ற*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சயவீரசிங்கையாரியன்

A.D. 1260 இல் பாண்டிய குலக்கோமகன் ஒருவன் வந்து சயவீரசிங்கையாரிய சக்கரவர்த்தி[41] எனப் பட்டமும் முடியும் சூடி யாழ்ப்பாண நாட்டுக்கு அரசனாகி மிக்க பராக்கிரமமும், நீதியும் உடையவனாய் அரசியற்று வானாயினான். முத்துக் குளிக்கும் உரிமையைப் பற்றி இலங்கை அரசானாகிய புவனேகபாகுவிற்கும் இவனுக்கும் விவாதம் உண்டாயிற்று. அதனால் இருவரும் படையெடுத்து பெரும் போர் செய்து தம் படைவீரர் பல்லாயிரவரை மடிவித்தனர். அவ்வளவிலும் தணியாது பொருதபொழுது சயவீரசிங்க ஆரியச்சக்கரவர்த்தியே வெற்றி மாலை கொண்டான். இலங்கை முழுதிற்கும் இவனே அரசனானான். சிங்கள அரசர்க்கு சீவரத்தினம் போன்ற புத்தரது பல்லையும் கவர்ந்து பாண்டியனுக்கு பகரித்தான். பன்னிரண்டு வருஷத்தின்பின் இவன் மூன்றாம் பராக்கிரமபாகுவை தென்பகுதி அரசனாக்கி அவனைத் திறை கொடுத்தாளும்படி பொருந்திக் கொண்டு யாழ்ப்பாணத்தில நெடுங்காலம் நல்லரசு புரிந்திருந்தான். பராக்கிரபாகு பாண்டியனை வேண்டி புத்ததசனத்தைப் பெற்றான். சயவீரசிங்கையனுக்குப்பின் குணவீரசிங்கையாரியன் அரசனானான். அவன் காலத்தில் தென்னிலங்கை அரசன் வழக்கப்படி திறை கொடாது மறுக்க, இவன் அவ்வரசனைப் போரில் வென்று அனேக நாடுகளைக் கவர்ந்து யாழ்ப்பாண அரசுக்குட்படுத்தி அரசு செய்தான். இவனுடைய வீரத்திறனைக் கேட்டு மதுரை அரசனும் படைத்துணை கேட்க, ஆங்கும் ஒரு படையை அனுப்பி அவனுக்கும் வெற்றி மாலை சூட்டி அதற்காகப் பெரும் திரவியமும் கன்னடர் சிலரையும், சிவிகையார் சிலரையும் மறுவர் சிலரையும், வில்லியர் சிலரையும், வேடர் சிலரையும் பெற்றான். மறவரை மறவன்புலவில் இருத்தினான். வேடரை வேடுவன் கண்டியில் இருத்தினான். இவ்வரசனே தனது நகரத்திற்கும் நாட்டிற்கும் அவசியமான அனேக தொழிலாளரைக் கொணர்ந்தவன். கன்னடர் இருந்த இடம் மாவிட்டபுரத்திலே கன்னடிய தெருவென வழங்குகின்றது.

## சாதிகள்

இவன் தனது நகரத்து வீதிகளை தினந்தோறும் சுத்தி செய்யும் பொருட்டுத் துரும்பரை (தொம்பரை) வரவழைத்து நகரத்துப் புறஞ்சேரியிலிருத்தினான். இத்துரும்பர் அந்நாளிலே பந்தங்களோடு இராப் பத்து நாழிகைக்கு மேல் நகரத்து வீதிகளிற் பிரவேசித்து அவைகளை அலகிட்டுச் சுத்திசெய்து குப்பை சலதாரையழுக்கு முதலியவைகளை அகற்றுவார்கள். அவர்கள் பகற்காலத்திலே வீதியிற்பிரவேசித்தலாகாது. அதுபற்றியே அச்சாதியார் இற்றைக்கு ஐம்பத்தறுபது வருஷத்துக்கு முன்னும் இரவிலே வீதியிற்சூழ்கொண்டு சஞ்சரிக்கும் வழக்கமுடைய தாயிருந்தார்கள். தமிழரசர் போயொழிந்தபின்னர்த் துரும்பர், பள்ளர், நளவர் பறையர்களுக்கு வஸ்தீரம் வெளுக்கும் தொழிலை மேற்கொண்டு அதனையே செய்து வருகின்றார்கள். அவர்கள் தொழில் அசுத்தமான தொழிலாயும் அவர்கள் இயல்பிலே சுசியில்லாதவர்களாயுமிருந்தமையால் அவர்கள் பகற் காலத்திலே நகரத்து வீதிகளிலே சஞ்சரித்தலாகாதென்றும், இரவிலே சனங்கள் அடங்கியபின்னர்ப் பந்தங்களோடுமே பிரவேசித்துத் தெருக்களை சுத்தி செய்தல் வேண்டுமென்றும் கட்டளை பெற்றிருந்தார்கள். இராக்காலத்தில் அவர்கள் பந்தத்தோடு செல்லவேண்டுமென்றது அப்பந்தத்தின் சூட்டினாலே அவர்கள் சரீரத்திலுள்ள அசுத்தம் நீங்குவதோடு அவர்கள் கையிட்ட வாரும் அழுக்குக் குப்பைகளிலிருந்தெழுந் துர்க்கந்மும் அவர்களைத் தாக்காமலுமிருத்தற்கேயாம். அக்காலத்திலே சுடுகாடு இடுகாடுகளுக்குப் பக்கத்திலே நகரத்தழுக்குகளைக் கொண்டு போய்த் தினந்தோறும் தகித்தற்கு மலக்காடென்றும் ஒன்றிருந்தது. அங்கேயே நகரத்தழுக்கெல்லாம் கொண்டு போய் இத்துரும்பராலே தகித்தொழிக்கப் படுவதாம். அவ்விடம் பறைச்சேரிவெளியிலிருந்தது. அதுவே துரும்பருக்குப் பழமையான இருக்கையுமாம். இந்நாள் நாகரிகத்திலும் அந்நாள் நாகரிகம் சுகாராரோக்கியவிஷயத்திலே சிறந்ததென்பது இதனால் துணியப்படும்.

நல்லூர் நகரத்திலே ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு வீதியிருந்ததென்பது தெரிகின்றது. அந்தணருக்கொரு தெருவும். செட்டிகளுக்கொரு தெருவும், வேளாளர்க்கொரு தெருவும், கன்னாருக்கொரு தெருவும், தட்டாருக்கொரு தெருவும், கைக்கோளர்க்கொரு தெருவும். சாயக்காரருக்கொரு தெருவும், தையற்காரருக் கொரு தெருவும், உப்புவாணிகருக்கொரு தெருவும், சிவிகையார்க் கொரு தெருவுமாக இப்படியான அறுபத்துநான்கு தெருக்கள் உள்ளன. இந்நகரத்தினுள்ளே தீண்டாச்சாதிகளாகிய அம்பட்டர். வண்ணார். பள்ளர். நளவர், பறையர், துரும்பர் முதலியோர்க்கு இருக்கவில்லை. அவர் எல்லாம் புறஞ்சேரிகளிலேயே வசித்தார்கள். அவர்கள் தொழிலும் சரீரமும் இயல்பிலே சுத்தியில்லாதனபற்றிச் சுத்தியுடையராலே தீண்டத்தகாதவர்களானார்கள். இவ்வகை ஒழுக்கத்தினாலேதான் பேதி முதலிய கொள்ளை நோய்கள் தமிழரசர் காலத்திலே இல்லாதன. இலங்கையிலே கிறிஸ்த வருஷம் (A.D) 1816 இற்கு முன் பேதி என்பது தெரியாதவொரு நோயாம்.

## திருவம்பலவன்

இவ்வரசன் காலத்திலே விளங்கிய விகடகவி திருவம்பலவன். யாழ்ப்பாணத் தரசரிடத்திலே விளங்கிய விகடகவிகளுள்ளே இவன் மிக்க பெயர் படைத்தவன்.

*தமிழ்ப் பிசாசுகள் இப்படியே இந்த இராச்சியத்தையும் சமயத்தையும் அழித்தனர்' எனச் சூளவம்சம் புலம்பும். தமிழர் பிரதேசங்களைச் சிங்கள ஆதிக்கத்திலிருந்து மீட்டு இராசரட்டை எனப்படும் வடபகுதியில் குடியேறியிருந்த சிங்கள ஆக்கிரமிப்பாளர்களைத் தென் புலம் பெயர வைத்தவன் மாகன் எனச் சில வரலாற்றாசிரியர்கள் கருதுவர்.*

41. *சயவீரசிங்கையாரியன் (கி.பி. 1380 - 1410) விரோதயசிங்கையாரியன் மகனாவான். பாண்டியப்புல கோமகன் அல்லன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணச் சரித்திரம் : ஒரு மீள்வாசிப்பு

மற்றையோர் பெயர் பிற்காலத்திலே கேட்கப்படாது மறைந்துபோக இவன் பெயர் மாத்திரம் இன்றும் நிலவுகின்றது. இவன் வசித்தவிடம் கோண்டாவில் என்னும் கிராமம். இவனிருந்த மனை திருவன்புலம் என்று வழங்குகின்றது. இவன் மகா பண்டிதன். ஐயுறாவகை எவ்வேடமும் தரிக்க வல்லவன். எவரையும் எத்துக்க நிலையிலும் தன்வசமாக்கிக் குடர் குலுங்க நகைத்து மகிழும்படி செய்யும் பேராற்றலுடையவன். ஒருநாள் அரசன் வேட்டை மேற்சென்றவன். உரியகாலத்தில் மீளாதிருந்தான். அதுகண்ட தேவி அரசனுக்கு யாது சம்பவித்ததோவென்று மனம் பதைத்திருந்தாள். அஃதறிந்த திருவன் குறத்தி வேடந்தரித்து அந்தப்புரம் சென்று குறிசொல்லி, அரசனுக்கு யாதும் இடையூறில்லை. இன்னும் இரண்டு கடிகையில் வருவார் என்று தேற்ற, தேவி அவளை அரசன் வருங்காறும் இருக்குமாறு கட்டளையிட்டாள். திருவனுமுடன்பட்டிருந்தான். அரசனும் குறத்தி சொன்ன நேரத்தில் வந்து சேர்ந்தான். அரசன் வந்தவுடன் தேவி தன்னைத் தேற்றிய குறத்தியின் சாமர்த்தியத்தை எடுத்துக்கூறிப் பரிசாக ஒரு பட்டுச்சேலையும் பத்துப் பூவராகனும் கொடுத்தாள். அரசனும் அங்கு நடந்ததைக் கேட்டு மகிழ்ந்து தானும் ஒரு சேலையும் பத்து வராகனும் கொடுத்துக் குறத்திக்கு விடை கொடுத்தான். குறத்தி வேடம் பூண்ட திருவன், மகாராஜாவே, குறச்சாதிப் பெண்கள் பொழுது போகு முன் தங்கள் குடிசை போய்ச் சேர்வது வழக்கம். தேவியினது கட்டளை கடக்க மாட்டாது தங்கிவிட்டேன். எனது நாயகனோ மகா கோபி. யாது சொன்னாலுங் கேளான். அடியேனைத் தக்க துணையோடனுப்புமாறு பிரார்த்திக்கின்றேன் என்ன, அரசன் உன் நாயகனை வரவழைத்து அவனோடுன்னை அனுப்புவேன் என்று கூறினான். திருவன் மகாராசாவே எனது நாயகன் ஒருவருக்கும் அகப்படமாட்டான். அவன் திருவம்பலவன் என்ன, அரசனும் தேவியும் உண்மையுணர்ந்து, இவன் நம்மை யெல்லாம் மயக்கினான் என்றதிசயித்துக் குடர் குலுங்க நகைத்து மெச்சினர்.

வருஷந்தோறும் வருஷப்பிறப்புக் கருமமுடித்த பின்னர், ஏர்மங்கல கருமத்தை அரசன் தன் பரிவாரத்தோடு பொன்னின் கலப்பையைத் தானே தோளில் தாங்கிக் கொண்டு அரண்மனைக்குக் கிழக்கேயுள்ள வயலிற் சென்று, தனது நாடு நன்மழையும், நல்விளைவுமுடையதாய் விளங்கவேண்டுமென்று பிரார்த்தித்துக் கடவுளை வழிபட்டுச் செய்து முடிப்பன். அவ்விழாவண்ணம் காணுமாறு நாற்றிசையினின்றும் பிரதானிகளும் பிரபுக்களும் வந்து கூடுவர்.

குணவீரனும் ஓராண்டில் இவ்வாறு ஏர்மங்கலம் முடித்துக் கொண்டு பிரதானிகளும் பிரபுக்களும் தற்சூழ மீண்டு அரண்மனையடைந்தான். அப்போது திருவன் பொய்க்கையொன்று செய்து கட்டிக்கொண்டு மூன்று கையனாய் எதிரே வந்து வணங்கினான். அரசன் இஃதென்னவென, திருவன் கைவிசேஷம் என்பதை அறிவிக்க இவ்வாறு வந்தேன் என்றான். அன்று ஏர்மங்கல முடிந்தவுடன் கைவிசேஷ முகூர்த்தம் வைக்கப்பட்டமையால் திருவன் இது செய்தான் என யாவரும் குடர்குலுங்க நகைத்துக் கொண்டாடினர். அரசன் திருவனுக்கே அன்று கைவிசேஷம் விசேஷமாக வழங்கிப் பின்பு ஏனையோர்க்கெல்லாம் வழங்கினான்.





கைவிசேஷ வழக்கம் குணவீர சக்கரவர்த்தி புதிதாக அமைத்த வழக்கம் என்றும் அக்காலமுதல் யாழ்ப்பாணத்தில் அது வழங்கி வருகின்றதென்றும் கூறுவர்.

## அளகேசுவரன்

குணவீரசிங்கையாரியனுக்குப் பின் அவன் தம்பி அரசனானான். (A.D. 1410) அளகேசுவரன் (ஆறாம் பராக்கிரமபாகுவின் சேனாதிபதி) தான் பிறவியிலே தமிழனாயிருந்தும் சிங்கள இராசா குடும்பத்தில் விவாகம் செய்து கொண்டு இலங்கைக்குப் பிரபுராசாவாகினமையால் தனது இராச்சியத்துக்குச் சீவரத்தினமாக உள்ள புத்ததசனத்தைக் கவர்ந்த ஆரிய சக்கரவர்த்தியை அடக்க வேண்டி இருபது வருஷமாக படை கூட்டியும் அரண்கள் அமைத்தும் ஆயத்தம் செய்து கொண்டு போருக்கெழும்படி அறைகூவினான். ஆரியச்சக்கரவர்த்தியும் போருக்காயத்தனாகிப் பெருநீர்ப்படையோடும் நிலப்படையோடும் அழகேசுவரனுடைய இராசதானியை நோக்கிப் போய் கொழும்பிலும் பாணந்துறையிலும் சேனைகளிறக்கி அவனுடைய சேனையை எதிர்த்து வீரத்திறலோடு யுத்தஞ் செய்தான்.

அழகேசுவரன் ஆரியச்சக்கரவர்த்தி சேனைகளையெல்லாம் நெருப்பினை யெதிர்த்த பஞ்சாக்கினான். ஆரியச்சக்கரவர்த்தி முதுகிட்டு யாழ்ப்பாணத்தை அடைந்து தொண்டைமானாற்றருகேயுள்ள பிலத்துவாரமண்டபத்தில் ஒளிந்தான்.[42] பிலத்துவாரவாயிலிலே ஒரு மண்டபமும் மாளிகையுமிருந்தன. இப்பிலத்துவாரம் ஆபத்துக்குதவுமாறு முன் தமிழரசரால் அமைத்து வைக்கப்பட்டது. இதன் உள்வாய் சுண்ணந்தீற்றிச் சித்திரமெழுதப்பட்டிருந்ததென்பர். அதுவும் மண்டபமும் பிற்காலத்தில் சிதைக்கப்பட்டனவாயினும் பிலம் இன்றும் இருக்கின்றது. அது மண்டபம் என்னும் பெயரால் வழங்குகின்றது. பராக்கிரமபாகு மகன் அவனைத் தொடர்ந்து சென்று நல்லூரை வளைந்து எதிர்த்த சேனை எல்லாம் வாழ்வீரரைக் கொண்டு சங்காரம் செய்து நகரத்து வீதிகளையெல்லாம் இரத்த வெள்ளம் பாயும் ஆறுகளாக்கி முடிவில் அரசனையும் தேடிக்கொண்டு அவன் மனைவி மக்களைச் சிறை செய்து கொண்டு போய் தனது தந்தையிடம் ஒப்புவித்தான்.

## கனகசூரியசிங்கையாரியன்

அதன் மேல் அக்குமாரனை யாழ்ப்பாணத்திற்கரசாகிச் சிறிது காலம் அரசு செய்தான் என இராஜாவளி என்னும் நூல் கூறுகின்றது. இவ்வாரிய சக்கரவர்த்தியின் இயற்பெயர் விளங்கவில்லை. அதன் மேல் குணவீரசிங்கையாரியன் இறக்கும் போது கைக்குழந்தையாய் இருந்த கனகசூரியசிங்கையாரியன் அவனை வென்று

---

42. குணவீரசிங்கையாரியன் (பரராசசேகரன் - 5) தென்னிலங்கைக்கு படையெடுத்துச் சென்று சிங்கள அரசனைத் தோல்வி காணச் சென்று சிறை பெற்று மீண்டான் என்பது இந்திரபாலாவின் முடிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரவர்த்தியானான். இயல்பிலே இவன் தெய்வ பக்தியும் சீவகாருண்யமுமுடைய வன். குடிகள் செய்யும் பிழைகளைப் பலமுறை பொறுப்பவன். அதனால் வன்னியர் சிங்களரைத் துணைக்கொண்டு அவனைக் கொலை செய்ய முயன்றார்கள். ஓரிரவு சேனாதிபதியையும் தம்வசமாக்கிக் கொண்டு அவர்கள் ஆயுதபாணிகளாய் அரண்மனைக்குள் நுழைந்தார்கள். அஃதுணர்ந்து அரசன் தன் தேவியையும் புத்திரர் இருவரையும் கொண்டு அரண்மனைப் புறக்கதவால் ஓடித் தோணி ஏறிப் போய் தொண்டை நாட்டிலுள்ள திருக்கோவிலூரையடைந்தான்.

## பரராசசேகரன் / செகராசசேகரன்

அங்கே அரசன் தனது பிள்ளைகளை ஒரு வித்தியா குருவிடம் ஒப்புவித்துத் தன் பத்தினியோடு காசி யாத்திரை மேற்சென்றான். அங்கே விசுவநாத சுவாமிகளையும் விசாலாட்சியையும் தரிசித்து வணங்கிக் கொண்டு மீண்டு தெற்கிலுள்ள தலங்களைத் தரிசித்துத் திருக்கோகர்ணத்தை அடைந்து அங்கே பதினொரு வருஷம் தவம் கிடந்தான். ஒரு நாள் அவனுக்குச் சுவாமி வெளிப்பட்ட 'இனி உனது கருத்து நிறைவேறும்' என்றருளிச் செய்தனர். அது கேட்டு அவன் மனம் பூரித்துச் சுவாமியை வணங்கி மீண்டு மதுரையை அடைந்து அங்குள்ள அரசர்களிடத்துப் படைத்துணையும் பொருளும் பெற்றுக் கொண்டு திருக்கோவிலூருக்குச் சென்றான். புத்திரரைக் கண்டான்: புத்திரரும் தந்தை தாய் இருவரையும் தழுவி, 'இனி எமது இராச்சியத்திற்கு மீளுவோம். அரசைப் போர் செய்து மீட்போம்' என்றனர். அதுகேட்டு ஆனந்தமீதுரப்பெற்ற தந்தை, தனது புத்திரரை வளர்த்து ஏனைய கல்வித்துறைகளோடு வில்வித்தை முதலிய துறை களையும் கற்பித்த ஆசிரியனுக்கு முகமனுரைத்துத் தட்ஷிணையும் கொடுத்து அவன்பால் விடைகொண்டு புத்திரரை அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு மீண்டான்.

இதற்கிடையில் பதினேழு வருஷம்[44] அரசுசெய்த விஜயபாகு சிங்களக்குடிகளை

---

*43. கனகசூரியசிங்கையாரியன் காலத்தில் யாழ்ப்பாண அரசின் மீது (கி.பி.1450 இல்) பராக்கிரமபாகு மன்னனின் வளர்ப்புப்பிள்ளையான சப்புமல்குமரய என்ற செண்பகப்பெருமாள் படையெடுத்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினான். அவனது படைகள் நகரத்தையும் ஆலயங்களையும் அழித்தன. கனகசூரியசிங்கையாரியன் தன்னிரு பிள்ளைகளான பரராசசேகரனோடும், செகராசசேகரனோடும் திருக்கோவிலூருக்குக் கரந்துறைந்தான். வன்னியர் சேனாதிபதியினுதவியுடன் மன்னனுக்கெதிராக சதிசெய்தார்கள் என்பது ஆசிரியரின் கொண்டு கூட்டலாகும்.*

*44. யாழ்ப்பாணத்தினைக் கைப்பற்றிய சண்பகப் பெருமாள் / சப்புமல்குமரய ஸ்ரீ சங்க போதி புவனேகவாகு என்ற அரியணை நாமத்தோடு யாழ்ப்பாணத்தின் மன்னனானான். (கி.பி. 1450) அவன் நல்லூரிலிருந்து பதினெழு ஆண்டுகள் ஆட்சி செய்தான். கி.பி. 1467 ஆம் ஆண்டு அவன் தென்னிலங்கைக்குத் திரும்பிச்*





வரவழைத்து அவர்களுக்குப் பலவகை அதிகாரங்களையுங் கொடுத்துப் பௌத்த மதத்தையும் சிங்களவுடை நடையையும் விருத்திபண்ணித் தமிழ்க்குடிகளை உபேஷித்தரசியற்றியதோடு கொடிய வரிகளும் வாங்கி யாழ்ப்பாணத்தை வருத்தி வந்தான். இவனால் வருத்தமுற்றிருந்த தமிழ்க்குடிகள் கனகசூரிய சிங்கையாரியன் பெரும்படையோடு மேலைவாயிலில் வந்தானெனக் கேட்டு, இன்றோடெமது பீழை தீர்ந்ததென்றெண்ணி ஆனந்தக் கூத்தாடினர்.

## வெற்றி கொண்ட தமிழர்படை

விஜயபாகு தனது சேனையை விரைந்து திரட்டி அணிவகுத்துக் கொண்டெதிர்த் தான். சிறிது நேரம் இருதிறச் சேனையும் எதிர்த்து ஒன்றற்கொன்று தோல்வியின்றிக் கொடிய யுத்தஞ் செய்தபோது கனகசூரியசிங்கையாரியன் மூத்தகுமாரன் பரராசசேகரன் வாட்படை தாங்கி விஜயவாகுவினது சேனையுட் புகுந்தான். புகுந்தவன் வாள்வித்தையைக் கண்ட விஜயவாகு சேனை முதுகிட்டது. அதுகண்டு விஜயவாகுவும் ஒருவாளாயுதத்தைக் கையிலே தாங்கிக்கொண்டு பகைவர் சேனையுட் புகுந்தான். பரராசசிங்கன் அதுகண்டு தன்னை வளைந்த சிறுபடையைப் பிளந்துகொண்டு சிங்கம்போற் பாய்ந்து விஜயவாகுவை விண்ணுலகடைவித்தான். அவ்வளவில் சிங்கள வீரரெல்லாம் ஒட்டெடுக்க வெற்றிமாலை தமிழரசனுக்காயிற்று.

## கனகசூரியன் பட்டாபிஷேகம்

அதன்மேற் கனகசூரிய சிங்கையாரிய சக்கரவர்த்தி நகரமும் நாடும் வாழ்த்திவணங்கச் சிங்காசன பதியானான். சிங்களப் பிரதானிகளும் வன்னியரும் ஊரைவிட்டகன்றார்கள். கனகசூரியசிங்கையாரியன் மந்திரி பிரதானிகளைத் தனது மகன் பரராசசேகரனோடுசாவி நியமித்துச் செங்கோல் செலுத்தினான்.

## பரராசசேகரக் கூறியான்

இவன் முன் பகைவருக்கஞ்சி இரவிலோட முயன்றபோது தன்னையும் மனைவியையும் புத்திரனையும் பகைவர்கைப்படாவண்ணம் காத்துப் பல்லக்கி லிட்டு மிக்கவரைவிற் கொண்டுபோய்க் களவிற்றோணியேற்றிய சிவிகைத்

---

*செல்ல நேர்ந்தது. அவனுடைய வளர்ப்புத்தந்தை ஆறாம் பராக்கிரமபாகு இறந்துபோக, அவனது பேரன் ஜெயவீரன் கோட்டைக்கு அரசனானான். அதனை விரும்பாத ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு, விஜயபாகு, என்பவனை யாழ்ப்பாணத்தின் அரசனாக்கிவிட்டு, கோட்டைக்கு மீண்டு, ஜெயவீரனைக் கொன்று, அரசகட்டிலேறினான். தருணத்தை எதிர்பார்த்துத் திருக்கோவிலூரில் கரந்துறைந்திருந்த கனகசூரியனும் அவனது இரு புதல்வர்களும் சேனைகளுடன் வந்து விஜயபாகுவை வென்று, இழந்த இராச்சியத்தை மீட்டுக் கொண்டனர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவனை வரவழைத்து ‘நீ எம்மிடத்து மிக்க விசுவாசமுடையவனாயிருந்தமையால் உன்னை எனது புத்திரனாகப் பாவித்தாய். அதற்கறிகுறியாக அப்புத்திரன் பெயரை உனக்குப் பட்டமாகத் தந்தாம். இனிமேல் உன் பெயர் பரராசசேகரக்கூறியான் என வழங்குவதாக’ என்று ஆஞ்ஞாபித்து, நீ ஒரு மூச்சிலோடி எல்லையிடும் இடத்தையுமுனக்கு மானியமாக வழங்கினாமென்றான். அவனவ்வாறோடிப் பெற்றவிடமே சிவியாதெரு வென்பர். கூறியான் இராசா வரவுகூறிச் சிவிகைமுன் செல்லுங் கட்டியகாரன். அரசன் தன்னை மீளவும் பட்டம்பெற்றருளுதற் அநுகூலமாகத் தோணியேறிச் சென்ற முக்கியத்தலைவனுக்குப் பட்டங்கட்டியென்னும் வரிசைப்பெயரிந்தான். கனகசூரிய சிங்கையாரிய சக்கரவர்த்தி தனக்கு மூப்புந் தளர்வும் வந்தது கண்டு தன்மகன் பரராசசேகரனுக்கு முடி சூட்டினான். இளைய குமாரனாகிய செகராசசேகரனை இளவரசாக்கினான்.

## பரராசசேகரன் அரசகுடும்பம்

பரராசசேகரன் முடிசூடுமுன் சோழரரசன் புத்திரியாகிய இராசலக்குமியை விவாகஞ் செய்தான். இரண்டாம் பத்தினியாகப் பாண்டிமழவன் மரபில் வந்த அரசகேசரியினது புத்திரியாகிய வள்ளியம்மையை மணம்புரிந்தான். வைப்பாட்டியாக மணக்குடியிலிருந்து மங்கத்தம்மாள் என்பவளையுங் கொணர்ந்தான். அவன் முடிசூடியபின் பட்டத்துத் தேவிவயிற்றில் சிங்கவாகு, பண்டாரம் என இருவர் புத்திரர் பிறந்தார்கள். வள்ளியம்மை வயிற்றில் பரநிருபசிங்கனும், அவன் தம்பியர் இருவரும் ஒரு பெண்ணும் பிறந்தார்கள். மங்கத்தம்மாள் வயிற்றில் சங்கிலியென்றொரு புத்திரனும் பரவையென்றொரு புத்திரியும் பிறந்தார்கள். அரசன் இப்புத்திரரையெல்லாம் அன்போடு வளர்த்துக் கல்வியிலும் யுத்தவித்தையிலும் வல்லவர்களாக்கினான். அவருள் சங்கிலியென்பவன் ஆண்மையிலும் படைக்கலப் பயிற்சியிலும் சிறந்து சாதுரியமும் கபடோபாயமும் வல்லவனாய் விளங்கினான்.

## செகராசசேகரன்

சகராசசேகரன் கல்வித்துறையெல்லாம் கடைபோகக் கற்ற மகாபண்டிதன். அவன் ஊர்கடோறும் பாடசாலைகள் அமைத்து அங்கே சிறுவர்களையெல்லாம் கல்வி பயில்வித்தான். சோழ பாண்டி தொண்டைமண்டலங்களின்றும் பண்டிதர்களை வரவழைத்து ஈழநாட்டிலுள்ள புலவர்களோடு நல்லூரில் ஒரு தமிழ்ச்சங்கம் அமைத்தான். யாழ்ப்பாணத்திலிருந்த சரசுவதிமகாலயத்தில் இல்லாத வடமொழி தென்மொழி நூல்களையெல்லாம் தமிழ்நாட்டினின்றும் வரவழைத்து வைத்தான். அநேக நூல்களைப் பண்டிதர்களைக்கொண்டு புதிதாக இயற்றுவித்தான். அவர்க்குப் பரிசிலும் வழங்கினான். பரநிருபசிங்கன் சகோதரியை மணம்புரிந்தவனும் வித்துவ சிரோமணியுமாகிய யசகேசரி (அரசகேசரி) யைக் கொண்டு இரகுவமிசமெனும் வடமொழி நூலை, அ∴தியற்றிய காளிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிர்த்திப்பிரகாசமும் மழுங்குமாறு பொருளாழமும் சொல்வனப்பும் வர்ணணைகளும் மிக்குப்பொலிய மொழிபெயர்த்து விருத்தப்பாவாற் பாடுவித்தான். அதனை நல்லூர்ச் சங்கத்தில் அரங்கேற்றிப் பின்னர்த் தமிழ்நாட்டிலும் பிரசித்தியெய்துவிக்க வேண்டித் திருவாரூர்ச் சங்கத்திலும் அரங்கேற்றி அச்சங்கத்தாரெல்லாம் சிரமிசைக்கொண்டு பாராட்டச் செய்தான். தானும் சகராசசேகரமென்னுமொரு சோதிடநூலை விருத்தப்பாவாற் செய்தான். பரராசசேகரமென ஒரு வைத்தியநூலும். தனது தமயனாகிய அரசன் பெயரினாலியற்றி அவனுக்குச் சமர்ப்பித்து அவன் பெயரையும் வியாபிக்கச் செய்தான். வித்தியா விஷயமாக அடிக்கடி இராமேசுரஞ் சென்று அங்கே பண்டிதர்களோடு கலந்து மீளுவான். இவன் செய்தி இங்ஙனமாக.

## நிர்வாகம்

பரராசசேகரசிங்கையாரிய சக்கரவர்த்தி தனது அரசியற்கருமத்திற் கண்ணுங் கருத்துமுடையவனாயிருந்தான். அவன் நீதியும் பராக்கிரமமுடையவன். அவன் யாழ்ப்பாணத்தை முப்பத்திரண்டு வட்டமாகப் பிரித்து முப்பத்திரண்டு தண்டாதிகாரிகளையும் அவ்விடங்கடோறும் விபவகாரவிசாரணைக்கு ஐந்து பிரபுக்கள் கூடிய பஞ்சாயமெனப்படுஞ் சபைகளையும் தாபித்தான். சேனைகளையும் கடற்படையையும் பலப்படுத்திக் கிரமமாக அரசு செய்து வந்தான். யாழ்ப்பாணத்திலே ஒரு பெரிய அன்னசத்திரம் பரராசசேகரனாலும் இராமேச்சரத்திலும் ஓரன்னசத்திரம் சகராசசேகரனாலும் அமைக்கப்பட்டன.

## சமூக நலன்கள்

சகராசசேகரன் பரராசசேகரனைக் கொண்டு கிராமங்கள் தோறும் வைத்திய சாலைகளை அமைத்து அங்கே, குடிகளுக்குமாத்திரமன்று ஆடு மாடுகளுக்கும் மருந்துமுணவுங் கொடுத்து வருமாறு செய்தான். அவ்வைத்தியசாலைகளுக்கு வேண்டும் மருந்துகள் மூலிகைகள் எல்லாம் சகராசசேகரன் தனது அரமனையிலிருந்து காலந்தோறும் அனுப்பி வைத்தான். மூலிகைகளையெல்லாம் தனது சிங்காரத் தோட்டத்தருகே ஒரு தோட்டம் வகுத்து அங்கே உற்பத்திபண்ணிப் பாதுகாத்து வந்தான். இமயத்திலிருந்தும் அநேக மூலிகைகளை எடுப்பித்து நாட்டி வந்தான். அத்தோட்டத்துக்கு மருத்துமாமலையெனப் பெயருமிட்டான். அது கள்ளியங்காட்டிலிருந்தது. அங்குற்பத்தி செய்யப்பட்ட ஓரின வாழை இன்றும் மருத்துமாமலைவாழையெனப்படும். இலங்கையின் மற்றொரு பகுதியிலும் அகப்படாத சில மூலிகைகள் அவ்விடத்தில் இன்றும் அகப்படுகின்றனவென்பர்.

## சுபதிருஷ்டமுனிவர்

இப்படிப் பரராசசேகரன் அரசு செய்து வருகையில் சுபதிருஷ்டமுனிவரென்பர். அவன் சபைக்கு வந்தார். அவன் எழுந்தெதிர்கொண்டு வணங்கி அவரையுபசரித்

திருத்திய பின் அவரைப் பார்த்து ‘அடியேன் இவ்விராச்சியத்துக்கு இனி யாது நிகழுமென்றறியப் பேராசையுடையேன். தேவரீர் திரிகாலமுமுணர்ந்த மூர்த்தியாதலின் திருவாய்மலர்ந்தருள வேண்டும்’ என்று விண்ணப்பஞ் செய்தான். அவர் அரசனை நோக்கி, ‘புருஷோத்தம, நீ புண்ணியவான். நீ இருக்கும்வரை உன்னுடைய அரசு குறைவின்றி நடக்கும்: அதன்மேல் உன் மூத்த குமாரன் நஞ்சூட்டிக் கொல்லப்படுவான். இரண்டாங்குமாரன் வெட்டுண்டிறப்பான். இரண்டாம் பத்தினி வயிற்றிற் பிறந்தவன், சங்கிலியின் மாயவலைக்குட்பட்டு அரசை அவன் கையில் கொடுத்திடுவான். சங்கிலி கொடுஞ்கோலோச்சித் தன்னரசை அன்னிய தேசவாசிகளாகிய பறங்கியர் கையில் கொடுத்திறப்பன். பறங்கிகள் சிவாலயங்களை அழித்துத் தமது சமயத்தைப் பரப்பிக் கொடுங்கோலோச்சி நாற்பது வருஷம் ஆளுவர். அவரை ஒல்லாந்தர் வென்று சமய விஷயத்தில் அவரைப்போற் கொடியராகி நூற்றிருபது வருடம் அரசு செய்வர். அதன்மேல் மற்றொரு தேசத்தார் (புகைக்கண்ணர் - ஆங்கிலேயர்) வந்து ஒல்லாந்தரை ஒட்டி நீதியாக அரசு செய்வர். உன் சந்ததிக்கு அரசு ஒருகாலத்திலும் மீள்வதில்லை’ என்றார். இதுவே சாரமான கல்வெட்டொன்று திரிகோணமலைத் தம்பத்திலுமுள்ளது. அது மிகவும் பழமையானது. பிற்காலத்தாரால் ஏடுகளில் மாற்றப்பட்டுத் திரிபு பெற்றுள்ள வைபவமாலைக் கூற்றுப்போல்வதன்று.

முன்னாட் குளக்கோட்டன் மூட்டுந்திருப்பணியைப்
பின்னாட் பறங்கி பிடிப்பானே - பொன்னாரும்
பூனைக்கண் செங்கண் புகைக்கண்ணர் போய்மாற
மானே வடுகாய்விடும்.

## வையாபுரி ஐயர்

இதனை வையா (வையாபுரிஐயர்) பாடல் என்பர். வையாபுரி பாடல் பொய்யா தென்பது பழமொழி. வையாபுரிஐயர் என்பது அவர் இயற்பெயர். அவர் பிராமண சந்நியாசி. அவர் சுபதிருஷ்டர் சீடராகிய சித்தையர் என்பவருக்குச் சீடர். சித்தையர் இருந்து தவஞ்செய்தவிடம் சித்தன்கேணி என வழங்குகின்றது. சித்தன்கேணிக் கிராமத்திலே அவர் இருக்கும் வரையில் விஷப்பாம்புகள் செல்லுவதும், விஷந்தீண்டி யிறப்பவரும் இல்லையாம். வையாபுரி ஐயர் சீடர் கோவியத் திருமேனியுடைய கொற்றனார்.

அவர் சீடர் பெரியதம்பி ஐயர். அவர் கொற்றனார் கொடுத்த மூலிகையை

* ஆங்கிலேய அரசு நீங்குமெல்லையிற் கைலாயநாதர் கோயில் முன்போலப் புதிதாக அமைக்கப்படுமென்றும் அதுவே அதற்கறிகுறியாமென்றும் அம்முனிவர் கூறினாரெனவும் கூறப்பட்டிருககின்றது. வடுகர் என்றது தெலுங்கரையன்று, பூனைக்கண்ணர் செங்கண்ணர் புகைக்கண்ணர் என்று ஒவ்வொரு சாதி மக்களைக் குறி செய்திருத்தலால் வடுகென்றது குறள் வடிவுடைய சாதியாரைப்போலும்





உண்டு நரை திரை மூப்பின்றி நூற்றிருபது வயதில் இளமையோடிறந்தவர். அவருக்கு நான்கு பார்ப்பாரப் பெண்களும், நான்கு வேளாளப் பெண்களும், நான்கு கோவியப் பெண்களுமாகப் பன்னிருவர் பத்தினிமார் ஏககாலத்திலிருந் தார்கள். இவருடைய அற்புத இளமையை நோக்கியே “பெரியதம்பிஐயர் வாலிபத்திலே” என்னும் பழமொழி வழங்குவதாயிற்று. பெரியதம்பிஐயர் இருந்த வீடு வண்ணைச் சிவன் கோயிலுக்குத் தென்பாரிசத்தில் இன்றுமிருக்கின்றது. அவர் சந்ததியாரும் அங்கேயிருக்கின்றார்கள்.

## பிருகதீசுவரன் கோயில்

தஞ்சாவூர்ப் பிருகதீசுவரன் கோயிற் கர்ப்பக்கிருகத்துத் தூபியிலே உருநாட்டு வேலைப் பந்தியிலே தமிழரசர்களுடைய உருவவரிசை இறுதியிலே நான்கு சாதியாருடைய வடிவம் அமைக்கப்பட்டிருக்கின்றன. இத் தொப்பிக்காரரது வருகையை, இற்றைக்கு ஆயிரம் வருஷத்துக்கு முன்னே இத்தூபஜயை அமைத்த தபதி உணர்ந்து சித்தரித்தது. பேரதிசயத்துக்கிடமாயிருக்கின்றது. இதுவும் இக்கல்வெட்டை வலியுறுத்துகின்றது. ஐரோப்பியர் இந்தியா இலங்கைப் பகுதிகளுக்கு இற்றைக்கு நானூறு வருஷத்துக்குமுன் அஃதாவது (A.D. 1505)ல் வந்தார்கள். அதற்கு முன்னர் அவர்களுடைய வடிவம் இதுவென்று இந்திய இலங்கை வாசிகள் கனவிலும் அறியார்கள். அங்ஙனமாகவும் ஆயிரம் வருஷத்துக்கு முன்னர் உணர்ந்து அவர் வடிவத்தைத் தீட்டிய தபதியின் செய்கை நம்மவர்க்கு மாத்திரமன்று, அதனைக் காணும் ஐரோப்பியர்க்கும் அதிசயம் பிறப்பிக்கின்றது. அதுநிற்க, அவ்வருங்கால சம்பவத்தை முனிவர் கூற, அதனைக் கேட்டிருந்த அரசன் சிறிதுஞ் சஞ்சலப்படாது, ‘விதி அதுவாயின் அதனைக் கடக்கவுந் தடுக்கவும் யாவராலாகும்’ என்று கூறி அவரை வணங்கி வழிவிடுக்க, அவரும் அவனை வாழ்த்திப் போனார்.

## சங்கிலி

அதன்பின்னர் சங்கிலி தனது துஷ்டத்துணைவரோடு சூழ்ச்சி செய்து, பரராசசேகரனுடைய மூத்த புத்திரனாகிய சிங்கவாகுவைத் கொலை செய்து விட்டால் அரசு தனக்குரியதாய் விடுமென்று துணிந்தான். துணிந்தபடி சமயம் பார்த்திருந்து ஒரு நாள் நஞ்சூட்டிக் கொன்றான். சங்கிலியினது செயலென ஒருவருஞ் சந்தேகங் கொள்ளவில்லை. அரசன் தனது இளையகுமாரனாகிய பண்டாரத்தை இளவரசனாக்கி அவனிடத்தில் அரசை ஒப்புவித்து மூத்தமகன் இறந்த சோகத்தை மாற்றுமாறு தீர்த்தயாத்திரை மேற்சென்று கும்பகோணத்தை அடைந்தான். அப்பொழுது மகாமக காலமாயிருந்தமையால் சோழனும் அங்கே போனான். பரராசசேகரனோடு போயிருந்த சங்கிலி தனது இரதத்திலேறி உலாமேற்சென்று மீளும்போது சோழனுடைய இரதம் எதிர்ப்பட்டது. சங்கிலி தனது இரதத்தை விட்டிறங்கிச் சோழனுக்கு செய்ய வேண்டிய வழிபாடுகளைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாமலும் வழிவிலகாமலும் இரதத்தை எதிரே நிறுத்தி சோழனை வழிவிடச் சொன்னான். சோழன் சங்கிலியின் விபரீத வொழுக்கத்தைக் கண்டு கோபங்கொண்டு அவனைப் பிடித்துச் சிறையிலிடுவித்தான். அதுகேட்டுப் பரராசசேகரன் சோழன்பாற் சென்று அவனை விடும்படி கேட்டான். சோழன் 'உன் வைப்பாட்டி மகனைக் கொண்டு என்னை அவமதித்தாய்' என்று சினந்து அவனையுஞ் சிறையிலிடுவித்தான்.

## பரநிருபசிங்கன்

அதுகேட்டுப் பரநிருபசிங்கன் தான் கொண்டு சென்ற படையைத் திரட்டிக் கொண்டு போய்ச் சோழனைப் போருக்கழைத்தான். சோழனும், போருக்கெழுந்து மூன்று நாள் யுத்தஞ் செய்தான். நான்காநாள் பரநிருபசிங்கன் தனது சரீரத்திலே மூன்று காயசேதம் பெற்றும் மிக்க சூரத்தோடு யுத்தஞ்செய்து சோழனைச் சிறைசெய்து தனது தந்தையோடு தம்பியையுஞ் சிறை மீட்டான். மூன்று மாசத்தின் மேல் சோழனைப் பரராசசேகரனுக்குத் திறையரசனாக்கி அவனைச் சிறைவிடுத்துப் பெருந்திரவியத்தோடும் புதுச் சேனையோடும் மீண்டான். சோழனும் நெடுங்காலம் திறை கொடுத்து வந்தான்.

## ஏழூரதிபனாக்கல்

பரராசசேகரன் நல்லூருக்கு மீண்டவுடன் பரநிருபசிங்கன் காட்டிய பராக்கிரமத்துக்காக அவனை மெச்சி, அவனுக்குக் கள்ளியங்காடு, சண்டிருப்பாய், அராலி, அச்சுவேலி. உடுப்பிட்டி, கச்சாய், மல்லாகம் என்னும் ஏழு கிராமங்களையுந் தாமிரசாசனஞ் செய்து கொடுத்து அக்கிராமங்களுக்கு அதிபதியாக்கி அநேக இராசவரிசைகளுமீந்தான். அது சங்கிலி மனத்திடை ஆறாவழலை மூட்டிவிட்டது. மூட்டியுங் காட்டாதொழுகினான்.

## கண்டிராணிபிணி

பரநிருபசிங்கன் வைத்தியத்தில் மகாபண்டிதன். அவன் புகழைக்கேட்டு இலங்கையரசன், 'எனது தேவியை நெடுங்காலம் வருத்தும் கொடிய சூலைநோயை இதுகண்டவுடன் வந்து தீர்த்துப் போகவேண்டும்' என்று அவனுக்கு நிருபம் அனுப்பினான். அவன் உடனே சென்று ஒருநேரமருந்தினால் அந்நோயைத் தீர்த்தான். அரசன் 'இவ்விலங்கையிலும் தென்னாட்டிலுமுள்ள வைத்தியசிகாமணிகளை யெல்லாம் தலைகுனிய வைத்த இக்கொடிய சூலையைத் தீர்த்த உனது சாமர்த்தியம் மெச்சத்தக்கது. உனது பெயர் இனிமேல் பரநிருபசிங்க வைத்தியராசேந்திரன் என வழங்குவதாக' என்று கூறி அநேகவரிசைகளும் யானைகளும் இரத்தினச் சிவிகையுங் கொடுத்தான். அவைகளைப் பெற்றுக்கொண்டு பரநிருபசிங்கன் மீண்டு யாழ்ப்பாணத்தை அடைந்தான்.





## பண்டாரம் கொலை

இ.:.திங்ஙனமாக, சங்கிலி, பரநிருபசிங்கன் வரமுன்னே பண்டார சக்கரவர்த்தியைக் கொலைசெய்து அரசைத்தான் கவர்ந்துகொள்ள எண்ணி, ஒருநாள் பண்டாரம் பூந்தோட்டத்திலே நிராயுதனாய்த் தனியே உலாவி நின்றதைக் கண்டு ஓடி அவனை வெட்டிக் கொன்றுவிட்டு அரசைக் கைக்கொண்டான். முதுமையாலே தளர்ந்த தந்தையாகிய பரராசசேகரனும் அவனுக்கு அஞ்சி எதிர்பேசாதிருந்தான்.

## சங்கிலியின் சாகசம்

பரநிருபசிங்கன் வந்தவுடன் இச்செய்தியறிந்து கோபாவேசங்கொண்டு வாளையுருவிப் போருக்கெழுந்தான். அதுகண்டு சங்கிலி அவன் பாதங்களில் வீழ்ந்து வணங்கி 'ஐயகேள்! யான் செய்தது பிழையேயாயினும் அது செய்தமைக்கு நியாயமுண்டு. உனது அற்றமுணர்ந்து வன்னியர்கள் அண்ணனாரை (பண்டாரத்தை)க் கொலைசெய்து, பின் என்னையும் எமது தந்தையையுஞ் சிறைசெய்து அரசுகைக் கொள்ளவஞ்சகச் சூழ்ச்சி செய்து ஆயத்தங்களைக்கண்டு, அண்ணனாருக்கதனை விண்ணப்பஞ் செய்தேன். அவர் அதனை நம்பாது நடந்தனர். ஏற்றகாலம் பார்த்து வஞ்சவன்னியர்கள் அவர்தமியராய் நந்தவனத்தில் நின்றபோது அவரைக் கொன்றார்கள். பின்னர்த் தந்தையைச் சிறைசெய்ய முயன்ற போது அவர்களை யான் தமியனாய் எதிர்த்து வாளுருவ ஓட்டிவிட்டுத் 'தந்தையாரது தளர்ச்சியைக் கண்டேன். இவர்கள் இவ்வாறு துணிந்தார்' என நினைத்து யான் அரசு கைக்கொண்டேன். உனதனுமதியின்றி அரசு கைக்கொண்டது உனது நன்மையை நோக்கியேயாம். அதுவே யான் செய்த பிழை. அதனைப் பொறுத்தருள். இனி நாமிருவேமும் ஒத்தரசு செய்வோமானால் பகைவருக்கஞ்ச வேண்டியதில்லை. என்னைப் பெயரளவில் அரசனாக வைத்துக் கொண்டு அரசை நீயே மந்திரியாகவிருந்து நடத்துவாயாக. அரசிறையைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வோம். உனக்குரிய ஏழு கிராமங்களுக்கும் நீயே அரசனாக விருப்பாயாக'' என்று கபடவிண்ணப்பஞ் செய்து அவனை மயக்கினான். பரநிருபசிங்கனும் மயங்கி வாளை உறையிலிட்டு, அவன் கேள்விக்கிசைந்து, தனது மகன் பரராசசிங்கனை ஏழூருக்குமரசனாக்கித் தான் சங்கிலிக்கு மந்திரியானான்.

## சங்கிலி துரோகம்

இந்த முறையாக அரசு சிறிது காலம் நடந்தது. சங்கிலி மனதிற் பேராசையென்னுங் குடிகேடன் புகுந்தான். சங்கிலி சேனாதிபதிக்கும் படைத் தலைவருக்கும் பெருநிதிகளை வாரிக்கொடுத்து அவர்களைத் தன்வசமாக்கினான். அரசிறையிற் பாதியைப் பங்கிட்டுப் பரநிருபசிங்கத்துக்குக் கொடுத்துவந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கத்தையொழித்து அவனுக்குச் சம்பளமாக ஒரு தொகை கொடுக்கத் தலைப்பட்டான். பரராசசிங்கனை ஏழுராசன் என்னும் பதத்தினின்றும் நீக்கினான்.

## அச்சுதப்பன்

பரராசசேகரராசாவும் பரநிருபசிங்கமும் அவன் மகன் பரராசசிங்கமும் தங்களுக்குச் சங்கிலி செய்த வஞ்சனைகளையெண்ணி எண்ணி மனம் புண்ணாயினார்கள். அவர்கள் படையெடுத்துச் சங்கிலியை அடக்கவோவென்றால் சேனாதிபதியையுஞ் சேனைகளையும் சங்கிலி தன் வசமாக்கிக் கொண்டமையால் இயலாதவர்களானார்கள். ஆகியும் பரராசசேகரன் தான் சோழன்பாற் கொண்ட திறையை மேலனுப்பாவகை அவனுக்கு நிருபம் போக்கித் தடுத்தான். அது கேட்டுச் சோழனுமுவகை பூத்தான். (இச்சோழன் தஞ்சாவூர்ச் சரித்திரப்படி (Tanjore Gazeteer) அச்சுதப்பனாதல் வேண்டும். அவன் நாகபட்டினத்தில் பாரசீகரோடு யுத்தம் செய்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது. பரராசசேகரன் என்னும் பெயரை சிலாசாசனவிற்பன்னர் பாரசீகர் என விபரீதமாக வாசித்தாராதல் வேண்டும்)

## அரசனின் திரவியங்கள்

அதன்பின்னர் பரராசசேகரன் தன்னிடத்திலுள்ள திரவியங்களையும் முடி முதலிய அரிய ஆபரணங்களையும் சங்கிலிக்குத் தெரியாமல் அகற்றிக்கொண்டு போய்ப் பிலத்துவாரத்தில் சேமித்து வைத்துவிட்டு, ஒரு தொகைத் திரவியத்தோடு திருக்கேதீசரஞ் சென்று அங்கே சுவாமி தரிசனம் பண்ணிக்கொண்டு இராமேச்சரஞ் சென்றான். அங்கே சித்திரக்கான் மண்டபமும் கர்ப்பக்கிருகமும் பழுதுற்றிருப்பக் கண்டு அவைகளைப் புதுக்குமாறு அத்திரவியத்தைத் தன் மந்திரியிடம் கொடுத்து அவனை அங்கே வைத்துவிட்டு மீண்டான். இவன் மீளுமுன் திருக்கேதீச்சராலயத்தையும் பாலாவியின் மேற்குக் கரையையும் கடல் கொண்டழித்தது. இது நிகழ்ந்தது 1540ல் என்பர். அதன்மேலும் பூசை ஒருவாறு நடந்து வந்தது. A.D. 1589ல் பூசை நிறுத்தப்பட்டது. (விசுவநாதசாஸ்திரியார் சம்பவக்குறிப்பு)[45]

## அன்னப்பறவை விமானம்

யாழ்ப்பாணத்தரசர்களாகிய ஆரியச்சக்கரவர்த்திகளெல்லாம் திரிகோணமலை, திருக்கேதீச்சரம், இராமேச்சரம் என்னும் இம் மூன்று தலங்களையும் தினந்தோறும் ஒவ்வொன்றாக முறையே தரிசித்து உச்சிப்போசனம் செய்யும் நியமமுடையவரா

45. அவ்வாறான ஒரு கடற்கோள் கி.பி.1589 இல் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால் போர்த்துக்கேயர் (கி.பி. 1560) திருக்கேதீஸ்வரத்தை அழித்தார்கள் என்பது வரலாற்று உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யிருந்தார்கள் என்றும், அதற்காக யந்திர அன்னப்பறவையொன்று[46] வைத்திருந்தார்களென்றும் அவ்வன்னப்பறவையிலேறியிருந்து யந்திரத்தை முறுக்க அஃது அந்தரத்தெழுந்து செலுத்திய வழியில் ஆகாயத்திற் பறக்குமென்றும், அதைக் கொண்டே மூன்று நாழிகையில் இராமேச்சர தரிசனம் முடித்து மீண்டு வருவரென்றும், அந்த யந்திரப் பறவையைக் கொண்டே பரநிருபசிங்கன் கண்டியரசனிடம் போய் மீண்டானென்றும், அதனைச் சங்கிலி பொறாமையாற் கவர்ந்து அக்கினிக்கிரையாக்கினானென்றும் கூறுவர். இராமேச்சரத்திற் சுவாமிக்கு அபிஷேகத்திற்குத், தினந்தோறும் நெடுந்தீவிலிருந்து பாலும் பூசைக்குக் கச்சைத்தீவிலிருந்து பூவும் யாழ்ப்பாணத்தரசரால் அனுப்பப்பட்டன. நெடுந்தீவிற் பசுக்கிடையும், கச்சைத்தீவில் நந்தவனமும் இருந்தன. பசுக்கிடையிருந்தமையால் நெடுந்தீவைப் பறங்கிக்காரர் பசுத்தீவு (Cow Island) என்பாராயினர்.

## திருக்கேதீச்சரம்

திருக்கேதீச்சரம் பூர்வம்கேதுவென்னும் நாகராசனால் நிருமிக்கப்பட்டது. இராவணனுக்குப் பின் இயக்கரும் நாகர்களுமரசு செய்தார்கள். விசயராசன் இலங்கைக்கு இற்றைக்கு இரண்டாயிரத்தைஞ்ஞூறு வருஷங்களுக்கு முன் வந்தபோது இவ்வாலயங் கிலமாயிருந்ததென முன்னுங் கூறினாம். மகாவமிசமும் அவ்வாறே கூறுகின்றது. அற்றாயின் இதன் பழமை இத்துணையதென்று கூறவேண்டா.

இது விசயராசனால் சீரணோத்தாரணஞ் செய்து கும்பாபிஷேகம் பண்ணப்பட்டது. பின்வந்த அரசர்கள் பெரும்பாலும் பௌத்தர்களாயிருந்தமையால் இவ்வாலயத்தைப் பரிபாலியாது விட்டார்கள். இதனைப் பெரும்பாலும் பரிபாலித்து வந்தவர்கள் மாதோட்டத்து வேளாளர்கள். இதனை இடையிடையே இலங்கையரசரும் யாழ்ப்பாணத்தரசரும் திருத்தி வந்தார்கள். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் இவ்வாலயத்தைப் பாடிய காலத்தில் இத்தலமிருந்த மாதோட்ட நகரினது பொலிவு மிகப் பெரியதாயிருந்ததென்பது அவர் பதிகத்தால்* நன்றாக விளங்குகின்றது. அவர் காலம் இற்றைக்கு நாலாயிரம் வருஷத்துக்கு முந்தியது. இற்றைக்கு

46. நம்பமுடியாத கூற்றாகும். ஆரியச்சக்கரவர்த்திகள் மேற்குறித்த ஆலயங்களுக்குக் காலத்திற்குக் காலம் தீர்த்த யாத்திரை மேற்கொண்டனர் என்பது மெய். அன்னப்பறவை யந்திரத்திலேறி மூன்று வேளை தரிசனம் செய்தமை பொருந்தாக் கூற்று.

பூவுள்ளனுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந் தெழுந்தோடி, மேவிநாடி நுன்னடியிணை காண்கிலாவித்தக மென்னாகும். மாவும் பூகமுங்கதலியு நெருங்குமா தோட்ட நன்னகர் மன்னித் தேவி தன்னொடுந் திருந்து கேதீச்சரத் திருந்தவெம்பெருமானே. (திருஞானசம்பந்தர்)

இரண்டாயிரம் வருஷத்துக்கு முன் விளங்கிய சுந்தரமூர்த்தி நாயனார் தாம் பாடியருளிய தேவாரத்திலும் இந்நகரத்தின் பெருவளத்தையும் அதன் துறையிலே வாணிகத்தின் பொருட்டு வந்து நெருங்கிக் கிடக்கும் மரக்கலங்களின் தொகுதியையும் குறித்திருக்கின்றார். அக்கோயிலிருந்தவிடத்துக்குச் சமீபமாக இப்போது சிறிய சிவாலயமொன்று நூதனப்பிரதிஷ்டையாகச் செய்யப்பட்டிருக்கின்றது. அது நிற்க,

## போர்த்துக்கேயர்

A.D. 1505 ல் போர்த்துக்கல் தேசவாசிகள் சிலர், பிராஞ்சிஸ்கோ தே அல்மேதா என்பவனைத் தலைவனாகக் கொண்டு, காலியை அடைந்தனர்.[47] (இலங்கை மாகாளிக்குரியவிடம் காலியெனப்பட்டது) அப்போது தர்மபராக்கிரமபாகு வென்பவன். தென்இலங்கையரசனாய்க் கோட்டைக்காடு என்னும் நகரத்திலிருந்து அரசியற்றுவானாகினன். போர்த்துக்கேயர் கொழும்பிலே கோட்டை ஒன்று கட்டினர். போர்த்துக்கேயரைப் பறங்கிகளென்பது அக்காலம் தொட்டு வழக்கு. துருக்கர் சிலர் ஒரு படையாகத் திரண்டு காதர்வாவா என்பவனைத் தலைவனாகக் கொண்டு மரக்கலங்களிலேறிச் சலாபத்தை அடைந்தனர். அவர்கள் தர்மபராக்கிரமபாகு படை எதிர்த்து காதர்வாவாவைக் கொன்று வீரரைச் சிறை செய்து கோட்டைக் காட்டிற்கு கொண்டேகிற்று. 1517ல் துருக்கர் மீண்டும் ஒரு படையோடு பறங்கியர் கட்டிய கோட்டையை வளைத்தனர். அப்படையைப் பறங்கியர் முறிந்தோடத் தாக்கினர். 1520ல் மீண்டும் துருக்கர் ஒருபடையோடு வந்து அக்கோட்டையை வளைந்தனர். அப்பொழுதும் தோல்வியுற்றனர். அதன் மேல் பறங்கிகள் தமது சமயத்தைப் பரப்பத் தொடங்கினர். சிங்கள அரசனாகிய புவனேகவாகுவினது மகன் தர்மபாலனைக் கிறிஸ்தவனாக்கித் தம்மெண்ணமெல்லாம் முடிக்கும் பொருட்டுப்

அங்கம் மொழியன்னா ரவரமரர் தொழுதேத்த
வங்கம் மலிகின்ற கடன் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ் செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண் ணரவசைத்தான் திருக் கேதீச்சரத்தானே.

(சுத்தரமூர்த்திநாயனார்)

47. 1505 நவம்பர் 15ம் திகதி கொழும்புக்கு வந்த முதலாவது போர்த்துக்கேயத்தளபதி தொம் உலோரன்ஸ்சோ த. அல்மேடா ஆவான். அவன் இலங்கையின் உண்ணாட்டு நிலைமைகளை சாதகமாக்கி தனது இருப்பை கோட்டையில் பலப்படுத்திக் கொண்டான். கி.பி. 1521 ல் கோட்டை அரசனாக ஏழாம் புவனேகவாகு விளங்கினான். அவன் காலத்தில் கோட்டை அரசு மூன்றாகப் பிரிக்கப்பட்டது. கோட்டையின் மன்னனாக புவனேகவாகுவும், சீதாவாக்கையின் மன்னனாக மாயாதுன்னையும் இறைகம்கோரளையின் மன்னனாக றைகம்பண்டாரவும் பொறுப்பேற்றனர். இச்சகோதரர்களிடையே நிலவிய பகைமை போர்த்துக்கேயருக்கு சாதகமாயிற்று.





புவனேகவாகுவைத் தற்செயலாகச் சுட்ட பாவனையாகச் சுட்டுக்கொன்றனர். பின்னர்த் தாம்பாலனைக் கிறிஸ்தவனாக்கினார். அதுகண்டு அவன் பிரதானிகளுஞ் சிலர் கிறிஸ்தவராயினர். அதுகாறும் மேற்சாதியார் கீழ்ச்சாதியாரை விவாகஞ் செய்யும் வழக்கமில்லை. அதனையும் மாற்றிக் கீழை மேலாகவும் மேலைக் கீழாகவும் வைத்தனர். இவையெல்லாம் புவனேகபாகுவினது துர்ப்பலத்தால் இலங்கைக்கு வந்தகேடுகளாம்.

## சங்கிலியின் வெறி

பறங்கிகள் மெல்ல மெல்ல அனேக இடங்களைக் கவர்ந்து தமதாக்கிக் தம்மரசு செலுத்தினர். பறங்கிகள் 1543ல் மன்னாருக்கு ஒரு கிறிஸ்தவ குருவையனுப்பி அங்குள்ள கடையர் சிலரை கிறிஸ்தவராக்கினர். மன்னார் யாழ்ப்பாணத்தரசிற்குட் பட்டதாதலின் சங்கிலி மன்னாருக்குச் சென்று கிறிஸ்த குருவை அங்கு நின்று ஓட்டிக் கிறிஸ்தவர்களாயினோரையும் தண்டித்து 'இனி மன்னாரிலே கிறிஸ்த குருமார் அடி வைத்தால் கொடிய தண்டம் பெறுவர்' என்றும் ஆஞ்ஞை செய்தான். அவன் அங்கு நின்று மீண்டபின்னர் தூற்றுக்குடியிலிருந்து கிறிஸ்த குரு ஒருவர் வந்து கடையர் அனைவரையும் கிறிஸ்தவராக்கினர். அதுகேட்டுச் சங்கிலி கோபாவேசங் கொண்டு சென்று தன்னாணை கடந்து நிந்தை புரிந்த அறுநூறுபேருக்குக் கொலைத் தண்டம் விதித்தான். அவர் கொலையுண்ட செய்தியைக் குருவானவர் தப்பி ஓடிச் சவேரியார் என்னும் மகா குருவுக்கு அறிவித்தார். 1548ல் கோவையிலிருந்து சவோரியார் வந்து மன்னாரில் இறங்கியும் சங்கிலியின் ஆணையைக் கடக்க மன்னார்வாசிகள் பிரியப்படாமையால் அங்கும் நின்று புறப்பட்டு யாழ்ப்பாணத்தை அடைந்து சங்கிலியைக் கண்டு[48] அவனைப் பறங்கி அரசனோடு உறவாடும்படி கேட்டார். அவன் அதற்கிசைந்தான் போன்று நடித்து ஒரு தூதனைக் கோவைக்கு அனுப்பினான்.

## சவேரியார்

கோவை அரசன் அத்தூதனை மரியாதையோடு ஏற்றுத் தன்து நட்புக் அறிகுறியாக சில பொருள்களோடு ஒரு நிருபமும் அனுப்பினான். சிலகாலம் கழித்துப் பறங்கிகள் ஒரு கோயில் கட்ட இடம் கேட்டனர். சங்கிலி அது கூடாது என அவரை ஓட்டிவிட்டான். சவோரியார் அவ்வளவில் மனம் சலித்து இலங்கை விட்டு சீனதேசம் சென்று அங்கே காந்தன் பட்டணத்தில் 1552 ல் தேகவியோகமானார்.

48. மன்னாரில் நிகழ்ந்து முடிந்த துயரச் சம்பவத்திற்காகப் பழிவாங்கும் பொருட்டு, கி.பி. 1543ல் போர்த்துக்கேயப் படை யாழ்ப்பாணத்திற்கு புறப்பட்டது. இப்படைக்கு மார்டின் அப்போன்ஸ்சோதே என்பான் படைத்தலைவனாக வந்தான். அவனது கப்பல்கள் நெடுந்தீவில் ஒதுங்கியபோது பரநிருபசிங்கன் அவனை நாடிச் சென்று உதவி கோரினான். அதற்கிடையில் சங்கிலி செகராசசேகரன் வழங்கிய திரவியத்தால் திருப்தியடைந்த மார்டின் அல்போன்சோதே திரும்பிச் செல்ல நேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படையெடுப்பு

அதன் பின்னர் பறங்கிகள் நெடுங்காலம் பேசாதிருந்து 1564 ல் ஒரு படையோடு யாழ்ப்பாணத்தை அடைந்தனர்.[49] சங்கிலி சமாதானம் பேசிப் பதினோராயிரம் பவுனும் சில அரிய நிதிகளும் கொடுத்தான். அவ்வளவில் பறங்கிகள் மீண்டனர். அதன்பின் சங்கிலி தனது குடைக்கீழ் வாழ்ந்த சிங்களர், சாவகர், வன்னியர்கள் மேலும் ஐயங் கொண்டு அவர்களையும் தன் நாட்டை விட்டோட்டினான். சாவகர் இருந்தவிடம் சாவகச்சேரியென வழங்குகின்றது. இச்சாவகர் முன் யாழ்ப்பாணத்தில் அரசு செய்த விசயவாகுவால் படைவீரராகக் கொண்டுவந்து குடியேற்றப்பட்டவர்கள். சாவகன் கோட்டையிலும் சிலர் இருந்தார்கள். அவ்விடம் இப்போது சாவாங்கோட்டையென வழங்குகின்றது. (சாவகர் - யாவுகர்)

## வன்னியர் வருகை

இச்சமயத்தில் பாண்டிநாட்டிலிருந்து ஐம்பது வன்னியர் தமது மனைமக்களோடு புறப்பட்டுவந்தனர். அவருள் நாற்பத்தொன்பது வன்னியர் நெடுந்தீவுக்குச் சமீபத்திலே மரக்கலங்கவிழ்ந்திறந்தனர். அவர் மனைவிமாரும் ஒரு வன்னியனும் அவன் மனைவி அம்மைநாச்சியும் அவர் ஏவலாட்களும் வேறு மரக்கலத்திலேறி வந்தமையால் அவர்கள் ஷேமமாக யாழ்ப்பாணத்தையடைந்தார்கள். இறந்த வன்னியருடைய மனைவிமார் தமது ஏவலாட்களோடு யாழ்ப்பாணத்திலே பலவிடங்களிற் குடிகொண்டு வறியராய்க் காலங் கழித்தார்கள்.

## கரைப்பிட்டி வன்னியன்

எஞ்சிய வன்னியன் கந்தரோடையில் தங்கினான். அவன் சங்கிலி படையிற் சேர்ந்து தலைவனாகிக் கரைப்பிட்டியிலிருந்தான். அவனுடைய படையில் அறுபது நம்பிகளிருந்தார்கள். அவருள் ஒருவனுடைய புத்திரியைக் கரைப்பிட்டி வன்னியன் கற்புச் சிதைத்தான். அதுகேட்டு நம்பி அவ்வன்னியனைக் கொன்றான். அவன் மனைவி அம்மைநாச்சி அச்சோகத்தால் வாளையெடுத்துத் தற்கொலை செய்துகொண்டாள். (நம்பி - ஆண்டிகளுள் ஒரு சாதி)

## நம்பிகள்

இதனைக் கேள்வியுற்ற சங்கிலி தண்டாதிகாரியை அனுப்பி, அந்நம்பியைக் கொலை செய்வித்து மற்ற நம்பிகளைப் படைச்சேவகத்தினின்றும் விலக்கி, கரைப்பிட்டி வன்னியனுக்குப் புத்திரரில்லாமையால், அவன் திரவியத்தையும்

---

*49. இது நிகழ்ந்தது கி.பி. 1543ல் ஆகும்.*





அரசுக்குரியதாக்கினான். படைச்சேவகத்தினின்று விலக்கப்பட்ட நம்பிகள் அடுத்த சான்றாரக்குப்பத்துக்குப் போய்ச் சான்றார் தொழிலை மேற்கொண்டு, நளவரென்னுஞ் சாதியினராயினரென்பர். நறவர் என்ற சொல்லே நளவர் எனத் திரிந்து வழங்குகின்றது. நறவு - கள். கள்விற்போர் என்பது அதன் பொருள். அவர்கள் முதலிற் கட்குடஞ் சுமந்து சென்று விற்றுப் பின் மரமேறுந் தொழிலையும் பயின்றாராதல் வேண்டும். சான்றார் யாழ்ப்பாண நாட்டின் கீழ்ப் பாகமாகிய பச்சிலைப்பள்ளி முதலியவிடங்களில் இன்றும் மரமேறுபவர்களாகவே வாழ்கின்றனர். மேல்பாகத்துச் சான்றார், தந்தொழிலை இந்நம்பிகளும் பள்ளரும் கவர்ந்து கொண்டமையால், செக்காட்டி எண்ணெய் விற்குந் தொழிலை மேற்கொண்டனர். பள்ளர் ஆதியிற் பயிரிடும் பண்ணையாட்களாகவே வந்தார்கள். பின்னாளில் வேளாளர் பெருகிச் சிறுநிலமுடையராகித் தாமே உழுதுண்டு வாழ்வாராயினர். வேளாளர் உழுதுண்டு வாழ்வாரும், உழுவித்துண்பாரும் என இருவகையர், உழுவித்துண்பார் சிலரும் உழுதுண்பார் பலருமாகப் பள்ளர் பண்ணையாளாகிய தொழிலை விடுத்து மரமேறுந் தொழிலைக் கைக்கொண்டனர். (சாற்றார் சான்றார்) சாறு - கள். அது நிற்க,

## சங்கிலியின் கொடுங்கோன்மை

சங்கிலியினது ஒழுக்கமும் அரசுமுறையும் சனங்களுக்கு அருவருப்பாயின. அவனுக்கு அதிகாரமும் சுவாதீனமும் அதிகரிக்க அவன் கொடுமையும் அதிகரிப்பதாயிற்று. குடிகளோ அவன் கொடுங்கோன்மையைப் பொறுக்க முடியாதவராய்ப் பரநிருபசிங்கன்பாற் சென்று முறையிட்டழுதார்கள். பரநிருபசிங்கன் அவர்களைக் காப்பதற்கும் அவர்கள் குறைகளைத் தீர்ப்பதற்கும் பல உபாயங்களையும் தேடினான். சங்கிலிக்குப் பலமுறையும் புத்தி கூறினான். அவன் நட்பினரைக் கொண்டும் நன்மதி புகட்டினான். ஈற்றில் அவன் குருவைக்கொண்டும் வரற்பால கேடுகளை எடுத்துபதேசித்தான். எல்லாம் செவிடன் காதில் ஓதிய மந்திர மாயிற்று. ஈற்றில் பரநிருபசிங்கள் தான், கெடினும் தன் குடிகள் கேடு திருத்தலே தக்கதெனத் துணிந்தான். பறங்கிகளைக் கொண்டு புத்தி புகட்டுவதே இனிக்கருமமென முடிந்தான். அவ்வாறே பறங்கிப் பிரதிநிதியோடு நிருபமூலமாக நட்பாடி வந்தான்.

## மடைப்பள்ளியார்

இப்படியிருக்குஞ் சமயத்தில் பரநிருபசிங்கன் தன்னைச் சங்கிலி நஞ்சிட்டுக் கொல்ல சூழ்ச்சி செய்திருக்கின்றானெனக் கேட்டுத், தனது மடைப்பள்ளிக்குச் சங்கிலி அரமனையிலிருந்து எவரும் செல்லலாகாதெனக் கட்டளையிட்டான். அவன் இராசபத்திக்குரிய உயர்குல வேளாளருள்ளே விசுவாசமானவர்களைத் தெரிந்தெடுத்து மடைப்பள்ளியதிகாரிகள், உக்கிராணகாரர்களாக நியமித்து, முன்னிருந்தவர்களையெல்லாம் நீக்கினான். அம்மடைப்பள்ளி அதிகாரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உக்கிராணகாரர்களுக்கு இராசமடைப்பள்ளியாரென்றும், தனது குமாரனுடைய மடைப்பள்ளியாருக்குக் குமாரமடைப்பள்ளியாரென்றும், மந்திரசங்கத்தாருடைய மடைப்பள்ளி உத்தியோகத்தருக்கு சங்கமடைப்பள்ளியாரென்றும், பொது மடைப்பள்ளி உத்தியோகத்தருக்குச் சர்வமடைப்பள்ளியாரென்றும் பட்டமளித்தான். இராசமடைப்பள்ளியாரும் குமாரமடைப்பள்ளியாருமே பரநிருபசிங்கனுக்கும் அவன் மகன் பரராசசிங்கனுக்கும் உறுதிச்சுற்றமாய் விளங்கினார்கள்.

## மறவர்

இப்படியிருக்கையில் மறவன்புலவிலிருந்த மறவர்கள், கிராமங்களிற் புகுந்து களவு செய்யவுங் கொள்ளையிடவும் தொடங்கினார்கள். அவர்கள் செய்தி சங்கிலி செவிப்பட,அவன் உடனே அவ்விடஞ் சென்று அவர்களைப் பிடித்துச் சிறையிலிட்டான். சிலர் தப்பியோடிப் பாண்டியன்தாழ்வுக் காட்டில் ஒளித்தார்கள். இதனால் அவ்விடம் அக்காலத்திலே அடர்ந்த காடாயிருந்ததாகத் தெரிகிறது. இடையிடையே சங்கிலி இவ்வாறு குடிகளுடைய துன்பத்தை நிவிர்த்தி செய்தானாயினும், அவன் அரசு பெரும்பாலும் கொடுங்கோன்மையுடையதாயிருந்தமையால், அநேக குடிகள் ‘கொடுங்கோன்மன்னர் வாழுநாட்டிற் கடும்புலி வாழுங்காடுநன்றே’ என்று அவன் நாட்டைவிட்டு நீங்கிச் சோழநாடும் சிங்களநாடும் நோக்கிச் சென்றனர். அது நிகழ்ந்த சில நாளில் மேல் பாண்டிநாட்டிற் கொடிய பஞ்சமொன்றுண்டாயிற்று. அதனால் அங்கிருந்து அநேககுடிகள் புறப்பட்டுத் தோணியேறி யாழ்ப்பாணத்தையடைந்து அரசன் அனுமதியோடு பவவூர்களிலுங் குடியேறினார்கள்.

## கருணீகர்

இச்சமயத்தில் தொண்டைநாட்டிலிருந்து பன்னிரண்டு கருணீகரும் தங்குடும்பங்களுடன் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்குச் சங்கிலியரசன் அப்போது காடாயிருந்த கரணவாயைக் கொடுத்தான். அவர்கள் பரம்பரைச் சைவவேளாளருள் ஒரு பகுதியார். அவர்களை உடுப்பிட்டியைச் சேர்ந்த பன்னிரண்டு குறிச்சிக்கும் கருணீகராக்கினான். (கருணீகர் - கணக்கர்) கருணீகர் வாயில் என்னும் பெயர் கரணவாயென மருவிவழங்குகின்றது. கருணீகர்கள் தமிழரசு போனபின்னர்ச் சைவ குருக்கள்மாராகிப் பெருஞ் சிறப்பும் செல்வமுடையவராய் விளங்குகின்றனர்.

## வடமராட்சிக்கலகம்

ஒரு நாள் வடமராட்சிச் சனங்களுள்ளே உண்டாகிய ஒரு கலகத்தை விசாரித்துத் தீர்க்குமாறு சங்கிலிபோய் மீண்டு வரும்போது வாச்சியதாரர் கள்ளியங்காட்டெல்லையில் வாச்சியத்தை நிறுத்தினார்கள். உடனே சங்கிலி





வாச்சியத்தை நிறுத்திகாரணம் யாதென வினாவினான். அதற்கு வாச்சியரார் ‘மகாராசாவே, இவ்விடம் பரநிருபசிங்கராசாவுடைய எல்லையாதலின் வழக்கம்போல் நிறுத்தினோம்’ என்றார்கள். அதுகேட்ட சங்கிலி ‘பரநிருபசிங்கனைத் தொலைத்தாலன்றி இச்சங்கடந் தீராது’ என மனத்துளெண்ணிப் பேசாது சென்றான்.

## சங்கிலி முறைகேடு

இது நிகழ்ந்த சிலநாளில், சங்கிலி தனது மந்திரிகளுள் ஒருவனாகிய அப்பாமுதலியினது புத்திரியுடைய வடிவழகுகளைக் கேள்வியுற்று, அவளைக் களவிற்கவரக்காலம்பார்த்தும் தூதுபோக்கியுமிருந்தான். அதனை அவள் தனது தந்தைக்கு அறிவிக்க, அவன் அவளைப் பரநிருபசிங்கனுடைய அரண்மனைக்குக் கொண்டு போயடைக்கலம் வைத்து, அவனைநோக்கி, ‘வேந்த, என்னையும் இக்கன்னிகையையும் அவள் கற்பையும் எனது குடும்பத்தின் பெருமையையுங் காத்தருள்’ என்றழுது விண்ணப்பஞ் செய்தான். பரநிருபசிங்கன் அப்பாமுதலிக்கு அபயங்கொடுத்துச் ‘சங்கிலியினது கொடுமையெல்லாம் பொறுத்தேன். இக்கொடுமை சிறிதும் பொறுக்கமாட்டேன். அவனை அடக்கத் துணிந்தேன். இது செய்யேனாயின் அடைக்கலத்துரோகஞ் செய்தார். புகும் நரகம் புகுவேன்’ என்று சத்தியமுஞ் செய்தான். உடனே ஒரு நிருபமெழுதி ‘இதனை ஊர்காவற்றுறைக் காவல்பூண்டிருக்கும் காக்கைவன்னியனிடஞ் சேர்ப்பி’ என்று கூறி, அப்பா கையிற் கொடுத்தான். அப்பாவும் அதனைத் தனக்கு விசுவாசமுள்ளவொரு தூதனிடஞ் கொடுத்தனுப்பினான். காக்கைவன்னியன் அதனை வாங்கி வாசித்துப் பரநிருபசிங்கனுக்கு உத்தரமனுப்பிவிட்டு, அடுத்தநாளுதயத்தில் மரக்கலமேறித் தரங்கம் பாடியையடைந்த பறங்கிப் பிரதிநிதியைக் கண்டு கலந்து, அவர்கள் வருதற்குக் காலநிச்சயம் பண்ணிக்கொண்டு மீண்டுவந்து யாதுமறியாதான் போன்று தன் அதிகாரத்தில்அமர்ந்தான்.

## பறங்கிகள்

உரியகாலத்தில் காக்கைவன்னியன் சொல்லிய சூழ்ச்சிப்படி பறங்கிகள் வர்த்தக வேடமிட்டு வினோதமான பண்டங்களோடு பண்ணைத்துறையில் வந்திறங்கினர். பறங்கிகள் உடனே சங்கிலியைத் தரிசித்து வணங்கிநின்று, “நாங்கள் வர்த்தகர்கள்: மகாராசாவுடைய அநுமதி பெற்று இந்நாட்டில் பண்டங்கள் விற்கவும் பண்டங்கள் கொள்ளவும் எண்ணிச் சமூகத்தையடைந்தோம்” என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அதுகேட்ட சங்கிலி “நீங்கள் அன்னிய தேசவாசிகள்: வர்த்தகர் என்கின்றீர்கள். உங்கள் கருத்து வேறொன்றாயிருக்கலாம். ஆதலால் உங்களை நம்புதல் தகாத கருமம்” என்றான். பரநிருபசிங்கன் “இவர்கள் கொழும்பில் கோட்டை கட்டி அரசு செய்யும் பறங்கிகளைச் சேர்ந்தவர்களல்லர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் வர்த்தகர்களே. இவர்கள் எமது நாட்டில் வர்த்தகஞ் செய்யின் எமது அரசுக்கும் எமது நாடடிற்கும் நன்மையுண்டாகும், ஆதலால் மாறாது அநுமதி கொடுத்தல் நன்று" என்றான். சங்கிலி அதற்கிசைந்துஅவர்களை நோக்கி, "நீங்கள் கூறுவதுண்மையானால் பகற்காலத்தில் மாத்திரம் எனது நகரத்தில் வர்த்தகஞ் செய்து பொழுதுபடு முன்னே உங்கள் மரக்கலத்துக்கு நீங்கள் திரும்பிவிடல் வேண்டும் என்றான்.அவர்களும் இணங்கினர்.

## பறங்கிகள் கோட்டை

ஒருநாள், அவர்கள் "இராசா சாந்தமாயினான் இனி அவனை வசமாக்குவோம்" என்று துணிந்து, நல்ல பட்டாடைகளும் வாசனைத் திரவியங்களும் பாதகாணிக்கை யாகக் கொண்டு சங்கிலி கொலுமண்டபம் சென்று வணங்கி, அவைகளை அவன் சமுகத்தில் வைத்து, "இவைகளை அங்கீகரித்தல் வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்து நின்றார்கள். சங்கிலி அவைகளை உவந்தேற்றான். அதுகண்டு பறங்கிகள் தமதெண்ணம் நிறைவேறினதென்றகமகிழ்ந்து, "மகாராசாவே, பகலெல்லாம் உண வின்றி வர்த்தகஞ் செய்து, இரவிலே எங்கள் கப்பலிற் சென்று போசனஞ் செய்து அங்கேயே நித்திரை செய்து வருகின்றோம். அது பெருங் கஷ்டமாயிருக்கிறது. ஆதலால் கரையிலே ஒரு சிறு வீடுகட்டி அதிலிருந்து வர்த்தகஞ் செய்ய எங்களுக்கு அநுமதி தந்தருள வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அவ்வாறாகுக வென்று சங்கிலி அவர்களுக்கு அநுமதி கொடுத்து இடமுமெல்லையுங் குறித்து விட்டான். அவ்விடம் இப்போது கோட்டையிருக்குமிடமே. அந்நாளில் அதுவும் அதன யலும் மிருகங்கள் சஞ்சரிக்கும் அடர்ந்த காடாயிருந்தன. அவ்வாறே பறங்கிகள் 1680ல் அக்காட்டிலே வீடு கட்டுவார் போல மண்ணினால் ஒரு கோட்டை கட்டி, ஆயுதங் களும், வெடிமருந்துகளும் வேண்டியமட்டுஞ் சேகரஞ்செய்து, படை வீரரையும் இருத்திக் காலம் பார்த்திருந்தார்கள். சங்கிலிக்கு இச்செய்தி சிறிதும் புலப்படாவகை வழக்கம்போலப் பறங்கிகள் நகரத்திற்சென்று வர்த்தகஞ் செய்து வந்தார்கள்.

## சங்கிலியின் கோபம்

ஒரு நாள் சங்கிலி வேட்டையாடிக் கடலோரமாகத் தனது பரிவாரத்தோடு குதிரைமேல் வந்தான். அவன் பறங்கிகள் கோட்டையையும் கொடியையுங் கண்டான். புறத்தே வந்த துணைவரை நோக்கி, இஃதென்னவென்றான். அவர்கள் பறங்கிகளுறைவிடமென்றார்கள். சங்கிலி கண்கள் தீயெழச் சிவந்தன. குதிரையைத் தூண்டினான். அக்கோட்டைவாயில் எதிரே வந்தது. பறங்கித் தலைவனும் எதிர்ப்பட்டான். யாது செய்தனை? கோட்டை கட்ட அனமதி தந்தார் யார்? என்றான். பறங்கித் தலைவன் சிறிதுங் கூசாது நீயே தந்தாய் என்றான். இதனை இக்கணத்தே இடித்துவிடக் கடவையெனச் சங்கிலி அதட்டினான். பறங்கித்தலைவன் இடிப்பதில்லை யென்றான். சங்கிலி, உனது கபடத்தையும் வீரத்தையும்





நாளையறிவேன் எனக் கூறிக் கோபாவேசனாய்த் தன் அரண்மனைசேர்ந்து சேனாதிபதியை அழைத்து, நாளை உதயத்தில் பறங்கிகளோடு யுத்தத்துக்கு ஆயத்தனாயிருவென்று கட்டளையிட்டான். சேனாதிபதியும் தனது படைகளை அணிவகுத்துக்கொண்டு, பேரிகை முழங்கவும் வீரர்கள் ஆரவாரிக்கவும் சென்று, வீரமாகாளிகோயில் மேலைவெளியிலே கடல்போலப் பரப்பி நின்றான். பறங்கிகளும் தமது சேனையைத் துப்பாக்கி கையிலே தாங்கிச் செல்ல நடத்தி எதிரூன்றினார்கள். சங்கிலிபடை அம்புகளையும் கவணினாற் கல்லுகளையும், வலிய வளைகளையும் பிரயோகித்தார்கள். பறங்கிகள் தமது துப்பாக்கியினாற் குண்டுகளைப் பிரயோகித்தார்கள். இருபக்கத்திலும் அநேகர் காயசேதமும், சிலர் உயிர்ச்சேதமுமுற்றார்கள்.[50]

## முதல்நாட்போர்

முதல் நாட்போரில் வெற்றிதோல்வி காணுமுன் சூரியன் அஸ்தமயமாயிற்று. இரண்டாநாளும் இவ்வாறு போர் செய்தனர். பறங்கிகள் தமது துப்பாக்கியை இலக்குநீட்ட, ஒவ்வொரு துப்பாக்கிக்கும் ஒவ்வோராள் நின்று திரிவாய்க்குநெருப்பு வைக்க அவை சில பற்றியும் இலக்குத் தப்பியும் சில பற்றாமலும் பொய்த்தன. சில

---

*50. இந்த யுத்தம் போர்த்துக்கேயரின் இரண்டாம் படையெடுப்பைக் குறிக்கிறது. கி.பி. 1560 இல் கொன்ஸ் தாந்தீனுதே பிறகன்சா என்பவன் தலைமையில் போர்த்தக்கேயப்படை கரையூரில் தரையிறங்கியது. தமிழ்படை எவ்வளவு எதிர்த்தும் போர்த்துக்கேயப்படை நல்லூரைக் கைப்பற்றிக் கொண்டது. சங்கிலி மன்னன் கோப்பாய்க்குத் தப்பியோடி அங்கிருந்த காவலரணை அடைந்தான். மன்னனைப் பிடிக்கும் நோக்குடன், கோப்பாய்க்குச் சென்ற போது, சங்கிலி பச்சிலைப்பள்ளிக்குப் பின் வாங்கிச் சென்றான். போர்த்துக்கேயப்படை இறுதியில் சங்கிலியுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ள நேர்ந்தது. மன்னார்த்தீவைப் போர்த்துக்கேயரிடம் விட்டுக் கொடுக்க சங்கிலி ஒப்புக் கொண்டான். திறை செலுத்தவும் உடன்பட்டான். ஆனால் திறை செலுத்தியதாகத் தெரியவில்லை. சங்கிலி செகராசநேகரன் 1565 வரை ஆட்சி செய்து, இயற்கை மரணமடைந்தான். அவன் போர்த்துக்கேயருடன் இறுதிவரை போராடினான்.*

*குறிப்பு: ஏனைய ஆரம்பச்சரித்திர ஆசிரியர்கள் போன்று, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையும், கி.பி. 1519 தொட்டு 1565 வரை யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலி செகராசசேகரனையையும், கி.பி. 1616 தொட்டு 1621 வரை யாழ்ப்பாணத் தையாண்ட சங்கிலி குமாரனையும் ஒருவரென மயங்கி எழுதியுள்ளார். இந்த இரண்டு சங்கிலிகளுக்குமிடையில் புவிராசபண்டாரம், காசி நயினார், பெரியபிள்ளை செகராசசேகரன், புவிராசபண்டாரம் செகராசசேகரன். எதிர்மன்ன சிங்ககுமாரன் ஆகிய ஐந்து மன்னர்கள் யாழ்ப்பாணத்தை ஆண்டுள்ளனர். இனி முத்துத்தம்பிப்பிள்ளையால் விபரிக்கப்படுகின்ற வரலாறு சங்கிலிகுமாரன் சம்பந்தமான வரலாறு ஆகும் என்பதைக் கவனத்திற் கொள்க.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடித்துக் குண்டுகளைச் செலுத்தின. இதற்கிடையில் அம்புகளும் கவன்கல்லு களும் எறியாயுதங்களும் நஞ்சூட்டிய ஈட்டிகளும் வளைதடியென்னுஞ் சக்கரங்களும் சங்கிலி படையினின்றும் சென்று தாக்கின. பறங்கிகள் இவற்றால் தாக்குண்டும் கலங்காது யுத்தஞ் செய்தனர். சங்கிலிபடையுந் துப்பாக்கிக் குண்டமாரியால் முதனாட்கலங்கியும் இரண்டாநாள் மிக்க தைரியத்தோடும் ஊக்கத்தோடும் பொருத்து, இருபகுதியிலும் அநேகர் மாண்டனர். மாண்டும் போர் நடந்தது. அவ்வளவிற் சூரியனும் மேல்கடல்வாயாடைந்தான். சேனைகளும் தத்தமுறைவிடஞ் சேர்ந்தன.

## பதினொரா நாட்போர்

இப்படியே பத்து நாள் யுத்தம் நடந்தது. சங்கிலி பத்தாநாளில் 1700 பறங்கிகளைக் கொன்றான். பதினொராநாளிற் சங்கிலி சிறந்த போர்வீரர் 400 பேரைத் தலைப்படையாகத் திரட்டிக்கொண்டு, மற்றப்படைகள் பின்செல்ல முன்நடந்தான். பறங்கிகள் துப்பாக்கிப் போரிற் பயனில்லையென்று கண்டு வாட்போருக் காயத்தமாய் நின்றனர். இருதிறப்படைகளுங் கைகலந்தன. சங்கிலி படைவீரர் புலியெனப்பாய்ந்து வெட்டினர். பறங்கிகள் இனி நாம் சரண்புகுவதே தக்கதென்றெண்ணிப் பின்வாங்கத் தலைப்பட்டனர். அச்சமயம் தரங்கம் பாடியிலிருந்து பறங்கிகளுக்குத் துணைப்படையொன்று வந்த சேர்ந்தது. அதனால் பறங்கிகள் போர்க்களத்துக்குப் பக்கத்தே இருமருங்குமுள்ள காட்டினுள்ளே மறைந்திருந்து துப்பாக்கியால் பக்கப்படையைக் கொண்டு குண்டுமாரியும் பொழிவித்தார்கள். சங்கிலியினது படையுங் கவண்கல்லுகளை எதிர்மழையாகப் பொழிவித்தனர். அன்றுவரைக்கும் நடந்த யுத்தத்தில் பரநிருபசிங்கனும் மந்திரியாரும் யுத்தத்தில் சுரத்தின்றியிருந்தமையைச் சங்கிலி கண்டு அதற்குக் காரணமென்னவென்று வினாவினான். அவர்கள் பறங்கிகளுடைய யுத்தமுறை புதிதாயிருப்பதால் திகைத்து விட்டோம் என்றார்கள். சங்கிலி 'உங்கள் வீரத்திறல் நன்றாயிருக்கிறது' என்று பரிகசித்து, 'இனி யாதுக்கும் அஞ்சாதிருங்கள்' என்று கூறிப் போர்மேற் சென்றான். மற்றைநாட்போரில் 2400 பறங்கிகளைக் கொன்றார்கள். ஈற்றிலே பறங்கிப்படைத்தலைவனும் சங்கிலி வாட்படைக்கிரையாகி மாண்டான். அவன் மாளுதலும் பறங்கிவீரர் புறங்கொடுத்தோடத் தலைப்பட்டனர். அவர்களைச் சங்கிலி வீரர் தொடர்ந்து துரத்தினர். பறங்கிகள் ஓடிக் காட்டில் நுழைந்து மறைந்தனர். சங்கிலியுந் தொடர்ந்து பறங்கிகள் கட்டிய கோட்டையில் நுழைந்து, அங்கிருந்த ஆண் பெண் சிறுவர் வயோதிபர் யாவரையும் கொன்று, அங்கிருந்த திரவியங்களையும் கவர்ந்து கோட்டையையும் பிடித்துத் தரைமட்டமாக்கினான். பறங்கிகள் அஃதறிந்து ஊர்காவற்றுறையை அடைந்தனர்.

## வேள்வி

இங்கே சங்கிலியினது படைவீரர் வெற்றிக்களிப்படையராய் வீரமாகாளிக்குப்





பெருவேள்வியிட்ட விழா வணி செய்வராயினர். அப்பொழுது நாமிது செய்வோம், நாமிது செய்தல் வேண்டுமென்று ஒரு திறைப்படைவீரர் ஒருதிறைப்படைவீரருக்கு முந்த, அவருட் பெருங்கலகமுண்டாயிற்று. சோனதிபதியும் அச்சமயம் தனது பூசையிலிந்திருந்தமையால் அக்கலகத்தை அவனுக்கு அறிவிக்கக் கூட்டாமலிக்க, சங்கிலி அஃதுணர்ந்து இவ்வேள்வியை இன்று முடித்தலாகாது நாளை முடிப்போமெனக் கூறி, அக்கலகத்தை யடக்கினான். அஃது அப்படைவீரருக்கு வியசனத்தையுண்டாக்கிற்று. அது நிற்க.

## காக்கைவன்னியன்

ஓடிப்போன பறங்கிகள் காக்கைவன்னியனை அடைந்து 'நீ எங்களைப் போருக்கே விட்டுப் பின்னே நின்றுவிட்டனை. சங்கிலியால் எமது சேனையிற் பதினாயிரவரும் தலைவனும் மாண்டார்கள். இப்படி வஞ்சச் சூதுசெய்தவுன்னைக் கொல்வதே கருத்தாக உன்பால் வந்தோம்' என்றார்கள். அச்சமயம் பரநிருபசிங்கன் தூதனும் ஓலைகொண்டு அங்கடைந்தான். அவ்வோலையில், 'இதுவரையும் வெளிப்படாதிருந்தோம். இனி வெளிப்பட்டுக் கருமம் முடித்தல் வேண்டும். ஆயத்தமாக வருகுக' என்றெழுதியிருந்ததைக் காக்கைவன்னியன் பறங்கிகளுக்குக் காட்டினான். பறங்கிகள் உடனே மீண்டு போருக்காயத்தராகிப் பின்னே செல்லக், காக்கைவன்னியன் முந்திச் சென்று, விடியுமுன் நல்லூரையடைந்து பரநிருபசிங்கனோடு கலந்து, மீண்டு மாறுவேடம் பூண்ட பறங்கிச் சேனையினுள்ளே புகுந்தான். பறங்கிகள் சேனை சூரியோதயத்தில் மேலைக்கோட்டை வாயிலைச் சென்று வளைத்தது. அதுகேட்டுச் சங்கிலியும் படைகளைத் திரட்டிக்கொண்டு ஆயத்தமாய்க் கோட்டைவாயிலை அடைந்தான்.

## சங்கிலி சிறைப்படல்

அதற்கிடையில் பரநிருபசிங்கன் கடபமாகச் சேனாதிபதியிடம் ஒருவனையனுப்பி, ஒருபாயஞ் சொல்வதற்காக ஓரொற்றன்வந்து கீழைக்கோட்டை வாயிலிற் காத்து நிற்கின்றான் என்று அவனுக்கறிவித்தான். அதுகேட்ட சேனாதிபதி அவ்வொற்றனை நாடிக் கீழைக்கோபுர வாயிலை அடைந்தான். இங்கே காக்கைவன்னியன் வெளிப்பட்டுச் சங்கிலியைக் காணச் செல்வான்போன்று செல்ல, சங்கிலி அவன் வரவைக் கண்டுள்ளம் பூரித்து, ஆருயிர்த் துணைவனாதலின் இச்சமயம் வந்தனையெனக் கள்ளஞ்சிறிது மெண்ணாது எதிரோடித் தழுவினான். வஞ்சத்துரோகியாகிய காக்கைவன்னியன் தன் கன்னெஞ்சம் சங்கிலியினது உண்மையான அன்புரைக்கும் உபசாரத்துக்கும் சிறிதும் நெகிழாது கொடிய வயிரமாக, எதிர்தழுவிய கையிரண்டையும் கொண்டு நெகிழவிடாது கட்டிப்பிடித்துக் கொண்டான். பறங்கிகள் இக்கொடிய வஞ்சசத்துரோகியின் கண்ணை நோக்கி நின்றனர். கண்ணாற் குறி காட்டினான். பறங்கிகள் ஓடி அவனைப் பிடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி விலங்கிட்டனர்.[51] சங்கிலியினது படைவீரர் துடித்து வாளை உறைகழித்தனர். பரநிருபசிங்கனும் தனது சபத முடிக்கக் கருதிச் சேனாதிபதியநுமதியின்றிப் போர் தொடங்கலாகாதென்று தடுத்தான். அவர்கள் வாளிலிட்ட கையோடு சேனாதிபதி வரவை ஆவலோடெதிர்நோக்கிப் பதைத்து நின்றனர். சேனாதிபதியும் என் செய்தேன் என்று மூச்சுவிடாதோடிவந்தான். இடைவழியில் வஞ்சவன்னியன் சூழ்ச்சிப்படி பதிவிருந்த பறங்கி வீரர் அவனை வளைந்து தமியனாயிருந்தமையால் ஒரு வீச்சில் அவன் சிரசைக் கொய்தனர். அது கண்டு சங்கிலிபடையுடைந்தோடியது.

## பரராசசேகரன் நிலை

பறங்கிகள் செயபேரி முழக்கிக் கோட்டையினுள்ளே புகுந்து கொடியுயர்த்தினர். இதனையறிந்த பரராசசேகர சக்கரவர்த்தி பறங்கிகளுக்குட்பட்டு அரசாளவதிலும் காடாளுவதே நன்றெனத் துணிந்து வன்னிக்காட்டுக்கோடி ஒளித்தான். பறங்கிகள் அவனைத் தேடிக் காணாமையினால் அவனிருக்கும் இடத்தை அறிந்து சொல்பவர்க்கு இறைசால் இருபத்தையாயிரம் பரிசாகக் கொடுக்கப்படுமென்று பறையறைவித்தனர். அதுகேட்டு அவனிடத்து முன்மந்திரியாயிருந்த ஒரு கன்னெஞ்சப்பார்ப்பான் பொருளவாவென்னுங் கொடிய பேய்வாய்ப்பட்டு வன்னிக் காட்டுக்குச் சென்று ஓரிளநீரும் எலுமிச்சம்பழமும் கையிற்கொண்டு தேடித்திரிந்தான்.

## பார்ப்பான் தேடியபொருள்

அரசன் அவனைக்கண்டு கூவியழைத்தான். பார்ப்பான் தேடிய பொருள் தானே சிக்கியதென்று மனம் பூரித்து அரசனிடம் போய் ஆசீர்வாதஞ் சொல்லி சுகம் விசாரித்து இவ்விளநீரை உண்ணுமென்று நீட்டினான். அரசன் இருகையாலுமேற்றுத் தன் உடைவாளால் அதனைத் திறந்து பருகத்தொடங்கினான். எலுமிச்சம்பழமிருக் கின்றது. வாளைத்தாரும் வெட்டிப்பிழிந்து இளநீரில் விடுவேன் என்று பார்ப்பான் கூற, அரசன் வாளை அவன் கையிற் கொடுத்தான். அவன் அதனை வாங்கிப் பழத்தை வெட்டிப் பிழிந்துவிட, அரசன் இருகையாலுமேந்தி இளநிரைக் குனிந்து பருகினான். குனிந்து பருகக் காதகப் புலையனாகிய அப்பார்ப்பான் அவ்வாள் கொண்டு அரசன் சிரசைக்கொய்து எடுத்துப் பொதிசெய்து கொண்டு வந்த பறங்கித் தலைவன் கையிற் கொடுத்தான். அவன் அதனை வாங்கி அவிழ்த்துப்பார்த்துப் பிரமித்து, 'யாது செய்தாய் புலையா' என்று பெருஞ் சினங்கொண்டு, நீ சிறிதுங் கூசாது செய்த இப்புலைத்தொழிலுக்குத் தரத்தக்க பரிசு இதுவே' எனக்கூறி, உடைவாளையிழுத்து அந்நிலையிலேதானே அவன் சிரசைக் கொய்தான்.

---

51. *சிறைப்பட்ட சங்கிலி, கி.பி. 1616 இல் அரசனாகவிருந்த சங்கிலிகுமாரன் ஆவான்.*





## சங்கிலிக்கு தீர்ப்பு

அதன் பின்னர்ப் பறங்கிகள் சங்கிலியை நிதாசனத்தர் சபைமுன்னேயிட்டு,

1. 'நீ முடிசூடப்படாத இராசாதிகாரஞ் செய்தது முதற்குற்றம்,
2. தந்தைக்குரிய அரசைக் கிரமந்தவறிக் கவர்ந்தது இரண்டாங்குற்றம்,
3. இராசகுமாரனைக் கொலைபுரிந்தது மூன்றாங்குற்றம்,
4. சனங்களை வருத்தியதும் இருநூறு பேரை வன்கொலைபுரிந்ததும் நான்காங்குற்றம்'

எனக் குற்றாநிருபணஞ் செய்வித்த அவனைச் சிரச்சேதஞ் செய்து கொல்லுமாறு தீர்ப்பிட்டனர். அவ்வாறே காளிகோயிற் சந்நிதியில் பறங்கிகள் அவனைச் சிரச்சேதஞ் செய்து கொன்றனர். அதுகேட்டுச் சங்கிலிதேவி தீ வளர்த்து அதிற் பாய்ந்து விட்டாள். சங்கிலியினது தேவி, தீப்பாயுமுன் இத்தீவினையிழைந்த காக்கைவன்னியன் மனைவியும் தன்னைப் போலத் துயரடைதல் வேண்டுமென்றெண்ணி, ஒரு தூதனை யனுப்பிச் சங்கிலியோடு காக்கைவன்னியனும், பறங்கிகளால் மடிந்தான் என்றவ ளுக்கு அறிவித்ததால் அதுகேட்டுக் காக்கைவன்னியன் மனைவியும் தீப்பாய்ந்து துயிர்விட்டாள். பறங்கிகள் சங்கிலி புத்திரரைத் தரங்கம்பாடிக்கனுப்பி அங்கே வைத்துப் பரிபாலித்து வந்தார்கள். இவ்வாறன்றி அவர்களைக் கோவைக்கு அனுப்பி னார்களென்றும் அங்கே அவர்கள் மசூரிகா நோயினால் மடிந்தார்களென்றும் கூறுவாருமுளர். சங்கிலியைச் சிறை செய்து கோவைக்கு அனுப்பிவிட்டுப் பரநிருப சிங்கனுக்குப் பட்டம்கட்டி அரசு செய்ய விடுத்து மன்னாரை மாத்திரம் தமக்குரிய தாக்கிக் கொண்டு மீண்டனரென்றும், கோவை நகரிலேயே சங்கிலி கொல்லப்பட்டா னென்றும் கூறுவாருமுளர்.

(Vinea Tabrobanea) வினிய தாபிர பேனியா என்னுஞ் சரித்திரம், பறங்கிகள் 1590ல் யாழ்ப்பாணத்திலே படையேற்றிச் சங்கிலியோடு யுத்தம் செய்து அவனையும் அவனது மூத்த மகனையும் கொன்று அரசு கைக்கொண்டனரென்றும், 1593ல் கண்டியரசனாகிய விமலதர்மன் பறங்கிகளோடு யுத்தம் செய்து அவர்களை வென்று யாழ்ப்பாணத்தரசைக் கைக்கொண்டு 1620ம் வருஷம் வரையும் ஆண்டானென்றும், 1620ல் பறங்கிகள் மீண்டும் படையேற்றி யாழ்ப்பாணத்தைக் கைக்கொண்டுஅரசு செய்யத் தொடங்கினரென்றும், 1626ல் கண்டியரசன் மீண்டும் படையேற்றி யாழ்ப்பாணத்தைப் பிடிக்குமாறு ஒரு பெரிய சேனையையும் அதற்குச் சேனாதிபதியாகச் சேனா வீரர்களுக்கென அத்தப்பற்று முதலியையும் அனுப்பிய போது பறங்கிகள் அச்சேனையை முதுகிடச் செய்தனர் என்றும் கூறுகின்றது. எங்ஙனமாயினும் சங்கிலியினது சந்ததி யாழ்ப்பாணத்தில் நிர்முலப்பட்டது உண்மையே. கொடுங்கோண்மை குலநாசம் என்பது உண்மையாய் விட்டது.

## பரநிருபசிங்கன் திறையரசனாதல்

அதுநிற்க, பரநிருபசிங்கனும் பறங்கியரும் முன்னைய ரகசியமாகப் பொருந்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டபடி பறங்கிகள் பரநிருபசிங்கனை திறையரசனாக்கி அவன் மகன் பரராசசிங்கனை அவனுக்குக் கீழ் ஏழுரதிபனாக்கினார்கள். அதன்பின்னர் காக்கைவன்னியனுக்கு பெரும் திரவியமுஞ் ஊர்காவற்றுறை அதிகாரமும் வேறுவரிசைகளும் கொடுத்தார்கள்.

பரநிருபசிங்கன் ஒன்பது வருஷம் அரசு செய்து இறந்தான். அவன் இருக்கும் வரையிலும் பறங்கிகள் சமய விஷயத்திலும் பொருள் விஷயத்திலும் கொடுங்கோல் செலுத்தாது ஒருவாறு அதிகாரம் செய்து வந்தார்கள். பரநிருபசிங்கனும் பறங்கிகளுக்கு நட்பினனாய்த் தனது சுவாதீனத்தை முற்றும் நழுவவிடாமல் சூழ்ச்சியோடு அரசு செய்து குடிகளையும் காத்து வந்தான். அவன் பறங்கிகளை துணை கேட்டபோது, சமய விஷயத்திலும் தேசாசாரத்திலும் அவர்கள் ஒருவகையிலும் பிரவேசித்தல் ஆகாது என்றும், அவர்கள் செய்யும் உதவிக்குத் தனக்குரியதாக மன்னார் அரசையும் யாழ்ப்பாணத்திலே சுவாதீனராக வர்த்தகம் செய்யும் உரிமையையும் அவர்களுக்குக் கொடுப்பதாகவும் பேசிக் கொண்டான். பின்னர் யாழ்ப்பாணத்தில் அவர்கள் பல்லாயிரம் படைவீரரை மடியக் கொடுத்தமை யால் திறை கேட்டார்கள். அது நியாயமே எனப் பரநிருபசிங்கன் உடன்பட்டான்.

## நல்லூர்ப் பறங்கிகள் வாசஸ்தலமாதல்

அவ்வாறே பறங்கிகள் அவன் இறக்கும்வரைக்கும் தமது உடன்படிக்கையின்படி நடந்து வந்தனர். அவன் இறந்தவுடன் அவர்கள் நல்லூர்க்கோட்டையை தமது வாசஸ்தலமாக்கினர்.[52] புறமதிலை இடித்து அக்கற்களைக் கொண்டு யாழ்ப்பாணத் தில் இப்போதுள்ள கோட்டையைக் கட்டினார்கள். சிவாலயம் சுப்பிரமணிய ஆலயம், விநாயகர் ஆலயம் என்பவைகளையெல்லாம் இடித்தார்கள். அங்கிருந்த அரிய நிதிகளையெல்லாம் கவர்ந்தார்கள். ஆலயங்களைப் பறங்கிகள் இடிக்கப் போகின்றார்கள் என முன்னர் உணர்ந்த பூசகர்கள் விக்கிரகங்களை யெல்லாம் கிணறுகளில் இட்டு மண்ணினால் தூர்த்துவிட்டு அவ்விடங்களை விட்டகன்றனர். அரண்மனையிலிருந்த திரவயங்களையெல்லாம் பறங்கிகள் எல்லாம் தமதாக்கினர்.

52. *போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தின் மீது நான்கு தடவைகள் படையெடுத்துள்ளனர். 1591 ல் மூன்றாவது தடவையாக அந்திரே யூர்த்தாடு தே மென்டோன்சா தலைமையில் பெரும் படை யாழ்ப்பாணத்திற்கு வந்து வெற்றி கொண்டு எதிர்மன்னசிங்கனை மன்னனாக்கி மீண்டது. கி.பி. 1620 ல் நான்காவது தடவையாக பிலிப் தே ஒலிவேறா என்பான் தலைமையில் நிகழ்ந்தது. சங்கிலி குமாரன் குடும்பத்துடன் சிறை பிடிக்கப்பட்டு கோவைக்கு அனுப்பப்பட்டான். அங்கு அவனைச் சிரச்சேதம் செய்தார்கள். ஆரிய அரச பரம்பரை அவனது மரணத்துடன் அழிந்து போனது. உடனடியாகவே பிலிப் தே ஒலிவேறா நல்லூரைத் தன் வசிப்பிடமாக்கிக் கொண்டான். அவன் காலத்தில் நல்லூர்க்கந்தசுவாமிக்கோயில் உட்பட பல சைவக்கோயில்கள் தரைமட்டமாக்கப்பட்டன.*





சனங்களையெல்லாம் கிறிஸ்தவர்கள் ஆகுமாறு நெருக்கினர். அது செய்யாதவரை ஒறுத்தனர். அவர்கள் பொருளைக் கவர்ந்தனர். கிறிஸ்தவர் ஆகினார்க்கு பலவித உத்தியோகங்களைக் கொடுத்தனர். அவர்கள் தண்டத்திற்கஞ்சி அகத்தே சைவராகவும், புறத்தே கிறிஸ்தவராகவும் நடிப்பார் பலராயினர். கிறிஸ்த சமயப் பிரவேசம் செய்யோம் என உயிர் விடுத்தாரும் அநேகர். அந்நிய தேசம் சென்றாரும் அநேகர்.

## வலம்புரிச்சங்கு

பறங்கிகள் நல்லூர் அரண்மனைக்குள்ளிருந்த திரவியங்களைச் சோதிக்கும் போது ஒரு மிகப் பெரிய அரிய வலம்புரிச்சங்கும், அநுமாருடைய தந்தமும் அகப்பட்டன. பறங்கிகள் அச்சங்கைக் கோவை அரசனுக்கு ரூபா 6000 இற்கு விற்றார்கள். அநுமாருடைய பல்லையும் அவ்வரசன் ரூபா 4,00,000 கொடப்பதாகக் கேட்டும் பறங்கிகள் அதனைப் புத்தாது பல்லென எண்ணிக் கொடுக்காது தீயிட்டழித்தனர். யாழ்ப்பாணத்தரசர் நெடுங்காலமாக வைத்திருந்த முத்துப்பந்தர், முத்துக்குடைகளையும் எடுத்துக் கோவைக்கு அனுப்பினார்கள்.

## பறங்கித்தெரு

பின்பு பறங்கிகள் நல்லூர்க்கோட்டையையும் இடித்து அக்கற்களைக் கொண்டு பறங்கித்தெருவில் அநேக வீடுகளும் *மாளிகைகளும் கட்டினார்கள். அதன்பின்னர் கிராமங்களிலிருந்த கோயில்களையெல்லாம் தேடி இடித்து அங்கிருந்து விலையுயர்ந்த விக்கிரகங்களையும் திருஆபரணங்களையும் கொள்ளை கொண்டார்கள். பிராமணர்கள் எல்லாம் அகப்பட்ட விக்கிரகங்களைக் கிணறுகளிலும் குளங்களிலும் மறைத்துவிட்டு அந்நாட் காடாயிருந்த இடங்களுக்கு ஓடிக் குடிகொண்டு மறைந்து வாழ்ந்தார்கள்.

## பரராசசிங்கன்

பரநிருபசிங்கன் இறந்தபின்னர் அவன் மகன் பரராசசிங்கனைப் பறங்கிகள் முதன்மந்திரியாக்கினார்கள். அவன் கல்வியறிவிலும் ஒழுக்கத்திலும் விவேகத்திலும் இராச்சியோபாயத்திலும் மிகச் சிறந்தவன். அதனால் அவன் பறங்கிகளுக்கும் குடிகளுக்கும் உவப்புடையனாய் விளங்கினான். பறங்கிகளும் அவனுடைய எண்ணப்படியே பெரும்பாலும் அரசு புரிந்து வந்தார்கள். அவர்கள் அவனை மிக்க கண்ணியமாக நடத்தினார்கள். அவனும் சிலகாலத்தில் இறந்தான்.

* *இக்கோட்டைக்கற்களில் சிலசாசனங்கள் சில படிக்கல்வாகப் பறங்கித்தெருப் பழைய வீதிகளிலும் கோட்டை மதிலிலும் வைத்துக் கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றுள் பஜாநாநந்தர் வீட்டிலுள்ளது விசேடமானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழுகுமாரர்

இறக்கும்போது தனது குமாரர் எழுவரையும் ஏகபுத்திரியையும் அழைத்துத் தனது கிராமங்களைப் பிரித்துக் கொடுத்தான். அழகாண்மை வல்லவன் என்னும் மூத்த குமாரனுக்குக நல்லூரரையும் கள்ளியங்காட்டையும் கொடுத்து அவனைத் தனது அரண்மனையில் இருக்குமாறு கட்டளையிட்டான். அவ்வரண்மனையில் மேற்கு வாயில் கோபுரமாத்திரம் இன்றும் அழியாதிருக்கின்றது. இரண்டாம் குமாரனாகிய தனபாலசிங்கனுக்கு மல்லாகத்தைக் கொடுத்தான். மூன்றாம் குமாரனாகிய வெற்றிவேலாயுதனுக்கு சண்டிருப்பாயைக் கொடுத்தான். நான்காம் குமாரனாகிய விசயதெய்வேந்திரனுக்கு அராலியைக் கொடுத்தான். ஐந்தாம் குமாரனாகிய திட வீரசிங்கனுக்கு அச்சுவேலியைக் கொடுத்தான். ஆறாம் குமாரனாகிய சந்திரசேகரனுக்கு உடுப்பிட்டியைக் கொடுத்தான். ஏழாம் குமாரனாகிய ராசரத்தினத்திற்கு கச்சாயைக் கொடுத்தான். புத்திரியாகிய வேதவல்லிக்கு மாதகலைக் கொடுத்தான். மாதகல் வேளாண்டலைவனும் பரராசசிங்கன் மடப்பள்ளி அதிபனுமாயிருந்த ராசேந்திரமுதலி மகனே இவளை விவாகம் புரிந்தவன். அவன் பெயர் தனபாலமுதலி என்பர்.

## பரராசசிங்கன் சிறப்பு

பரராசசிங்கன் இறக்கும் வரையும் பறங்கிகள் அவன் பொருட்டாகக் கீரிமலையிலிருந்த திருத்தம்பலேசுவரன் கோயிலையும், நல்லூர்கந்தசுவாமிக் கோயிலையும் மாத்திரம் இடியாது விட்டிருந்தார்கள். அவன் இறந்தவுடன் அவைகளையும் இடித்தொழித்தார்கள்.[53] அவர்கள் இடிக்குமுன்னே கீரிமலையில் இருந்த விக்கிரகங்களை அக்கோயில் குருக்களான பரசுபாணிஐயர் ஒரு கிணற்றுள் இட்டு மண்ணால் தூர்த்துவிட்டு அவ்விடத்தினின்றும் நீங்கினர். இப்பிராமணோத்தமரது சந்ததியார் இன்றுமுளர். நல்லூர்க்கந்தசுவாமிக் கோயிலை இடிக்குமுன் அதன் மெய்காப்பாளனாயிருந்த சங்கிலி என்னும் சைவப் பண்டாரம் அக்கோயில் விதானங்கள் வரையப்பட்ட செப்பேடு செப்புச் சாசனங்களையும் திரு ஆபரணங்களையும் கொண்டு மட்டக்களப்பிற்கு ஓடினான். அங்கிருந்த சிலாவிக்கிர கங்கள் தாமிரவிக்கிரகங்களையெல்லாம் அக்கோயில் குருக்கள்மார் பூதவராயர் கோயிலுக்குச் சமீபத்தேயுள்ள குளத்திலே புதைத்துவிட்டு நீர்வேலிப் பகுதிக்கு ஓடினர். இவ்வளவிலே இடங்களோறும் உன்னத விசித்திர கோபுரங்களோடும், மதில்களோடும் விளங்கிய யாழ்ப்பாண நாட்டைச் சிறப்பித்து நின்றனவும் 1500 வருஷ காலமாகத் தமிழரசரும் பிரபுக்களும் பெருநிதி கொண்டு நிருமித்துப் பாதுகாத்து வந்தனவுமாகிய ஆலயங்களையெல்லாம் பறங்கிகள் கை சிறிதும் கூசாது தகர்த்துச் சித்திரமணஞ் சிறிதும் இல்லாத நாடாக்கிவிட்டார்கள்.

---

53. ஒலிவேறாவின் வெற்றியுடன் உடனடியாகவே இவ்விரு ஆலயங்களும் அடியத்திவாரத்தோடு கிளறித் தகர்க்கப்பட்டன.





## தேவாலயங்கள் தகர்ப்பு

அவர்களால் இடிபட்ட விசித்திராலங்காரமான பெரிய ஆலயங்கள் இவை மாத்திரமா! 1622 ல் திருகோணமலையிலே சுவாமிமலை மேலிருந்த மகோன்னதுமானதும் அதிவிநோத சித்திர சிற்பாலங்காரங்கள் அமைந்ததுமாகிய கோபுரத்தோடு கூடிய ஏழு மதிலும் அநேக மண்டபங்களும் உடைய சிவாலயத்தையும் தகர்த்து விட்டார்கள். 1552 ல் சீதாவாக்கையில் தினம் ஒன்றிற்கு 2000 சிற்பர் கூடி வேலை செய்தால் இருபது வருஷத்திலும் முடித்தற்கரிய மகத்தான அற்புதாலங்காரமான கருங்கல்லுத் திருப்பணி உடையதென்று பறங்கிச் சரித்திரக்காரன் தானே பாராட்டிய சிவாலயத்தையும் இடித்தொழித்தார்கள். தேவேந்திரபுரமெனக் காலிக்கப்பாலுள்ள இடத்தில் (Dondra) பொன்மயமான சிகரங்களோடு கூடி உயர்ந்து வானளாவிய கோபுரங்களையும் மூடுபாவுடைய தோரண மண்டபங்களையும் அநேக விசித்திரமான உள் மண்டபங்களையும் உடையதாய்க் கடல்மேற் செல்வோர் கண்களையும் கவர்ந்து இலங்கையை சிறப்பித்து நின்ற விஷ்ணுவாலயத்தையும் கைகூசாது இடித்தழித்து விட்டார்கள். அவர்கள் இலங்கையிலுள்ள செல்வத்தைக் கவர்ந்ததுமன்றி இலங்கையின் செயற்கை அழகெல்லாம் என்பவற்றையும், அழகைக் கண்டதிசயித்துக் கண்ணினாலானந்தங்கொள்ள அறியாத பிசாசுகள் போல் அழித்து மகிழ்ந்தார்கள். அவர்கள் இராச்சியவவாவும் பொருளாசையும் கிறிஸ்த சமயாபிமானமுமின்றி மற்று நீதியும் கருணையம் சிறிதும் இல்லாத தமிழ்க் குடிகளையும் சிங்களக் குடிகளையும் வனமிருகங்கள் போல் மதித்தரசு செய்யத் தலைப்பட்டார்கள்.

## அரச பட்டம் நீக்கல்

பறங்கிகள், இனிமேல் இராச குடும்பத்தார் தம் பெயரோடு இராசாவென்னும் பட்டப்பெயரைச் சேர்த்து வழங்கலாகாதெனத் தடுத்து முதலியெனத் தஞ்சாதிப் பட்டப்பெயரை ஒட்டியே வழங்கல் வேண்டும் எனச் சட்டம் செய்தார்கள். அவர்கள் பரராசசிங்கனுக்கு கொடுத்த முதல் மந்திரி பதத்தை அவன் இறந்த பின்னர் பிறருக்குக் கொடாது நிறுத்தி நான்கு மாதாக்கர்களை நியமித்தார்கள். இராசரத்தினமுதலி மகனாகிய சோழசிங்கச் சேனாதிராசமுதலியைக் கீழ்நாட்டிற்கு மாதாக்கனாக்கினார்கள். மேல் நாட்டிற்கு விஷயதெய்வேந்திரமுதலியை மாதாக்க னாக்கினார்கள். அழகாண்மை வல்ல முதலி மகன் ராசவல்லபமுதலியை தென்பகுதிக்கு மாதாக்கனாக்கினார்கள். வடபகுதிக்கு திடவீரசிங்கமுதலி மகன் குமாரசூரிய முதலியை மாதாக்கனாக்கினார்கள். இந்நான்கு மாதாக்கர்களும் பறங்கியரின் எண்ணப்படி குடிகளை வசமாக்கி அதிகாரம் செய்து வந்தார்கள். இக்காலத்திலே சோழ நாட்டிலே உண்டாகிய இராசா கலகத்திற்கு அஞ்சி அங்கிருந்து அநேக வேளாண் குடும்பங்கள் புறப்பட்டு வந்து வட்டுக்கோட்டையிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைதீவிலும் குடியேறின. (கார்காத்த வேளாளர் என்னும் சொல்லைக் காரைக்கால்வேளாளர் என்றும், காரைக்காட்டு வேளாளர் என்றும் அறியாத வழங்குவர்.)

## குருகுலநாயகமுதலி

பறங்கிகள் இவ்வாறாசு செய்து வருகையில் மீன் குத்தகை விற்று அரசிறையைப் பெருக்க எண்ணினார்கள். அக்குத்தகையை வாங்குவதற்கு வேளாளர் பின்னிட்டார்கள். அதுகண்டு கரையார் அநேகர் திரண்டு தம்முள்ளே ஒரவனை அதிகாரியாக்கி அவன் பெயரில் வாங்கிப் பணத்தைச் சேர்த்துக் கொடுத்தார்கள். ஆயினும் பறங்கிகள் எண்ணபடி பெருந் தொகைக்கு விற்கவில்லை. வேளாளர் அக்குத்தகையை ஏற்றிருந்தால் அவருள்ளே தனவந்தர் அநேகர் இருந்தமையால் எனக்கெனக்கென்று விலையேறியிருக்கும் என எண்ணி பறங்கிகள் வேளாள் மந்திரியிடத்து சிறிது வெறுப்புடையவராகிக் கரையாருள்ளும் ஒருவனை மந்திரியாக்கி அவனுக்குத் தொன்பிலுப்பு குருகுலநாயகமுதலி என்னும் பட்டமும் கொடுத்தார்கள். கடற்றுறை அதிகாரமுழுதும் அவனுக்கே கொடுத்தார்கள். அவன் தனக்குக் கீழ் உள்ள அதிகாரங்கள் கணக்கு வேலைகள் கண்காணி வேலைகள் எல்லாம் தன் குலத்தவருக்கே கொடுத்தான். அதகாறும் வேளாளரது அதிகாரத்தால் கீழ்ப்பட்டுக்கிடந்த அக்குலம் இவன் காரணமாகச் சிறப்படையத் தொடங்கிற்று. அவர்களும் அச்சிறப்பினால் தனது கிளைகளின்றும் பிரிந்து தாமொருகிளையாகிப் பறங்கிகளின் போக்குகளுக்கெல்லாம் இணங்க நடந்து வந்தனர்.

## முதலிப்பட்டம்

முதலி என்னும் சிறப்புப்பெயர் பண்டைகாலம் முதல் வேளாளருக்கே உரியதாயிருந்தது. பறங்கிகள் அதனைக் கரையாருக்குமாக்கினர். தமிழரசன் காலத்தில் மந்திரி இலிகிதர் முதலிய உத்தியோகங்களில் இருந்தவர்கள் பெரும்பாலும் வேளாளர் முதலிகள். அதபற்றிப் பறங்கியருக்கு ஒல்லாந்த அரசுகளிலும் அவ்வுத்தியோகம் உடையவர்கள் எல்லாம் முதலியார் எனப்பட்டனர். பின் அவ்வுத்தியோகமும் முதலி உத்தியோகம் எனப்பட்டது. வன்னியர் ஆண்ட இடத்திற்கு வன்னி என்னும் பெயர் வந்தது. அவ்வன்னியரை அடக்கி அவ்வன்னியைக் கைக்கொண்ட வேளாளர் வன்னியனார் எனப்பட்டார்கள். இதுவே வன்னியருக்கும் வன்னியனாருக்குமிடையேயுள்ள வேற்றுமை.

## ஒல்லாந்தர் வருகை

அதுநிற்க, பறங்கிகள் இவ்வாறரசு செய்து வருங் காலத்தில் ஒல்லாந்தர் என்னுமோர் ஐரோப்பிய சாதியார் இலங்கையில் வந்திறங்கி இலங்கையரசனோடு





வாதாடினர். அவ்வரசன் அநுமதியோடு கொட்டியாரத்தில் அவர்கள் ஒரு கோட்டை கட்டினார்கள். 1612 ல் அக்கோட்டையைப் பறங்கிகள் தகர்த்தனர். பறங்கிகள் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் கோட்டைகளைக் கட்டி அரசு செய்யத் தலைப்பட்டார்கள். அதகண்ட கண்டியரசன் அவர்களை அங்குநின்று மோட்டிவிட முயன்றான். பறங்கிகள் 2,13,000 பறங்கிப்படையும் 6,000 காப்பிரிப்படையும் சேர்த்துக் கொண்டு நாட்டிற் படையேற்றி, நாட்டையழித்துச் சூறையாடிப் பெண்களைக் கற்பழித்துப் பெருங் கொடுமை செய்தனர். அது கேட்டுக் கண்டியரசனாகிய இராசசிங்கன் தன் படையோடு அவர்களை எதிர்த்து அவ்வளவு சேனைகளையும் வாளுக்கிரையாக்கித் தலைகளைச் சேர்த்தடுக்குவித்து மலையாக்கித் தந்தைக்குக் காட்டினான். இதனோடு பறங்கிகளுக்குக் கேடுகாலந் தொடங்கிற்று.

1630ல் வெஸ்தர்வால்டு என்னும் ஒல்லாந்த தளபதி மட்டக்களப்புக் கோட்டையைப் பிடித்துப் பறங்கிகளை ஓட்டிவிட்டுக் கண்டியரசனோடு துணையுடன்படிக்கை செய்து கொண்டான். அவ்வருஷத்து மேமீ 13உ திருகோணமலையையுங் கவர்ந்தான். 1640 ம் பெப்ரவரி மீ 3உ ஒல்லாந்தர் பறங்கிகளையொட்டி நீர்கொழும்பையும் கைப்பற்றினர். அத்தினமே ஒரு தளபதியையனுப்பிக் காலியையும் பிடித்தனர். அவ்வருஷம் நவம்பர் மீ 18உ பறங்கிகள் நீர்கொழும்பை மீட்டனர். 1644 ல் ஒல்லாந்தர் நீர்கொழும்பை மீட்டனர். 1655ம் டிசெம்பர் 10உ யாழ்ப்பாணத்தப் பறங்கித் தேசாதிபதியாகிய அந்தோனி அமிறால் என்பவன் கொழும்புக்குச் சென்ற வழியில் அவனை ஒல்லாந்தர் பிடித்தச் சிறையிலிட்டார்கள். 1656ல் ஒல்லாந்தர் கொழும்புக் கோட்டையை ஏழுமாசம் அடைமதில் (முற்றுகை) செய்து இற்றில் பறங்கிகள் சரண்புக, அதனையும் பிடித்தார்கள். 1658ம் பெப்ரவரி 22 உ மன்னாரையும் பிடித்தார்கள். ஏப்ரல் 16உ ஊர்காவற்றுறையையும் பிடித்தார்கள். யாழ்ப்பாணக் கோட்டையையும் அரைமாசம் மதிலடைத்து வளைந்திருந்து சூன்மீ 22உ பிடித்தனர் அதனுள்ளே இருந்த 50 பறங்கிக் குருமாரை இந்தியாவுக்கு அனுப்பினர் யாழ்ப்பாணத்துக் கோட்டையை ஒல்லாந்தர் எளிதிற் பிடித்தமைக்கு அனுகூலியாயிருந்தவன் உலகுகாவலமுதலியென்பவன். அவன் சோழநாட்டில் இராசதுரோகக் குற்றத்துக்குத் தப்பியோடி யாழ்ப்பாணம் வந்து காரைதீவிலே தன் குடும்பத்தோடு வாழ்ந்தவன். பெருஞ்செல்வமும் அதிகாரமுமுடையவன். பறங்கியதிகாரிகளோடு நண்புண்டிருந்தவன். ஆயினும் அவன் அவர்களுடைய கொடுங்கோண்மை கண்டு பொறானாகி அவ்வரசை நீக்கச் சமயம் பார்த்திருந்தான். அவனை ஒல்லாந்தர் துணையாகும்படி கேட்க அவனும் உடன்பட்டான். சமயம் பார்த்து நள்ளிரவு அவன் ஒல்லாந்த தளபதியைக் கொண்டு போய்ப் நுழைக்கதவால் கோட்டையினுள்ளே பிரவேசிக்கும்படி செய்தான். அச்சமயம் பறங்கிகள் காவல்விழிப்பின் பொருட்டு ஓரிடத்தில் கூடி அடல் பாடல்களிற் பொழுது ஒழிப்பராயினர். அதுகண்டு ஒல்லாந்த சேனை முழுதுங் கோட்டைக்குள் நுழைந்தது. விடியுமுன் ஒல்லாந்தர் கொடியுயர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளிருந்த பறங்கிவீரர் அநேகரை வெட்டி அகழிகளிலிட்டனர். எஞ்சினோர் சரணடைந்தனர்.[54]

## ஒல்லாந்தவரசு

விடிந்தவுடன் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தரசு கைக்கொண்டமைக் கறிகுறியாகப் பெருவிருந்தயர்ந்து விழாக் கொண்டாடி ஊரெங்கு மதிரும்படி பீரங்கிகளைக் கொளுத்தினர். ஊரவர்களும் பறங்கியரசால் தாம் அனுபவித்த துன்பமுந் தீர்ந்ததுபோலுமெனக் களிப்படைந்தனர்.

## பால்தேயிஸ் பாதிரியார்

ஒல்லாந்த அரசினர், தாம் இராச்சியங் கைக்கொண்டமையைப் பிரசித்தஞ் செய்து, பறங்கிக்குருமாரை மறைத்து வைப்போரும் அவருக்கு இடங் கொடுத்து சகாயஞ் செய்வோரும் கொலைத்தண்டம் பெறுவரென ஆணைபோக்கினர். அது கண்டு கிராமங்களிலிருந்த குருமாரும் யாழ்ப்பாணத்தை விட்டகன்றனர். ஒல்லாந்தர் கொடியுயர்த்தியவுடன் தமது புதிய கிறிஸ்துமதத்தை (Protestant Christianity)ப் பிரசங்கித்தனர். இதனை யாழ்ப்பாணத்திலே முதன் முதற் பிரசங்கித்தவர் பால்தேயஸ் பாதிரி (Dr. Baldeus). இவர் அந்நாள் முதல் முப்பது வருஷத்தில் (1688ல்) யாழ்ப்பாண நாட்டின் 1,80,800 பேரைக் கிறிஸ்தவராக்கியதாக விஞ்ஞாபனஞ் செய்திருக்கின்றனர். அக்காலத்தில் யாழ்ப்பாண நாட்டின் 5,00,000 சனம் குடியிருந்ததென்பர். தமிழரசர் காலத்திலே ஈழம் ஒரு கோடி இலங்கை எண்கோடி ஆக இலங்கை முழுவதும் நவகோடி இராச்சியமென்பது பழமொழி. இதலுண்மைக்கு இலங்கையிலுள்ள பல்லாயிரம் ஏரிகளும் கிராமங்களும் காடுமண்டிப் பாழாய் கிடத்தலே சான்றாகும். கடைமுறை யாய்க் கண்டியிலிருந்தசியற்றிய ஸ்ரீ விக்கிரமராசசிங்கனுடைய பௌத்திரனாய்த் தஞ்சாவூர் மானம்பூச்சாவடியில் ஆங்கிலவரால் பாதுகாப்பிலிருக்கும் அழகிய மணவாள சிங்களராசா அவர்களும் இலங்கை நவகோடிராச்சியமென்னும் பழமொழி கூறக்கேட்டாம். (மகாநவமிசச்சாவடி மானம்பூச்சாவடி என வழங்குகின்றது)

## பூதத்தம்பி

அது நிற்க, ஒல்லாந்தர் அரசு செய்யத் தொடங்கிய அரசிறைப்பகுதிக்கு

54. *1658 ல் ஒல்லாந்தரின்படை யாழ்ப்பாணத்திலிருந்த போர்த்துக்கேயரின் கோட்டையை முற்றுகையிட்டது. கொமுமறி வன்ஹுஸ்ன்ஸ் (வன்கோயன்) இந்த முற்றுகைக்குத் தலைமை வகித்தான். 1658 மார்ச் 16 ஆம் திகதியிலிரந்து ஜுன் 21 ஆந் திகதிவரை ஒல்லாந்தரின் முற்றுகை தொடர்ந்தது. ஜுன் 21 ல் போர்த்தக்கேயர் சரணடைந்தனர்.*





அதிகாரியாக வேளாண் தலைவனாகிய பூதத்தம்பிமுதலியையும், நிருபப்பகுதிக்கு அதிகாரியாகக் கரையார் தலைவன் (குருகுலத்தலைவன்) ஆகிய மனுவல் அந்திராசியை நியமித்து அவனுக்குப் பறங்கிக்காரர்போல முதலிப்பட்டமளித்தார்கள். இருவரையும் ஒல்லாந்தர் மந்திரியராகப் பாவித்து அவர்கள் வினாவியே அரசு செய்து வந்தார்கள். தமது கிறிஸ்து சமயத்தைப் பரவச் செய்வதும் கறுவாய்ப் பட்டை முதலிய பாபாரவஸ்துகளை விருத்தி செய்வதும் போக்குவரத்துக்கேற்ற சாதனங்களைச் செய்வதுமே அவர்களுடைய அரசுநெறியாகவிருந்தது. அவர்கள் உலகுகாவலமுதலி செய்த உபகாரத்துக்குப் பெருந்திரவியமும் இராசவாயில்முதலி யென்றும் உத்தியோகமும் கொடுத்தார்கள். நாகபட்டினத்திலிருந்து வந்து ஊர்காவற் றுறைத் தலைமை பூண்டிருந்த குருகுலத்தலைவனாகிய புண்ணியாண்டான் செய்த உதவிக்காகக் கொழும்புத்துறையில் ஒரு கிராமத்தைக் கொடுத்தார்கள்.

## பூதத்தம்பி விருந்து

பூதத்தம்பிமுதலியும் அந்திராசிமுதலியும் பெருநட்புடையராய்த் தத்தம்பகுதி அதிகாரத்தைச் செய்து இருக்கும்போது, ஒருநாள் பூதத்தம்பி தனத மாளிகையில் நடந்த விருந்துக்கு அந்திராசியையும் அழைத்தான். அந்திராசி செல்லுதலும் அவனைப் பூதத்தம்பி உபசரித்துத் தனிமையான ஓரறையிலே போசனம் படைப்பித்து அவனுன்னும் வரையும் பக்கத்தில் நின்று பணி செய்யுமாறு இரண்டு ஏவலாளரை வைத்து, மற்ற விருந்தினரை உபசரிக்குமாறு சென்றான். பூத்ததம்பி மனைவி பந்திமேல் விசாரணை செய்து கொண்டு நிற்கும்போது அந்திராசி இருந்துண்ணும் அறை சென்று பரிசாரகரையழைத்து வேண்டிய குடிவகைகளைக் குறைவின்றிப் படையுங்களெனத் தூண்டிப் போனான். அந்திராசி பிறர் மனைவியரைப் பெற்தாயென மதிக்கும் விரதமில்லாதவனாதலின் அவள் முகத்தழகைக் கண்டான். இனிய குரலழகையும் கேட்டான். அவன் நடையழகையும் நோக்கினான். அவன் நோக்கோடு உள்ளமும் அவள்பாற் செல்லப் பெற்றான். தணியாப்பெருங்காதல் மூளப்பெற்றான். அவன் அருந்திய விருந்தெல்லாம் அவனுக்கு வேம்பாயிற்று. பரிசாரகர் வினாவுக்கு அவன் யாதும் கூறாது மரமாயிருந்தான். பலகாற் கேட்டபின்னர் அவன் உணர்வு வந்து போதுமெனக்கூறி எழுந்து வாய் சுத்தி செய்து கொண்டு போய் ஆசாரமண்டபத்திலிருந்து, பூதத்தம்பியோடு பேசிக் கருத்தொருபாலிருக்கத் தாம்பூலந் தரித்து விடைபெற்று வீட்டுக்கு மீண்டான்.

அவன் வீடு போய்ச் சேர்ந்தவுடன, தங்கக்காசுகளும், வாசனைத்திரவியமும், ஒரு பட்டாடையும் ஒரு சந்தனப் பெட்டியிலிட்டு, “இதனைக் கொண்டுபோய் பூதத்தம்பி மனைவி அளகவல்லி கையில் யாருமறியாவகை கொடுத்து, யான் வந்து கொண்டாடுதற்கு ஏற்ற காலம் யாது?” என்று கேட்டுவாவென ஒரு தூதனிடம் கொடுத்து அவனை அனுப்பினான். அவன் சென்று பூதத்தம்பி இல்லாத சமயம் பார்த்து அவள் கையில் கொடுத்துத் தன் தூதைச் சொன்னான். அஃது அவள் செவியில் உருகிய ஈயநீர் போல் பாய்ந்தது. அவள் கொடுஞ்சினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு ஒரு செருப்பை எடுத்து அப்பெட்டிமீது வைத்துக் கட்டுவித்து இதனைக் கொண்டுபோய் அப்பாதகன் கையிற் கொடுத்திடுகவென்று அத்தூதனையும் கண்டித்து அனுப்பினாள். தூதன் நடந்ததைச் சொல்லிப் பெட்டியையும் கொடுத்தான். அந்திராசி உலகமெல்லாமென்னடி வணங்க அளகவல்லிக்கு மாத்திரம் மதிப்பில்லாதவனானேன், என் தூதனும் என்னை மதிக்க மாட்டானே" என வெட்கமும் துக்கமும் மானமும் தூண்ட ஆறாக் கோபமுடையனாகி, இவள் செருக்கை அடக்குவேன் எனச் சபதமிட்டுச் சமயம் பார்த்திருந்தான். அளகவல்லி அச்செய்தியை உடனே தன் நாயகனுக்குச் சொல்லின் பெரும்பகை விளையுமென்றஞ்சிச் சாந்தமான காலம் பார்த்தறிவிக்க எண்ணியிருந்தாள்.

## அந்திராசியின் சதி

இரண்டு மூன்று தினத்தில் அந்திராசி தன் பூதத்தம்பியிடஞ் சென்று ஒரு வெள்ளைக் காகிதத்தை காட்டிச், 'கச்சாய்த்துறைக்குச் சில மரங்களுக்குக் கட்டளையனுப்ப வேண்டும், மரம் இத்தனையென்று கணக்குப்பார்த்து உடன் வாசகமெழுதிக் கொள்ளுவேன். பின்பு நமக்குச் சாவகசமாயிருக்காது, இதிற் கையெழுத்திட்டுத் தாரும்' என்றான். பூதத்தம்பி அதனைச் சாதகமென்றெண்ணிக் கையெழுத்திட்டுக் கொடுத்தான். அந்திராசி தன் எண்ணம் முடிந்ததென்று மகிழ்ந்துகொண்டு போய் மாறுகரலிகிகத்தில் உடல் வாசகத்தைப் பறங்கித்தலைவனுக்கு ஒல்லாந்தரை வெல்லத் துணைபுரிவதாகவெழுதி ஒரு தூதனிடமனுப்பிய பாவனை செய்து, அதனைத்தான் ஐயுற்றுப் பிடித்தான் போல நடித்து ஒல்லாந்த தேசாதிபதிக்குக் காட்டினான். தேசாதிபதி அதனுண்மையை ஆராய்ந்து பொய்யெனக்கண்டு அதனைத் தள்ளினான். அந்திராசி இதனுண்மையை நானறிவேன் இது செய்த பூதத்தம்பியைத் தப்பவிட்டால் ஒல்லாந்தவரசுக்குப் பழுதுண்டாம். என் உயிரும் தப்பாதென்றான். அதற்குத் தேசாதிபதியிணங்கிக் கொலைத்தீர்ப்பிட்டான். ஊர்காவற்றுறையிலே கடற்கோட்டை கட்டுவித்தக் கொண்டிருந்த தேசாதிபதி தம்பி பூதத்தம்பிக்குற்றநட்பினாதலின். அவனறியின் இத்தீர்ப்பு நிறைவேறாதென எண்ணி, அந்திராசி காலாதாமதஞ் செய்யாது அவ்விரவிற்றானே அநியாயமாகப் பூதத்தம்பியைக் கொல்லுவித்தான். உடனே அளகவல்லியுமுயிர் விட்டாள். பூதத்தம்பி மைத்துனனாகிய கைலாயவன்னியன் அதனை அறிந்து கொழும்புக்குச் சென்று பெரிய தேசாதிபதிக்கு நடந்தவைகளைக் கூறினான். உடனே அவன் யாழ்ப்பாணத் தேசாதிபதியையும் அந்திராசியையும் பிடித்து வருமாறு சேவகரை அனுப்ப, அவர்கள் தேசாதிபதியைக் கப்பல் மார்க்கமாகவும் அந்திராசியைக் கரைமார்க்கமாகவும் கொண்டு சென்றார்கள். செல்லும் போது தேசாதிபதி கடலிற் பாய்ந்துயிர்விட்டான். அந்திராசி பண்டாரத்தார் தோப்பென முசலிக்குச் சமீபத்திலுள்ள காட்டில் யாயைடித் தரைத்துக் கொல்லப்பட்டான்.





## பால்டியஸ் கூற்று

இவ்விஷயத்தைப் பறங்கிச் சரித்திரகாராயினும் ஒல்லாந்த சரித்திக்காரராயினும் விவரமாக எழுதினாரில்லை. ஒல்லாந்த பாதிரியாகிய பால்டியஸ் என்பவர், ஒரிராச துரோகச் சூழ்ச்சி தமக்கறிவிக்கப்பட்டதென்றும், அச்சூழ்ச்சியிலே மன்னரா னொருவனும் பூதத்தம்பியும் ஐந்து பறங்கிகளும் ஒரு குருவுஞ் சேர்ந்தார்கள் என்றும், முந்திய எழுவரும் சிலுவையிற் கட்டிக் கண்டத்தைக் கொத்தியும், நெஞ்சைப் பிளந்து ஈரலைப் பிடுங்கி அவர்கள் முகத்தில் எறிந்துங் கொல்லப்பட்டார்களென்றும், அச்சூழ்ச்சியிற் சேர்ந்த இன்னும் பதினொருவர் அடித்துதைத்துத் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டாரென்றும், அவ்வாறு கொல்லப்பட்ட பிணங்களெல்லாம் சிலுவையி னின்றும் தூக்குமரத்தினின்றும் நீக்கிக் கழுகுகளும் பருந்துகளும் விருந்துகொள்ள மரங்களிலே தூக்கப்பட்டனரென்றும், இராசதுரோகச் சூழ்ச்சியைக் கண்டுபிடித்தவன் மனுவல் அந்திராதி முதலியென்றுங் கூறுகின்றார்.

## சரித்திர வேறுபாடு

இதனால் பாதிரியார் எழுதியதும் ஒல்லாந்தர் இத்தண்டம் புரிந்ததும் அந்திராசியினுடைய வாய்மொழியை நம்பியே என்பதும், இத்தனை உயிர் கொலையும் அந்திராசி தான் சபதமுடித்தற்குச் செய்த வஞ்சனையால் வந்ததென்பதும், கன்னபரம்பரையாக வருங் கதையே உண்மையினையுடைய தென்பதாம். பூதத்தம்பிநாடகஞ்[55] செய்த மாதோட்டத்துச் சுவான்கொஸ்தான் மகன் தாவீது என்பவன் இச்சம்பவத்துக்குச் சமீபகாலத்தவனாதலால் அவனுண்மையா ராய்ந்தே பாடியிருத்தல் வேண்டுமென்பதும் பாடியவன் தானுங் கிறிஸ்தவனாதலின் கிறிஸ்தவனாகிய அந்திராசிமேல் அபவாதஞ் சுமத்த மனம்பொருந்தானென்பதும், உண்மையொரு பக்கமும் பழியொருபக்கமுமாக அரியசம்பவம் எக்காலத்தும் எவ்விடத்தும் நிகழ்வது இயல்பேயென்பதம் துணியப்படும். மேற்சொல்லப்பட்ட பால்டியஸ் பாதிரி யெழுதிய சித்திரைவதையாகிய குரூரதண்டத்தை வாசிக்க நெஞ்சம் திடுக்கிடுக்கின்றது மனம் அருகி வருகின்றது. கண்டியரசனாகிய ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் தனது ராச்சியத்தைப் பிடித்துக்கொடுக்க வஞ்சச் சூழ்ச்சி செய்த ஏலேலபிள்ளையினது மனைவிமக்களுக்குச் செய்த தண்டத்தைக் குரூர தண்டமெனக் கூறி அருவருப்போர் பால்டியஸ் பாதிரியாலெழுதப்பட்ட ஒல்லாந்தர் செய்தியை நோக்குவராயின், அதனிலுங் கொடிய பயங்கரமான அநாகரிகச்செயல் வேறில்லையெனக் கண்டடங்குவர். இராசதுரோகத்திலும் பெரிய குற்றமும்

*55. ஒல்லாந்தருக்கெதிரான சதியில் நல்லூர் முதலியார் பூதத்தம்பி பங்குபற்றியிருக்கிறார். ஒல்லாந்த அந்நியரை இந்த மண்ணிலிருந்து துரத்தவதற்கான சதியில் பூதத்தம்பியின் பாத்திரம், சுதந்திரப்புரட்சியாளருக் குரியதாக இருந்துள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குரிய தண்டத்திலும் குரூரதண்டமும் இல்லை. இவை எல்லாத் தேசத்தாருக்கும் எல்லா இராச்சியத்தாருக்கும் உடன்பாடேயாம்.

## சோதிநாதன்

அதுநிற்க, பூதத்தம்பிக்கு ஏகபுத்திரனே இருந்தான். அவன் பெயர் சோதிநாதன். அவன் மகன் பூதனாராய்ச்சி, பூதத்தம்பியினுடைய முன்னோரிடத்தில் புவனேகவாகு வினுடைய பதக்கமொன்றிருந்தது. அப்பதக்கம் அச்சந்ததியாருக்குப் பிதிரார்ச்சித மாக வந்து பூதனாராச்சியார் காலத்தில் அவரால் கந்தசுவாமி கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது. அப்பதக்கம் இன்றும் நல்லூர்க்கந்தசுவாமி கோவிலிலிருக் கின்றது. அதில் புவனேகவாகுவென்றும் பெயர் வரையப்பட்டிருக்கின்றது. பூதத்தம்பியிருந்தவிடம் பூதனாராயச்சிவளவென நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குக் கீழ்ப்பாலிருக்கின்றது.

## உலகலாவிய முதலி

பூதத்தம்பியும் அந்திராசியும் இவ்வாறு இறந்தபின் உலகுகாவலமுதலியை ஒல்லாந்தவரசினர் மந்திரியாக்கினர். அவனுக்கு மரபாலுயர்ந்த முதலியினது சகோதரியை விவாகம் செய்து வைத்தனர். மரபாலுயர்ந்தமுதலி பறங்கியரசனிடத்துத் தனாதிகாரியாயிருந்தவன். ஒல்லாந்தர் அந்த அதிகாரத்தை அவனுக்குக் கொடுத்தனர். உலகுகாவலமுதலி சிலகாலத்தில் இறந்தான். ஒல்லாந்தவரசினர் அவனிடத்து மிக்க மதிப்புடையரராயிருந்தமையால் அவனுடைய அதிகாரத்தையும் அவனுக்குரிய வரிசைகளையும் அவன் மகன் இராசதுங்கமுதலிக்குக் கொடுத்தனர். அவன் தன் மாதுலனாகிய மரபாலுயர்ந்த முதலியினது ஏழுபுத்திரிகளுள்ளே ஒருத்தியை விவாகஞ் செய்தான். அவ்விவாகத்தை ஒல்லாந்த தேசாதிபதியும் பிரதானிகளும் சமுகமாயிருந்து சிறப்போடு நடாத்தினர்.

## சோனகர்

இக்காலத்தில் காயற்பட்டினதகிலிருந்து சில சோனகர் வந்து மிரிசிவில் என்னுமிடத்திற் குடியேறினார்கள். அவர்கள் குடி கொண்ட இடம் உசன் என்னும் சோனகத் தலைவனுக்கு உரியதாகினமையால் உசன் என வழங்குகின்றது. அச்சோனகர் அங்குநின்றுமகன்று சோனகன்புலவிலே சிறஜிது காலம் வைகி, அதுவும் வாய்ப்பாகாமையால் இப்போது நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிருக்குமிடத்திற்கு மேற்பாகத்திலே குடிகொண்டார்கள். அங்கே ஒரு பள்ளிவாயிலும் கட்டினார்கள். அப்போது முன் இடிபட்ட கந்தசுவாமி கோயிலை மீளவும் கட்டுதற்குத் தமிழர் முயன்று சோனகரை அவ்வித்தினின்றும் நீக்கித் தருமாறு ஒல்லாந்த தேசாதிபதிக்கு விண்ணப்பஞ் செய்தார்கள். ஒல்லாந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசாதிபதி அதற்கநுகூலம் செய்வதாகக் கூறியும் செய்யாது காலம் போக்கினான். அதுகண்டு தமிழர் சோனகரை அவ்விடத்தை விடும்படி கேட்டும், இரந்தும் பார்த்தார்கள். முடிவில் அந்நிலத்திற்குப் பெருவிலை தருவதாயும் கேட்டார்கள். சோனகர் அதற்கும் இசையாமைகண்டு தமிழர் ஒரு பன்றியைக் கொன்று அவர்களுக்கெல்லாம் பொதுவாகவிருந்த கிணற்றிலிட்டார்கள். அதுகண்டு சோனகர் தங்கள் நிலத்தை விற்றுவிட்டு நாவாய்த்துறை (நாவாந்துறை) க்கக் கிழக்கே உள்ள நிலத்தை வாங்கிக்கொண"டு அங்கே குடியேறினார்கள். அது சோனக தெருவென வழங்குகின்றது. சோனகர் அக்காலமுதல் பெரும்பாலும் வியாபாரத்தையே தமது தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுள்ளே முயற்சியின்றி இருப்பவர்களைக் காண்பதரிது. அவர்கள் சமயாபிமானமும் ஒற்றுமையும் பெரிதுமுடையவர்கள்.

## ஒல்லாந்த தேசாதிபதிகள்

ஒல்லாந்த தேசாதிபதிகளிற் சிலர் மாத்திரம் சற்றே நீதியாய் அரசு புரிந்து வந்தார். அவர்களுள் (Rump) "இரம்பு" என்பவன் சாதுரியமும் காருண்ணியமும் உடையவனாய் நீதி செலுத்தினான். அப்பால் 1739ல் தேசாதிபதியாய் வந்த (Van Imhoff) "வான் இம்மாவ்" என்பவன் செய்த துரைத்தனமும் சற்றே வியக்கத்தக்கது. அச்சியந்திரசாலை ஒன்று ஸ்தாபித்துச் சில புத்தகங்களை அச்சிட்டவனும் இரேகுச்சங்கத்தை ஏற்படுத்தியவனுமிவனே. மற்றொருவன் 1765ல் தேசாதிபதியான (Balk) "வால்க்" என்பவன். அவன் காப்பி, ஏலம், மிளகுச் செடிகளைப் பிறநாட்டிலிருந்து கொணர்ந்து நாட்டிக் கிருஷிகத்தை விருத்தி செய்தான். கறுவாப்பட்டையையும் அமிதமாய்ச் செய்கை பண்ணுவித்தான்.

இனி மற்றைய தேசாதிபதிகளோ மிகக் கொடியர். சிலர் பரிதானப்பிரியர். வேறு சிலர் அடிமையாட்களை விற்றும் தனவான்களுக்கு "முதலியார்" "தொன்" என்னும் பட்டப்பெயர்களை விற்றும் பெரும் பொருளீட்டினார். இன்னும் (Versluys) "வேர்சுலை" என்னுமொரு தேசாதிபதி. "பொருளவாவுடையார்க்குப் புன்மலமுமினிது" என்றபடி பொருட்பிராந்தியினால் அரிசி விலையைக் கண்டமட்டிலுமுயர்த்திப் பிறநாடுகளினின்றும் எளிய விலையில் அரிசி தருவித்துத் தானே வைத்துக் கொண்டு விற்றுப் பெரும் பொருளீட்டினான். பஞ்சத்தை நிவிர்த்தி செய்யவேண்டியவர் அரசராகவும், இவன் பஞ்சத்தை வலிந்தழைத்து நுழையவிட்டது குடிகள் மேல்வைத்த காருண்ணியம்தானே. இவர்கள் தற்காலத் துள்ளவாறு அக்காலத்திலும் கிராமங்கள் தோறும் கிராமாதிகாரிகளையும், ஊர்கள்தோறும் நீதிபதி முதலியோரையும் நியமித்து அரசு செய்து வந்தாராயினும், அவர்கள் செலுத்திய நீதி சுருக்கிக் கூறின் அநீதியே.

## சமயமாற்றம்

இனி மார்க்க விஷயத்தில் யாது செய்தார்கள்! அவர்கள் தொடக்கத்தில் பறங்கிக்காரர் போல் அச்சுறுத்தியாயினும் மதஸ்தாபனம் செய்யாது, குடிகளாயுள்ளவர் வலிந்துபோய்ச் சேர்ந்து கிறிஸ்தவராதற்கேதுவான கொலைத் தண்டனையும் பிற துன்பங்களுமாகிய தீய உபாயங்களால் தம்மதத்தைப் பரவச் செய்தார்கள். இவர்கள் வைசேடியக்கிறிஸ்தம் எனத்தகும் "புரோடெஸ்டாண்டு" கிறிஸ்து மதத்தார். பறங்கிகள் சாதாரண கிறிஸ்தம் எனத்தகும் 'கத்தோலிக்க' கிறிஸ்தமதத்தார். அம்மதத்திற்கும் இம்மதத்திற்கும் பாம்புக்கும் கருடனுக்குமுள்ள பொருத்தம். ஒல்லாந்தருடைய முதல் நோக்கம், கத்தோலிக்க மதத்தைக் களைந்துவிட்டு அம்மதத்திற்குப் பதிலாகத் தம்மதமாகிய புரோடெஸ்டாண்டு மதத்தை நாட்டவேண்டுமென்பதாகும்.

அதுநிற்க, பின்னைநாட்களில் வேறுமோருபாயஞ் செய்தார். அவர்கள் ஊர்கள்தோறும் பாடசாலைகளை ஸ்தாபித்து அப்பாடசாலைகளுக்கே பிள்ளைகள் யாவரும் தப்பாது அனுப்புதல் வேண்டும், அங்ஙனம் தவறுவார்க்கு அபராதமிடப்படும் என்று இராசாங்கத்தில் உத்தியோகமும், வரிக்கு நிலங்களும் பெற விரும்புவோர் வைசேடிய கிறிஸ்த குருமாரிடம் ஞானஸ்தானம் என்னும் சுத்தோதக புரோஷணம் பெற்ற கிறிஸ்தவராக இருத்தல் வேண்டும் என்றும் விளம்பரம் செய்தார். இவை காரணமாக சைவராக இருந்தவரிலும் பௌத்தராயிருந்தவரிலும் சாதியால் உயர்ந்தோரும் தாழ்ந்தோருமாகிய அனைவரும் பறங்கிக்கால காலத்து கத்தோலிக்க பரம்பரை உள்ளோரைப் பலரும் அம்மதம் தழுவினர். இவர்கள் மாத்திரமா? இல்லை. யாழ்ப்பாணத்திலுள்ள பிராமணரிலும் அன்றோ அநேகர் தஞ்சைசமய வாஞ்சனையாகிய விபூதி உருத்திராஷ முதலியவைகளைத் துறந்து அம்மதப்பட்டார். அற்றேல், அந்நாளில் யாவரோ அம்மதப்படாதவர். இவ்வாற்றாலன்றோ 1688 ல் பால்டியஸ் என்னும் பாதிரி, யாழ்ப்பாண நாட்டில் மாத்திரம் கிறிஸ்தவராயினோர் தொகை (1,80,000) இலஷந்தெண்பதினாயிரம் எனக் கொழும்பில் அக்காலத்திலிருந்து கொடுங்கோலாச்சிய ஒல்லாந்த தேசாதிபதிக்கு அறிக்கைப்பத்திரம் அனுப்பினார். அவர்களெள்லோரும் 'கூலிக்குமார்யறைந்தார்' போல் சீவனோபாயத்தினிமித்தம் அவ்வேடம் பூண்டாரன்றி மெய்ம்மையார் லங்ஙனஞ் சேர்ந்தோரல்லர்.

## ஆபரணவரி

ஒல்லாந்தர் தமது அரசுக்கு இறையைப் பெருக்குமாறு பலவகைச் சூழ்ச்சிகளும் செய்தனர். அடிமையாட்களுக்கு யாழ்ப்பாணத்தில் அதிக விலைபெறலாமெனக் கண்டு, சோழநாடு முதலியவிடங்களிலிருந்து ஏழைச்சனங்களை மரக்கலங்களிலேற்றி வந்து விற்றனர். உயர்ந்த வஸ்திரங்கள் ஆபரணங்களுக்கு வரி விதித்தார்கள். புதிதாகப் பொன்னகை அணிபவர்கள்





அரசுக்கு ஒரு பகுதி கொடுத்தணிய வேண்டுமெனச் சட்டஞ் செய்தார்கள். அதனால் அநேகர் பொன்னகைகளை விடுத்து வெள்ளி நகைகளை அணிவராயினர். பலர் காது துளைக்கும் துவாரஞ் செய்துவிட்டுப் பூஷணமின்றித் திரிவராயினர். பெண்களிற் பெரும்பாலர் கீழக்காதன்றி மேற்காதிலே கோப்பு, முருகு, கன்னப்பூத் துவாரங்களைக் குத்தாது விடுத்தார்கள். மூக்குத்தி நத்து முதலிய துவாரங்களையும் குத்தாது விட்டார்கள். சனங்கள், வரிக்கஞ்சி விலையுயர்ந்த வஸ்திரங்களைத் தரியாது விடுத்தார்கள். அதனால் யாழ்ப்பாணத்தில் நெடுங்காலம் நல்ல வஸ்திராபரணங்கள் அறியாப் பொருட்கள் ஆகின. நாகரிகமும் குடிபோவதாயிற்று. வரி ஒரு பக்கம் வருத்துவதாயிற்று. கிறிஸ்தவரல்லாதார் தலைச்சீராத் தரித்தலாகாது. அதனால் சைவசமயிகளும் சிலுவைவடிவத் தலைச்சீராவே தரிக்க வேண்டியவர்களாயினர். வயல்களிலே விளைந்த நெல்லைக் களத்தில் குவித்து அரசினர் பகுதி கொள்ள வரும்வரைக்கும் அக்காலத்துக் குடிகள் அக்குவியல்கள் மேல் குறியிட்டு வைக்க வேண்டியவர்களாயினர். அரசினர் பதினெட்டு இறைசால் பெற்றுக்கொண்டு முதலிப்பட்டத்தை தகாதவர்களுக்கு கொடுத்தார்கள்.

பல்லக்கு உடையவர்கள் எல்லாம் பெரு வரி கொடுத்து வந்தார்கள். அது கொடுக்கத் தவறினோரை அரசினர் கட்டிவைத்து அடித்து வந்தார்கள். அதுகண்டு அநேகர் தம் பல்லக்கு வரிசையை விட்டார்கள். வாழையிலையில் போசனம் பண்ணல் ஆகாது என்றும் தாம் விற்கும் சீனக்கலம், மட்கலம் வட்டில் வழியேயே உண்ணல் வேண்டும் என்று அரசினர் கட்டளையிட்டு அக்கலங்களாலும் பெரும் பொருள் ஈட்டினர். அதனால் குடிகள் அமாவாசை முதலிய தினங்களிலே இரகசியமாய் இலையில் போசனம் செய்து அவ்வெச்சில் இலைகளைக் தம் வீட்டுப் புறக் கூரையிலே செருகி மறைத்து வைப்பார்கள். பிராமணர்கள் தமது பூணூலை மடியில் மறைத்துக் கொண்டு திரிவார்கள். கோயில்களிலே பறை மேளமும் சேமக்கலமும் டமார்மும் சங்குமே வாத்தியங்களாயின. இப்படியே ஒல்லாந்த அரசினால் சமய சுவாதீனமும் சனங்களுக்கு இல்லாது போயிற்று.

## கோபாலச் செட்டியார்

இவ்வாறு ஒல்லாந்தர் அரசு செய்யும் காலத்திலே கோபாலச் செட்டியார் என்னும் ஓர் அகம்படியார் தமது மனைவியோடு சோழநாட்டினின்றும் வந்தார். அவர் ஒல்லாந்த அரசினரிடத்தில் துவிபாஷிகராயிருந்த கொச்சிக் கணேசையர் என்பவரை அடுத்து அவருடைய சேவகத்தில் இருந்தார். கணேசையர் கோபாலச் செட்டியாரை காரணமின்றி ஒரு நாள் கண்டித்தபோது செட்டியார் அவர் சேவகத்தினின்றும் விலகி சம்பார வியாபாரம் செய்து வந்தனர். அவர் யாழ்ப்பாணம் வந்த நாள் முதலாக ஒரு விநாயகரை ஒரு வேம்பின் கீழ் வைத்துப் பூசித்து வந்தனர். அவ்விநாயகர் கோவில் இப்போது வேம்படிப் பிள்ளையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் எனப்படுகிறது. அவர் ஒல்லாந்த தேசாதிபதி வீட்டிற்கு சம்பாரம் கொடுக்கும் வழக்கம் உடையவராயினர். தேசாதிபதி பத்தினியார் கோபாலச் செட்டியாருடைய நேர்மை, விசுவாசம், நற்குணம், நல்லொழுக்க முதலியவை களைக் கண்டு அவரிடத்தில் மிக்க அபிமானம் உடையவராய் இருந்தார். அவர் தமக்கு வேண்டும் எந்த விலையுயர்ந்த பொருளையும் கோபாலச் செட்டியார் மூலமாகவே வாங்குவார். அதனால் கோபாலச் செட்டியாருக்கு மதிப்பு ஊரிலும் தேசாதிபதி வீட்டிலும் பெரிதாயிற்று. கோட்டையிலுள்ளவர் களுக்கும் சேனைகளுக்கும் சம்பாரம், வஸ்திரம், உணவுப்பண்டங்கள் முதலியனவெல்லாம் கோபாலச்செட்டியாரே கொடுத்து வந்தார். அதனால் அவருக்கு வருவாய் அதிகப்பட்டது.

## கூழங்கைத் தம்பிரான்

இப்படியிருக்கையில் கூழங்கைத் தம்பிரான் எனபவர் யாழ்ப்பாணத்தில் வந்து கோபாலச் செட்டியாருக்கு நட்புடையதாயிருந்தார். அத்தம்பிரான் திருப்பனந்தாள் மடத்திலிருந்த போது, அம்மடாதிபதி தம்முடைய கண்டிகை களவு போயிடும் காரணமாகச் சந்தேகம் கொண்டு அவரைச் சத்தியம் செய்யுமாறு கேட்க அவர் உருக்கிய நெய்யிலே கையிடச் சொன்னாலும் செய்வேன்ன எனக்கூறி அவ்வாறு கூசாது கையிட்டு தன் சத்தியத்தை நாட்டி அதனாற் கைகூழையாகப் பெற்றவர். அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும், சித்தாந்த சாஸ்திரங்களிலும் மிக்க பாண்டித்தியம் உடையவர். சிவபக்தியும் சிவானுபூதியும் உடையவர்.

## வைத்திலிங்கச் செட்டியார்

கோபாலச் செட்டியாருக்கு ஒரு புத்திரன் பிறந்தான். அதுகேட்டுக் கூழங்கைத் தம்பிரான் கோபாலச் செட்டியாரிடம் சென்று, உன் புத்திரனைத் தூக்கிக் கொண்டு வா என்றார். செட்டியார் மகிழந்து அப்புத்திரனைத் தூக்கிக் கொண்ட வந்து அவருக்குக் காட்ட, அவர் மிக மகிழ்வோடு அசீர்வதித்து, 'இப்புத்திரன் பெரும் கருமங்கள் முடிக்கப் பிறந்திருக்கிறான். அவனைச் செவ்வே பாதகாத்திடக்கடவாய். அவன் பெயர் வைத்திலிங்கன்' என்று கூறிப் போயினர். அப்புத்திரன் மிக்க அழகும் திடகாத்திரமும் நற்குண நற்செய்கைகளும் உடையவனாக வளர்ந்து பன்னிரண்டு வயதை அடைந்தான். ஒருநாள் செட்டியார் வைத்திலிங்கனை கடையில் வைத்துவிட்டுப் போசனம் செய்யப் போயினர். அப்போது தேசாதிபதி மனைவியார் கோபாலச் செட்டியார் கடைக்கு முன்னே தனது குதிரை வண்டியை நிறுத்தி செட்டியார் எங்கே என, வைத்திலிங்கன் எழுந்து போய் ஒரு மாதுளங்கனியை நீட்டி 'இதனைத் கிருபை கூர்ந்து அங்கீகரித்தல் வேண்டும்' என்றான். அதற்கிடையில் செட்டியாரும் போசனம் முடித்துக்கொண்டு மீண்டனர். தேசாதிபதி தேவி, இச்சிறுவன் யாரென, செட்டியார்





சிறியேன் புத்திரன் என்றார். தேவி மகிழ்ந்து அச்சிறுவனை தனது வண்டியில் ஏற்றிக் கொண்டு தமது வீட்டிற்குச் சென்றார். அவருக்குப் புத்திரர் இல்லாமையால் அன்று முதல் இச்சிறுவனை தனது புத்திரனாக பாவித்து நடாத்தி வந்தனர். போசன நேரத்திற்கு மாத்திரம் அவனை அவன் வீட்டிற்கு அனுப்பி, மற்றக் காலம் எல்லாம் தமது வீட்டில் வைத்து அவர் தாமே ஒல்லாந்த பாஷையில் பயிற்சி தந்தனர். பதினெட்டு வயதுவரை வைத்திலிங்கன் தேசாதிபதி வீட்டில் இருந்தான். ஒரு நாள் தேசாதிபதி முத்துச்சலாகை குத்தகை விற்கப் போகிறார் எனக் கேள்விப்பட்ட வைத்திலிங்கன், தன்னை வளர்த்த தாயிடம் சென்று 'முத்துக் குத்தகை வாங்கப் விருப்புடையேன்' அதனை வாங்குதற்கு உதவி புரிய வேண்டும் அம்மா' என்றான். தேவி முகமலர்ந்து அவனை நோக்கி, 'அப்பா, நீ குத்தகையேற்று நடத்துவாயா' என்ன, அவன், 'அம்மாவினுடைய தயை எனக்கிருக்கும்போது நடத்த இயலாதோ?' என்றான். அதுகேட்ட தேவி ஒரு கடிதம் வரைந்து அவனிடம் கொடுத்து, 'இதனைக் கொண்டு போய் கச்சேரியில் உனது வளர்த்த தந்தையாகிய தேசாதிபதியிடம் கொடு' என்றார். அதனை வைத்தலிங்கன் வணக்கத்தோடு வாங்கிக் கொண்டு போய் வணங்கிநின்று தேசாதிபதியிடம் கொடுத்து பக்கத்தில் நின்றான். அதனை தேசாதிபதி திறந்து வாசித்து முகமலாச்சியோடு அவனை நோக்கி, 'குத்தகை வாங்கப் போகிறாயா' என்ன, அவனும் ஆம் ஐயா, என்றான். பிரதான மந்திரியாகிய கொச்சிக் கணேசையய்ர் அவனை நோக்கி, 'என்னடா நீயும் குத்தகைக்கு தக்கவனாகி விட்டாயோ' என்றார். தேசாதிபதி கணேசைய்யர் கேட்டதை அவதானித்து மனதிலே கோபமுடையவனாகி ஐயரை நோக்கி, 'முத்துக்குளி குத்தகையை வைத்திலிங்கச் செட்டி பேருக்கு எழுதி அதற்குப் பிணையாக என் பெயரை எழுதுக' என்று கட்டளையிட்டார். ஐயர் தேசாதிபதி கருத்தைக் குறித்துக் கொண்டு யாதும் எதிர்பேசாது குத்தகையை எழுதிவிட்டார். வைத்திலிங்கச் செட்டியார் குத்தகையை ஏற்றுக் கிரமமாக நடத்தி ஓரிலட்ஷ ரூபாவுக்கு மேல் இலாபம் பெற்றார். இப்படியே மூன்று முறை குத்தகை வாங்கிப் பேரிலாபம் யடைத்ததுமன்றிக் குணத்தாலும் கொடையாலும் நல்லொழுக்கத்தாலும் ஈசுரபத்தியாலும் சிறந்து பெயரும் புகழும் படைத்தார். இவர் சோழநாட்டிலே சங்கத்தி (சங்கேந்தி) யென்னுமூரிலே பெண்கொண்டவர். இவருடைய தாயார் ஒருநாள் மத்துக் காயவைத்துக் கொண்டிருக்கும் போது பிச்சைக் காரனுக்கு ஒருபிடி முத்தள்ளி வழங்கினரென்றால் குழைகொண்டு கோழியெறியும் பெருஞ் செல்வரினும் இவர் பெருஞ் செல்வமென்பது சொல்ல வேண்டா.

ஒரு நாள் கூழங்கைத்தம்பிரான் வைத்திலிங்கச் செட்டியாருடைய வீட்டுக்குச் சென்றபோது, செட்டியாருடைய தாயார் அவரை உபசரித்து அவர்பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தார். தம்பிரான் அவரை ஆசீர்வதித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சங்கேந்தி தங்கச்சி தையலென்பா ரிங்கவளும்
சங்கேந்தி தங்கச்சி தையலே .... அங்கவளைத்
கோபாலன் றேவியெனக் கூறுவா ரிங்கவளும்
கோபாலன் றேவியெனக் கூறு'

என்னுஞ் செய்யுளைக் கூறினார். கோபாலச் செட்டியார் மனைவிபெயர் தையலாச்சி. அவரும் சங்கேந்தியிற் பிறந்தவரே.

## வண்ணை வைத்தீஸ்வரன்

வைத்திலிங்கச் செட்டியார் தமக்கொரு சிறந்த மாளிகை கட்டவெண்ணித் தம்பிரானிடஞ் சென்று தமது கருத்தை வெளியிட்டனர். அவர் 'உன்னை இந்நிலைக்குக் கொண்டு வந்தவர். உனது பரமபிதாவாகிய வைத்தியலிங்கக் கடவுளும் உலகமாதாவாகிய தையல்நாயகித் தேவியாருமன்றோ. அவர்க்காலயம் வகுத்தபின்னரே நீ உனக்கு மாளிகை கட்டவேண்டும்' என்றனர். அதுகேட்ட செட்டியார் 'அவ்வாறே செய்வேன்' எனக் கூறித் தம்பிரான் வசித்தவிடத்தை வாங்கி, வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலென்று இன்றும் இணையற்று விளங்கும் சிவாலயத்தைக் கட்டிக் கும்பாபிஷேகஞ் செய்வித்துப், பறங்கிக்காரரால் அழித்தொழிக்கப்பட்ட சைவப்பயிரை மீளவும் நாட்டினர். இத்திருப்பணிக்கு யாழ்ப்பாணத்துள்ள ஏனைய பிரபுக்களும் சிறிது பொருளும் பூசைக்கு விளைநிலங் களும் தோட்டங்களுமுதவினராயினும், பெரும்பாகமும் வைத்தியலிங்கச் செட்டியாரே தமது திரவியங்கொண்டு முடித்தனர். இவருந் தம்பிரானும் யாழ்ப்பாணத்துக்குச் செய்த உபகாரம் யாழ்ப்பாணமுள்ளவரையும் அவர் பெயரை விளக்கிக்கொண்டேயிருக்கு மியல்பினதாம். செட்டியார் சந்ததியார் யாழ்ப்பாணத்திலும் சோழநாட்டிலுமிருக்கின்றார்கள்.

## கோவதை

ஒல்லாந்தர் மாடுகளைக் கொன்று இறைச்சிக்கு விற்றதற்கு ஓரிறைச்சிச்சாலை தாபிக்க வேண்டுமென முயன்றனர். அதற்குத் தமிழ் மந்திரிகளும் குடிகளும் மாறாயிருந்தனர். செத்தமாடன்றி மாட்டைக்கொன்று தின்றறியாத பறையரும் அத்தொழிற் குடன்படராயினர். அக்காலத்தில் நெடுந்தீவிலுள்ள சில பறையரை ஒல்லாந்தர் தம் மதத்திற் சேர்த்து, அவர்க்குப் பெரும் வேதனம் கொடுத்து கொணர்ந்து அத்தொழிலுக் குடன்படுத்தினர். ஒல்லாந்தர் அச்சாலையை ஊரவர்கள் கண்ணுக்குப் புலப்படாமல் கோட்டையினுள்ளே அந்தரங்கமான விடத்தில் வைத்துத் தமது சாதியார்க்கு மாத்திரம் உபயோகப்படுத்தி வந்தனர். ஒல்லாந்தர் இறைச்சிக்கு என்று கேட்டால் ஊர்ச்சனங்கள் மாடு கொடுக்க மாட்டார்கள் என்றெண்ணிப் பாலுக்கென்று பசுக்களை வாங்கித் தொகையாக வளர்த்து அவை ஈனுங் காளைக்கன்றுகளை வளர்த்துக் கொன்று தின்று





வந்தார்கள். ஈற்றில் பசுக்களையுங் கொன்றருந்திவந்தனர். ஒரு நாள் தேசாதிபதியினுடைய வீட்டில் நடந்த ஒரு பெரு விருந்துக்கு ஒரு காளைக்கன்று வேண்டியிருந்தது. தேசாதிபதி அக்காலத்தில் பசுநிரையாலும் ஆளடிமை நெல்விளை நிலமிகுதியாலும் இராசாங்கவுத்தியோகத்தாலும் சிறந்து விளங்கிய சண்முகநாயகமுதலியாரிடம் ஓர் கன்று கேட்க, முதலியார் இவ்வீனச் செயலுக்கு உடன்படமாட்டேன் இராசாங்கவுத்தியோகமும் வேண்டாமெனக்கூறி அத்தேசாதிபதி சமுகம் விட்டகன்றனர். தாம் செய்யாவிடினும் கோவதைக்கு அனுகூலியாயிருப்பதும் பெருங்கொடும்பாவமெனக் கொண்டு தமது அதிகாரத்தையும் இராச பூச்சியத்தையும் துறந்த சண்முகநாயக முதலியாரது பெருந்தகைமை பெரிதும் பாராட்டத்தக்கது. உயர்குடிப்பிறந்தோர் உயிர்போகவரினும் இழிதொழிலுக்கு உடன்படாரென்பது ஆன்றோர் வாக்கு. இவர் வழியிலிப்போதுள்ளவர்களும் பெருங்குணம் படைத்தவர்களே.

## ஞானப்பிரகாசர்

கோவதைக்கஞ்சிப் பறங்கிக்காரர் காலத்திலே யாழ்ப்பாணத்தை விட்டோடிச் சோழதேசத்தில் வாழ்ந்த பெருந்தகையு மொருவருளர். யாழ்ப்பாணத்திலரசு புரிந்த ஒரு பறங்கித தேசாதிபதி தன்கீழுள்ள கிராமாதிகாரிகள் வருஷமொருவராய் ஒவ்வொரு காளைக்கன்று கொடுத்து வரவேண்டுமென்று கட்டளையிட்டான். அக்கட்டளைப்படி முதன்முறைக்குரியவராயினார் திருநெல்வேலி ஞானப்பிரகாசர். அவர் திருநெல்வேலி அதிகாரமும் கல்வியும் பெருஞ் செல்வமும் பரம்பரைச் சைவவேளாண் குடியுமுடையவர். அவர் பறங்கித் தேசாதிபதிக்கு இறைச்சிக்கு மாடு கொடுத்து இவ்வூரில் வாழ்வதிலும் இவ்வூரைவிட்டகல்வதே சிறந்த உபாயமெனக் கொண்டு அவ்வாறே தமதூரைவிட்டகன்று சிதம்பரத்தையடைந்து அங்கே துறவறம் பூண்டு வாழ்ந்தவர். அவர் சிவஞான சித்தியாருக்குத் தமிழில் ஒருவரையும் வடமொழியிலே அநேக நூலும் செய்தவர். சிதம்பரத்திலேயுள்ள ஞானப்பிரகாசமென்னும் திருக்குளம் அமைத்தவரும் அவரே.

## தில்லைநாத தம்பிரான்

இக்காரணம்பற்றி வரணித் தில்லைநாதர் என்பவரும் பறங்கிக்காரரது கொடுங்கோலின் கீழ் வாழலாகாதெனக் கொண்டு சோழநாட்டையடைந்து ஞானப்பிரகாசரது பெருமைகளைக் கேள்வியுற்று அவர்பாற்சென்று காஷாயம் பெற்றுத் தில்லைநாததம்பிரான என்னும் பெயரோடு விளங்கினர். அவர் சிலரது பூதியுடையராய்ச் சோழராசாவின் புத்திரிக்குற்ற குன்மவலியை விபூதி சாத்தித் தீர்த்து வேதாரணியத்திலுள்ள சிவாலயத் திருப்பணிக்காகப் பெருந்திரவியமும் உப்பளமும் இரேகுச்சங்கமும் பெற்றவர். வேதாரணிய தலவிசாரணையுரிமை வரணிச்சைவர்க்குக் கிடைத்தது அவர் மூலமாகவேயாம். வரணிச் சைவரே இன்றும் வேதாரணிய ஸ்தல விசாரணைக் கர்த்தராயிருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தரது கொடுமைக்காற்றாது அக்காலத்திலேயே மேல்பற்றிலிருந்து போய்ச் சில குடிகள் வேதாரணியம் சம்போடை சிதம்பரம் முதலிய விடங்களிற் குடியேறினர்.

## ஒல்லாந்தக் கலாசாலை

அதுநிற்க, சண்முகநாயகமுதலியார் தமது உத்தியோகத்தினின்றும் நீங்க, அவருடைய பதத்துக்கு அநேகர் விண்ணப்பஞ் செய்தனர். தோம்பெழுதும் பகுதி அதிகார முழுதும் சண்முகநாயக முதலியாரே, வகித்திருந்தார். அது முடிந்தும் முடியாமலுமிருந்தது. அதனை முடிப்பதற்காகப் பலர் பரீஷிக்கப்பட்டும் பூரணயோக்கியதை உடையவர் ஒருவரும் அகப்படவில்லை. உயர்தர ஒல்லாந்த கலாசாலையொன்று கொழும்பிலிருந்தது. அங்கே சென்று கற்றவரினுஞ் சிலர் வரவழைத்துப் பரீஷிக்கப்பட்டனர். அவருள்ளும்தக்கவர் அகப்பட்டிலர். அதுகண்டு தேசாதிபதி மெல்லோப் பாதிரியாரைக் கொண்டு ஐவர் தமிழரைத் தெரிந்தெடுத்து ஒல்லாந்துக்கனுப்பி மூன்று வருஷம் பலதுறைக்கல்வியிலும் பயிற்றுவித்தனர். அவருள்ளே இருவர் இறந்து போக மூவர் பெரும் வித்தியாபட்டங்கள் பெற்று மீண்டனர். அவர்களுள் ஒருவரே தொன்பிலிப்பு இலங்கைக்கோன் முதலியார். அவரே தோம்பெழுத்தை முடித்தவர். அவர் வமிசத்தவரின்னுமுளரோ அருகினரோ வென்பது தெரியவில்லை. ஏனைய மூவருள் ஒருவர் உபசேனாதிபதியாக விருந்தனர். ஒல்லாந்த சேனையோடு பிரான்சியர் திரிகோணமலையிற் போர் செய்த போது அவர் பிராஞ்சியரைப் போரில் தோற்றோடுமாறு செய்தவரென்பர். ஒந்தாச்சியென்பவரும் ஒல்லாந் தேசஞ் சென்று வித்தியாபட்டம் பெற்று விளங்கினோருள் ஒருவராவர். அவர் வரலாறு வேறொன்றுந் தெரியவில்லை.

## மெல்லோ பாதிரியார்

மெல்லோப்பாதிரியார் கொழும்பிலே ஓர் உயர்குலத் தமிழ்க்குடும்பத்தில் 1720ம் பிறந்து ஒல்லாந்த கலாசாலையிற் கற்று வல்லவராயினர். தமிழிலும் சிறந்த பாண்டித்தியம் படைத்தவர். அவருடைய கல்வியறிவின் வளத்தைக் கண்ட ஒல்லாந்தர் அவரைப் பாதிரியாக்கி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினர். அவரே பைபில் புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழி பெயர்த்தவர். அவர் செய்ததாகக் கூறப்படும் உவமைப் பாட்டுகள் மிகச் சிறந்தவை. அவர் கூழங்கைத் தம்பிரானுக்குப் பேரபிமானியாக விளங்கினவர். 1790 ல் இறந்தனர்.

## வில்லவராய் முதலியார்

அக்காலத்திலே குலத்தாலும் செல்வத்தாலும் ஈகையாலும் சிறந்து விளங்கிய வில்லவராயமுதலியாரென்பவர் ஒருவர் நல்லூரிலிருந்தார். கூழங்கைத்தம்பிரான் இவ்வில்லவராய் முதலியார் வீட்டிலே இராக்காலத்திலே வித்தியாகாலஷேபஞ்





செய்து வந்தனர். முதலியார் புத்திரன் தம்பிரான் காலஷேபத்தின் பொருட்டுப் படித்துப் பொருள் சொல்வி வந்த பாட்டுக்களையெல்லாம் ஏழுவயதளவில் அவதானம் பண்ணி உடனே அவ்வாறே ஒப்பித்து வந்தனர் என்றால் அப்புத்திரனுடைய விவேகம் இவ்வளவென்று சொல்ல வேண்டுமா. ஒரு நாள் அப்புத்திரனார் வீதியிலே நின்று விளையாடிக்கொண்டிருக்கையில் ஒரு புலவர் வில்வராயமுதலியார் வீடு எங்கேயென்று வினவ, அப்புத்திரனார் அவரைப் பார்த்து,

பொன்பூச்சொரியும் பொலிந்த செழுந்தாதிறைக்கும்
நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம் - மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்லவ ராயன்றன்
வாசலிடைக் கொன்றை மரம்.

என்று கூறினர். அதுகேட்ட புலவர் அப்புத்திரனாரை மெச்சி இச்சிறுபருவத்தே இத்துணைச்சிறந்த கவியினாலே விடைகூறிய நீ வரகவியாதல்வேண்டுமெனக் கூறிக் கட்டித்தழுவி உச்சிமோந்து சென்றனர். அப்புத்திரனாரே சின்னத்தம்பிப் புலவர். அவர் பதினைந்து வயதளவிற் சிதம்பரஞ்சென்று தலயாத்திரை செய்து மீளும் போது வேதாராணியத்தை அடைந்து அங்கே மறைசையந்தாதிபாடி அரங்கேற்றினர். அப்போத அவ்வாதீனத்து வித்துவானாகிய சொக்கலிங்க தேசிகர் என்பவர் சொல்லிய மேல்வருங்கவி அவருடைய இயல்பை விளக்குகின்றது

செந்தா தியன்மணிப் பூம்புவி யூரைச் சேர்ந்துநிதம்
சிந்தா தியானஞ்செய் வில்லவ ராயன் றிருப்புதல்வன்
நந்தா வளஞ்செறி நல்லைச்சின் னத்தம்பி நாவலன்சீர்
அந்தாதி மாலையை வேதாட வீசர்க் கணிந்தனனே.

சின்னத்தம்பிப்புலவர் மறைசையந்தாதி மாத்திரமன்று கல்வளையந்தாதி முதலிய வேறுபல நூல்களுஞ் செய்தனர். இவருடைய சந்ததியார் இன்றுமுளர்.

## சரவணமுத்து முதலியார்

சண்முகநாயகமுதலியார் சகோதரர் சரவணமுத்து முதலியார் யாழ்ப்பாணம் மேல்பற்றுக்குப் பஞ்சாய நீதிபதியாயிருந்தனர். அவர் நீதிவிசாரணை செய்தவிடஞ் சத்தியக்காடெனப்படும். அது தொல்புரத்திலிருந்கின்றது. அவர் காலத்தில் மசூரிகாரோகம் மிக்க உக்கிரத்தோடு பரவி ஒல்லாந்த படைவீரருள்ளும் பெரும்பாலாரைத் தாக்கிற்று. அப்படைக்கு வீரப்பெருமாள் என்பவன் தலைவனாகவிருந்தான். அவன் ஒல்லாந்த தேசாதிபதியிடம் அநுமதி பெற்றுக் கோட்டைக்குப் புறத்தே ஒரு மாரியம்மன் கோயிலைக்கட்டி விழாச் செய்ய மசூரிகாரோகம் தணிந்தது. சரவணமுத்து முதலியாரும் தேசாதிபதி அநுமதி பெற்றுத் தொல்புரத்திலும் ஒரு மாரியம்மன் கோயிலமைத்து விழாக்கொண்டாடி அவ்வூரில் மிக்க உக்கிரத்தோடு பரவிய மசூரிகாரோகத்தைச் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வித்தவர். அக்கோயிலின்றும் பிரசித்தியோடு விளங்குகின்றது. அக்காலத்தில் காய் கனி பூ மடைகள் அன்னமடைகளிட்டே வழிபாடு செய்தனர். அவர் இறந்த பின்னர் அவர் மனைவியார் புண்ணியநாய்ச்சியென்பவர் சிதம்பரத்துக்கு அநேக விளைநிலங்கள் கொடுத்துக் தருமமடங்களும் அமைத்தனர்.

## மயில்வாகனப்புலவர்

அதுநிற்க, கூழங்கைத்தம்பிரானிடத்துத் தமிழ் இலக்கணவிலக்கியங்களும் சித்தாந்த சாத்திரங்களும் கற்றவர்கள் அநேகர். தம்பிரானிடத்துப் பாடங் கேட்டல் யாவர்க்கும் எளிதாயினும் அவர் ஒரு முறைக்குமேல் ஒரு பாடத்தை ஒருவர்க்குச் சொல்வார். அவர் சொல்லுமிடத்தும் ஐயந்திரிபறக் கடா விடைகளோடு சவிஸ்தாரமாகவே சொல்வார். இரண்டாம்முறை கேட்கப்புகின் கொடுஞ்சினங் கொண்ட நாகமாவர். ஒரு முறையிற் கிரகிக்கவியலாதவர் அவ்வாறு செய்ய வல்லாரோடிருந்துகேட்டு அவர்பால் மீண்டுங் கேட்டுணர்வர். ஒரு நாற்கேட்டு முற்றுங்கிரகித்த மாணாக்கருள்ளே மாதகல் மயில்வாகனப்புலவரும் இருபாலை நெல்லை நாதரும் சிறந்தோர். நெல்லைநாதர் எத்துணைப்பெரிய செய்யுளையும் ஒரு முறையிற் கிரகிக்கும் போற்றல் உடையவர். சோழநாட்டிலிருந்து செந்திக்கவி என்பவர் வைத்தியலிங்கச் செட்டியாருடைய புகழ்கேட்டு அவர்மேல் ஒரு பிரபந்தம் பாடிவந்து ஒருநாள் அரங்கேற்றினர். நெல்லை நாதர் முதற்செய்யுள் கேட்டவுடன் இது பழையபாடலன்றோ, நீர் புதிதாகப் பாடிய பிரபந்தத்தை அரங்கேற்றும் என்று செந்திக்கவியை நோக்கிச் சொல்ல, செந்திக்கவி திகைத்து எப்படியென்றார். நெல்லைநாதர் அச்செய்யுளைச் சபையோரெல்லாம் பிரமிக்க ஒப்பித்தனர். செந்திக்கவி, 'இப்பெருஞ்செய்யுளை இவர் அவதானித்து ஒப்பித்தார். அடுத்த கவிதை விரைந்து சொல்வேன்' என மனத்துள் மதித்த 'இதுவும் பழையகவிதானோ' என்று கூறி விரைந்து படித்தார். இதுவும் பழையகவியேயென்று நெல்லைநாதர் அக்கவியை ஓரட்சரமும் வழுவாதொப்பித்தார். செந்திக்கவி எழுந்து அவரை வணங்கி அவருடைய அவதான சக்தியைப் புகழ்ந்து பாராட்டினர். நெல்லைநாதர் செட்டியாரை நோக்கிச் செந்திக்கவிபாடிய பிரபந்தம் பழையகவியன்று: புதிதே என்னுடைய ஆற்றலை அவர்க்குணர்த்துமாறே அச்செய்யுட்களை அவதானம் பண்ணிச் சொன்னேன். ஐயப்பாடொழிந்து அதனைக் கேட்டு அவர்க்குத்தக்க பரிசளித்திடுகவென்றார். செட்டியார் அதுகேட்டு மகிழ்ந்து பிரபந்தத்தை அரங்கேற்றுவித்த முன்னெண்ணியதிலும் இருமடங்காகப் பரிசில் எடுத்து, 'கவீசரரே! இதிற் பாதியே உமக்கு யான் தரக் கருதியது, நெல்லைநாத பண்டித சிரோமணிபெயரால் ஒரு மடங்கதிகமாகத் தருகிறேன். அதனை அவர் தந்ததாகக் கொள்ளும்' என்று கூறி வழங்கினர். நெல்லைநாதர் கம்பருக்குப் பரிசளித்த பெருந்தகையினது மரபிலுள்ளவர். நெல்லைநாதர் புத்திரராகிய சேனாதிராய முதலியார் ஒல்லாந்த ஆங்கிலபாஷைகளும் வல்ல தமிழ்ப்பண்டிதர். அவர் ஒல்லாந்தவரசிலும் ஆங்கிலவரசிலும் துவிபாஷிகரா





யிருந்தவர். நல்லைவெண்பாப் பாடியவர் அவரே. அந்நூல் சொருபஞ் சிதைந்து வழங்குகின்றது. இவர் வம்மிசத்தார் இன்றுமுளர்.

மாதகல் மயில்வாகனப்புலவர் புலியூரந்தாதி பாடியவர். வைத்தியலிங்கச் செட்டியார் கூழங்கைத் தம்பிரானிடம் பாடங்கேட்டது இம்மயில்வாகனப்புலவரை நட்பாக வைத்துக் கொண்டேயாம். அவருடைய புலமைக்கும் வாக்குவன்மைக் கும் நிகர்கூறுவதெளிதன்று. அவர் சுன்னாகத்து அந்தணர் திலகரும் கவிந்திரருமாகிய வரதராசபண்டிதர் செய்த சிவராத்திரி புராணத்துக்குச் சொன்ன

'பரராசனுயரசலராசனுமை
  பங்கனன்புதருபண்புசேர்
விரதராசசிவநிசியினீள்சரித
  மிகவிளங்கிடவிளம்பினான்
கரதராசனையமொழியரங்கனருள்
  வரதராசன் மறைவாணராசனியல்
மதரவாசகவி ராசனே.

என்னும் பாயிரம் அவர் வன்மையை நன்க விளக்கும். யாழ்ப்பாண வைபவமாலை செய்தவரும் அம்மயில்வாகனப்புலவரே.

## வரிகள்

அதுநிற்க, ஒல்லாந்தர் தமது அரசுக்கு அழிவுதெய்வச் செயலாகச் சீக்கிரம் வருமென்பதை யோசியாமல் குடிகளிடத்துள்ள பொருளைத் கவருதற்கும் பலசூழ்ச்சிகளுஞ் செய்தார்கள். மேளவாத்தியத்தோடு நடக்கும் கல்யாணச்சடங்கு முதலியவைகளுக்கும் பல்லக்குத் தண்டிகையில் ஊர்கோலம் போவதற்கும் வரி வைத்தார்கள். நாட்டிலுள்ள சாயவேரையெல்லாம் அற்ப கூலி கொடுத்துத் கிண்டிவந்தவர்கள் கூலியின்றிக் கிண்டுவித்துத் தம்மிடம் அனுப்பும்படி நாட்டாதிகாரிகளுக்கெல்லாம் கட்டளை பண்ணினார்கள். அவ்வாறு திரட்டுஞ் சாயவேரை நாகபட்டணமுதலியவிடங்களுக்கனுப்பி விற்றுப் பெரும் பொருளீட்டி வந்தார்கள். அது செய்யாத சனங்களை அடித்துச் செய்விக்கும்படி அதிகாரிகளுக்கு கட்டளையிட்டார்கள். இக்கட்டளையால் ஊரதிகாரிகள் சனங்களை வருத்தவேண்டியவரானார்கள். அதனால் அநேக சனங்கள் வன்னிக்கோடிப் பண்டாரவன்னியனிடத்து அடைக்கலம் புகுந்தார்கள். பண்டார வன்னியனுக்கும் சாயவேர் திரட்டுமாறு ஒல்லாந்தர் கட்டளை போக்கினார்கள். அதற்கவன் அது செய்ய இயலாதென்று மறுத்தான். அக்காலத்தில் முல்லைத்தீவு நாடு ஒல்லாந்தர் அரசுக்குட்பட்டிருந்ததாயினும் பண்டார வன்னியனே அதனை ஆண்டு வந்தான். ஒல்லாந்தர் அவனோடு போராடி வெல்லுமிடத்துண்டாகும் பயன் போர்ச் செலவுக்கும் போதாதென உவர்த்திருந்தார்கள். அச்சமயம் ஒல்லா[illegible]டைய படைப்பலமும் குறைந்திருந்தது. இருந்த ப[illegible]ப்பற்றி இல்லாதவர்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாயிருந்தார்கள். ஒல்லாந்த உத்தியோகத்தரும் பரிதானப் பிரியராயிருந்தார்கள். அதனால் அவர்களுடைய ஆணை செவ்வே செல்லாதிருந்தது. கிறிஸ்த சமயப் பிரவேசம் செய்பவருக்கே உத்தியோமென்ற கட்டுப்பாடும் மெல்ல நழுவுவதாயிற்று. சைவசமயக் கோயில்களும் சிலவிடங்களிலே மெல்ல மெல்லப் பழையவேர்களிலிருந்து முளைத்தெழும்புவனவாயின.

## கலகம்

அக்காலத்தில் சனங்கள் கல்யாணச்சடங்கு சாச்சடங்குகளுக்கு வேண்டுமானால் அரசினர்க்குப் பணங்கொடுத்து அநுமதிபெற்றே மேளவாத்தியம் வைக்க வேண்டமென்று ஒல்லாந்தர் சட்டஞ் செய்தார்கள். இவ்வரிசைகளைப் பண்டதொட்டனுபவித்துவந்த வேளாளர் முதலிய சாதியார், அச்சட்டத்தைக் கண்டவுடன் மனம் புண்பட்டு ஒல்லாந்தவரசுக்கு மாறாகவெழும்பவும் சூழ்ச்சி செய்திருந்தார்கள். அதற்குத் தங்களுக்குத் துணைசெய்யும்படி கண்டியரசினிடம் இரகசியமாகத் தூதனுப்பினார்கள். அதனைக்கேள்வியுற்ற ஒல்லாந்த தேசாதிபதி அச்சட்டத்தை அழித்துவிட்டு எந்தச்சாதியாரும் தத்தமக்குரிய பண்டைவரிசைகளோடு வாழலாமென அனுமதி கொடுத்தான்.

பண்டைக்காலத்திலே பிராமணர் விவாகத்துக்கு மேளவாத்தியவுரிமை யுடைவர். வேளாளர் செட்டிகள் விவாகத்துக்கு மேளவாத்தியமும், சாவுக்குப் பறைமேளமும், இருசடங்குக்கும் நிலபாவாடையும், சங்கு தாரை குடமுழவும் மேற்கட்டியும் உரிமையுடையவர். கோவியர் சாவுக்குமாத்திரம் பறைமேளவுரிமை யுடையவர். மறவர் அகம்படியர் இடையர் சிவியார் விவாகத்துக்கு மேளவாத்தியமும் சாவுக்குப் பறைமேளமும் உரிமையுடையாகவுடையர். ஆண்டிகள் சங்கவாத்தியமுடையவர், முக்கியர் கரையார் ஒற்றைச்சங்கவாத்திய வுரிமையுடையவர். கம்மாளர் சேகண்டியும் குடமுழவுமடையர். குயவர் குடமுழவுடையவர். அப்பட்டர் வண்ணார் தாரையுடையர். மற்றைச் சாதிகளுக்கு ஒருவகை வாத்திய உரிமையுமில்லை.

## இராச காரியம்

பண்டைக்காலத்தில் வேளாளர் செட்டிகளுள்ளும் உழுதுண்டு வாழ்பவர் தவிர, உழுவித் துண்போரேல்லாம் தத்தமிடத்துள்ள பண்ணையாட்கள் எத்தனைபெயருள்ளரோ, அத்தனைநாட்கள் இராசகாரியத்துக்கு வருஷமொரு முறை பதினைந்து நாளைக்கு அனுப்புதல் வேண்டும். அதுவுமின்றி ஏனைய வேளாளரைப்போலத் தமது விளைவில் ஆறிலொருகடமைகொடுத்து வந்தார்கள். மறவர் பதினாறுமுதல் இருபத்துநான்கு வயசுவரையும் யுத்தம்பயின்று பின் கிராமக் காவலராகித் தமக்கு இராசாவால் விடப்பட்ட நிலத்திற் பயிர்செய்துண்டு வாழ்வதோடு படைத்தொழிலுக்கு வேண்டிய காலத்தில் மீளுதல் வேண்டும்.





சிவியார் இராசாங்கத்துக்குச் சிவிகையாட்களாகவும் சிவிகைமுன் செல்லுங் கூறியராகவும் அரமனைவாயிவலாளராகவும் பாசந்தோறும் ஒவ்வொரு தொகையினராக மாறிமாறி முறைப்படி இராச சேவைசெய்து வருதல் வேண்டும். அதற்காக அவர்களுக்கு அரசரால் இறையிலியாக நிலங்கள் விடப்பட்டிருந்தன. உமணர் இராசாங்கத்துக்கு வேண்டும் உப்பமைப்பவர்களாயிரந்தார்கள்.

ஆண்டிகள் விடிய ஐந்து நாழிகையளவில் நகரங்களிலும் கிராமங்களிலும் சங்கநாதஞ் செய்து சனங்களைத் துயிலுணர்த்திவருந் தொழிலுக்காக ஒருமகமை உடையவராயிருந்தார்கள். கோயில்களிலும் அரமனையிலுமுள்ள மறைக்காலம் போக மற்றைக்காலங்களில் ஊரில் யாசகஞ் செய்து காலங்கழிப்பதோடு மாரியம்மன் கோயில் பிடாரிகோயில்களுக்குப் பூசகராயுமிருப்பர். அவர்களுள்ளே இலங்கதாரிகளும் வேறாயிருந்தனர். அவர்கள் வலைஞர் முதலிய சாதியாருக்குக் குருக்கள்மாராவர். அவ்விலிங்கதாரிகள் கன்னடர். அவர்கள் யாழ்ப்பாணத்தரசரிடம் படைத்தொழிலில் அமர்ந்திருந்தவர்கள். பிற்காலத்திற் கதியின்றி ஆண்டிகளோடு கலந்து ஆண்டிகளையும் இலங்கதாரிகளாக்கி அபேதமாயினர்.

## சாதிகள்

முக்கியர் கரையார் பரதவர் திமிலருள் இராசாவினது கடற்படையிலிருப் பவர்கள் தவிர மற்றோரெல்லாம் முத்துக்குளிப்புக் காலத்திலே வரஷத்தில் பதினைந்து நாளைக்கு இராசகாரியஞ்செய்யும் கடப்பாடுடையர். தமிழரசர் காலத்தில் மீன்வரியில்லை. அது பறங்கிக்காரர் காலத்திலேயே விதிக்கப்பட்டது. ஒல்லாந்தரும் அதனைத் திரட்டி வந்தனர். வலையர், இராசா வேட்டைக்குப் போகும்போதெல்லாம் உடன்போக்குக்குரியர்.

கம்மாளருட் கொல்லரும் தச்சரும் கிராமங்கள் தோறும் இறையின்றி நிலம் விடப்பெற்றார்கள். அவர்கள் அக்கிராமத்தாருக்கு வேண்டும் கலப்பை கொழு அரிவாள் முதலிய பயிர்த்தொழிலிற் கருவிகளெல்லாம் கூலியின்றிச் செய்து கொடுக்குங் கடப்பாடுடையவர்கள். வருஷத்தில் எட்டு நாளைக்கு இராசகாரியமுஞ் செய்யுங் கடனுடையவர்கள். இரும்பு இலங்கையிலே தென்பாகத்தில் மிகுதியாகவும் யாழ்ப்பாணத்தில் மட்டாகவும் உருக்கெடுக்கப்பட்டு வந்தது. பறங்கிக்காரர் அவ்விரும்பைப் பாராட்டிச் சேர்த்து அந்நிய தேசங்களுக்கு அனுப்புவர். ஈழத்திரும்பென நெடுங்காலம் பெயர்படைத்த விருப்பு யாழ்ப்பாணத்திற் செய்யப்பட்ட இரும்பேயாகும்.

கைக்கோளர் சேணியர்களுக்கு யாதொரு கடப்பாடுமில்லை. கன்னார் தட்டார் கற்சிற்பர் இராசாவுடைய அரமனையிலும் கோயிலிலும் வருஷத்தில் பதினைந்து நாள் வேலைசெய்யுங் கடனுடையர். வண்ணார் முறை முறையாக இராசா சென்று தங்குமிடங்களுக்கு மேற்கட்டி கட்டுங் கடனுடையர். குயுவர் அரமனைக்கு வேண்டும் மட்கலங் கொடுக்கும் கடனுடையர் கூடையர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுண்ணநீற்றிக் கொடுக்குங் கடனுடையர். பறையர் யுத்தகாலத்திலே சென்று முற்பறைகொட்டுங் கடனுடையர். இப்படியே ஒவ்வொர சாதியாரும் பண்டைக்கால முதல் வருஷந்தோறும் சில தினங்களுக்கு இராசகாரியஞ் செய்து வந்தனர். அவ்வழக்கம் பறங்கிக்காரர் காலத்தும் ஒல்லாந்தர் காலத்தும் நடந்தது. அஃது ஆங்கிலேயர் காலத்தும் 1810 வரையில் ஒருவாறு நடந்தது. அதன்பின்னர் நிறுத்தப்பட்டது.

## விவாகச்சடங்கு

முன்னே கூறப்பட்ட கலியாணவரிக்கஞ்சி வேதியர் வேளாளர் செட்டியர் முதலியவர்களுள்ளும் வறியவராயிருந்தவர்களும் மற்றைச்சாதிகளும் கல்யாணச் சடங்குகளை யாதொரு மங்களவாத்தியமுமின்றி இரகசியமாகச் செய்யத் தலைப்பட்டார்கள். பிள்யைாரைப் பிடித்து வைத்துத் தேங்காயுடைத்துக் கர்ப்பூர தீபங்காட்டித் தமக்கு ஐக்கியமான பந்துக்களை மாத்திரம் அழைத்து அவர் முன்பாகக் கூறைகொடுத்துத் தாலிகட்டுமுரிமை எல்லாச் சாதிக்குமுண்டே யாயினும் பூஷணவரிக் கொடுமையுமொன்றிருந்தமையால் அதற்கஞ்சி ஏழைச் சனங்கள் அஃதில்லாமலும் கூறையோடு மாத்திரம் விவாகத்தை முடித்துக் கொள்வராயினர். பள்ளர் பறையர் துரும்பர்கள் மாத்திரம் விடிய ஐந்து நாழிகை உண்டென்னுமளவில் விவாகச்சடங்கு செய்து கொள்ளல் வேண்டுமென்னும் கட்டுப்பாடு பண்டைக்காலந் தொட்டிருந்தது. அவ்வழக்கம் இன்றும் அவர்களுள்ளே காரணந்தெரியாது பலவிடங்களில் நடந்து வருகின்றது.

யாழ்ப்பாணத்துக்கு ஒல்லாந்தர் செய்த நன்மைகளுஞ் சிலவுள. அவர்கள் நெல்விளைவை விருத்தி செய்யுமாறு முன்னே தமிழரசரால் வெட்டுவிக்கப்பட்ட குளங்களைத் திருத்தியும், சிலகுளங்களைப் புதிதாக வெட்டியும் வாய்க்கால்களை வகுத்தும் வந்தார்கள். இவற்றையெல்லாம் தாம் பொருள்செலவிடாத குடிகளைக் கொண்டே இராசகாரியமாகச் செய்வித்து வந்தார்கள். 1784 ல் மழை குறைந்தது. அடுத்த வருஷம் மழையில்லாத போயிற்று. அதன் காரியமாகவந்த பஞ்சத்தால் உர் மிக வருந்தியது.

## குமாரதெய்வேந்திர முதலி

இக்காலத்திலே குமாரதெய்வேந்திர முதலியென்பவர் தாம் அராலியிற் சேமித்திருந்த நெற்களஞ்சியத்தைத் திறந்து விட்டு, வேண்டுவோர் தாம் சுமக்கக்கூடிய நெல்லு வாரிப்போகலாமெனப் பிரசித்தஞ் செய்வித்து மேல்பற்றுப் பஞ்சத்தைக் காத்தாரென்பர். இதனை மற்றப் பற்றுக்களிலிருந்த பிரபுக்களு மேற்கொண்டார்கள்.





## நீர்ப்பாசனம்

அவ்வருஷம் முத்துக்குளிப்பும் வாய்ப்பாகவில்லை. அதுகண்டு தேசாதிபதி சுழிபுரஞ் செல்வநாயக முதலியார், சரவணமுத்து முதலியார், புலோலிப் பெரியசிங்கநாயக முதலியார். வேலப்பமுதலியார் முதலியவர்களையும் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபுக்களையும் வரவழைத்து அவர்களோடு யோசித்து நெல்விலையையிறக்கி விற்கவும், அற்ப கூலிகொடுத்து இராசகாரியமாகக் கனகராயனாற்றை யானையிறவுக்கடலைத் தூர்த்து அணையிட்டு அதன் வழியாகக் கொணர்ந்து யாழ்ப்பாணத்துவிளை நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சவும் தீர்மானம் பண்ணினர். கனகராயனாறு பவானி (வவுனியா)க் குளத்துக்குச் சமீபத்தினின்றும் பாய்ந்து வடக்கேஓடி யானையிறவுக்கடலிற் கழிவது, அது பூர்வம் தமிழரசர் காலத்திலே கனகராயமுதலியாலே வெட்டப்பட்ட ஆறு. அக்காலத்திலே யானையிறவுக்கடல் இப்போதுள்ள விரிவாக இருக்கவில்லை. அவ்விடம் யாழ்ப்பாணநாடு இலங்கையோடு பொருந்தும் பூசந்தியாயிருந்தது. அப்பூசந்தி வழியாகக் கொண்டு வந்து யாழ்ப்பாணத்து விளைநிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சுமாறே கனகராயமுதலி அவ்வாற்றை வெட்டுவித்தான். அத முற்றுப்பெறமுன் அவன் இறந்தான். பின்னர் அவ்வாறு தானே பெருகித் துறையை அரித்துக் கடலாக்கி விட்டது. ஒல்லாந்தர் அவ்வாற்றையே திருப்பி நீர்ப்பாய்ச்சுவதற்கு முயன்றனர். முயன்றும் இராச்சியகலகத்தினால் அஃ தநுகூலப்படவில்லை.

## சட்டம்

பறங்கிக்காரரால் கலக்குண்ட தமிழர் வழக்கங்களும் ஆசாரமுறைகளும் விவகார முறைகளும் ஒல்லாந்தவரசால் மீண்டுங் கலங்கின. ரோம ஒல்லாந்த விவகார முறையே இச்தேசத்துக்கச் சட்டமாக நெடுங்காலம் வழங்கியதால் ஆங்கிலேயரும் அதனையே இத்தேசத்துக்குச் சட்டமாக்கினர்.

## பஞ்சாயம்

ஒல்லாந்தர் காலத்தில் கிராமங்கள் தோறும் கிராமாதிகாரிகளை நியமித்து ஆங்காங்குமுள்ள சனங்களை அவர்கள் மூலமாயாண்டு வந்தார்கள். அச்சனங்களுக்கிடையே வரும் வழக்கு விவகாரங்களை அவ்வதிகாரிகளே பஞ்சாயமூலமாய்த் தீர்த்து வந்தார்கள். தீர்க்க வகை தெரியாத வழக்குகளை வாதிபிரதிவாதிகளைக் கொண்டு சத்தியஞ் செய்வித்துத் தீர்ப்பார்கள். பண்டுதொட்டு யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் பொய் களவுக்குப் பெரிதும் அஞ்சுபவர்கள். பறங்கிக்காரர் காலத்துக்கு முன்னே கள்ளன்றி வேறு மதுபானமில்லை. கள்ளும் பள்ளர் பறையருக்குணவாக விருந்ததன்றி மதுபானமாக இருக்கவில்லை. கள்ளுண்டு களித்தாரைக் காணில் தமிழரசர் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டாதிகாரிகள் தூதர்பிடித்து விலங்கிட்டு வருத்துவர். கள்வரும் குடியரும் மிகுத்தது பறங்கியாக தொடங்கிய பின்னரேயாம். வியபிசாரம் தமிழரசர் காலத்தில் மிகவரிதாம். அக்குற்றமேற்பட்டோர் காய்ச்சிய இரும்பைக் கையிலேந்திச் சபையிலே சத்தியஞ் செய்து தமதுண்மையை நாட்டவேண்டியவர்களா யிருந்தமையே அதற்குக் காரணமாம். அக்காலத்தில் பெண்கள் சிலர் இவ்வாற சத்தியஞ் செய்து கையில் சிறிதும் சுடப்பெறாது போனமையைப் பறங்கிக்காரர் தாம் நேரே கண்டதாகப் பறங்கிச் சரித்திரத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

## கனகசபைப்பிள்ளை

1780ம் காரைக்காலிலிருந்து கனகசபைப்பிள்ளையென்பார் ஒரு வேளாண்பிரபு வந்து காரைதீவிற் குடியேறினர். அவர் அவ்விடத்திலே நிலம் வாங்கி ஒரு சத்திரமுங்கட்டி அதற்கு விளைநிலங்களும் வாங்கி விட்டனர். அழிந்தும் அ.'. து பிள்ளைமடமென இன்றும் வழங்குகின்றது. ஒல்லாந்தர் அவரைத்தமது மந்திரிகளுள் ஒருவராக்கி வண்ணார்பண்ணையில் ஒர மாளிகையும் நிலமுங் கொடுத்தார்கள். அவர் வெட்டிய குளம் நீர்வாவியெனவும் கட்டிய கோயில் நீர்வாவிவிநாயகர் கோயிலெனவும் வழங்குகின்றன. அவர் இருந்த மாளிகை அதன் அயலிலேயிருந்தது. நீர்வாவிக்குளம் அக்காலம் மிக்க அலங்காரமான படித்துறைகளோடிருந்ததென்பது அதன் இடிகரைகளால் அநுமிக்கத்தக்கதாக இருக்கின்றது. அதனைப் பழைமைபோலத் திருத்துகின் அத காட்சிக்கினியதும் ஸ்நானத்துக்கு வாய்ப்பாணதும் ஊருக்கலங்காரமுமா யிருக்குமென்பதைற்கைய மில்லை. உரலங்காரப் பொது நன்மைக்கு முற்படும் பரோபகாரிகள் இக்காலத்தரியர். அதுநிற்க, கனகசபைப்பிள்ளையுடைய விவேகம் நற்குணம் பரோபகாரம் நேர்மை முதலியவற்றைக் கண்ட ஒல்லாந்தர் அவரிடத்திலே மிக்க மதிப்புடையராயிருந் தார்கள். அதனைக் கண்டு சகியாத மற்றைத் தமிழ்மந்திரிகள் வஞ்சனை முடிந்து அவருக்கும் ஒல்லாந்தர்க்கும் பேதமுண்டாக்கி அவரைக் காரைக்காலுக்கு மீளும்படி செய்தார்கள். அவர் 'என்மீது குற்றஞ் சிறிதுமில்லாதிருக்கவும் ஆராயாது ஊரைவிட்டு நீங்கும்படி தீர்த்த ஒல்லாந்தரும் என்னைப்போல மனம் வருந்தி அரசைப் பறிகொடுத்து நீங்குங்காலம் சமீபித்தது. அதற்கறிகுறியாக இன்று செல்கின்றேன்' எனக் கூறித் தமது நிலம் மாளிகைகளையெல்லாம் அற்பவிலைக்கு விற்றகன்றார். அவர் தோணியேறிய எட்டாநாள் ஒல்லாந்தர் அரசிழந்தனர். கனகசபைப்பிள்ளை சாபமும் காகதாலியமாயிற்று.

## பனங்காமத்து வன்னிச்சி

இதற்கு மன் 1790ம் பனங்காமத்திலே வன்னியராகவிருந்த நல்லமாப்பாண முதலியார் ஒல்லாந்தருக்கு மாறாக இராசதரோகச் சூழ்ச்சி செய்கின்றாரென்ற கீழ்நாட்டுச் சிங்கள வன்னியனாரொருவர் எழுதி விடுத்த நிருபத்தைக்கொண்டு





ஒல்லாந்தர் அவரைப் பிடித்துப் பன்னீராயிரமிறைசால் (ஒன்பதினாயிரம் ரூபா) அபராதம் விதித்து அது கொடுக்கும்வரையும் சிறையிலிருக்குமாறு கொழும்புக்கனுப்பினர். அவருடைய நிலங்களையெல்லாம் பிடித்து அந்நிலத்து வருவாய்களை மூன்று வருஷத்துக்குக் குத்தகை கூறி விற்றனர். அக்குத்தகையை வாங்கி அதனாற் பெரும் பொருள் படைத்து விளங்கினவர் பெரிய தாமோதரம்பிள்ளையென்பவர். அவர் வீடு சித்திரக்கட்டுவீடெனப் பன்றிக்கோட்டு வினாயகராலயத்துக்கு முன்வளவிலிருந்து இற்றைக்குச் சில வருடங்களுக்கு முன்னர் அழித்துக் கட்டப்பட்டது. நல்லமாப்பாணமுதலியார் மனைவியார் எல்லைகாவேத நல்லை நாச்சியார் பனங்காம முதலிய அநேக கிராமங்களுக்கு அவரே சிற்றரசி. அவ்வரசியை விவாகஞ் செய்த நல்லமாப்பாணர் செல்வமும் அதிகாரமுடையராயினார். எல்லைகாவேத என்னும் பெயர் எலைசபேத் காதரினாவென்னும் கிறிஸ்தபெயரென்பர். நாச்சியார் என்பது வன்னிச்சிமாருக்குரிய சிறப்புப் பெயர். அது நாயகனார் என்பதன் பெண்பாற் சொல்லாகிய நாயகியார் என்பதன் சிதைவு. நாயன் என்பதன் பெண்பாற் சொல்லாகிய நாய்ச்சி நாச்சி என மருவி ஆர் விகுதி பெற்றதெனினும் பொருந்தும். நாயன் நாயகன் என்பன அரசர்க்குரிய பெயர்களாம். அதுநிற்க, நல்ல மாப்பாண முதலியார் சிறைப்பட்டுக் கொழும்புக்குச் செல்ல, எல்லைக்காவத நல்லைநாச்சியார் யாழ்ப்பாம் வந்து வண்ணார்பண்ணையில் வசித்தனர். அவர் தமது நாயகரை மீட்டன்றி நீராடவதும் முப்போதுண்பதுமில்லையென விரதங்கொண்டிருந்தனர். அது கேட்ட வைத்தியலிங்கச் செட்டியார் கொழும்புக்குச் சென்று பன்னீராயிரமுங் கட்டி முதலியாரை மீட்டுக்கொண்டு மீண்டனர். வன்னியனார் அப்பன்னீராயிரத்துக்கும் இருபத்தையாயிரம் பனைகளும், தம்மை மீட்டதற்குத் திருவுளங்கொண்டு, அநுக்கிரகித்த வைத்தீசுவரசுவாமிக்கும் தையல்நாயகியம்மையாருக்கும் நித்திய பூசைக்காகத் தேறாங்கண்டற் கிராமமுங் கொடுத்தனர். அதுகண்டு அக்காலத்திலே சிறாப்பாகவிருந்த பூலோகமுதலியாரும் சில திருப்பணிகள் செய்வித்தனர்.

## குமாரதேவேந்திர முதலி

வண்ணைச் சிவாலயத்துக்கும் சிதம்பராலயத்துக்கும் முதன்முதல் விளை நிலமுபகரித்தோர் குமாரதேவேந்திரமுதலியும், நுளம்பராயமுதலியுமாவர். இருவரும் அராலியிலே விளங்கியவர்கள். சண்முகநாயகமுதலியாருக்கும் சரவணமுத்து முதலியாருக்கும் பெரு நட்பினர். விசுவநாதசாஸ்திரியார் எழுதிய குறிப்பில் நுளம்பராயரோடு அநேக பிராமணர் வந்து மேல்பற்றிலே குடிகொண்டாரெனக் கூறப்பட்டிருக்கின்றது.

## நல்லமாப்பாண முதலி

நல்லமாப்பாண முதலியாருக்குக் கதிரை நாய்ச்சியார், குறிஞ்சி நாய்ச்சியார், அநுமாததை நாய்ச்சியார், வள்ளி நாய்ச்சியார் என ஒரு புத்திரரும் யாழ்ப்பாணத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தார்கள். கதிரைநாய்ச்சியாரை முகமாலை வயிரமுத்து வன்னியனாரும், வள்ளநாய்ச்சியாரைத் தியாக வன்னியனாரும் விவாகஞ் செய்தனர். இவ்வள்ளிநாய்ச்சியாருடைய மகளை விவாகஞ் செய்தவர் கதிர்காமவன்னியனார். அவர் புத்திரனாரே 1901 ல் இறந்த வண்டா வயிரமுத்து என்பவர். அவர் இறக்கும் போது வயசு 88. அவர் வேதாந்த நூலுணர்ச்சியிற் சிறந்தவர். அவர் நுவரைவண்டாவென்னுஞ் சிங்களப்பிரபு குடும்பத்தில் ஒரு பெண்ணை விவாகஞ் செய்தவர். அவர் ஐந்துவயசுச் சிறுவராயிருக்கையில் அவருடைய தந்தையாரைக் காணும்பொருட்டு இரகுநாதமுதலியாரும் ஒரு குருக்களும் போயிருந்தார்கள். அவருடைய தாயார் அவ்விருவருக்கும் வெற்றிலைச்சுருள் கொண்டுபோய்க் கொடுவென்று இருகையிலும் இரண்டு சுருள் கொடுத்தார். அவர் இரகுநாத முதலியாருக்கு முதற் சென்று ஒரு சுருளைக் கொடுத்துவிட்டுக் குருக்கள்பாற் சென்றார். அதற்கிடையில் அவருடைய தகப்பனார் அவரை அழைத்துக் குருக்களுக்கு முதலிற் சென்று கொடாது முதலியாருக்குக் கொடுத்ததென்ன புத்தியென்றுறுக்கினர். அவர் தந்தையை நோக்கி, ‘ஐயா, அஃதென்குற்றமன்று: குருக்களுக்கு இருகையாலுங் கொடுக்க வேண்டும். அதுபற்றி ஒரு கரத்திலிருந்ததை முதலிற் கொடுத்துவிட்டு இருகையாலுங் குருக்களுக்குக் கொடுக்கச் சென்றேன்’ என்றார். அது கேட்டுத் தந்தையும் குருக்களும் மற்றிருந்தோருஞ் சபாசென்று அவரை மெச்சினர். இதனால் அவர் சிறுவயது முதல் விவேகியாய் விளங்கினரென விளங்குகின்றது. அதுநிற்க, வன்னி நாட்டிலிருந்த மற்றைய வன்னயார்களும் ஒல்லாந்தரது கொடுமையாற் பதிவிடுத்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து தமது கையிலிருந்த பொருளையெல்லாம் தமதாளடிமைகளளோடு கூடியுண்டுடுத்துத் தொலைத்து ஒளி மழுங்கினர். ஆங்கிலேயர் அரசியல் தொடங்கியபின்னரும் தேசாதிபதிகள் சில வன்னிச்சிமாரோடு பேசும்போது சிற்றரசர்க்குரிய மரியாதை வாசகத்தோடு விளிததே பேசுவரென்றால் அவர்கள் நிலை இவ்வளவென்று சொல்லவும் வேண்டுமா.

## ஆங்கிலேயர் காலம்

இப்பால் ஆங்கிலேயர்காலம் கிட்டியதால், அவர்கள் வரலாற்றைக் குறித்துச் சிறிது சொல்வாம். அவர்கள் நாடு இங்கிலாந்து என்னுந் தீவு. இவ்வாங்கிலேயர் இற்றைக்கு 300 வருடங்களுக்குமுன் துருக்கி நாட்டுடன் மாத்திரம் வர்த்தகத் தொடர்புடையவராயிருந்தார்கள். அப்பால், அஃதாவது 1580 ன் மேல் பறங்கிக் காரருடைய முயற்சியையும், அதனால் அவர்களுடைய உயர்ச்சியையுங் கண்டு, தாமும் அவரைப்போல் கீழைத்தேயத் தொடர்புடையவராக வேண்டுமென்று விருப்பங் கொண்டார். அவ்வாறே நான்கு ஆங்கிலேய வர்த்தகர் கீழைத்தேயத்தை நாடி வழிக்கொண்டு சீரியாமார்க்கமாய் இந்தியாவை அடைந்தனர். அவர்களுள் ஒருவர் ‘அக்பார்’ அரசனிடத்தில் சேவகத்திலமர, மற்றை மூவரிலொருவர் பஞ்சாப்பிலிறந்துபோக, எஞ்சிய இருவரில் ஒருவர் துறவியாகிக் கோவையில்





நின்றுவிட, மற்றவராகிய ‘பிற்சு’ என்பவர் சீயம் மலாக்கா முதலியவிடங்களுக்குப் போய்ச் சுற்றிக்கொண்டு நமதூருக்கு மீளுகையில் 1589 ம் மார்ச் 5 உ கொழும்பில் வந்திறங்கினார். இவரே ஆங்கிலேயருள் முதன்முதல் இலங்கையைக் கண்டவர் எனலாம்.

அப்பால் 2 வருடம் கழித்து, இங்கிலாந்துக்கு அந்நாளில் அரசியாயிருந்த (Elicerbeth) எலிசபேத் என்பவர், பறங்கிகளுடைய கொள்கைக்கு மாறாய் இந்தசமுத்திரத்தில் போய் உலாவி வருமாறு சிலகப்பல்களைப் பிரயாணப்படுத்தி விட்டார். அவற்றுள் ஒன்று மலாக்கா நாடுவரையில் சென்று மீளும்போது, காலித்துறையில், 1592 ம் டிசம்பர் மீ 3உ வந்து நங்கூரம் பாய்ச்சிற்று அக்கப்பற் பெயர் (Edward Bonnaventure) எட்வேட் போனாவென்சர். இதுவே முதன்முதல் இலங்கைக்கு வந்த ஆங்கிலேயர் கப்பல் எனலாம்.

இதன்மேல், இந்தியநாடானது, பறங்கிகள் ஒல்லாந்தர் பிராஞ்சியர் ஆங்கிலேயர் என்னுமின்நான்கு சூரர்முன் ‘இதவென்றார்க்குரியது’ என்று வைக்கப்பட்டதோர் விலையுயர்ந்த இரத்தினப் பரிசுபோலாக, அதனைக் கையாடும்பொருட்டு ஆங்கிலேயர் ஏறக்குறைய 200 வருடம் வரையிற் போராடி நின்றமையால் இலங்கை அவர்கள் கருத்துக்கு வரவில்லை.

பின்பு, 1763 ல் சென்னைத் தேசாதிபதியானவர் இலங்கைமேல் காதல் கொண்டவராய், (Pybus) பைபஸ் என்னுந் துரையைக் கண்டியரசனாகிய கீர்த்தி ஸ்ரீ ராசசிங்கனிடம் அனுப்பி ஒருடன்படிக்கைக்குச் சம்மதம் கேட்டார். அதற்கு அரசன் சம்மதப்பட்டானில்லை.

அப்பால் 1782 ல் ஒல்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் போர் மூண்டது. அதபற்றி, சென்னைத்தேசாதிபதி இலங்கையிலுள்ள ஒல்லாந்த நாடுகளைப் பிடிக்குமாறு கப்பற்றளபதியாகிய (Sir Edward Hughes) ஹியூஸ் முரையுடன் ஓர் கப்பற்படையையும் (Sir Hector Munro) மனுறோ என்னுஞ் சோனதிபதியுடன் ஓர் சேனையையுமனுப்ப, அவர்கள் வந்து திகோணமலையைப் பிடித்தார்கள். இச்சமயத்திலும் சென்னைத் தேசாதிபதி ஒரு தூதனை இராசாதிராசசிங்கனிடத்துக் கனுப்பி, ‘நீ ஒல்லாந்தருடன் போர் செய்வையாயின் நாங்களுதவிசெய்வோம். அதன்மேல் நீயும் நாமும் ஐக்கியமாயிருக்கலாம். இது உனக்குடன்பாடாயின் சொல்லுக’ என்று கேட்பித்தார். அதுகேட்டு இராசாதிராசசிங்கன், இவர்களும் பின்னால் நமக்குச் சத்துருக்களாவர்தாமே’ என்றெண்ணி உடன்படாது மறுத்தான்.

அடுத்த வருடத்தில் ஒல்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் சமாதானமிடைப்பட்ட மையால் திரிகோணமலை மறுபடியும் ஒல்லாந்தர்க்கு விடப்பட்டது.

இப்படியிருக்கையில் மீண்டும் 1795 ல் இங்கிலாந்துக்கும் ஒல்லாந்துக்கும் போர் தொடங்கிற்று. அப்போது சென்னைத் தேசாதிபதியாயிருந்த நரேந்திரப் பட்டமுடைய (Lord Oobart) ஹோபாட்டு என்பவர் (Gen. Steward) ஸ்துவாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனாதிபதியுடன் ஒரு சேனையை இலங்கைக்கனுப்பினார். அச்சேனாதிபதி உடனே திரிகோணமலையை வளைந்து மூன்று வாரமாகக் காவல் படையோடு பருத்தித்துறையிலிறங்கி யாழ்ப்பாணஞ் சென்று அதனையம் எதிர்ப்பாராருமின்றிக் கவர்தான். அடுத்த 1796 ல் நீர்கொழும்பையுமவ்வாறு பிடித்தான். அதன்பின்பு கொழும்பை நோக்கி வழிக்கொண்டு கழனியாற்றைத்தாண்டி அந்நகரிற்போய் எதிரூன்றினான். அங்கே பெப்ரவரி 16உ மலாயர் படையொன்று ஒரு பிராஞ்சுத் தலைவனோடும் வந்தும் எதிரிட்டுச் சிறிது நேரத்தில் தலைவனையும் மடியவிட்டோட, ஸ்துவாட்துரை வெற்றிமாலையணிந்து, ஜயபேரிகள், 'இலங்கை நாடரைப் பிணிவிட்டது! பிணிவிட்டது!! பிணிவிட்டது!!! கொழும்புநகரும் பிடிபட்டது! பிடிபட்டது!! பிடிபட்டது!!! என்றொலிப்பதுபோல் முழங்க, கோட்டைக்குச் சென்று துவஜாரோகணஞ் செய்தார். இதன்பின் சின்னாளில் காலியும் பிடிபட்டது. இவ்வாறே ஒல்லாந்தர் 138 வருடமாகக் கட்டியாண்டுவந்த கரைதுறை நாடுகள் எல்லாம் ஒருங்கே ஆங்கிலேயருடைய தண்குடைநிழற்கீழ்ப்பட்டன.

இவ்வாறு ஆங்கிலேயருக்கு எளிதில் வெற்றி கிடைத்தற்குக் காரணம் ஒல்லாந்தருடைய முயற்சியின்மையையும் அவர் சேனாவீரருடைய ஐக்கிய மின்மையுமேயன்றி மற்றொன்று. கொழும்பில் ஒல்லாந்த தேசாதிபதியாய்க் கடைசியிலிருந்த 'வான் அஞ்சல்பேக்' என்பவனை ஆங்கிலோய் மேற்சென்று காக்காது விட்டிருப்பரேல், அவனுடைய சேனாவீரர் அவனைக் கொன்றிருப்ப ரென்றால், அவர்களுடைய கீழமைவைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ! 'துற்புத்திமந்திரியால் அரசுக்கீனம்' என்றபடி கிழமைவில்லாப் படைவீரரால் அவர்கள் அரசுக்கு இவ்வாறு சீக்கிரத்தில் கேடுண்டாயிற்று. இவ்வாறே கொடியரிற் கொடியராகிய ஒல்லாந்தருடைய அரசியற்காலம் 1796ம் பிப்பரவரி மாசத்தோடு தொலைந்தது. அவர் காலத்தில் வழங்கிவந்த சில சட்டங்கள் மாத்திரம் தற்காலத்தும் பிரயோகத்திலிருக்கின்றன. தோம்பு, கந்தோர், தரணி முதலிய ஒல்லாந்தர் சொற்கள் இன்றும் வழங்குகின்றன.[56]

இவ்வண்ணம் நடுநாடொழிந்த ஏனைய நாடெல்லாம் ஆங்கிலேயருடைய கைப்பட்டவுடன், சென்னைத் தேசாதிபதியுடைய ஆஞ்ஞைக்குள்ளாகி, 'இந்நாடு (East India Company) கிழக்கு இந்திய வர்த்தகத் கூட்டத்தாருக்கு விடப்படத்தக்கதோ, அல்லது இங்கிலாந்தரசுக்கு உபராசாங்கமாக உபகரிக்கப்படத்தக்கதோ' என்னுங் கேள்விக்கிடனாய் யோசனையில் நின்றது. அன்றியும் ஒல்லாந்தர் சமாதானப் படுங்கால், அவரிடத்தில் மீளவும் ஒப்பித்து விடலாமெனவுமோர் எண்ணம் ஆங்கிலேயர் மனத்திற் கிடந்தது.

56. *அ. முத்துத்தம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாண சமூக, பொருளாதாரத்தகவல்களும், யாழ்ப்பாண மாந்தர் பற்றிய தகவல்களும் சிறப்பானவை: சரிவர அவரால் சித்திரிக்கப்பட்டுள்ளவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்படியிருந்தும், சென்னைத் தேசாதிபதி இலங்கை அரசியல் முறையைச் சீரிடத்துணிந்து, சென்னையினின்றும் உலகவியலறியாதவனும் சோம்பனுமாகிய (Mr. Andrews) அந்திரேயஸ் என்னும் ஓர் துரைமகனைச் சகலவித அதிகாரங்களோடும் இலங்கைக்கனுப்ப, அவன் இலங்கையையடைந்து, முன்னிருந்த இறைதிரட்டிகளெல்லோரையும் நீக்கிப் புதிதாய்த் தமிழரை நியோகித்து, வரியின்றியிருந்த சுரோத்திரியம் மானியம் முதலிய நிலங்களுக்கு வழக்கத்துக்கு விரோதமாக வரிகளை விதித்தும், இதுபோன்ற வேறு தீமைகளையுஞ் செய்தும், காருண்ணியமற்றவனாய் அதிகாரஞ் செலுத்தி வந்தான். இதனைப் பொறுக்க ஆற்றாத சிங்களப்பிரபுக்கள் சிலர், சில ஒல்லாந்தக் குடிகளைத் துணைக் கொண்டு சனங்களைத் திரட்டி கொழும்புக்கும் கண்டிக்கும் இடையிலிருந்த அரண்களையெல்லாம் கைப்பற்றிக் கொண்டு மற்றையவிடங்களுக்குச் சென்று, அங்கெதிர்த்த ஆங்கிலேயரெல்லோரையும் கொன்றும் காயப்படுத்தியும் முதுகிடச் செய்து சிலநாளாக ஆங்கிலேயருக்குப் பெருந் துன்பஞ் செய்து வந்தார்.

## பண்டாரவன்னியன்

அக்காலத்திலே வன்னி காட்டிலே மிக்க செல்வமும் அதிகாரமுமுடையவனாயிருந்து அவ்விடத்தை யாண்ட பண்டாரவன்னியனும் படையொன்று சேர்த்துக் கொண்டு ஆங்கிலேயருக்கு மாறாகவெழுந்து, ஆங்கிலேய போர்வீரர் சிலரைத் தாக்கிக்கொன்று எஞ்சினோரை முதுகிடச் செய்தான். சிறிது காலத்தில் ஆங்கில படைவீரர் சென்று அவனையும் அவன் படையையம் கொன்றொழித்து அவன் பொருளையெல்லாம் கவர்ந்தார்கள். ஈற்றில் ஆங்கிலேயர், சிறுபாம்பாயினும் பெருங்கோல் கொண்டடிக்க வேண்டுமென்றபடி, ஒரு சேனையோடுந் சிங்களவரை எதிர்த்து தம்பக்கத்தில் பலரையிறக்கக் கொடுத்தும் ஆண்மைவிடாது அச்சிங்களப்படையைச் சுட்டு வெட்டிப் பிடித்தடித் துதைத்து வதைத்துக் குத்தி மொத்தி ஏற்றிப் பற்றி வெற்றி கொண்டு போதும் போதுமென்றோடச் செய்தார்.

இதனைக்கேள்வியுற்ற சென்னைத் தேசாதிபதியாகிய (Lord Hobart) ஹோபார்ட் நரேந்திரர் (Colonel De Mentran) தெமியூறான் என்னும் படைத் தலைவனை அக்கலக விசாரணையின் பொருட்டு இலங்கைக்கனுப்பினார். அவனும் இலங்கைக்கு வந்து அதன் விருத்தாக்கங்களையெல்லாம் ஆதியோடந்தமாகச் சென்னைக்கெழுதியனுப்பினான். அதுகேட்ட தேசாதிபதி காலந்தாழ்க்காது உடனே இலங்கையை இங்கிலாந்து ராசாங்கத்துக்கு உபராஜாங்கமாக்கினான். இதனை இங்கிலாந்தில் அரசு வீற்றிருந்த மூன்றாம் ஜார்ச் அரசர் மகிழ்வோடங்கீகரித்து அதனை ஆளும்படி நாத்து (Govenor North) என்பவரைத் தேசாதிபதியாக அனுப்பினார்.

அவர் 1798ம் அக்டோபர் மீ இங்கிலாந்து சேர்ந்து தேசாதிபதியங் கைக்கொண்டார். அவர் தெமியூறான் என்பவருடைய எண்ணப்படி சிங்கள

நாடுகளிலே அதிகாரிகளாயிருந்த தமிழரை நீக்கிச் சிங்கள அதிகாரிகளையே வைத்தனர். இதற்கிடையில் ஒல்லாந்தக் குடிகள் தாங்கள் அனுபவித்த சுவாதீனங்களைக் கைவிட மனம் பொருந்தாது ஆங்கிலேயருக்கு மாறாகக் கலகஞ் செய்ய முயன்றனர். யாழ்ப்பாணத்திலும் சில ஒல்லாந்தர் அதற்குடன்பட்டனர். அவரோடு சில வன்னியரும் கூடினர். அஃதுணர்ந்து நார்து தேசாதிபதி அவர்களுடைய வீடுகளையும் நிலங்களையும் கவர்ந்து கொண்டு ஊரைவிட் டோட்டினர். அவ்வளவில் அவர்களுமடங்கினார்கள். ஆங்கிலேயர் ஒல்லாந்தரைப் போலத் தென்ன மரங்களுக்கும் ஏனைய பழவிருஷங்களுக்கும் மரமொன்றுக்கு ஒரணா விரிவிதித்துக் கண்டிப்பாக வாங்கி வந்தனர். வரிதிரட்டிவந்த தமிழத் தியோகஸ்தர் கொடுமையால் மீண்டுங் குடிகள் கலகங்கள் விளைப்பாராயினர். அக்கலகங்களுக்குக் காரணராயிருந்த உத்தியோகஸ்தர்களையெல்லாம் நார்து தேசாதிபதி விசாரித்து அவர்களை உத்தியோகத்தினின்றும் நீக்கினர். கர்னல்பார்பட் வடமாகாண அதிகாரியாக நியமனம்பெற்ற யாழ்ப்பாணத்துக்கு வந்தார். அவருக்கு உதவி அதிகாரிகள் அமில்தார் எனப்படுவர். மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை என்னுமிடங்களில் ஒவ்வோர் அமில்தார் இருந்து இறை திரட்டி வந்தார்கள். ஒவ்வோர் அமில்தாருக்கும், எழுத்துக்காரன், மணியகாரன், ஆராய்ச்சி, சராப்பு, கணக்கன், கொத்தவால், கண்காணி, பதினைந்திருபது சேவகர்கள், ஒரு விளம்பரப் பறையன் என்னுமிவ்வளவு வேலைக்காரரிருந்து கருமம்பார்ப்பர். அந்தநாளில் அமில்தாருக்குச் சம்பளம் ரூ. 75. எழுத்துக்காரனுக்க (கிளாக்) சம்பளம் ரூ. 13.50. சராப்பு சம்பளம் ரூ. 11.25, கொத்தவால், கணக்கன், ஆராய்ச்சி, மணியகாரன் இவர்களுக்கெல்லாம் தனித்தனி ரூ. 8.25. சேவகர்க்கு ரூ. 2.75. பறையனுக்கு ரூ. 1.50. இந்த சம்பளவிகிதங்கள் சிற்சில பகுதிகளிலே கூடியுங் குறைந்துமிருக்கும்.

## அதிகாரிகள்

அந்நாளிலிருந்த் மாகாண அதிகாரிகள், அமில்தார்கள். அவர்களுக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்கள் யாவரும் மிக்க நேர்மையுடையராயிருந்தார்கள ளெனறு எண்ணவிடமில்லை. அவர்கள் வியாபாரமுஞ் செய்து பொருளீட்டி வருவார்கள். கர்ணல்பார்பட் என்பவரும் தேங்காய்க் கொப்பரை எள்ளு முதலியன வாங்கி அந்நிய தேசங்களுக்கனுப்பி வியாபாரம் பண்ணி வந்தாரென்றால் மற்றையோர் செய்தி கூறவும் வேண்டுமோ? பார்பட்டுக்கு இவ்வியாபாரத்தில் அனுகூலியாயிருந்தவர் மன்னார் அமில்தார் சுப்பராயபிள்ளையென்பவர். யாழ்பாணத்திலே பொன்னம்பலமுதலியார் கர்ணல் பார்பட்டுக்கு இவ்வியாபாரத்தில் கூட்டாளியாயிருந்தனர். இவர் மானிப்பாயிலிருந்தவர்.

கார்து தேசாதிபதி இலங்கைச் சுதேசிகளுக்கு உயர்தர ஆங்கிலக்கல்வி பயிற்றுமாறு 1799 ம் டிசெம்பர் 15 உ மகாவித்தியாசாலையொன்று ஸ்தாபித்தனர். அவ்வித்தியாசாலைக்குச் சிங்களர் தமிழர் பறங்கிகள் என்னுமுத்திறத்தாரும்





தம்மக்களை அனுப்பிக் கல்வி பயிற்றுவராயினர்.

## முத்துச்சாமி

இதற்கு முன் வருஷம் கண்டி நாட்டரசனாகிய இராசதிராசசிங்கன் சந்ததியின்றி இறந்தான். முதன் மந்திரியாகிய பிலாமைத்திலாவை என்பவன் அவ்வரசனுடைய கொழுந்திமகனாகிய கண்ணசாமி யென்பவனுக்கு முடிசூட்டி ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் என்னும் பட்டப் பெயருமளித்தான். இறந்த அரசனுடைய பட்டத்துத்தேவிக்குச் சகோதரனும் அப்பட்டத்தக்குத் தகுதியுடையவனுமாகிய முத்துச்சாமியென்னுங் கோமகன், ஒருகாலம் யுத்தஞ் செய்து பட்டத்துக்கு வழக்கிடுவானென்றெண்ணி, முதன்மந்திரி அவனைக் கொல்லப் பல சூழ்ச்சிகள் செய்தான். அஃதுணர்ந்து முத்துச்சாமி நார்து தேசாதிபதியிடம் போய்த் தனது குறையைச் சொன்னான். நார்துதேசாதிபதி முத்துச்சாமிக்கு அபயங் கொடுத்து, மெய்க்காப்பின்பொருட்டு ஒரு சிற தளமுங் கொடுத்து அவனை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினார். முத்துச்சாமி இங்குவந்து சிறிதுகாலந் தங்கினான். அவன் வந்து வசித்த வீடு கோட்டைக்குள்ளேயிருக்கும் இராசமாளிகை.

## இருபாலைச் செட்டியார்

அவன் யாழ்ப்பாணத்தில் இருக்கும்போது அவனைக் கொடிய நாகமொன்று தீண்டிற்று. அநேக விஷவைத்தியர் தீர்க்க முயன்றும் விஷந்தீராது தலைக்கேறிற்று. வைத்தியத்தில் இணையில்லாத இருபாலைச் செட்டியாடைய பெயர் எங்கும் வியாபித்திருக்கும் அந்நாளில் சிறவயதினராயிருந்தமையால் அவரை முதலிலெ இராசமாளிகையார் அலட்சியஞ் செய்தார்கள். மற்றவைத்தியர்கள் கைவிட்டபின்னர் இராசமாளிகையார் செட்டியாரிடஞ் சென்று அவரையழைத்தார்கள். அவர் ஒரோலைநறுக்கெடுத்து அதில் இருபாலைச் செட்டி என்றெழுதி 'இதனைக் கொண்டு போய் அக்கோமகன் முன்னே வையுங்கள் விஷந்தீர்ந்துவிடும்' எனக்கூறிக் கொடுத்தார். அவ்வாறு செய்ய விஷந்தீர்ந்து கோமகனும் நித்திரைவிட்டெழுந்தான் போலெழுந்தான். அவன் இருபாலைச் செட்டியாருக்குத் தந்தப்பல்லக்கும் அநேக வெகுமானங்களும் அனுப்பினான். செட்டியார், 'நாழியரிசியும் நான்கு முழமும் போதுமென்று விரதம் பூண்டவெனக்கு இவையெல்லாம் துல்பகரம். என்னைத் துன்பத்துக்காளாக்க வேண்டாமென விண்ணப்பஞ் செய்கின்றேன்' என்று கூறி அவைகளைத் திருப்பிவிட்டார்.

இதற்குச் சிலநாளைக்கு முன் முத்துச்சாமி கோமகன் விசுவநாதசாஸ்திரியாரை அழைத்துத் தனக்குப் பட்டங்கிடைக்குமோ கிடையாதோவெனத் தனது சாதகத்தை ஆராய்ந்து பார்த்துச் சொல்லுமாறு கேட்டான். சாஸ்திரியார், 'பட்டங்கிடைக்கும்: அதுவும் சமீபத்திலே கிடைக்கும்: பட்டத்துக்கு முன்னும் பின்னும் அரிபகையுண்டு' என்றார். அதகேட்ட கோமகன், என்ன பகை வந்தாலும் பட்டம் வந்தாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுமென்று மகிழ்ந்து, அவருக்குத் தக்க வெகுமானமும் ராஜசோதிடரென்னும் பட்டமுமளித்தான். முன்னும் பின்னும் அரிபகையென்பதற்கு, முன்னே அரிபகை பாம்புப்பகை எனவும், பின்னே அரிபகை தலையரியும்பகை எனவும் பொருளாம். சாஸ்திரியார் சொல்லிய சிலதினங்களிற் கோமகனை நாகந்தீண்டிற்று. அது தீர்ந்தவுடன் கோமகன் சாஸ்திரியாரை அழைத்து மீண்டுஞ் சில பரிசுகள் வழங்கினான்.

## முத்துச்சாமி மன்னனாதல்

அதன் பின்னர் ஆங்கிலேயர் முத்துச்சாமியை யாழ்ப்பாணத்தினின்றும் அழைத்துக் கொண்டு போய், 1803ம் மார்ச் 8உ கண்டிநகரில் மிக்க சம்பிரமத்தோடு முடிசூட்டிக் கண்டியரனாக்கி, அவனோடு ஒருடன்படிக்கையுஞ் செய்து கொண்டனர். சிலதினங்களின் பின்னர், முன் ஆங்கிலேயர்க்கஞ்சி ஒளித்தோடிய ஸ்ரீ விக்கிரம ராசசிங்கனென்னும் அரசனுடைய மந்திரியாகிய பிலாமைத்தலாவையினது வஞ்சவலையில் நார்து தேசாதிபதி அகப்பட்டுத், தாம் முன்னே முத்துச்சாமியரசனோ: செய்த உடன்படிக்கையை மாற்றி, முத்துச்சாமியை இராசபதத்தினின்று நீக்கவும், விக்கிரராசசிங்கனை மீண்டங் கண்டியரனாக்கவும், முத்துச்சாமிக்கு வருஷ மொன்றுக்கு ரூபா முப்பதினாயிரம் கண்டியரசன் கொடுத்து வரவும், முத்துச்சாமி யாழ்ப்பாணத்திலே ஓரிராசமாளிகைகட்டி இராசமரியாதையோடு அதிலிருக்கவும் புதியவுடன்படிக்கை செய்தார். அதனை முத்துச்சாமியோடு கலவாமல் நார்து தேசாதிபதி தாமாகவே செய்தார். இது தேசாதிபதியினது நேர்மையின்மையை விளக்குகின்றது.

இப்படிசெய்தும் பிலாமைத்தலாவையினது வஞ்சகச் சூழ்ச்சியால் 1803 ம் வருஷம் யூன் மாதம் 26ந் தேதி ஆங்கிலபடையும் முத்துச்சாமியும் கண்டியரசன் கைப்பட சிங்களமந்திரி ஆங்கிலசேனாதிபதியை நோக்கி, முத்துச்சாமியை எங்களிடமொப்புவித்தால் உங்களையெல்லாம் உயிர்பிழைக்க விடுவோமென் றச்சுறுத்தி, முத்துச்சாமியைக் கைப்பற்றிக் கொண்டு போய் அரசன் முன்னிலையில் விட்டான். அரசன் முத்துச்சாமியை உடனே கிரபங்கஞ் செய்வித்தான்.

## முத்துச்சாமிப்பிள்ளை

இதற்குச் சில வருஷங்களுக்கு முன்னே தஞ்சைச் சமஸ்தானத்தில் மந்திரியாயிருந்த துளசிராயருக்கு ராய சகாயராயிருந்த காந்தட்டான் குடி முத்துச்சாமிப்பிள்ளையென்பவன் துருக்ககலத்துக்கு அஞ்சிக் கண்டிக்குப் போக யாழ்ப்பாணமார்க்கமாகய் வந்தான். அவன் தன்னை இன்னானொன்றறிவிக்காது யாழ்ப்பாணத்திற் குடிகொண்ட சோழதேத்தார் வீடொன்றிலே சிலகாலந் தங்கிப் பின்னர் கண்டி சமஸ்தானத்தையடைந்து அங்கிருக்கையில், அங்கும் யுத்தந் தொடங்கியதால் கொழும்புக்குச் சென்று யாழ்ப்பாணத்தக் குடும்பமொன்றில்





விவாகஞ் செய்து, ஆங்கிலப்படைத்தலைவனோடு நட்புக்கொண்டு, படைக்கு வேண்டும் பண்டங்கள் கொடுக்கும் உத்தியோகம் பெற்றுப் பெரும் பொரளீட்டி வாழ்ந்தான். முத்துச்சாமிராசா யாழ்ப்பாணம் வந்திருந்தபோது முத்துச்சாமிப் பிள்ளைக்குத் திருமுகமனுப்பி அவனை வரவழைத்துத் தனக்குத் துணையா யிருக்கும்படி கேட்டுத் தன்னோடிருத்தினான். முத்துச்சாமிராசா கண்டிக்கு மீண்டபோது முத்துச்சாமிப்பிள்ளையும் கொழும்புக்கு மீண்டான். மாக்டோவல் சேனாதிபதியும் நார்து தேசாதிபதியும் இம்முத்துச்சாமிப்பிள்ளையிடத்தில் மிக்க விசுவாசமுடையவராயிருந்தார்கள். மன்னாரில் அமில்தாராக அந்நாளிலிருந்த சுப்பராயபிள்ளை முத்துச்சாமிப்பிள்ளைக்குச் சகோதரி புத்திரன். முத்துச்சாமி புத்திரன் ஆறுமுகசாமி 1815ல் கண்டியரசன் சிறையாகி வேலூருக்குச் செல்லும்போது கொழும்பில் அவனுக்கு வேண்டுமுதவி புரிந்தான். அவன் மகன் குமாரசாமிமுதலி.

## நாட்டுக்கோட்டைச் செட்டிகள்

அதுநிற்க, 1800ல் கோமாரியால் வடமாகாணத்திலுள்ள மாடுகளெல்லாம் பரிநாசப்பட்டன. அதனால் குடிகளநைடத நஷ்டம் மிகப்பெரிது. உழவுக்கு மாடில்லாமையால் பயிர்ச்செய்கையும் அவ்வருஷம் குன்றியது. இவ்வருஷத்தி லேயே நாட்டுக்கோட்டைச் செட்டிகள் யாழ்ப்பாணத்திலே முதன் முதலாக நெல்லு வாணிகஞ் செய்யத் தொடங்கினர். அவர்கள் நாகபட்டினம் முத்துப்பேட்டை முதலிய விடங்களிலிருந்து தோணிகளிலும், வன்னிநாட்டிலிருந்து பொதிமாடு களிலும் நெல்லுக் கொண்டு வந்து பண்டசாலைகளில் வைத்து விற்று வந்தார்கள்.

## சுறாவாய் கட்டிகள்

அவ்வருஷம் முத்துக்குளிப்பும் வந்தது. அதற்கு அச்சமத்திரத்திலுள்ள சுறாக்கள் குளிகாரரைத் தாக்கமாமல் அவைகளை வாய்கட்டும் பொருட்டு வழக்கம்போல் மந்திரவாதிகளை அரசினர் அழைத்தார்கள். அந்மந்திரவாதிக ளுள்ளே சிலர் கத்தோலிக்க மதத்தினராயிருந்தமையால் அவர்களைக் கத்தோலிக்க குருமார் அம்மந்திரத்தொழில் செய்யாது தடுத்தனர். அதனை அரசினர் அறிந்து குருமாரைக் கண்டித்து மந்திரவாதிகளைத் தமது தொழிலை வழக்கம்போலச் செய்துவருமாறு கட்டளையிட்டனர். இச்சுறாவாய் கட்டமந்திரத் திலே யாழ்ப்பாணத்த முக்கியரும் மயிலிட்டிக் கரையாருஞ் சிறந்தவர்கள். அக்காலத்திலே முத்துக்குளிப்புக்குச் செல்லும் இம்மந்திரவாதிகள் ஒவ்வொருவருக்கும் சம்பளம் ஏழரைப்பறை நெல்லு.

அது நிற்க அவ்வருஷத்தில் முத்துக்குளியால் அரசினர்க்கு இரண்டிலஷ ரூபா கிடைத்தது. அக்குளிப்பில் சிப்பிவாங்கிய முத்துச்சாமிப்பிள்ளையும் மகனும் பெருந்தொகைப் பொருள் படைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதானைமார்

1805ம் வருஷம் (Sir Thomas Maitland) மேயிற்லண்ட் என்பவர் தேசாதிபதியாக வும், வஷிங்டன் என்பவர் சுப்பிறீங்கோட்டுத் தலைமைநீதிபதியாகவும், றட்னி என்பவர் கலோனியல் செக்கிறிற்றேறி (லிகிதர்) ஆகவும் நியமனம் பெற்று வந்தனர். இத்தேசாதிபதி காலத்தில் யாதோர்யுத்தமுமின்றி இலங்கை முழுதும் அரசியல் சீராக நடப்பதாயிற்று. 1806 ம் வருஷம் ஆடி மாசத்தில் யாழ்ப்பாணத்தில் ஊர்கள்தோறும் விதானைமார்கள் நியமிக்கப்பட்டார்கள். அக்காலத்தில் அரசினர் பெரும்பாலும் குலத்தாலும் குணத்தாலும் செல்வாக்காலும் சம்பத்தாலும் சிறந்தவர்களையே விதானமாராக நியமித்தார்கள். அவர்கள் கலகம் சண்டை களவு அதிக்கிரமமுதலிய முறைகேடுகள் சம்பவியாவண்ணம் ஊரைச்செவ்வே பாதுகாத்து வந்தார்கள். இத் தேசாதிபதியால் பறங்கிக்காரர் காலமுதல் வாங்கப்பட்டு வந்த நகைவரி 1806ம் வருஷம் அக்கிரமமான வரியென்று நீக்கப்பட்டது. அதுகண்டு யாழ்ப்பாணம் முழுதும் தேசாதிபதியையும் ஆங்கில வாசியலையும் புகழ்ந்து கொண்டாடிற்று. இந்நகை வரிக் குத்தகையை நடாத்தியவர்கள் பெரிய தாமோதரம்பிள்ளையென வண்ணார்பண்ணையில் அந்நாளில் விளங்கியவர்.

## நகைவரி நீக்கம்

இத்தேசாதிபதி காலத்தில், முன்னே வாய்த்தபடி வாங்கப்பட்ட வரிகளைச் சட்டப்படி கூடாமலும் குறையாமலும் வாங்கும்படி கட்டளை செய்யப்பட்டது. நெல்லுப் பத்திலொருபகுதி கொள்ளப்பட்டது. பறையொன்று இரண்டு பணமாக விற்றுவந்த உப்புப் பன்னிரண்டு பணமாக்கப்பட்டது. கள்ளுவரியுஞ் சாராயவரியும் குத்தகையாக விற்கப்பட்டது. அக்காலத்தில் இவைகளால் அரசுக்கு வந்த இறை மிகவும் அற்பமே.

பறங்கிக்காரராலும் ஒல்லாந்தராலும் தாழ்வெய்திய சாதிசமயநிலைகள் ஒல்லாந்தவரசின் கடைக்கூற்றிலே ஒருவாறு தலையெடுப்பனவாயின. ஆயினும் வெளிப்படையாய் நிலவத் தொடங்கியது. ஆங்கிலவரசு வந்த நாள் முதற்றொட்டே யாம். குடிகளும் தத்தம் வருணாசாரத்தையும் சமயசாரத்தையும் சுயேச்சையாகக் கைக்கொண்டெழுகுஞ் சுவாதீனம் ஆங்கிலவரசாற் கொடுக்கப்பட்டது. முன்னர்க்கோயில் போலாது கொட்டில் போல இலைமறைவிற்கிடந்த கோயில்க ளெல்லாம் வெளிப்படத் தொடங்கின. ஆராதனைகள் வாத்தியகோஷங்களோடு நடக்கத் தொடங்கின. இடித்த கோயில்களை மீளக் கட்டிக்கொள்ளும்படி ஆங்கிலவரசு வந்தவுடன் அநுமதி கொடுக்கப்பட்டது. சைவாலயங்களுக்கு அர்ச்சகர்களும் அரசினரால் நியமனம் பெற்றார்கள். அவர்களுக்குரிய மரியாதை களும் வரிசைகளும் ஆணைப்பத்திர மூலமாகத் தேசாதிபதி கைச்சாத்தோடு நியமனநிருபம் பெற்றாருள்ளே முதல்வர் நல்லூர்க்கந்தசுவாமி கோயில் அர்ச்சகர்





கிகிவாகனஐயர் புத்திரராகிய வாலசுப்பிரமணிஐயர். இவருக்கு நியமனபத்திரம் 1807ம் ஜனவரி 5உ தேசாதிபதி தோமாஸ் மேயிற்லண்ட் (கவனர்) அவர்களாற் கொடுக்கப்பட்டது. அப்பத்திரம் இன்றும் அவர் சந்ததியாரிடமுளது. வித்துவான் அப்புக்குட்டி ஐயரெனப்படுபவர் இவ்வையரே. தற்காலம் பிரசித்தியுற்று விளங்கும் உபயவேதாகம பண்டிதர் கனகசபாபதிஐயர் இவர் தௌகித்திரர்.

இதுகாறும் கிராமாதிகாரிகள் எண்ணப்படி நடாத்தப்பட்டு வந்த குடிகள், ஆங்கிலவரசர் வரிகளை வாங்குங் கிரமத்தாலும் நீதியாலும் அன்பினாலும் வசீகரிக்கப்பட்டவர்களாய் இவ்வரசே தரும ராச்சியமென்று சொல்லத் தொடங்கினார்கள்.

1812 ல் பிரவுன்றிக்குப்பிரபு தேசாதிபதியானார். கண்டியரசனது மந்திரிமார் செய்த வஞ்சனையால் ஆங்கிலேயருக்கும் கண்டியரசனுக்கும் கொடியயுத்தம் மூண்டது. ஆங்கிலேயர் சேனை அனேகரை மாளக்கொடுத்தும் அஞ்சாதும் தளராதும் யுத்தஞ் செய்து கண்டியரசனை 1815 ம் வருஷம் பிப்பரவரி மாதம் 18ந் திகதி சிறை செய்து கண்டிநாட்டைக் கைக்கொண்டது. அவ்வளவில் இரண்டாயிரத்தைஞ்நூறு வருஷம் வரையில் அப்படியாக வந்த சிங்களவரசு போய் அங்கிலவரசு நிலைகொள்ளத் தொடங்கியது. இதனோடு இலங்கை முழுதும் ஆங்கிலவரசுக் கடங்கியொழுகத் தலைப்பட்டது. ஆங்கிலேயர் யாழ்ப்பாணத்திலும் கச்சேரி இராணுவசாலை நீதிசாலை முதலியவிடங்கள் கட்டினார்கள். வடமாகாண அதிகாரியாகக் கூப்பர் துரை வந்தார். அவர் ஊரிலேயுள்ள பிரபுக்கள் தங்கள் அடிமையாட்களை வருத்தி இராப்பகல் வேலைகொள்வதைத் தடுத்துக் கிரமமாக நடாத்தும்படி செய்தனர்.

## நிலாவறை

1824ம் வருஷம் பாண்ஸ்பிரபு தேசாதிபதியானார். அவர் காலத்தில் ஊர்கள்தோறும் போக்குவரவுக்குரிய மார்க்கங்களைத் திருத்தினர். ஊர்களிலே கள்வரால் வருந்துன்பங்களைக் குறைத்தனர். ஊரிலே தலைமைக்காரர் குடிகளை வருத்தாமல் வரிகளை வாங்கும்படி விதித்தனர். இவர் புத்தூரிலே நவக்கிரி என்னுமிடத்திலுள்ள நிலாவரையென்னும் வற்றாத வாவியை நீர்ப்பாய்ச்சலுக்கு உபயோமாம்படி அமைக்குமாறு ஒரு பெரிய நீராவியந்திரத்தை வரவழைத்து பாண்ஸ்துரையைக் கொண்டு பரீசிலிப்பர். அவ்வியந்திரத்தால் எட்டு நாள் வரையும் இறைத்தும் அந்நீர்நிலை சிறிதும் குறையவில்லை. முடிவில் அந்நீர்நிலையின் கீழே கந்தக நீரிருத்தலால் அது பயிர்களுக்கு உதவாதநீரெனத் தள்ளினர். இந்நீர்நிலையினது ஆழம் 144 அடி. அகலம் முப்பதடி. இது இடியேறுவிழுந் துண்டானதென்று பால்டியஸ் (Baldenus) கூறுவதாக (Sir E. Tennernt) டெனண்டு பண்டிதர் கூறுகின்றார். ஸ்ரீ ராமர் தமது சேனைக்கு நீரூட்டும் பொருட்டுத் தமது வச்சிராஸ்திரம் விடுத்து இந்நீரினை யுண்டாக்கினரென்பது கர்ணபரம்பரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடியேற்றை ஒருவாறெடுத்து ஆயுதங்களிலமைத்துக் கொள்ளும் வன்மை நம்பூர்வ ஆரியர்க்குண்டென்பது பழைய சரித்திரங்களாலே துணியப்படும். அதுவே வச்சிராயுதமெனப்படுவதாகும். பால்டியஸ் பாதிரியார் இடியேற்றாலுண் டாயது என்று கூறியது இக்கர்ணபரம்பரையைக் கொண்டுபோலும், அது நிற்க,

1818 - 19 ல் இலங்கையில் முதன்முதல் பேதிநோய் தோன்றிப் பரவி இலங்கை முழுதையுங் கலக்கியது. அப்போது மாரியம்மன் கோயில்கள் தோறும் பெரும்விழாவும் பூசைகளும் சிறப்பு நடந்தன.

## அமெரிக்கமிஷனரி

1823 ல் வட்டுக்கோட்டைச் செமினேரி என்னும் ஆங்கிலகலாசாலை அமெரிக்கன் மிஷன் என்னும் சங்கத்தாராற் தாபிக்கப்பட்டது. 1816 ல் அமெரிக்கன் பாதிரியார் யாழ்ப்பாணம் வந்தனர். இவர்கள் தமத கிறிஸ்த சமயத்தைப் பரப்புவதற்குப் பலவாறு முயன்றும் தக்கவாறு பயன்படாமையால் கலாசாலையே தக்க உபாயமெனத் துணிந்து இக்கலாசாலையைத் தாபித்தார்கள். அங்கே அநேகர் சென்று வேதனமின்றிக் கல்விகற்றுப் பெரும்பண்டிதராயினர். அதனோடு கிறிஸ்தவருமாயினர். அவர்கள் இராசாங்க உத்தியோகம் பெற்றும் விளங்குவ ராயினர். இவரட் சிலர் கிறிஸ்தவமதத்தை விடுத்து மீண்டுஞ் சைவசமயத்தைத் தழுவினர். ஒருசிலர் அங்கே கல்விகற்றுப் பண்டிதராகும்வரையும் நாட்போக்கிக் கிறிஸ்தவசமயத்திற் பிரவேசியாது திரும்பினர். 1824ல் அவ்வெமரிக்கன் பாதிரிமாராலே உடுவிற் பெண்பாடசாலையும் தாபிக்கப்பட்டது. அங்கும் அநேக பெண்கள்போய் அன்னவஸ்திரம் பெற்றுக் கல்வி கற்பராயினர்.

செமினேரியிலே இங்கிலிசோடு தமிழ் நூல்களையுங் கிரமமாகக் கற்பித்த வந்தார்கள். அங்கே ஆங்கில சாஸ்திரத்தோடு தமிழ்ச் சோதிட நூல்களும் கற்பித்து வந்தார்கள். பஞ்சாங்கணனத்துக்கு அராலி விசுவநாதசாஸ்தியாரும் இச்செமினேரியாருக்கு உதவியாயிருந்து அவர் மூலமாக ஆங்கிலவராசாங்க சோதிடரென்னும் பட்டமும் பெற்றார்.

1829 ல் டைக்துரை (P.A. Dyke) கவண்மேந்து ஏசண்டாக வந்தனர். அவர் வந்தது முதல் யாழ்ப்பாணம் பலவகையாலுந்திருந்துவதாயிற்று. எந்தக் கிராமத்துக்கும் எளிதிலே போய்வரத்தக்க மார்க்கங்களைத் திறந்து கற்படுத்து அலங்கார வீதிகளாக்கினர். அம்மார்க்கங்களின் இருமருங்கும் நிழல்தரும் விருஷங்களை நாட்டினர். மார்க்கங்களுக்கருகே கள்வர் பதுங்கியிருந்தற்கிட மாயிருந்த தூறுகளையெல்லாம் வெட்டினர். வழிச்செல்வோர் தங்குவதற்கு வசதியான சாவடிகளும் நீருண்ணக் கிணறுகளும் வேண்டியவிடங்களில் அமைத்தனர். வெள்ளந்தங்கிக் கிராமங்களை அழிவு செய்யாவகை வாய்கால் களையும் மதகுகளையும் வகுத்தனர். யாழ்ப்பாணத்துக் கச்சேரித் தோட்டத்தைச் சிங்காரவனமாக்கினர். அகதிகளுக்கும் வறிஞர்களுக்கும் ஆபத்பாந்தவசங்கமும்





தருமவயித்தியசாலையும் தாபித்தனர். ஆபத்பதந்தவசங்கம் இன்றும் நடைபெறுகின்றது. இச்சங்கத்தில் எத்தனையோ அகதிகள் மாசந்தோறும் சீவனாம்சம் பெறுகின்றார்கள். தருமவைத்தியசாலை இப்போது அரசினர் வைத்தியசாலையாய் நடக்கின்றது.

## தமிழர் உத்தியோகத்தர்

அவர் மீன்வரி சாயவேர்வரிகளை நீக்குவித்தனர். மசூரிகாரோகம் பேதிநோய்கொள்பவர்களுக்குப் பிரத்தியேகமான வைத்தியசாலைகளைத் தாபித்தனர். ஊரிலுள்ள குறைமுறைகளையும் அக்கிரமங்களையும் தாமே எவருமறியாமற் சென்று ஆராய்வர். வித்தியாசாலைகளை ஊர்தோறும் தாபித்து நடாத்துவோருக்கு வேண்டுந் துணையெல்லாம் செய்வர். கச்சேரிக்குச் சமீபமாகவும் ஒரு வித்தியாசாலை அவர் திரவியசாகயங்கொண்டு நடந்து வந்தது. சுதேசிகள் வியாபாரத்தாலும் உத்தியோகத்தாலும் முயரவேண்டுமென்பது இவர் விருப்பு. பறங்கிக்காரர் ஒல்லாந்தரது பரம்பரையிலுள்ளவர்களே இரசாங்கவுத்தியோகமெல்லாம் பெற்று வந்தனர். இவர் காலத்தில் சுதேசிகளாகிய தமிழரே அவ்வுத்தியோகங்களைப் பெறுவராயினர். பெயர்படைத்த சவரிமுத்து முதலியார், தெல்லிப்பழைக் கனகரத்தினமுதலியார் என்போர் இவரிடத்திலிருந்து உத்தியோகத்தில் விளங்கினர். இவர் காலத்திலே வட்டுக்கோட்டைச் செமினேரியிற் கற்று வல்லவராகிச் சென்னையில் முதலில் (B.A) பட்டம்பெற்று அங்கே சிறந்தவுத்தியோகத்திலமர்ந்து விளங்கினார் விசுவநாதபிள்ளை. தாமோதரம்பிள்ளையென்பவர்கள். செமினேரி மாணாக்கருள்ளே உள்ளூரில் விளங்கினவர் எமதாசிரியராகிய (Mr.Nevins) சிதம்பரப்பிள்ளையும், ஊர்காவற்றுறை நீதிபதி கதிரவேற்பிள்ளையும் (Mr. Arnold) சதாசிவம்பிள்ளையும் மார்ட்டின் மோர்வின் முதலியோருமாவர். ஆங்கிலந் தமிழ் வடமாழிப் பயிற்சி மூன்றாலுஞ் சிறந்த ஆன்றநூற் புலவர்களாகிய இவர்கள் பெரமையை அறியாதார்யார்! அதநிற்க,

## புகையிலை வியாபாரம்

டைத்துரை வந்த காலமுதல் ஊர்த்திருத்தத்திற்கும் குடிகளுடைய ஷேமத்துக்கும் வேண்டியவைகளையெல்லாம் ஆராய்ந்து செய்துகொண்டே வருவாராயினர். அப்படி வருங்காலத்திலே யாழ்ப்பாணத்துப் புகையிலைக்கு மலையாளத்திலே பிரியமுண்டாயிற்று. மலையாளத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் புகையிலைத் தொடர்பு தமிழரசர் காலத்திலுண்டானது. அது பறங்கிக்காரர் ஒல்லாந்தர்களால் சிறிது சிறிதாக விருத்தியுற்று ஆங்கிலேயர் காலத்திலே பெருவிருத்தி பெற்றது. மலையாளத்துக்கு வேண்டும் புகையிலை முழுதும் கொடுப்பதாக அத்தேசத்து இராசாவோடு பொருத்தச்சாதனம் பண்ணிக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திலிருந்து பெருந்தொகையாக அனுப்பிப் பெருநிதியடைந்தோர் ஆறுமுகச்செட்டியாரும் அவர் புத்திரர் முத்துவேலுச் செட்டியாருமே. அக்காலத்தில் அவர்களோடு சேர்ந்தும் பின்னர் தனித்தும் இவ்வியாபாரத்தைப் பெரிதாக நடாத்திப் பெயர் படைத்தவர் கொக்குவில் அருணாசலம். காலியில் புகையிலை வியாபாரத்தைப் பருப்பித்தவர் திருநெல்வேலி அம்பலவாணர் புத்திரர் கார்த்திகேசர்.

## சமயமுயற்சிகள்

டைத்தரை காலத்திலேயே நெடுங்காலமாக ஊர்கடோறும் மறைந்துகிடந்த சைவாலயங்கள் பிரகாசிப்பனவாயின. எங்கெங்கே ஆலயங்களோ அங்கங் கெல்லாம் (றோட்டு) தெருக்களை வகுத்துக் கொண்டுபோய் விடுத்து அவைகளை விளக்கமாக்கினார். அமெரிக்கன் மிஷன் வெஸ்லியன் மிஷன் சேர்ச்சு மிஷன் என்னும் மூன்று கிறிஸ்த சங்கத்தாரும் இவர் காலத்திலேயே வித்தியாசாலை களைத் தாபித்தும் கோயில்களைக் கட்டியும் ஊர்கடோறும் போதகர்களை அனுப்பியுந் துண்டுப் புத்தகங்கள் கொடுத்தும் தமத கிறிஸ்தசமயத்தைப் பரப்புவராயினர். அவர்களுடைய வித்தியாசாலையில் உபாத்தியாயர்களாக விரும்புபவர் கிறிஸ்தவராதல் வேண்டுமென்றும் அவர்களுக்கு விசேஷ சம்பளங் கொடுக்கப்படுமென்றும் விஞ்ஞாபனஞ் செய்து அநேகரைக் கிறிஸ்தவர்களாக் கினர். சுகமாக உலாவிச் சனங்களோடு சல்லாபித்துவிட்டு மாசமுடிவிற் சம்பளம் பெறும் போதக வேலையை விரும்பித் தமது பயிர்த்தொழிலை வீசிவிட்டு கிறிஸ்தவராயினாரும் பலர். பாதிரிமார் சிவதூஷணங்களை வரைந்து துண்டுகளும் துண்டுப்புத்தகங்களும் பல்லாயிரக்கணக்காக அச்சிட்டு எங்கும் பரப்புவராயினர்.

## ஆறுமுகநாவலர்

இவ்வாறு பாதிரிமார் செய்து வரும் முயற்சியைக் கண்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மனம் பதைத்துத் தாமும் துண்டுகளும் புத்தகங்களுமச்சிட்டுச் சைவசமயத்தின் மகத்துவத்தை நாட்டுவராயினர். சைவபாடசாலைகள் தாபித்துச், சைவ பாலபாடங் களும், சைவவினாவிடைகளும், நிகண்டு இலக்கணம், பாரதம், கந்தபுராணம், திருக்குறள் முதலியவைகளும் அச்சிட்டு, சைவத்தையும், தமிழ்க்கல்வியையும் வளர்க்குநோக்கமாகப் பரப்பினர். அதனால் தமிழ்க்கல்வியிலும் சைவசமயத்திலும் அபிமானம் யாழ்ப்பாணமெங்கு முண்டாவதாயிற்று. ஆறுமுகநாவலரவர்களும் அதுகண்டு, தமது பொருளையுங்காலத்தையும் கருத்தையும் சைவசமயவிருத்திக் கும் தமிழ்வளர்ச்சிக்குமாகவே சமர்ப்பித்து, நைஷ்டிகப் பிரமசரியத்தையே பெரு வாழ்வாகக் கொண்டனர். அக்காலத்தில் அவர் கருத்திற்கொண்டு முடிக்கமுயன்ற பரோபகார கருமங்களுள்ளே அவர் காலத்துக்குப் பின்னர்ப் பலித்தோங்கியது இந்துக்கல்லூரி. மற்றொன்று கீரிமலைச் சிவன்கோயில். அவர் செய்த முயற்சியைக் கண்டு யாழ்ப்பாணத்திலே இடங்கள் தோறும் சைவத்தமிழ் வித்தியாசாலை களும் சைவ ஆங்கில வித்தியாசாலைகளும் ஆங்காங்குமுள்ள பிரபுக்களால்





தாபனமாகி நடைபெறுகின்றன. சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அவ்வூர்க் கனகரத்தின முதலியாருடைய முயற்சியேயாயினும் அம்முயற்சிக்குங் காரணமாய் நின்றது. ஆறுமுகநாவலரது சித்தசுத்தியும், சிவபக்தியுங் கூடிய இருதயகமலத் தெழுந்த நன்முயற்சியேயாம். அவர்கருதியபடி நிறைவேறாதது நல்லைக் கந்தசாமிகோயிற் கருங்கற்றிருப்பணியொன்றுமே. முற்கூறிய முச்சங்கத்துப் பாதிரிமார் செய்த பிரசண்ட முயற்சிக்கு நாவலர் செய்த முயற்சி சிறிதேயாயினும் நன்மனத்தோடுஞ் சிவபக்தியோடுஞ் செய்த முயற்சியாதலின் அஃது எதிர்நின்று பொருது அப்பிரசண்ட முயற்சியின்பலனை அற்பமாக்கி விட்டது. அவர் பிறவாதிருந்தால் யாழ்ப்பாணத்திலே தமிழும் சைவமும் பாதிரிமார் முயற்சியால் பரிநாசப்பட்டிருக்கும். அவராலெழுந்த சைவாபிமானம் பணைத்து இப்போது ஆயிரம் பராரையினையுடைய பெருவிருஷமாய் விட்டது. அது நிற்க,

## தனிவரிப்பணம்

1848ல் தலைவரிச்சட்டம் விதிக்கப்பட்டது. 18 வயசுக்கும் 60 க்கும் இடைப்பட்ட வயசுடையோர் வருஷந்தோறும் 'றோட்டு' வேலைக்காகப் பதின்மூன்று பணமும் நான்கு வெள்ளைச்சல்லியும் செலுத்தல் வேண்டும். அஃதியலாதோர் றோட்டில் 6 நாள் வேலை செய்தல் வேண்டும். இச்சட்டம் வந்தவுடன் யாழ்ப்பாணத்துச் சனங்கள் அவ்வரியைக் கஷ்டப்பட்டுச் செலுத்தினர். சிங்களர் தாம்செலுத்துவ தில்லையென்று திரண்டு கண்டி குருநிகலை முதலியவிடங்களிற் பெருங்கலகம் விளைத்தனர். விளைத்தோர் ஆங்கில படைவீரரைக்கண்டு ஓடியடங்கினர்.

## சட்ட நிருபணசபை

1833 சட்டநிருபணசபை (பிரமாணவிதி சபை) சட்டநிறைவேற்றச்சபை (பிரமாணநிதிசபை) இரண்டுந் தாபனமாயின. சட்டநிருபணசபை, உத்தியோக அங்கத்தவரும், பிரபு அங்கத்தவராகிய சனப்பிரதிநிதிகளும் கூடியசபை. இச்சபைக்கு முதன்முதலிலே 1835ம் வருஷம் தமிழர் பிரதிநிதியானவர் கௌரவ பொன்னம்பலமுதலியார். இவருக்குப்பின் 1846 முதல் 1861ம் வருஷம் வரையும் தமிழர் பிரநிதியாயிருந்தவர் கௌரவ எதிர்மன்னசிங்கமுதலியார். இருவரும் மானிப்பாயைப் பிறந்தவூராக உடையவர். அவருக்குப் பின்னர் 1862ல் கௌரவ Sir குமாரசுவாமி தமிழர் பிரதிநிதியானார். அவருக்குப்பின் 1879 ல் இப்போது இலங்கைவாசிகள் தெரிவுப்பிரதிநிதியாக 1912 ல் சட்ட நிருபணசபையிற் பிரவேசம் பெற்று விளங்கும் கௌரவ பொ. இராமநாதன் தமிழர் பிரதிநிதியாகி 1892 வரையிலிருந்தனர். அதன்பின்னர்க் கௌரவ டாக்டர் றக்குவிட் என்பவரும் பிரதிநிதி யானார். இவர்களும் மானிப்பாயைச் சார்ந்தவர்களே. அவருக்குப் பின் கௌரவ அ. கனகசபை பிரதிநிதியாயிருக்கின்றார். இவர் பன்னாலையைத் தமதூராக வுடையவர். இவரெல்லாம் யாழ்ப்பாணமாதீன்ற புத்திரரத்தினங்கள். அது நிற்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1845ம் வருஷம் பேதிநோய் யாழ்ப்பாணத்தில் பிரவேசித்துப் பல்லாயிரஞ் சனங்களைக் கொள்ளையிட்டது. 1855ல் மீண்டும் அந்நோய் புகுந்து யாழ்ப்பாணத்துச் சனங்களைப் பாதித்தொகையுண்டெனப்பட்டது. அவ்வருடத்துப் பேதிபோல் உக்கிரநோய் முன்னொரு காலத்துந் தோன்றியதில்லையென்பர்.

## டைக்துரை மரணம்

இந்நோய் ஊரை வாட்டியபோது, டைக்துரை வறிய சனங்களுக்கு மருந்து உணவு வஸ்திரங்களோடு பணமுங்கொடுத்து உதவிபுரிந்தும், ஊர்கள்தோறுஞ் சென்று அவ்வவ்வூர்நிலையை விசாரித்தும் வருவார். அவர் யாழ்ப்பாணத்தின் மீது கொண்ட பெரும்பற்றுக் காரணமாகத் தமக்குக் கிடைக்கக்கூடியதாய்வந்த ராசலிகித பதத்தையும் வேண்டாமெனத் தள்ளினரென்றால் அவருடைய பரோபகாரவியல்பைக் கூறவும் வேண்டுமோ. தாம் இறப்பதும் யாழ்ப்பாணத்திலேயென்று தீர்மானித்துக் கொண்டிருந்தனர். அப்படியே அவர் 1867 அக்டோபர் 7ல் தமது கோப்பாய்ச் சுகக்கிருகத்தில் இறந்தனர். அவர் இறந்த செய்தி கேட்டு யாழ்ப்பாணத்திலே கண்ணீர்விடாதவர் யார்! அவர் இறந்து நெடுங்காலமாகியும் அவர் பெயரைக் கேட்டவராய்க்கேட்டு இக்காலத்துச் சிறுவரும் பராட்டுவரென்றால் அவர் படைத்த கீர்த்தி யாழ்ப்பாணமுள்ளவரையும் மங்காதன்றோ. அவர் நோய்கண்ட பொழுது அந்நோய்க்கு வைத்தியஞ் செய்தவர் யாழ்ப்பாணத்தில் ஆங்கில வைத்தியத்தைத் தமிழிற் கற்பித்தும் மொழி பெயர்த்தும் பரவச் செய்து வைத்தியசித்தியிலும் இனிய குணத்திலும் பெரும் பெயர் படைத்த டாக்டர் கிறீன் பாதிரியார். அவர் மானிப்பாயிலே அமெரிக்கன் மிஷன் வைத்தியசாலைக்கு அதிபராக நெடுங்காலமிருந்தவோர் உத்தமர்.

## துவைனந்துரை

டைக்துரைக்குப் பின்னர் றசல்துரை வந்து இரண்டு வருடத்திலே கண்டிக்குச் செல்ல, துவைனந்துரை 1869ல் செப்டெம்பர் கவண்மேந்து எசண்டாக வந்தனர். இவரும் டைக்துரையுடைய வழிவழியே அதிகாரஞ் செய்து வந்தனர். அவரும் அநேக றோட்டுக்களும் சந்தைக்கட்டடங்களும் அமைத்தனர். இலங்கையையும் இந்தியாவையும் இராமர் பெருங்கடலடைத்துப் பெருஞ் சேதுபந்தனமிட்டிணைத்தது போலக் காரைதீவையும் யாழ்ப்பாணத்தையும் இவரும் சிறுகடல் தூர்த்துச் சிறிய சேதுபந்தனமிட்டணைத்தனர். இந்நன்மைக்கு யாழ்ப்பாணத்தார் துவைனந் துரையை எந்நாளும் போற்றுங் கடப்பாடுடையர். நெடுங்காலம் இச்சிறுபரவைக் கடலைக் காலாற்றாண்டிவந்த சனங்கள் துவைனந்துரை செய்த நன்மையால் இப்போது இரவிலும் பகலிலும் இராசவீதியிற் செல்வார்போற் செல்லுகின்றனர். இச்சிறியசேது ஏறக்குறைய ஒன்றரைமைல் நீளமுடையது. மாட்டுவண்டிகள் குதிரைவண்டிகள் 'மோட்டார்கார்' ரதங்கள் அடிக்கடி இதன்மேற் சென்று மீளுகின்றன. புதியவர் புகுந்தால் மீளுதற்கரிதாய்ச் சந்துப்பின்னலாய்க் குடி





நெருங்கிக் கிடந்த சோனகதெருவை இவர் சதுரங்கமனைபோலக் குறுக்கு நெடுக்குமர்க அநேக தெருவீதிகளை வகுத்து விளக்கமாக்கினர். புலான் மணநீங்காது நாறிப் புழுத்தொழுகும் பாழ்ங்குடிசைகள் நிறைந்து கொள்ளை நோயைக் கூவியழைக்குமியல்புடையதாயிருந்த கரையூரையும் குறுக்குமறுக்கு மாக அநேக தெருக்களைத் திறந்து திருத்தினர். கண்டி மார்க்கத்தைக் கற்படுத்தி ஆனையிறவுப் பாலத்தை முடித்து மாத்தளைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் தபால்வண்டிப் போக்குவரவை யுண்டாக்கினர். யாழ்ப்பாணத்திலே அநேக ஊர்களிலே தபாற்சாலைகளைத் திறந்தனர்.

இதற்கிடையில் யாழ்ப்பாணவாசிகள் அநேகர் ஆங்கிலக்கல்வியிலும் சட்ட நூலுணர்ச்சியிலும் வல்லுனராய் நியாயதுரந்தர பரீட்சையிற் சித்தி பெற்று ஒழுக்கத்தாலுஞ் சிறந்து விளங்கினர். அவருள்ளே முதலில் விளங்கினவர் முத்துக்கிருஷ்ணர்.

சுதேசிகயுட் கல்வியொழுக்கங்களாற் சிறந்தவர்க்கு உயர்ந்த இராசரீகபதங் களும் கொடுக்கப்படுமென்று நமது மகா காருண்ணிய மகிமாவதி விக்டோரியா அரசியார் செய்த விஞ்ஞாபனப்படி கோப்பாய் அம்பலவாணத்துரையும், உடுப்பிட்டி கதிர்வேற்பிள்ளைத்துரையும் நீதிபதிகளாக்கப்பட்டனர்.

துவனைந்துரை காலத்தில் யாழ்ப்பாணத்துக்குப் புகையிரதப்பாதை அமைத்துத் தரும்படி யாழ்ப்பாணவாசிகள், லிட்டன் சுவாமியார், அப்புக்காத்து நாகலிங்கம், நீதிபதி தம்பு, கிறவுண் பிறக்டர் காசிப்பிள்ளை முதலியோர் கூடிய ஒரு சபை மூலமாக அரசினரைக் கேட்டார்கள். யாழ்ப்பாணம் வியாபார விருத்தியிற் குன்றிவிடுமென்றஞ்சித் துவைனந்துரை அதற்கு மாறாயிருந்தனர். அரசினரும் அஃதவசியமன்றென மறுத்தனர். மேற்கூறிய இருப்புப்பாதைச் சபையாரோ விடாது விண்ணப்பஞ் செய்து கொண்டிருந்தனர்.

1896ல் துவைனந்துரைக்கு "நைட்" பட்டஞ் சூட்டப்பட்டது. அதன்பின்னர் இவர் தமதுத்தியோகத்தினின்றும் இளைப்பாறி யாழ்ப்பாணத்திலேயே குடிகொண்டு தமது காலத்தைப் போக்கி வந்தனர். இவர் மற்றைய ஆங்கிலேயரைப் போலப் பொருளீட்டிக் கொண்டு தமது தேசஞ் செல்லாது தாமீட்டிய பொருளை யெல்லாம் யாழ்ப்பாணத்துக்குப் பயன்படும்படி செலவிட்டு வருகின்றனர். இவரும் டைக் துரையைப் போல யாழ்ப்பாணத்தாரிடத்து மிக்க அபிமானமுடையவர்.

## பிஷர்துரை

இவருக்குப் பின்னர் பிஷர்துரை கவண்மேந்து ஏசண்டராயினர். அவர் காலத்திலே தேசாதிபதி றிச்சுவே பிரபுவினது காருண்ணிய செலவில் யாழ்ப்பாணப் புகையிரதப்பாதை விண்ணப்பம் ஏறுவதாயிற்று. அவர் தேசாதிபதியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராதிருந்தால் யாழ்ப்பாணப் புகையிரதப் பாதையைக் காண்பதரிது. அவர் சீமையில் இலங்கை மந்திரியோடு யாழ்ப்பாணப் புகையிரதப் பாதை விஷயமாகப் பெரும் வாதப்போராடி அவர் அனுமதி பெற்றனர். அதன்மேல் யாழ்ப்பாணப் புகையிரதப்பாதை தொடங்கப்பட்டு 1902ல் உள்ளூர்ப் புகையிரதப்பாதையும்: 1905ல் வருஷாரம்பத்தில் கொழும்புப் புகையிரதப் பாதையும் திறக்கப்பட்டன. இந்தப் புகையிரதப் பாதையைத் தமக்காக்கிக் கொடுத்த நன்றிக்கு நிச்சுவே தேசாதிபதியின் பேரால் யாழ்ப்பாணத்தார் ஒரு மகாமண்டபம் நகரமத்தியில் அமைத்திருக்கின்றார்கள். முன்னாளில் தரை மார்க்கமாக ஒரு மாதத்தில் சென்றடையும் கொழும்பு இப்போது ஒரு பகலில் அடையப்பட்டிருக்கின்றது.

பின்பு ஐவேர்ஸ் துரையும் அவருக்குப் பதிலாக பிஷர்துரையும் பின்பு ஐவேர்ஸ்துரையும் அவருக்குப் பின் லூயிஸ்துரையும், அவருக்குப்பின் பிறைஸ் துரையும் ஏசண்டராயினர். அவருக்குப்பின் கவண்மேந்து ஏசண்டாய் வந்திருந்தவர் தருமதுரை என்று யாழ்ப்பாண முழுதுங் கொண்டாடும் பிறீமன்துரை. ஐவேர்ஸ் துரையும் லூயிஸ்துரையும் தங்கடமைகளைக் குறைவற நடாத்திவந்தனர். பிறைஸ் துரை சனங்களோடு கலந்து அவர்களுடைய குறைமுறைகளைக் கேட்டாராயும் லளித குணமில்லாது தங்கடமையை மாத்திரம் தம்புத்திக்கெட்டியபடி பார்க்கும் கண்டித குணமுடையவராதலின் யாழ்ப்பாணத்தாருக்கு உவப்புடையராய் விளங்க வில்லை. இவருக்குப்பின் வந்த பிறீமன்துரை சனங்களுடைய குறைமுறைகளை நாடியறிந்து அவைகளைத் தீர்க்கும் தயாள குணம் வாய்ந்தவர். வறியவர்களைக் கண்டால் அவர்களுக்குப் பொருளுதவும் பெருங்கருணையுடையவர். யாழ்ப்பாணத்துப் புகையிலைக்குத் திருவனந்தபுரத்திலே கண்டி 1க்கு ரூபா90 ஆகவிருந்த தீர்வை 1910ல் இந்திய ராசாங்கத்தாரால் ரூபா 900 ஆகவுயர்த்தப் பட்டது. அதுகேட்டவுடன் யாழ்ப்பாணம் "இனி நம் புகையிலை திருவனந்தபுரத்தில் விலையாகாதே! யாது செய்வோம்! ஊனும் உடையும் தந்தெம்மைக் காக்கும் சீவரத்தினம் திருவனந்தபுரம் செல்லும் புகையிலையன்றோ" என்றரற்றி அழுவதாயிற்று. அதுகேட்ட பிறீமன்துரை மனம் பதைபதைத்து உத்தம தேசாதிபதி யாகிய (Sir. H.E. McCullum) மக்கலம் அவர்களுக்கு ஊர் நிலையைத் தாமும் விண்ணப்பஞ் செய்து சனங்களையும் விண்ணப்பம் செய்யுமாறு தூண்டினர். அதுகேட்ட தேசாதிபதி மகாமந்திரியாருக்கு யாழ்ப்பாண நிலையை குறித்து நிருபம் போக்கினார். யாழ்ப்பாணவாசிகளும் தேசாதிபதிக்கு விண்ணப்பஞ் செய்தனர். தேசாதிபதி பின்னரும் தந்தி மூலமாக மகாமந்திரியாரோடு வாதாடி அத்தீர்வைப் பழைமை போல ரூபா90 ஆக்குவித்தனர். அதுகேட்டு யாழ்ப்பாண வாசிகள் ஆனந்தக் கூத்தாடிப் பிறீமன்துரையையும் தேசாதிபதியையும் நெஞ்சார வாழ்த்தினர். போற்றினர் இன்னும்போற்றுவர் என்றும் போற்றுவர். இத்தேசாதிபதியே தமிழர்க்குள்ள ஒரு பிரதிநிதியோடு இன்னுமொரு பிரதிநிதியையும் சிங்களர் மேலுமொரு பிரதிநிதியையும், இலங்கைவாசிகளுக்குத் தெரிவுப் பிரதிநிதியாக ஒருவரையும் வைத்தல் வேண்டுமென மகாமந்திரியாருக்கு எழுதி அனுமதி





பெற்றவர். அவ்வாறே இப்போது சட்டநிரூபணசபையில் தமிழர் பிரதிநிதி யாக இருவரும் இலங்கைவாசிகள் பிரதிநிதியாக ஒருவரும் இருக்கின்றார்கள். தமிழர் பிரதிநிதியாகவிருப்பவர்கள் கௌரவ அ. கனகசபையும் கௌரவ க. பாலசிங்கமு மாவார். பிந்தியவருடைய பதத்திலிருந்தவர் இறந்து போன திசைவீரசிங்கம் என்பவர்.

இலங்கைவாசிகள் தெரிவுப்பிரதிநிதியாக வீற்றிருப்பவர், இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்க தேசங்களிலே தமது புகழ் நிறுவிய பிரசண்டவாக்கியும் சபாரஞ்சிதசிங்கமும் தத்துவஞானியும் பிரபுசிகாமணியுமாகிய கௌரவ பொ. இராமநாதன். இப்புருஷோத்தமரை அறியாதார் யார்! இவர் யாழ்ப்பாணத்துப் பெண்மக்களுக்கு உயர்தரக்கல்வி பயிற்றும் பொருட்டு மருதனார்மடத்திலே இலட்சக்கணக்கான பெருநிதி செலவிட்டு அமைத்த கலாசாலைத் தருமத்துக்கு இணைகூறவும் போமோ! அத்துணையலங்கார விஸ்தார மாளிகை நாமெங்கும் கண்டதில்லை. இத்துணைப் பரோபகார தாதாவைக் கண்டதுமில்லை. கேட்டதுமில்லை. இக்கைமாறு கருதாப் பரோபகாரம் யாழ்ப்பாணவாசிகளால் என்றாயினும் மறக்கற்பாலதன்று.

## பிறீமன்துரை

பிறீமன்துரை சனங்களிடத்திலே மிக்க அன்பும் இரக்கமுமடையர். நல்வழியிலே நடக்கும்படி சனங்களுக்குப் புத்தி கூறுவர். பயிர்த்தொழிலை விருத்தி பண்ணும்படி தூண்டுவர். மழை வேண்டுமானால் நல்லொழுக்கமும் தெய்வபக்தியுமுடையவர்களாய் நடவுங்கள், உங்கள் கோயில்களைச் செவ்வே நடத்தி வாருங்கள், கோயில்களை அழியவிடாதிருங்கள் என்றிவ்வாறு புத்தி கூறுவர். யாவரோடும் மலர்ந்த முகத்தோடுமே பேசுவர்.

"காட்சிக்கெளியன் கடுஞ்சொல்லனல்லனேன்
மிக்கூறுமன்னனிலம்."

என்னுங் குறளுக்கிலக்கியமானார் இவர் ஒருவரே. இவருக்குப் பின்னர் வானும் கம்பர்லண்டும் வெஸ்டிங் என்பவரும் சிறிது சிறிது காலம் ஏசண்டராக விருந்தனர். இப்போது ஏசண்டராகவிருப்பவர் ஹார்ஷ்பறோ (B. Horshburgh) என்பவர். இவர் தமிழிலும் பாண்டித்தியமுடையவர். சாந்தமும் நீதியுமுடையவர். அது நிற்க,

## யாழ்ப்பாணத்தார் இயல்பு

பூர்வநிலையையும் தற்கால நிலையையும் ஆராய்வாம். ஆதியில் யாழ்ப்பாடியும் தமிழரசரும் நல்லொழுக்கமும் நற்குடிப்பிறப்புமுடையரையே தெரிந்தெடுத்து வந்து யாழ்ப்பாணத்திற் குடியேற்றினார்கள். பெருங்குடிகளெல்லாம் தொண்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டினின்றும் வந்தவர்கள். தொண்டைநாடு சான்றோருடைத்து என்பது ஔவை வாக்கு. தொண்டை நாட்டுக்குரியதாகிய அப்பெருங்குணம் அந்நிய அரசும் அந்நிய சமயமும் வந்து தாக்கித் தேய்த்தும் முற்றாகத் தேய்ந்து போகாது இன்னும் விளக்கமாயிருப்பது பிரத்தியட்சம். தாம் வறியராயிருப்பினும் தம்மிடத்து வரும் அகதி பரதேசிகளுக்கு இயன்றதைக் கொடுத்துண்ணும் குணம் யாழ்ப்பாணத்தாருக்கு இயல்பாயிருப்பது, அவர்தம் பழைய பெருங்குடி இயல்பன்றோ. ஆதியில் வந்து குடியேறிய பெருங்குடிகளெல்லாம் கல்வியும் செல்வமும் ஈகையும் ஆண்மையும் மெய்யுரையுமுடையவர்கள். அவ்வடிப்பட்ட இயல்பு பற்றியே யாழ்ப்பாணத்தார் விவேகமும் கல்வி விருப்பமும் உடையராய் இன்றும் விளங்குகின்றார்கள். ஆண்மைக்குணம் இன்னுமிருக்கின்றது. மெய்யுரையும் முழுதும் குன்றவில்லை. பறங்கிக்காரரும் ஒல்லாந்தரும் அரசு செய்த இருநூறு வருஷ காலமும் தமது சமயத்திற் பிரவேசிக்கும்படி பெருந்துன்பங்கள் செய்து குடிகளை வருத்தினர். அதற்காற்றாது அச்சமயத்தைக் கைக்கொண்டார் போல புறத்தே நடித்தும் அகத்தே சைவசமயிகளாயே இருந்தனர். பறங்கிக்காரரும் ஒல்லாந்தரும் தமது சமயத்தின்மேற் கொண்ட பேரபிமானம் பற்றி மற்றச் சமய ஆலயங்களையும் சமய நூல்களையும் கல்வி நூல்களையும் எரியூட்டி அழித்தார்கள். அழித்தும் நம் முன்னோர்கள் சைவத்திலும் சமயநூல்களிலும் கல்விநூல்களிலும் வைத்த அசையாப் பேரன்பினாலே அவற்றை இரகசியத்திற் பாதுகாத்து வந்தனர். அங்ஙனம் அவர்கள் பாதுகாத்து வையாதிருப்பாரேல் யாழ்ப்பாணம் சைவமணமும் தமிழ்க்கல்வியும் சிறிதுமில்லாத நாடாயிருக்கும்.

தமிழரசர் காலத்திலே தமிழச்சங்கமும் அச்சங்கத் தொடர்புடையனவாய் ஊர்கள் தோறும் வித்தியாசாலைகளுமிருந்தன. சைவாலயங்களுக்கு நிலங்களும், வேண்டும் பொருள்களுமிருந்தன. உரிய காலங்களிலே நித்திய நைமித்தியங்கள் நடந்து வந்தன. குடிகளிடத்திலே ஆறிலொரு கடமை கொள்ளப்பட்டு வந்தது. நெல்விளைவு முதலிய பயிர்த் தொழில்களுக்கு வேண்டிய நீர்நிலைகள் பாய்கால்கள் வடிகால்கள் முதலியன அரசரால் அமைத்தும் காலந்தோறும் திருத்தியும் கொடுக்கப்பட்டு வந்தன. அக்காலத்திலே மன்னார் மாதோட்டம் முதலிய பகுதிகளும் யாழ்ப்பாணவரசுக்குட்பட்டிருந்தமையால் யாழ்ப்பாணத்திற்கு நெல்லினால் குறைவில்லாதிருந்தது. மாதோட்டத்தில் இரண்டாயிரம் சாலியர் நெய்தனரென்றால் வஸ்திரத் தொழில் எவ்வளவு என்பது சொல்லவும் வேண்டுமோ?

ஊரிலே களவர் பயமென்பது அந்நாளிலே சிறிதுமில்லை. ஊருக்கு ஒவ்வொரு தலையாரியாக ஊர்கள் தோறும் தலையாரிமாரை அக்காலத்தில் வைத்திருந்தார்கள். ஊரிலே களவு போகுமிடத்து அத் தலையாரிமாரேஉத்தர வாதிகளாயுள்ளார். ஆதலால் அக்காலத்திலே கள்வர் பயமில்லை. அதுவுமன்றிக் களவு செய்வாருக்குத் தேசத்தை விட்டகற்றல் கைவாங்குதல் முதலிய கொடிய





தண்டனைகளுமிருந்தன. அவ்வச் சாதியாரும் தத்தம் தொழிலையும் வரிசைகளையும் தவறாது கைக்கொண்டொழுகி வந்தார்கள். ஆகவே ஊரிலே சமாதானமும் ஒற்றுமையுமிருந்தன. அவ்வச்சாதியாருக்கும் அவ்வவ்வூரிலே ஒவ்வொரு நாட்டாண்மையுடையருமிருந்து தத்தம் சாதியாருக்குள்ளே வரும் வேறுபாடுகளைத் தீர்த்தடக"கி வந்தார்கள். அவரால் தீராத வழக்குகளை ஊர்தோறுமுள்ள பஞ்சாயத்தார் முன்னிலையிலே தீர்த்துக் கொள்வர். அவருக்குத் தீர்த்தற்கரிதாய் வரும் வழக்குகளை இராசசபைக்கு விடுவர். இக்காலம் போல அக்காலத்திலே பிறக்டர், அடவொக்கேட் என்னும் நியாயவாதிகளில்லை. பொருட்செலவுமில்லை. ஒரு வழக்குக்காக நெடுங்காலம் தந்தொழிலையும் கைப்பொருளையும் செலவிட்டு அலையவேண்டியதில்லை.

அந்தக் காலத்திலே வண்டி குதிரைகள் ஊர்களில் கிடையா. செல்வரும் அதிகாரிகளும் பல்லக்கிற் போய் வருவர். பாரம் ஏற்றிப் போவதற்கு மாத்திரம வண்டிகள் ஊர்கள் தோறுமிருந்தன. அக்காலத்திலே குதிரை மீதும் யானை மீதும் ஏறிச் செல்பவர் பிரபுக்களும் அரசரும் படைவீரருமேயாவர். பண்டங்களைக் கொண்டு செல்வதற்குப் பொதி மாடுகளுமிருந்தன. வண்ணார் வஸ்திரப் பொதிகளைச் சுமந்து செல்லுதற்கு கழுதைகளும் வைத்திருந்தார்கள்.

தமிழரசர் காலத்திலேயிருந்த நாகரிகமும் வேறு, இப்போதுள்ள நாகரிகமும் வேறு. அக்காலத்திலே குடிகளுக்கு வேண்டிய போக்கியப் பொருள்கள் மிகச் சிலவே. அன்னவஸ்திரம், வீடு, மாடு, பணம், விளைநிலம், குரு, கோயில் இவ்வளவுமிருந்தால் போதும். இப்போதுள்ளார்க்கு அலங்கார மாளிகையும், வர்ணப்பட்டாடைகளும், தூங்குமஞ்சங்களும், சித்திராலங்கார ரதங்களும், கண்ணாடி விளக்குகளும், பளிங்குப் பாத்திரங்களும், காலுக்கு வினோதமான பாதரட்சைகளும், கைக்கு விலையுயர்ந்த கோலும் குடையும், உடம்பிற்குச் சிறந்த சட்டைகளும், அதற்குப் பூட்ட பொன்னினாலே தறிகளும், கடிகாரச் சங்கிலிகளும், புகைச்சுருட்டுக்கும் பொடிக்கும் வெள்ளிப்பரணிகளுமாக இன்னோரன்ன எண்ணிறந்த போக்கியப் பொருள்கள் வேண்டும். அக்காலத்துள்ளார் பசியைத் தணித்து நல்ல புஷ்டியைத்தரும் சாதாரணவுணவுகளையே நாடிச் சிறுவர் முப்போதும் ஏனையோர் இருபோதுமாக உண்டு வந்தார்கள். இடையிலே அக்காலத்தில் உண்ணும் வழக்கமும் உண்ண நேரமும் காண்பதரிது. பதினாறு வயசுக்கு மேற்பட்டோரெல்லாம் தந்தொழில் மேற்சென்று போசன காலத்துக்கே மீள்வர். விவாகம் பெரும்பாலும் இருபத்துநான்கு வயசளவிலேயே செய்வர். பெண்களும் பெரும்பாலும் பதினாறளவிலேயே செய்வர். சீதனத்துக்கு அக்காலத்தில் மல்லாடுவதில்லை. தத்தம் இனத்தைவிட்டுப் பிரிந்து போவதில்லை. பெரும்பாலும் சுகதேகிகளாய் சந்ததியுடையவராய் ஆண்மை சத்தியம் நல்லொழுக்கமுடையவராய் வாழ்ந்தார்கள். தான தருமமும் ஈசுரபக்தியும் உடையவராயிருந்தார்கள். அக்காலத்திலே வியபிசாரம் மதுபானம், சூதாடல் குடும்பத்துக்குத் தீராத வசைத் தொழிலாம். விரதங்கள், சிவாலய வழிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணிய சரித்திரம் கேட்டல் குருவிசுவாசம் இவையெல்லாம் கிரமமாகக் கைக்கொள்ளப்பட்டு வந்தன. இவற்றால் நன்மழை பொழிந்தது. ஊரிலே நோய்கள் குறைவாயிருந்தன.

அக்காலத்திலே நம்மவர்க்கு மேலடுக்கு மாளிகைகள் இல்லாதிருக்க வில்லை. உன்னத கோபுரங்கள் இல்லாதிருக்கவில்லை. சிறந்த வீதிகள் இல்லாதிருக்கவில்லை. சிறந்த நகரங்கள் இல்லாதிருக்கவில்லை. நகரத்து வீதிகள் சுத்தியில்லாதிருக்கவில்லை. வீதிகளிலே காவலில்லாதிருக்கவில்லை. (Obeysekara's History of Ceylon)

## பூர்வ வழக்கம்

அக்காலத்தில் பிள்ளைக்குத் தாயே மூன்று வருஷத்துக்குக் குறையாமல் பாலூட்டி வருவாள். அதனால் பிள்ளை நோய் கொள்ளாது சரீர காந்தியும் பலமுமுடையதாய் வளரும். ஐந்தாம் வயதிற் பிள்ளையை பள்ளிக்கூடத்தில் வைப்பர். பதினாறு வயசு வரையும் கல்வி கற்பிப்பர். அதன்மேலே தத்தமக்குரிய தொழிலை மேற்கொள்ளுவிப்பர். இருபத்துநான்களவில் விவாகஞ் செய்விப்பர். அதுமுதலாக அவன் இல்லறத்தை நடத்துவன். தாய்தந்தையரைப் பயபக்தியோடு பாதுகாத்து வருவன். அவர்க்குரிய கடன்களையெல்லாம் தப்பாது செய்வன். அக்காலத்தார் நூறு வயதுக்கு மேல் வாழ்ந்தார்கள் எனப் பிளினி (Pliny) கூறுவர். (Obeysekara's History of Ceylon Page 53) இக்காலம் நம்மவர்களுள்ளே மேலைத்தேச நாகரிகம் பெற்றவர்கள் தமது பிள்ளைகளுக்குக் கடவுள் கொடுத்த பாலையும் கொடாது சீமைப்பாலைக் கொடுத்து வளர்ப்பதோடு வருஷத்துக்கொரு பிள்ளையீன்று தாமும் சரீர பலமற்று அப்பிள்ளைகளையுந் துர்பலப்படுத்தி வருகிறார்கள். இப்பிள்ளைகளால் தேசமுய்வதெப்படி? இப்பிள்ளைகள் தாய்தந்தையாரிடத்திலே பற்றுடையராயிருப்பதெப்படி? தாயினது பாலை அருந்தாத பிள்ளைக்குத் தாயினிடத்திலே பற்றுவருவதெப்படி?

சரீரம் பலத்து ஆண்மையுடையவராவதெப்படி? சங்கிலி பறங்கிகளோடு யுத்தம் செய்த காலத்திலிருந்த போர்வீரரெல்லாம் பெரும்பாலும் யாழ்ப்பாணத்து வீரரன்றோ? அவர்கள் போராண்மையில் மிக்க வல்லவர்களெனப் பறங்கிக்காரரே புகழ்ந்திருக்கிறார்கள். பறங்கிகள் வெற்றி அவர்கள் வீரத்திறலால் பெற்றதொன் றன்று. காக்கைவன்னியனின் சூதால் பெற்றதன்றோ? இலங்கை முழுதையும் வெற்றி கொண்டு சிங்கள அரசனிடம் திறை கொண்ட யாழ்ப்பாணத்தரசனுக்கு வெற்றி கொடுத்தவர் யாழ்ப்பாணத்துப் போர்வீரரன்றோ. அவ்வீரர் வழியில் வந்த மக்களெல்லாம் ஆண்மையும் சரீரகாந்தியுமில்லாத துர்பல வீரஜாதியா யிருப்பதற்குக் காரணம் பறங்கிகளதும் ஒல்லாந்தரினதும் கொடுங்கோலின் கீழ்க்கிடந்து நெடுங்காலம் அரைபட்டுச் சுவாதீனமிழந்து மெலிந்தமையேயாம்.

பறங்கிக்காரரும் ஒல்லாந்தரும் வந்து யாழ்ப்பாணத்தைக் கைக்கொண்டு





கொடிய வரிகளாலும் சிறைத்தண்டத்தாலும், கொலைகளாலும் அடியாலும் கொள்ளையாலும் இருநூறு வருஷ காலமாக வாட்டியதால், குடிகளெல்லாம் உள்ளத்தாலும் ஒழுக்கத்தாலும் உடம்பாலும் தளர்ந்து, மெலிந்து, ஆங்கிலவரசு வந்த பின்னர் தழைப்பாராயினர். தழைத்தும் தமது பழைய நாகரிகத்தைத் தொடரவறியாது ஒல்லாந்தர் காட்டிய வழிவழியே சென்று, மேலைத்தேச நாகரிகத்திற் கொள்ள வேண்டியதை மாத்திரங் கொள்ளாது, முற்றுங் கொள்ளத் தொடங்கித் தமது பூர்வ நன்னிலையைக் கைவிடுகின்றனர். பூர்வநன்னிலையை நோக்கித் திரும்புமிடத்தன்றி நம்மவர் உலகில் ஒரு சனமாக மதிக்கப்படமாட்டார். உணவும் உடையும் மற்றைய போக்கியப் பொருட்களும் நமது தேசத்திலேயே பூர்வம் மலிந்து கிடந்தன. அக்காலத்திலே நம்மரசும் நம் தேசமுமாயிருந்தன. இக்காலத்தில் உணவுக்கும் உடைக்கும் மற்றைய போக்கியப் பொருளுக்கும் அந்நிய தேசத்தையே நோக்கியிருக்கின்றோம். அவையெல்லாம் நமது தேசத்தில் முன்போல விருத்தியாயிருக்குங் காலமே நாமுண்மையான நாகரிகமுடையவரா வோம். அதுகாறும் நாமடைந்திருக்கும் நாகரிகம் மெய்மையான நாகரிகமாகாது. போலிநாகரிகமேயாம்.

ஒல்லாந்தவரசு பறங்கியரசுகளில் நமக்குக் கனவிலும் சுயாதீனங்கிடைக்க வில்லை. ஆங்கிலவரசில் நமக்குக் கிடைத்திருக்கும் சுயாதீனம் எத்துணைப் பெரிது. அது போல ஒருகாலத்தும் வாய்க்காது. இவ்வரசுபோலும் தருமராச்சியம் உலகத்திலில்லை. நாம் நன்னிலையை அடையவேண்டுமென்பது நம்மையாளும் மகாகாருண்ணிய மகிமாவது ஐந்தாம். ஜார்ச்சுவேந்தர் விருப்பு. நாம் பயிர்த்தொழில் கைத்தொழில்களை நன்றாக அபிவிருத்தி பண்ணுதல் வேண்டும். அதுசெய்யாவிடத்து நமது தேசம் செல்வம் பொருந்திய தேசமாய் விளங்காது. கல்விக்கழகங்களை நம்பொருட்டு அரசினர் தாபித்தும், தாபிப்போருக்குப் பொளுதவிபுரிந்தும், கல்வியிலே மிக்க சித்தியுற்றுச் சீமைக்குச் சென்று கற்கவிரும்பும் மாணாக்கருக்குப் பொருளுபகாரஞ் செய்தும், அவ்வாறு சென்று கற்றுச் சித்தியுற்றாருக்கு நல்லுத்தியோகங்கள் கொடுத்தும், உயர்தர இராசரீக சேவைக்குக் கற்றவல்லுநராய் வந்தவருக்கு ஆங்கிலேயர் பெறுதற்குரிய பதங்களைப் பேதம் பாராது கொடுத்தும் வருகின்றார்கள். உயர்தர இராசரீகபதம் பெற்றுச் சட்ட நிருபண சபையிலும் சட்டநிறைவேற்றச்சபையிலும் அங்கத்தவராகி விளங்கிய தமிழ்ப்பெருந்தகை கௌரவ Sir பொ. அருணாசலம். இவரே தமிழருள்ளே இப்பெரும்பதம் பெற்றவர். இவர் ஆங்கிலக்கல்வியிலும் சீமையில் (M.A) எம்.ஏ பட்டம் பெற்றவர்.

நம்மவர்க்குப் பரோபகாரகுணம் பண்டுதொட்டது. தமிழரசர்காலத்திலே அவ்வவ்வூரிலேயுள்ள பிரபுக்களால் ஆங்காங்கும் கோயில்களும் குளங்களும், கேணிகளும், தருமமடங்களும் அமைக்கப்பட்டன. சிதம்பரம் இராமேச்சரம் முதலிய ஸ்தலங்களுக்கு நிலங்கள் விட்டிருக்கின்றனர். இந்தியாவிலும் அநேக சத்திரங்கள் கட்டினர். மனப்புலிமுதலியார் சத்திரமெனக் கோடிக்கரையிலுள்ளது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தாரால் அமைக்கப்பட்டது. பூர்வம் காசிபரியந்தம் இடையிடையே பல சத்திரங்கள் யாழ்ப்பாணத்தாராற் கட்டப்பட்டன. அவற்றுக்கு மூலதனங்களும் வைக்கப்பட்டன. அவற்றை அங்கு வைக்கப்பட்ட தருமகர்த்தர்களினது சந்ததியார் பரிபாலியாது அழியவிட்டனர். கயாவிலே நாராயணமுதலியராற் கட்டப்பட்ட தென்பர். இத்தகைய பரோபகாரகுணம் இருநூறு வருஷம் பறங்கிக்காரருக்கும் ஒல்லாந்தருக்கும் கீழேகிடந்து அரையுண்டும் அடியற்றுப்போகாதிருந்து ஆங்கிலேயவரசின் றண்ணியநிழலிலே தழைத்து விளங்குகின்றன. கீரிமலையில் இப்போது அநேக சத்திரங்கள் பலராலும் கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றுள் விசேடமானது கதிர்வேற்சறாப்பர் சத்திரம். அடத்தபடியிலுள்ளது சித்தங்கேணி வைத்தியலிங்கம் சத்திரம். அடுத்தது தொல்புரம் கிருஷ்ணபிள்ளை சத்திரம். இவர்கள் பரோபகாரம் மிகவும் பாராட்டப்படத்தக்கது.

யாழ்ப்பாணத்துச் சைவ மாணாக்கர் கத்தோலிக்க கல்லூரியிலும் சுண்டிக்குழிக் கல்லூரியிலும் வட்டுக்கோட்டைக் கல்லூரியிலும் வேம்படிக் கல்லூரியிலும் சென்று தஞ்சமயசுவாதீனமின்றிக் கற்றுவந்தனர். கத்தோலிக்க கல்லூரி மாத்திரம் சைவமாணாக்கரைச் சமய விஷயத்தில் மனமடிவின்றி நடாத்தி வந்தது. சைவசமயிகளுடைய புத்திரருக்கு ஓராங்கிலக்கல்லூரியில்லா திருப்பது பெருங் குறையெனக்கண்டு ஆறுமுகநாவலரால் ஓராங்கிலவித்தியா சாலை தாபிக்கப்பட்டது. அவ்வித்தியாசாலைக்குப் போதிய மூலதனஞ் சேராமை யால் அது வீழ்வதாயிற்று. சிலகாலத்தின் பின்னர் அட்வகேட் நாகலிங்கம் என்னும் பெருந்தகையால் இந்துக்கல்லூரி தாபிக்கப்பட்டது. அவருக்குப்பின்னர் அதனை இப்போதுள்ள நன்னிலைக்குக் கொணர்ந்தவர் பிரக்டர் வி. காசிப்பிள்ளையென்னும் பரோபகாரசீலர் இக்கல்லூரியை மாத்திரமன்று, இன்னும் பல வித்தியாசாலைகளைத் தமது கைப்பொருள்கொண்டு தாபித்தும் நடத்தியும் வருகின்றார். இவருடைய வித்தியாபிமானமும் உண்மைப்பரோபகார விருப்பும் அறியாதார் யார்! இவரே சித்திவிநாயகராலயத்தைப் பெருந்தொகைப் பொருள் செலவிட்டுக் கற்றிருப்பணியாகக் கட்டுவிப்பவர்.

இந்துக்கல்லூரி ஸ்தாபனமான பின்னர் ஆங்காங்குஞ் சைவாங்கிலபாடசாலை கள் தோன்றி நடைபெறுகின்றன. மானிப்பாய் இந்துக்கல்லூரி சீமைத்தரகர் வே. சங்கரப்பிள்ளை என்னும் புண்ணியசீலரால் பெரும்பாலும் தமது கைப்பொருள்கொண்டு தாபிக்கப்பட்டது. அதுவுஞ் செவ்வே நடந்து வருகின்றது.

தமிழரசர் காலத்திலே வேளாளருக்கு ராயன் அதிராயன் முதலி என்னும் வரிசைப்பட்டப்பெயர் சூட்டப்பட்டன. பறங்கிக்காரர் காலத்திலே ராயன் அதிராயன் என்னும் பட்டங்களைக் கொடுக்கின் ராசாவென்றெண்ணப்படுவார்களெனத் தள்ளித் தங்கள் பாஷைக்குரிய தொன் என்பதை முதலியென்பதோடு சேர்த்துச் சிலருக்குச் சூட்டினார்கள். பின்னர் அப்பட்டங்களை விலைக்குப் பலசாதிகளுக்கும் விற்று அதனாற் பொருளீட்டினார்கள். ஒல்லாந்தரும் அவ்வாறே பட்டங்களை விற்றுப் பொருளீட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்போது நம் அங்கிலேவரசினர் கல்வியாலும் பரோபகாரத்தினாலும் இராசவிசுவாசத்தினாலும் நல்லொழுக்கத்தினாலும் சிறந்தவர்களுக்கு நைட்பட்டம். சி.எம்.ஜி பட்டம், அதிகாரபட்டம், இராசவாயில் முதலியார்ப்பட்டம், முதலியார் பட்டம், சமாதான நீதிபதிப்பட்டம் முதலியன சூட்டி வருகின்றார்கள். இப்பட்டங்கள் பறங்கிக்காரரும் - ஒல்லாந்தரும் விற்ற விலைப்பட்டங்கள் போன்றனவல்ல. பாத்திரமறிந்தளிக்கும் பட்டங்களாம். நைட்பட்டம் அதிராயன் என்னும் பட்டத்துக்குச் சமமானது. சி.எம்.ஜி. பட்டம் ராயன் என்பதற்கு நிகரானது. நம்மவருள்ளே முதன்முதல் நைட்பட்டம் பெற்றவர் (சேர்) குமாரசுவாமி, சி.எம்.ஜி. பட்டம் பெற்றவர். கௌரவ பொ. ராமநாதன், அதிகாரப்பட்டம் பெற்றவர். யாழ்ப்பாணம் தலைமை மணியம் தம்பாபிள்ளை, முதலியார் பட்டம் பெற்றிருப்பவர். கச்சேரிச் சறாப்பு* உயரப்புலம் சின்னையாமுதலியார், இலங்கை நாயகமுதலியார், சபாரத்தின முதலியார் முதலியோர் முதலியார் பட்டத்தோடு சமாதான நீதிபதிப்பட்டம் பெற்றவர். நுவரஎலியாவிற் பிரபல்லியராயிருக்கும் நாகநாதமுதலியார், T.C. சங்கரப்பிள்ளை, M. தம்பு. C. நமசிவாயம் முதலியோர், இந்தியாவிற் பஞ்சம் புகுந்தபோது அதன் நிவிர்த்திற்காகப் பெரும் பொருள் சேகரித்தனுப்பிய பரோபகார சீலராகிய இந்நாகநாதமுதலியார், மேல்நாட்டிற் பிரபலமுற்றிருந்த சரவணமுத்துமுதலியார், சண்முகநாதமுதலியார் வழித் தோன்றல். சமாதான நீதிபதியோடு கௌரவ தண்டாதிகார பட்டமும் பெற்று விளங்கிய கோப்பாய் மயில்வாகனத்துக்கு இவர் மருகர். இராசவாயில் முதலியார் பட்டம் பெற்றிருப்பவர் பரம்பரைப் பண்டிதராகிய சிற் கைலாசபிள்ளை. இவர் மனப்புலிமுதலியார் வழித்தோன்றல்.

யாழ்ப்பாணத்தார் எத்தேசத்திற் சென்றிருந்தாலும் அங்கங்கெல்லாம் பிரபலமுற்று விளங்கும் இயல்புடையவர். மலையாளத்திலே மகாநீதிபதியாயிருந்த செல்லப்பாபிள்ளை யாழ்ப்பாணமாதீன்ற புத்திரரத்தினங்களுள் ஒருவர் என்பதும் வண்ணார்பண்ணையிற் பிரசித்தியுற்ற குடியிலுள்ளவர் என்பதும் யாவருமறிவர். அரியநாயகம்பிள்ளை, சவுந்தரநாயகம்பிள்ளை, சரவணமுத்துப்பிள்ளை, ராய்பகதூர், முருகேசபிள்ளை, ராய்பகதூர் வில்லியம்பிள்ளை, J. ஹென்ஸ்மன், இவர்கள் இந்தியாவிற் படைத்த கீர்த்தியை அறியாதார் யார். இவர்களும் யாழ்ப்பாணத்து இரத்தினங்களன்றோ. சீமையிலிருந்து கொண்டு இலங்கை இந்தியாவின் பழைய சித்திரவிநோதக் கைத்தொழிலை அபிவிருத்திபண்ணும் பொருட்டு அநேக விஷயங்களும், இந்தியா விஷயமாக அநேகவாதங்களும்

---

*இணையிலியில் ஆதியிற் குடிகொண்ட வேளாளர் சந்ததியார் தமது விளைநிலத்துக்குச் சமீபமாக வசிக்குநோக்கமாகச் சென்றிருந்த கிராமம் உயர்வுப்புலமெனப்பட்டு இப்போது உயரப்புலமென வழங்குகின்றது. ஆனைக்கோட்டைக்குப் பூர்வநாமம் இதுவே. மானிப்பாய்க்குப் பூர்வநாமம் பெரியபுலம் சுன்னாகத்துக்குப் பூர்நாமம் மயிலணி? சண்டிருப்பாய்க்குப் கல்வளை.*

எழுதிவரும் ஆனந்த குமாரசுவாமி யாழ்ப்பாணத் தொடர்புடையரன்றோ. இன்னும் சிங்கப்பூர்ப்பகுதி முதலிய தூரதேசங்களிலே சென்றிருந்து யாழ்ப்பாணமாதை விளக்கும் புத்திராத்தினங்கள் எத்தனையோபலர்.

இவ்வாறாகக் காடுகொண்டு நாடுவாரற்று நெடுங்காலங்கிடந்த இந்நாட்டை, ஓரந்தகன் தான் செய்த நன்முயற்சியாற் பரிசாகப் பெற்றுக் குடியேற்றித் திருத்திச் சிறந்த நாடாக்கி, அதிலே நல்லரணையுடைய நகரமைத்து இராசதானியாக்கி வேற்றரசரும் வணங்கப் பன்னூறுவருஷம் அரசநிலையிட்டுத் தன்பெயரை உலகுள்ளவரைக்கும் அழியாது வைத்ததும், அங்ஙனம் வாய்த்த பெருமையால் தருக்குற்ற குடிகளும் அரசும் தமத அறநெறிகடந்து தாமசகுணத்தை மேற்கொண்ட கன்மத்தால் வேற்றரசர் கைப்பட்டுத் துன்புற்று வருந்தியதும், பழைய நல்வினை விசேடத்தால் ஆங்கிலவரசு வந்து நமக்கு அபயந்தந்து செங்கோல் நடாத்துவதும், அதனால் நாம் பழைய சுவாதீனம் பெற்றுத் தழைத்து வருவதும் இச்சரித்திரத்தை வாசிப்போர் ஊன்றிச் சிந்திக்கத்தக்கன.

யாழ்ப்பாண மாதா மேன்மேலும் சிறப்புற்று நீடுழிவாழி. ஆங்கிலவரசும் மகாகாருண்ணிய மகிமாவது ஐந்தாம் ஜார்ச்சு வேந்தரும் நீடுழிவாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org